செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்

திட்ட இயக்ககம்

# மயங்கொலிச்

# சொல்லகராதி

பதிப்பாசிரியர்

முனைவர் **கோ. விசயராகவன்**

இயக்குநர்

©

தமிழ்நாடு அரசு

2022

## நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மயங்கொலிச் சொல்லகராதி |
| முதல் பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2053<br>மீனம் (பங்குனி) 2022 மார்ச்சு |
| பதிப்பாசிரியர் | : | **முனைவர் கோ. விசயராகவன்** |
| பக்கம் | : | 10 + 198 |
| மொழி | : | தமிழ் |
| தாளின் தன்மை | : | 80 ஜி.எஸ்.எம். படத்தாள் |
| நூலின் அளவு | : | டெம்மி 1/8 |
| நூல் வெளியீடும்,<br>கிடைக்குமிடமும் | : | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்<br>அகரமுதலித் திட்ட இயக்ககம்,<br>எண் 75, முதல் தளம், நகர் நிருவாக<br>அலுவலக வளாகம்,<br>சாந்தோம் நெடுஞ்சாலை,<br>எம்.ஆர்.சி. நகர், சென்னை-28.<br>தொலைபேசி எண்:<br>044-29520509/044-29520462 |
| மின்னஞ்சல் முகவரி | : | dir.dtedp@tn.gov.in |
| அச்சீடு | : | அரசு மைய அச்சகம்,<br>சென்னை-600 079. |


**விலையில்லா நூல்**

## நூல் தொகுப்புக்குழு

**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் மா. பூங்குன்றன்

திரு சு. வீரவேலு

முனைவர் தி. பாலசுப்பிரமணியன்

திரு. கி. தமிழ்மணி

**உதவிப் பதிப்பாசிரியர்**

திரு. ஏ. காந்தி

**தொகுப்பாளர்கள்**

முனைவர் வே. கார்த்திக்

திரு. கி. இராமர்

(ஒருங்கிணைப்பாளர்)

திருமதி ஜெ. சாந்தி

திரு. வே. பிரபு

திருமதி கு. சங்கீதா

**கண்காணிப்பாளர்**

திருமதி ஆ.மு. பிந்து

**கணிப்பொறியாளர்கள்**

திருமதி க. கஸ்தூரி

திரு. ப. தீபக்

**திரு. தங்கம் தென்னரசு**
**மாண்புமிகு அமைச்சர்**
தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி,
தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல்துறை

தலைமைச் செயலகம்,
சென்னை-09

நாள் : 02.03.2022

# வாழ்த்துரை

நாளும் வளரும் நற்றமிழில் புதுப்புது அகராதிகள் தோன்றிட வேண்டும் என்னும் பெருநோக்கத்தில் **முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்** அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் என்ற தனித்துறையை உருவாக்கிச் செயற்படுத்த வழிவகை செய்தார்கள். அத்துறையின் செயற்பாடுகள் உச்சிமேல் வைத்து மெச்சத் தகும் வகையில் இருப்பதறிந்து பெரிதும் மகிழ்கிறேன்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** அவர்கள் அனைத்து உதவிகளையும் தடையின்றி வழங்கிக் கொண்டிருப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன். அகரமுதலி இயக்ககத்தின் வெளியீடாக 'மயங்கொலிச்சொல் அகராதி' வெளிவருவது அறிந்து மனம் மகிழ்கிறேன்.

மயங்கொலிச் சொற்களுக்கு மயக்கமிலாப் பொருள் கூறும் வகையில் '**மயங்கொலிச் சொல் அகராதி**' என்ற ஒரு முழுமையான நூலினைச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் உருவாக்கியுள்ளது.

பொதுவாக, தமிழ் அகராதிகளில் தேவையற்ற அயல்மொழிச் சொற்கள் இடம் பெற்றுவிடுகின்றன. அதனால், பலருக்கும் பல்வேறு

குழப்பங்கள் உண்டாவதுடன், பேச்சு வழக்கில் அவை கலந்து பெருந்தொற்றாகிவிடுகிறது. இனிமேல் இதுபோன்ற நிலை உருவாகாமல் இருக்கும் வகையில் இந்த மயங்கொலிச் சொல்லகராதியில் பிற மொழிச் சொற்கள் களையப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்பாகும். இதில் சங்க கால இலக்கியங்கள், ஐம்பெருங்காப்பியங்கள் முதலானவற்றிலிருந்து தக்க எடுத்துக்காட்டுகள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளமை பெரிதும் பாராட்டுக்குரியது. மேலும், இந்த அகராதி தமிழ் கற்போர், கற்பிப்போர், தமிழ் ஆர்வலர்கள், தமிழ்மொழி ஆய்வாளர்கள் அனைவருக்கும் மிக்க பயனளிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அத்துடன் தமிழ்மொழி ஆக்கத்திற்கும், வளர்ச்சிக்கும், வளத்திற்கும் இது பெரிதும் பயன்படும்.

இவ்வியக்ககம் பல்வேறு கோணங்களில் அகராதிகளை உருவாக்குவதோடு, தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்குவது உருவாக்கின கலைச்சொற்களைச் சொற்குவை வலைத்தளத்தில் ‘சேமிப்புச் செய்தல்’ எனப் பணிகள் பலவற்றையும் செய்து தமிழுலகத்திற்குப் பல நன்மைகளை அளித்து வருகிறது. அந்தவகையில், ‘**மயங்கொலிச்சொல் அகராதி**’யைச் சிறப்புற வெளிக்கொணர்ந்துள்ள இந்த இயக்ககத்தின் இயக்குநர், அகரமுதலிப் பணியாளர்கள், அனைவருக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,



**(தங்கம் தென்னரசு)**

**திரு. மகேசன் காசிராஜன்** இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

தமிழ்வளர்ச்சி மற்றும்
செய்தித்துறை
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

நாள் : 20.04.2022

# வாழ்த்துரை

தமிழ் பயிலும் மாணவர்களின் தேவைக்கேற்பவும், மக்களின் பயன்பாட்டிற்காகவும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்ககம் பல்வேறு காலகட்டங்களில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் 31 மடலங்களை வெளியிட்டது. அதன் பின்னர், பேரகமுதலியின் சுருக்கப் பதிப்பு, தமிழ் வினைச்சொல் அகரமுதலி, நற்றமிழ் அறிவோம், வேர்ச்சொல் சுவடி, அயற்சொல் அகராதி, மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி, நடைமுறைத் தமிழ் அகரமுதலி எனப் பல்வேறு அகராதிகளை வெளியிட்டுள்ளது. இப்பொழுது '**மயங்கொலிச் சொல் அகரமுதலி**' மற்றும் '**மரபுத் தொடர் அகராதி**' ஆகியன வெளியிடப் படுகிறது. தமிழ்மொழியின் ஒலிகளின் வேறுபாட்டினையும், அவற்றிற்கான சொற்களையும், அவற்றிற்கான பொருள் விளக்கங்களையும் உரிய எடுத்துக்காட்டுகளுடன் இலக்கிய மேற்கோள்களையும் கொண்டதாக '**மயங்கொலிச் சொல்**

**அகரமுதலி**'யும், தமிழ் மக்கள் தம் பேச்சுவழக்கில் மரபுத் தொடர்களை அடிக்கடி பயன்படுத்திப் பேசுகின்றனர். அதன் பொருளைப் புரிந்து கொள்ளாமல் பேசும்பொழுது அந்தக் கருத்தின் உண்மையான பொருள் நம்மை அடையாது. எனவே, அதன் உள்ளார்ந்த பொருளை விளங்கிக்கொள்ளும் வகையில் '**மரபுத் தொடர் அகராதி**'யும் பெரிதும் பயன்படும்.

இவ்வகராதிகள் மூலம் தமிழ் கற்கும் திறமும் தரமும் உயரும். மொழிவளம் கூடும். சொல்பெருக்கமும், அருங்கலைச் சொல் உருவாக்கமும் மென்மேலும் வளரும்.

இத்துறை மேலும் பல பயனுறு அகராதிகளை உருவாக்கி தமிழுக்கு செழுமை சேர்க்க விழைகிறேன்.

அன்புடன்,

26.4.20

**(மகேசன் காசிராஜன்)**

**முனைவர் கோ. விசயராகவன்**
எம்.ஏ., எம்.பில்., எம்.பி.ஏ., பி.எட்., டி.கோப்., பி.எச்.டி.,
**இயக்குநர்**
**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்**
**அகரமுதலித் திட்ட இயக்ககம்**

நகர் நிருவாக அலுவலக வளாகம்,
முதல் தளம், எண்.75, சாந்தோம்
நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர்,
சென்னை-600 028.

நாள் : 18.03.2022

# பதிப்புரை

ஒலி மயக்கம் ஏற்படின் சொல் மயக்கம் தோன்றும். சொல் மயக்கம் ஏற்படின் பொருள் மயக்கம் உருவாவதைத் தடுக்க முடியாது. எம் மயக்கமும் இல்லா நிலையே தெளிந்த நிலையாகும். தெளிந்த நிலையில்தான் ஒலி, சொல், பொருள் மூன்றையும் துல்லியமாக அறிந்துணர முடியும், இந்த நிலை இருந்தால்தான் பிழையின்றியும் குழப்பமின்றியும் ஒரு கருத்தைப் பேச்சிலும், எழுத்திலும் வெளிப்படுத்த முடியும்.

தமிழ் நெடுங்கணக்கில் மெய்யெழுத்து உயிர்மெய் எழுத்துகளில் மெல்லினத்தில் ணகர நகர னகரங்களும், இடையினத்தில் லகர, ழகர, ளகரங்களும், இடையின ரகரம், வல்லின றகரம் ஆகியனவும் தத்தம் அளவில் ஒலி வேறுபாடுகளைக் கொண்டனவே என்றாலும், கொடுப்பார் நாவும், கொள்வார் செவியும் திருத்தமும் துல்லியமும் இல்லா நிலையில் சிறு குழப்பமும், மெல்லியதொரு தடுமாற்றமும் உருவாக வாய்ப்பு உண்டு.

எடுத்துக்காட்டாக 'உரை', 'உறை'யை எடுத்துக் கொண்டால் 'உரை' என்ற சொல்லுக்குப் பொருள் கூறுதல், தேய், ஒலி, மொழி ஆகிய பொருள்கள் உண்டு. 'உறை'க்கு கூடு, நீர், மழை, உணவு, இறுகுதல், இடம், உறைப்பு, உறைபனி, உறைமோர், இருப்பிடம், ஆளுமிடம் என்றெல்லாம் பொருள்கள் உண்டு. இது போன்ற சிக்கல்களை விடுவிக்க மயங்கொலிச் சொல்லகராதி உதவி புரியும்.

ஒலித்தாக்கம் வரியில் விளையும். இது இயல்பே. எவ்வகைக் குழப்பமும் மயக்கமும் தமிழில் உருவாகாமலும், கற்போரின் இடர்ப்பாடுகளைக் களைந்திடவும் பொதுவில் மயங்கொலிகளை அறவே அகற்றிடவும் "**மயங்கொலிச்சொல் சொல்லகராதி**" வெளிவருவது இன்றைய காலகட்டத்தில் தேவையாகவுள்ளது.

பொதுவாக, சொற்களுக்கு மட்டும் பொருள் கூறுவதுதான் அகராதி. ஆனால், தமிழ்மொழியில் தொடர்களுக்கே பொருள் கூறக்கூடிய ஓர் அமைப்புள்ளது. தலைமுறை தலைமுறையாகக் கூறப்படும் சிறு வழக்குத் தொடர்கள் விரிவான பொருளை அடக்கியதாகத் தமிழில் அமைந்துள்ளது. இந்தத் தொடருக்கு மரபுத் தொடர் என்று பெயர். எடுத்துக்காட்டாக, ஒருவர் பரபரப்புடன் நடந்த நிகழ்ச்சிகளை அமைதியாக இருக்கும்போது எண்ணிப் பார்க்கிறார் என்றால் அச்செயலை 'அசைபோடுதல்' என்ற தொடரால் குறிப்பர். மாடு காட்டில் வாழும் அமைதியான விலங்கு. காட்டில் எந்த நேரமும் புலி போன்ற கொடிய விலங்குகள் தாக்கலாம் என்பதால் விரைவு விரைவாகப் புல்மேயும். பிறகு அமைதியான இடத்தில் தான் உண்ட உணவை வாய்க்கு கொண்டு வந்து அரைத்து மீண்டும் விழுங்கும். இதை 'அசைபோடுதல்' என்பர். இந்த நிகழ்ச்சியையே மாந்தனுக்கும் பொதுமைப்படுத்தி, பரபரப்பான நிகழ்ச்சியை அமைதியாக எண்ணிப் பார்க்கும் நிலைக்குப் பொருத்தி 'அசை போடுதல்' என்று கூறுவது வழக்கம்.

இதுபோல் ஆயிரக்கணக்கான மரபுத்தொடர்கள் தமிழில் உண்டு. இந்தத் தொடர்களைத் தொகுத்து '**மரபுத்தொடர் அகராதி**' எனச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வெளியிட்டுள்ளது. இதன்வழி தமிழ் மக்களின் பண்பாடு நாகரிகம் வாழ்முறைகளை விரிவாக அறிந்து கொள்ள முடியும்.

இந்த இயக்ககத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும் எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! எனும் உயரிய இலக்கை நோக்கி அடிப்படையாகச் செயன்மை ஆற்றி வரும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**

**திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கியுள்ள மாண்புமிகு தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் **திரு. தங்கம் தென்னரசு** அவர்களுக்கும், இயக்ககச் செயற்பாடுகளுக்குக் கருத்துரை கூறி எப்போதும் ஊக்கமளித்துவரும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் **திரு. மகேசன் காசிராசன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும், இந்த அகராதியைச் சிறப்பாக உருவாக்கிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மேனாள் இயக்குநர் திரு. த. காமராசு அவர்களுக்கும், இயக்ககப் பதிப்பாசிரியர்கள் முனைவர் மா. பூங்குன்றன், திரு. சு. வீரவேலு, முனைவர் தி.பாலசுப்பிரமணியன், திரு. கி. தமிழ்மணி, உதவிப் பதிப்பாசிரியர் திரு. ஏ. காந்தி, தொகுப்பாளர்கள் திரு. வே. பிரபு, திரு. கி. இராமர், திருமதி ஜெ. சாந்தி, முனைவர் வே. கார்த்திக், திருமதி கு. சங்கீதா, கணிப்பொறியாளர்கள் திருமதி க. கஸ்தூரி, திரு. ப. தீபக், கண்காணிப்பாளர் திருமதி ஆ.மு. பிந்து (ம) நிருவாகப் பணியாளர்கள் பா. சரண்யா, நா. பாலகிருஷ்ணன், வெ.சுதாகர், இரா. கற்பகம், ஆ. குணசுந்தரி ஆகிய அனைத்து பணியாளர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இயக்குநர்**

**அக்கரை** - 1. எதிர்க்கரை 2. நீர் நிலையின் மறுகரை
"அளக்க ரக்கரை காண்பான்"(கந்தரந்:10).

**அக்கறை** - 1. ஈடுபாடு 2. கருத்து 3. கவனம் 4. பற்று
5. ஊக்கம் 6. தேவை 7. கவலை

**அகணம்** - 1. கனியாதது 2. இலகு

**அகனம்** - 1. கனமில்லாதது 2. பெருமையின்மை

**அகண்** - 1. அருகு 2. அண்மை

**அகன்** - 1. அகன்ற என்னும் பெயரெச்சம் 2. காதல்
3. கணவன் 4. உள் 5. வினை முதலில்
வரும் விகுதி
"சிலம்பாற் றகன்றலை" (சிலப் :11.108)

**அங்கணம்** - 1. இரண்டு தூண்களுக்கு நடுவில் உள்ள
இடம் 2. உள்ளறை 3. கடுமரம் 4. சாய் கடை
(சலதாரை) 5. சேறு 6. பத்து 7. பரப்பு
8. பொரிகாரம் 9. முற்றம் 10. வெண்காரம்
11. மதகு
"ஊரங் கணநீர் உரவு நீர்
சேர்ந்தக்கால்" (நாலடி:175).

**அங்கனம்** - 1. கடுக்காய் மரம் 2. அப்படி 3. அங்ஙன்

**அங்கணி** - 1. சிவை (மலைமகள்) 2. கற்றாழை

**அங்கனி** - 1. கற்றாழை 2. படரும் முட்செடி

**அச்சணம்** - 1. அக்கணம் 2. அந்த நேரம்

**அச்சனம்** - 1. நெய்வார் கருவி வகைகளுள் ஒன்று
2. வெள்ளுள்ளி 3. வெள்ளைப் பூண்டு
"நூல் புடைவையாத் திரிதற்கு அச்சனம்
முதலாயின சாதனம்" (நீலகேசி.421 உரை).

**அடிமணை** - 1. அடிப்படை 2. அடிமணைத் தட்டு
3. படகின் உட்பலகை 4. வண்டியினுள்
பொருந்திய பலகை
"எல்லாப் பண்ணிற்கும் இஃது
அடிமணையாதலின்" (சிலப் 3 63.
அடியார்க்கு உரை).

**அடிமனை** - 1. சுற்றுச்சுவர் 2. கட்டடத்தின் முதன்மைச் சுவர்
"அடிமனை பவளமாக" (சீவக.837).

**அண்** - 1. மேல் 2. வேட்டை நாயின் உருவு கயிறு 3. தடியில் வெட்டிய வரை 4. மேற்பக்கம்

**அன்** - 1. ஆண்பால் வினைவிகுதி 2. தன்மையொருமை விகுதி 3. ஆண்பால் பெயர் விகுதி 4. ஆண்பால் வினையாலணையும் பெயர் விகுதி 5. சாரியை 6. எதிர்மறை காட்டும் வடமொழி முன்னொட்டுத் திரிபுசொல்.

**அண்ணம்** - 1. உண்ணாக்கு 2. மேல்வாய்
"அண்ணம் நுனி நா வருட ரழவரும்
- நன்னூல்.

**அன்னம்** - 1. நீர் 2. கவரிமான் 3. நிலம் 4. தங்கம் 5. ஒருவகை அணி 6. சோறு 7. அன்னப் பறவை.
"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்" (குறள். 1120).

**அண்ணன்** - 1. தமையன் 2. முன் பிறந்தான்
"முன்னவ னண்ணன் மூத்தோன்" (சூடா).

**அன்னன்** - அப்படிப்பட்டவன்.

**அண்ணல்** - 1. அண்ணன் 2. தலைவன் 3. பெரியோன்.
"அண்ணல் நம்பி"
"அண்ணலங் குமரரா மென்று"
(பாரத.திரௌ.63).

**அன்னல்** - புகை.

**அண்ணார்** - 1. பகைவர் 2. தமையர்.
"அண்ணார் புரமவிய" (உபதேசகா.திரிபுர.112).

**அன்னார்** - கல்நார்.

**அண்மை** - 1. அருகு 2. அடையுந்தன்மை 3. அணுமை.
"பொன்மணி இல்லம்
அண்மையில்தான் இருக்கிறது"
"அண்மையாற் சேய்த்தன்றி
(கலித்.108:35).

**அன்மை** - 1. அ(இ)ல்லாமை 2. தீமை
"தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான"
(தொல்.சொல்.கிளவி.25)
"அன்மை கடியுந் தவவலியால்" (சேதுபு.
முத்தீர்.8)

**அணங்கம்** – இலக்கணம்.

**அனங்கம்** - 1. அறிவு 2. இருவாட்சி
3. உடலின்மை 4. மல்லிகை.

**அணங்கு** - 1. தீண்டி வருத்தும் தெய்வப் பெண்
2. பத்திரகாளி 3. தெய்வப்பெண்
4. தேவர்க்காடும் கூத்து 5. அழகு 6. விருப்பம்
7. மயக்க நோய் 8. அச்சம் 9. வருத்தம் 10.
கொலை 11. கொல்லிப் பாவை 12. பெண்
13. வடிவு.
"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ"
(குறள்.1081). "அணங்குசா லுயர்நிலை தழீஇ"
(திருமுருகா.289).

**அனங்கு** - மன்மதன்.

**அணம்** - 1. கீழ்வாய்ப்புறம் 2. மேல்வாய்.
"பல்லணத் தொழிலின்" (நன்.74).

**அனம்** - அன்னம்.

**அணல்** - 1. கழுத்து 2. கீழ்வாய் 3. மிடறு 4. தாடி 5. மேல்
வாய்ப்புறம்.
"கறையணற் குறும்பூழ்" (பெரும்பாண்.205).

**அனல்** - 1. தீ 2. வெப்பம் 3. இடி 4. பித்தம்

5. கொடுவேலி 6. உயிர்த்துன்பங்களுள் ஒன்று
“பைம்புனலோ டனலக மடக்கு“ (இரகு.ஆற்று.4).

**அணார்** - கழுத்து
“அணாற் சொறிய“ (திவ் பெரியாழ்.3.5.8).

**அனார்** - 1. அவர்கள் 2. ஏத்தவர்கள்.

**அணி** - 1. அணிகலன் 2. பக்கம் 3. படையொழுங்கு (அணியணியாகக் கூடியது) 4. கூட்டம் (அணியணியாகக் கூடியது) 5. உடுத்து (உடை அணிந்தான்) 6. வேடம் (ஓர் இலக்கணப் பிரிவு 7. அழகு.
“அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல் பிணியன்றோ பீடு நடை“ (குறள்.1014).

**அனி** - 1. நெற்பொரி 2. பெரிய பெட்டி.

**அணிகம்** - 1. அணிகலம் 2. அணிகலப் பெட்டி 3. ஊர்தி 4. சிவிகை.
“அணிகமாய்ப் பணிகள் செய்து“ (சீவக.2811).

**அனிகம்** - 1. சிவிகை 2. படை 3. கூட்டம்.

**அணிச்சை** - நாகமல்லிகை.

**அனிச்சை** - 1. அனிச்சப்பூ 2. ஒரு பூடு 3. ஒரு மரம் 4. நாகமல்லி 5. விருப்பின்மை.

**அணிஞ்சில்** - 1. அழிஞ்சில் 2. கொடிவேலி 3. நொச்சி 4. முள்ளி.

**அனிஞ்சில்** - வில்வம்.

**அணியம்** - 1. அணிற்பிள்ளை 2. படை வகுப்பு 3. கப்பலின் முன்பக்கம் 4. துணைக் கருவி 5. ஆட்டின் தலை.

**அனியம்** - 1. காற்று 2. வாதரோகம் 3. அச்சம் 4. பிறக்கை.

**அணிலம்** - அணிற்பிள்ளை.

"தரங்கநீ ரடைக்க லுற்ற சலமிலா வணிலம்" (திவ்.திருமாலை.27).

**அனிலம்** - 1. காற்று 2. அச்சம் 3. பிறக்கை.

**அணு** - 1. உயிர் 2. நுண்ணுடல் 3. நுண்மை (அணுக்குண்டு, அணுவாயுதம், அணுக்கதிர்) 4. மந்திரம் 5. பொடி 6. தினை 7. வரகு. "அணும யங்குமின் நுழைகதிர் எறிந்தவா ளாக" (பிரபுலிங்க.)

**அனு** - 1. தனிமை 2. அண்மை (அணுக்கம்) 3. பங்கு 4. தொடர்ச்சி 5. மற்றொரு செயல்.

**அணுக்கம்** - 1. பக்கம் 2. நெருக்கம் (அணுக்கமாகப் பழகினான்) "அணுக்க வன்றொண்டர்" (பெரியபு.வெள்ளா.3.).

**அனுக்கம்** - 1. வருத்தம் 2. முணக்கம் 3. நோய் 4. அச்சம் 5. சந்தனம். "மனமனுக்கம் விட" (கம்பரா. அயோத். கைகேயிசூழ்.56).

**அணுகம்** - 1. நுண்ணியது 2. செஞ்சந்தனம்.

**அனுகம்** - சந்தன மரவகை.

**அணுமை** - 1. நுட்பம் 2. அணுத்தன்மை 3. அணிமை. "வரைந்த அணுமைக் கண்ணே" (ஐங்குறு.83 உரை.).

**அனுமை** - 1. அருத்தாபத்தி 2. கண்ணின் புறவருகு.

**அணை** - 1. சேர்த்துக்கொள் (அணைத்தான்) 2. இருக்கை (அரியணை) 3. படுக்கை (பஞ்சணை) 4. தலையணை 5. கரை (அணைக்கட்டு) 6. தறி 7. பாலம் 8. முட்டு 9. உதவி 10. தடை

"அணையின்றி யுயர்ந்த வென்றி"
(கம்பரா.யுத்த. கும்ப.159.)

**அனை** - 1. அன்னை 2. அந்த 3. ஒரு வகை மீன் 4. அத்தன்மை 5. அளவைச் சொல்லின் பின்னொட்டு (அத்தனை, இத்தனை, எத்தனை)
"அனையுகளு நன்னீர்" (பாரத.சூது.13).

**அந்தண்** - 1. அந்தணர் குலம் 2. துறவியர் வகுப்பு
"அந்தண ரென்போ ரறவோர்
மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். (குறள்.30)

**அந்தன்** - கடுக்காய்

**அர** - 1. பாம்பு 2. நாகமல்லி.
"விழுங்கப்பட்ட பசுங்கதிர் மதியம்"
(சீவக.1540).

**அற** - 1. முழுவதும் (அறவே நீக்கி விட்டேன்) 2. ஒரு வினையெச்சம் 3. தெளிவாக.
"கற்க கசடறக் கற்பவை
கற்றபின் நிற்க அதற்குத் தக" (குறள்.391).

**அரசம்** - 1. மூலநோய் 2. சுவை இல்லாதது.

**அறசம்** - கத்தரி.

**அரம்** - 1. தோல் 2. வண்டி 3. விரைவு 4. அரவங் கருவி
"அரம் போலும் கூர்மையரேனும்
மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர்.
(குறள்.997).

**அறம்** - 1. கடமை 2. உண்மை 3. ஒழுக்கம் 4. கற்பு 5. இன்பம் 6. நன்மை 7. அறச்சாலை 8. அறத் தெய்வம். 9. சமயம். 10. நோன்பு 11. நல்வினை
"அறஞ்செய விரும்பு" (அவ்வை மூதாட்டி)
"நலம்புரி நங்கை வைத்து
நலலறங் காக்க வென்றாள்" (சீவக.386).

| | | |
|---|---|---|
| **அரவன்** | - | சிவன். |
| **அறவன்** | - | 1. முனிவன் 2. சமண அறங்கூறுவோன் 3. இறைவன் 4.திருமால் "அறவனை யாழிப்படை யந்தணனை " (திவ்.திருவாய் 1.7:1) |
| **அரவு** | - | 1. பாம்பு 2. ஒலி 3. நாகமரம் 4. தொழிற்பெயர் விகுதி (தேற்று+அரவு=தேற்றரவு) 5. பாம்பின் நஞ்சு. |
| **அறவு** | - | 1. ஒழிகை 2. அறுதி 3. அறுத்தல் 4. நீக்கம் 5. தொலைத்தல் 6. தீர்கை. "நீரற வறியாக் கரகத்து " (புறநா.1.12) |
| **அரன்** | - | 1. சிவன் 2. எப்பொருட்கும் இறைவன் 3. அரசன் 4. மஞ்சள் 5. அழலோன். |
| **அறன்** | - | 1. மனத்தூய்மை 2. சமயம் 3. வேள்வி முதல்வன் 4. அறம் 5. நன்மை 6. எளியார்க்கீதல். "மனத்துக்கண் மாசில னாதல் அனைத்துஅறன் ஆகுல நீர பிற " (குறள்.34) |
| **அராவுதல்** | - | 1. அரத்தால் தேய்த்தல் 2. உராய்தல் 3. மாறுபடுதல். |
| **அறாவுதல்** | - | வடித்தல். |
| **அரி** | - | 1. துண்டு செய் (காயை அரிந்தாள்) 2. அரிப்பு (தோல் அரித்து) 3. அறுத்தல் (வெள்ளம் கரையை அரித்துச் சென்றது) 4. தீ 5. ஒளி 6. ஆறு 7. கடல் 8. திருமால் 9. சிங்கம் (அரிமா கர்ச்சித்தது) 10. கதிரறுக்கும் பருவம். "அரிபுகு பொழுதின் " (பெரும்பாண்.202) |
| **அறி** | - | 1. தெரி 2. தெரிந்துகொள் 3. உணர் 4. அறிவு. "அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம் செறிதோறும் சேயிழை மாட்டு " (குறள்.110). |

**அரிதல்** - வறுத்தல்.

**அறிதல்** - 1. உணர்தல் 2. நினைத்தல் 3. மதித்தல் 4. பயிலுதல் 5. அனுபவித்தல் 6. உறுதிசெய்தல் 7. புதிதாய்க் கண்டுபிடித்தல்.

**அரிப்பு** - 1. தினவு (அரிப்பு எழுத்து) 2. சினக்குற்றம் 3. அரித்தல் 4. பிரித்தெடுக்கை.
"அரிப்பரித்தாங் கெய்த்துப்
பொருள்செய் திடல்" (நீதிநெறி.9.)

**அறிப்பு** - 1. உணர்கை 2. அறிவிப்பு.
"அறிப்புறு மமுதாயவன்" (தேவா.5.48.4).

**அரியல்** - 1. அரிதல் 2. கள்.

**அறியல்** - மூங்கில்.

**அரிவை** - 1. பெண் 2. இருபது முதல் இருபத்தைந்து அகவைக்குட்பட்ட பெண் 3. அழகிய பெண்.
"அம்மா வரிவை முயக்கு" (குறள் 1107)

**அறிவை** - 1. அறிவு 2. இரண்டாம் வேற்றுமையுருபேற்ற சொல் (அறிவு+ஐ=அறிவை) 3. ஓதி (ஞானம்).
"அறிவை யென்னு மமுத வாறு"
(திவ்.பெரியாழ்.5.4.2)

**அரு** - 1. அருமை (அருமையானது) 2. உருவற்றது 3. கடவுள் 4. காணப்படாத தன்மை 5. அட்டை 6. புண் 7. அரி.
"அருஞ்செவ்வி யின்னா முகத்தான்
பெருஞ்செல்வம் பேஎய்கண் டன்ன
துடைத்து. (குறள்.565)

**அறு** - துண்டி (கொடியை அறு).

**அருகு** - 1. அண்மை (அருகில் வந்தான்) 2. ஓரம் (கரை அருகு செல்லாதே) 3. இடம் 4. குறைவு (காட்டில் புலியினம் அருகி வருகிறது)

"சுயோதனனுக் கருகா சனத்தர்"
(பாரத.திரௌ.36).

**அறுகு** - 1. அறுகம்புல் 2. அரிமா
3. புலி 4. யானை 5. வெளித் திண்ணை.

**அருசுவை** - இனிய சுவை (அருமையான சுவை).

**அறுசுவை** - 1. ஆறுவகைச் சுவை (கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகியவை அறுசுவையாகும்).
"அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட"
(நாலடி.1).

**அருத்தல்** - உண்பித்தல் (உணவு அருந்தினான்)
"வேதியர்க் கருத்திப் பின்னர்" (நைடத. நாட்டு.14).

**அறுத்தல்** - 1. துண்டித்தல் (கயிற்றை அருத்தல்) 2. முடிவு செய்தல் (அறுதியிட்டுக் கூறல்)

**அருமறை** - 1. அரியநூல் 2. மறைபொருள்.
"அருமறை முதல்வனை யாழி மாயனை"
(பாரத.வாரணா.மிகைப்.1).

**அறுமறை** - ஆறுமறைகள்.

**அருமை** - 1. எளிதிற் கிடைக்காதது
(நல்ல நண்பர் கிடைப்பது அருமை)
2. சிறப்பு 3. முடியாதது 4. கடினம்.
"அருமை யுடைத்தென் றசாவாமை
வேண்டும் பெருமை முயற்சி தரும்"
(குறள்.611)

**அறுமை** - 1. நிலையற்ற தன்மை 2. ஆறு
3. ஆறாயிருக்குந் தன்மை.

**அரும்பு** - 1. மொட்டு (மல்லிகை அரும்பு)
2. அணிகலன்களின் அரும்புவேலை
3. முகத்தில் தோன்றும் இளமயிர்
(அரும்புமீசை) 4. அரிசி

"அரும்புக்குங் கொத்துக்கும் வந்தார்"
(தனிப்பா. தி.1. பக்.96)

**அறும்பு** - 1. குறும்புத்தனம் 2. தீங்கு 3. வறுமை.

**அருவர்** - தமிழர்
"அருவரருவரெனா விறைஞ்சினர் "
(கலிங்.452).

**அறுவர்** - ஆறுபேர்.

**அரை** - 1. பாதி (அரைப்பழம்) 2. அரைப்படிப்பு
3. அரைத்தல் (மிளகாய் அரை) 4. வயிறு
5. இடை (அரையில் அணிந்தமேகலை)
"புனைமணி யரைஞாணொடுபோதும்"
(பெரியபு. திருஞான. 93)

**அறை** - 1. அடி (கன்னத்தில்அறை) 2. வீட்டின்
ஒருபகுதி 3. சொல் 4. வஞ்சினம்
(அறைகூவிப் போருக்கழைத்தான்)
5. அலை 6. உட்பகுதி 7. சுரங்கம் 8. அடி
9. மோதுகை 10. ஓசை 11. விடை
"மொழிகிளவி விளம்பறை" (நன். 458)

**அரைதல்** - 1. அரைபடல் (மஞ்சள்அரைத்தல்)
2. தேய்தல்

**அறைதல்** - 1. அடித்தல் (கன்னத்தில் அறைதல்) 2. பறை
கொட்டுதல் 3. கடாவுதல் 4. மண்ணெறிந்து
கட்டுதல் 5. துண்டித்தல் 6. சொல்லுதல்
7. ஒலித்தல் 8. அலைக்காற்று
முதலியனமோதுதல்
"அறைந் தகற்றூ ணிடை வந்தாய்"
(பாரத.கிருட். 41).

**அரைவாய்** - குறைபட்டவாய்.

**அறைவாய்** - 1. கணவாய் 2. மலைவழி
3. ஓர் ஏவல் வினை – அடிப்பாய் (கன்னத்தில்
அறைவாய்)
"உலகவிடை கழியறைவாய்" (புறநா.175:8)

**அல்** - 1. இரவு (அல்லும்பகலும்)
2. வறுமை 3. துன்பம் (அல்லல்பட்டான்)
4. மாலை 5. மயக்கம் 6. கருமை 7. கதிரவன்
8. வெயில்
"அல்லங் காடியில் அழிதருகம்பலை"
(மதுரைக். 544)

**அள்** - 1. அள்ளியெடு (பொருளை அள்ளு)
2. நெருக்கம் 3. காது 4. பக்கம்
5. விலாவெலும்பு 6.செறிவு 7. பற்றிரும்பு
8. வண்டி வில்லைத் தாங்குங்கட்டை
9. வன்மை.

**அல்லல்** – 1. முடைதல் 2. துன்பம்
"அல்லல் பட்டாற்றா தழுதகண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்படை"
(குறள்: 555)

**அள்ளல்** – 1. அள்ளுதல் 2. நெருக்கம்
3. சேறு 4. சேர்த்தெடுத்தல்
"அள்ளற் பயலையூர் கின்றது" (திவ். இயற். திருவிருத். 13)

**அல்லி** – 1. ஆம்பல்(அல்லிப்பூ) 2. தாமரை 3. அகவிதழ்
4. இரவு 5. அல்லியின் பூந்தாது
"அல்லிமாதர்புல்க" (திவ். பெரியதி. 1.7: 9)

**அள்ளி** – 1. வெண்ணெய் 2. ஒருவினையெச்சம் –
வாரி (அள்ளியெடுத்தாள்)

**அல்லை** – 1. அல்லிக்கொடி 2. அல்லாய் 3. தாய்
4. அன்று.
"மாலையோ அல்லை மணந்தார்
உயிருண்ணும் வேலைநீ வாழி பொழுது"
(குறள்: 1221)

**அள்ளை** - 1. அச்சந்தரும்பேயுரு (பேய்)
2. விலாப்பக்கம்.

**அலகம்** - 1. வேப்பலகு 2. யானைத் திப்பிலி

**அளகம்** – 1. பெண்டிர்கூந்தல் 2. வெள்ளெருக்கஞ்செடி 3. மயிர்ச்சுருள் நுதலைச் சார்ந்த முன்னுச்சி மயிர் 4. காட்டகத்தி 5. பன்றிமுள் 6. நீர் 7. மழைநீர்.
"அலமரு திருமுகத் தளகத்தப்பிய" (பெருங். உஞ்சைக். 33.119)

**அலகு** – 1. பறவைமூக்கு 2. ஆயுதக் கூர்மை (நாக்கில் அலகு குத்தினார்கள்) 3. ஆண்பனை 4. அகலம் 5. எண் 6. மட்டு 7. வரம்பு.
"அலகிலா விளையாட்டுடையார்" (கம்பரா. சிறப்புப்பாயி. 1.)

**அழகு** – 1. பொலிவு (அழகாக இருந்தாள்) 2. சிறப்பு 3. நற்குணம் 4. இனிமை (அழகாகப் பாடினாள்).

**அளகு** – 1. கோழி 2. கோட்டான் 3. மயில் இவற்றின் பெண் 4. கோழிச் சேவல்
"கோழிகூகை ஆயிரண்டல்லவை சூழுங்காலை அளகெனலமையா" (தொல்.பொருள். மர.56)

**அலகை** – 1. கற்றாழை 2. தலையளவு 3. காட்டுத்தன்மை 4. அஞ்சத்தக்கது 5. பேய் 6. பேய்க்கொம்மட்டி
"வையத்தல கையா வைக்கப்படும்" (குறள்.850)

**அளகை** – ஓர்ஊர்ப்பெயர் (அளகாபுரி)

**அலத்தல்** - 1. அலைதல் 2. விரும்பப்படுதல் 3. துன்பப்படுதல்

**அளத்தல்** – 1. அளவிடுதல் 2. வரையறுத்தல் 3. அளவளாவுதல் (இருவரும் அளந்து கொண்டிருந்தனர்) 4. கொடுத்தல்.

**அலத்தி** – 1. மின்மினி 2. நுளம்பு

**அளத்தி** - 1. நெய்தல் நிலத்துப்பெண் 2. உப்பு விளைவிப்போன் பெண்.

**அலப்பு** – 1. மனக்கலக்கம் 2. வீண்பேச்சு 3. அலைத்தல் 4. வருத்துதல் "அலப்பா யாகாசத்தை நோக்கி" (திவ். திருவாய். 5.8:4)

**அளப்பு** – 1. அளத்தல் 2. எல்லை 3. அளவு 4. அறிவுரை 5. சூழ்வுரை "அளப்பருந் தன்மைய ஊழியங்கங்குல்" (திவ். இயற். திருவிருத். 60)

**அலமரல்** – 1. சுழலல் 2. வருந்துதல் 3. தடுமாறுதல் 4. அச்சம் 5. மனச்சுழற்சி "அலமரலாயம்" (தொல். சொல். உரி. 13 நச். உரை)

**அளமரல்** – 1. கவலைப்படுதல் 2. வருந்துதல்.

**அலம்** – 1. கலக்கம் 2. தேளின் கொடுக்கு 3. மிகுதி 4. கலப்பை 5. தேள்.

**அளம்** – 1. உப்பளம் 2. நெய்தல் நிலம் 3. கடல் 4. நெருக்கம் 5. உப்பு 6. களர்நிலம்.

**அலர்** – 1. மலர்ந்தபூ 2. மகிழ்ச்சி 2. மிளகுச்செடி 3. பழிச்சொல் 4. பூமாலை
"அலர்நாண ஒவ்வதோஅஞ்சலோம் (பு)
என்றார் பலர்நாண நீந்தக் கடை"
(குறள் : 1149)
"நீயன்றுசூட்டலர்" (தஞ்சைவா. 285)

**அளர்** – 1. நீர் 2. மஞ்சள் 3. உவர்மண் 4. சோறு 5. களிமண்

**அலறு** – 1. அலறுதல் 2 அழுதல் 3. கதறுதல்

**அளறு** – 1. குழம்பு 2. நீர் 3. தீநாற்றமுடைய குழைசேறு 4. நரகம் 5. காவிக்கல்
"உண்ணாமை உள்ள துயிர்நிலை
ஊன்உண்ண அண்ணாத்தல் செய்யா(து)

அளறு" (குறள் : 255)
"குளிர் பொய்கை யளறு நிறைய" (பரிபா. 8:93)
"வனமுலைச் சுண்ணமு மளறும்"
(கல்லா. 27:20)

**அலறுதல்** – 1. கத்துதல் (ஆந்தை அலறுதல்) 2. அழுதல் 3. வருந்துதல் 4. காய்தல் 5. உரத்தழுதல் 6. ஆடு, மாடு, ஆந்தை முதலியன கதறுதல்.

**அளறுதல்** – 1. சிதறி வெடித்தல் 2. நெரிதல் 3. பிளத்தல்.

**அலவு** – 1. மனத்தடுமாற்றம்
"ஆதுல மாக்களு மலவுற்று விளிப்ப"
(மணிமே.4:42)

**அளவு** – 1. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவுகளுள் ஒன்று 2. வரையறை (நிலத்தின் அளவு) மட்டும் 3. எழுத்தொலிக்குங் காலவளவு 4. மாத்திரை
"இன்னா(து) இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு" (குறள்: 224)
"ஆற்றினளவறிந்துகற்க" (குறள் 725)

**அலவை** - 1. விடாதுபிதற்றுபவள் 2. அல்லவை.
"மாயவலவை சொற்கொண்டு" (திவ். திருவாய். 4. 6:4)

**அளவை** - 1. அளவு 2. மாத்திரை (காலஅளவு) 3. அளவுக் கருவி 4. நாள் 5. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவைகளுள் ஒன்று 6. காட்சி, கருத்து, ஒப்பு, உரை என்னும் நால்வகை ஏரணஅறிவழிகள் 7. எல்லை 8. அறிகுறி.
" இவை யளவை யாகவிடர்க்கடல்
கடத்தி" (கம்பரா. யுத்த . சீதை. 29)

**அலன்** - கலப்பையுடையவன்

**அழன்** - 1. பிணம் 2. பேய்
"அழனெனிறுதிகெடவல்லெழுத்துமிகுமே"
(தொல். எழுத்து. புள்ளி. 59)

**அலி** - 1. ஆண்பேடி 2. வேளாண்மை
3. இரண்டுங்கெட்டான் 4. தீ
5. சோறு
"ஆணல்லன் பெண்ணல்லன்
அல்லா அலியு மல்லன்" (திவ். திருவாய்.2.5:10)

**அழி** - 1. சிதைத்திடு (கூட்டைஅழித்தான்)
2. வண்டு 3. இரக்கம் 4. கேடு.
"அழிவின் அவைநீக்கி
ஆறுய்த்(து) அழிவின்கண்
அல்லல்உழப்பதாம்நட்பு" (குறள். 787)

**அளி** - 1. கொடு 2. கொடை (அன்பளிப்பு) 3. வண்டு
4. தேன் 5. கள் 6. அன்பு 7. இரக்கம்
8. தலையளி
"அளித்தஞ்சல் என்றவர்
நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு" (குறள்: 1154)

**அழிதல்** - 1. அழித்தல் 2. வருந்துதல் 3. தடைப்படுதல்
4. தோல்வியடைதல் 5. நிலைதடுமாறுதல்

**அளிதல்** - 1. அன்புகனிதல் 2. உருகுதல் 3. புண்படுதல்
4. செறிதல் 5. கலத்தல் 6. குழைதல்
7. அறக்கனிதல் 8. புரியமாயிருத்தல்
(பிரியமாயிருத்தல்)
"சிறியார்களோடளிந்தபோது" (கம்பரா. சுந்தர. ஊர்தேடு. 154)

**அழித்தல்** - 1. கெடுத்தல் 2. ஒழித்துக் கட்டல் (தீமை அழித்தல்) 3. செலவழித்தல் 4. தடவுதல்
5. கலைத்தல்
6. குலைத்தல்.

| | | |
|---|---|---|
| **அளித்தல்** | - | 1. செறித்தல் 2. அன்பினாற் கொடுத்தல் 3. கொடுத்தல் (பாதுகாப்பு அளித்தல்) 4.அளித்து – ஒரு வினையெச்சம் கொடுத்து (நன்கொடை அளித்து வந்தான்) 5. அறம் நோக்கிக் கொடுத்தான் 6. தகுதிபற்றிக் கொடுத்தான் 7. ஈனுதல் 8. அருளிப்படைத்தல் "அரிதாயவறனெய்தி யருளியோர்க்களித்தலும்" (கலித்.11.1) |
| **அலுக்குதல்** | - | 1. சிறிதுஅசைத்தல் 2. பகட்டுக்காட்டி மயக்குதல் 3. பாடும்போது குரலை இனிமையாகவுருட்டுதல் |
| **அளுக்குதல்** | - | 1. குலைதல் 2. அஞ்சுவித்தல் |
| **அழுங்கு** | - | 1. விலங்குவகை 2. அழுங்காமை 3. கடலாமைவகை 4. பாலையாழ்த் திறவகை 5. கற்றாழை. |
| **அளுங்கு** | - | 1. விலங்குவகை 2. கற்றாழை 3. ஒருவகைக்கிளிஞ்சில் |
| **அலுத்தல்** | - | 1. சலித்தல் (அலுத்துக் கொண்டான்) 2. இளைத்தல் |
| **அழுத்தல்** | - | 1. அமுக்குதல் (நீரில் அழுத்தல்) 2. உறுதியாக்கல் (உருண்டையை அழுத்திப் பிடி) 3. நடுதல் 4. பதித்தல். |
| **அலுப்பு** | - | 1. சோர்வு 2. களைப்பு (உடம்பு அலுப்பாய் இருக்கிறது) |
| **அழுப்பு** | - | 1. சோறு 2. அழுந்தியிருக்கும் பொருள். |
| **அலை** | - | 1. திரி (காட்டில்அலைந்தான்) 2. நீரலை (கடலலை) 3. மது 4. நிலம் 5. மிகுதி 6. வருந்துகை. "கொலைமேற்கொண்டாரிற்கொடிதே அலைமேற் கொண்(டு) |

அல்லவைசெய்தொழுகும் வேந்து"
(குறள். 551)

**அழை** - கூப்பிடு (தேன்மலரைஅழைத்தான்)

**அளை** - 1. தயிர் 2. புற்று 3. வெண்ணெய் 4. குகை 5. துழாவு.

**அலைத்தல்** - 1. அலையச்செய்தல் 2. அடித்தல் 3. அலைமோதுதல் 4. அசைத்தல் 5. வருந்து தல் 6. நீரைக் கலக்குதல்.

**அழைத்தல்** - 1. கூப்பிடுதல் 2. வரச்செய்தல் 3. கதறுதல் 4. பெயரிட்டுக்கூப்பிடுதல் 5. வரவழைத்தல்
"ஆதியே யடியே னாதரித் தழைத்தால்"
(திருவாச.29: 1)

**அலைதல்** - 1. திரிதல் 2. அசைத்தல் 3. வருந்துதல்.

**அளைதல்** - 1. துழாவுதல் 2. கலத்தல் 3. தழுவுதல் 4. புரளுதல் 5. சுடுதல் 6. நுகர்தல் 7. கூடியிருத்தல் 8. வயிறுவலித்தல்.
"என்னணியார் முலையாகமளைந்து "
(திருவாச.49:4)
"அனிச்சப்பூ வைமயிரில் அளைந்தாள்"
(குறள் 1118 மணக்.உ ரை)

**அலைப்பு** - 1. அசைப்பு 2. ஒரு கூத்துவகை 3. வருத்தம்.
"அரியசெய்கையி லவனியில்
விழுந்தெழுந்தலைப் புறும்மனை
வாழ்க்கை" (பெரியபு. வெள்ளானை. 29)

**அழைப்பு** - 1. வரச்செய்தல் (அழைப்புக்கொடு) 2. கூப்பிடுகை 3. வருமாறு வேண்டுகை 4. பொருள்புணராவோசை.
"அப்போதொழியுமழைப்பு" (திவ். இயற். நான்மு. 38)

**அலைவு** - 1. அலைதல் (ஓய்வற்றஅலைவுமிகுதி) 2. மனக்கலக்கம் 3. துன்பம்.

**அளைவு** - 1. அளைத்தல் 2. கலப்பு 3. குழைத்தல்.

**அவண்** - 1. அங்கு (அவன்நலமா?) 2. அவ்விடம்
3. அவ்வகை.
"அரைசெலா மவணமணியெலாமவண"
(கம்பரா. பால. நகரப் .7)

**அவன்** - 1. ஆண்பால்சுட்டு (அவன் இல்லை). 2. வீண்
3. பயனின்மை.
"அவன்செய்த்திருவுடம்பலசநோற்கின்றான்
" (கம்பரா. ஆரணிய. சூர்ப். 18)

**அவணம்** - 1. அம்மணம் 2. இருபதினாயிரம்
3.கொட்டைப்பாக்கு

**அவனம்** - 1. அலங்கரித்தல் 2. இருத்தல் 3. கொல்லல்
4. செய்தல் 5. தழுவுதல் 6. தற்காத்தல்
7. தாங்குதல் 8. திருத்தி 9. தீவிரம் 10. பட்சம்
11. பிடித்தல் 12. பெலன் 13. விருத்திப்பு
14. விருப்பம்.

**அவணி** - நன்மை

**அவனி** - 1. உலகம் 2. பூமி.

**ஆண்** - 1. ஆண்மகன் 2. ஆள் 3. தலைமை
4. ஆண்மரம்
"ஆண்மரக்கிளவி" (தொல். எழுத்து. 304)

**ஆன்** - 1. எருமை 2. ஆ(பசு)
முதலியவற்றின்பொதுப்பெயர்
3. மூன்றாம் வேற்றுமைஉருபு.
"தெய்வத்(து)ஆன் ஆகாதெனினும் முயற்சி"
(குறள்:619)

**ஆண்பால்** - 1. ஆண் இனம் 2. ஐம்பாலுள் ஒன்று
(ஆண்பால் உயர்திணை ஆகும்)
3. ஆண்வகை 4. ஆண்தன்மை.

**ஆன்பால்** - ஆவின்பால்

**ஆணகம்** - 1. சுரை 2. கோளகநஞ்சு.

**ஆனகம்** - 1. துந்துபி 2. படகம் 3. ஒருகண்பெருமுரசு 4. போர்முரசு 5. மேக முழக்கம்.
"ஆனகம்பலமுழங்க" (பாரத.சூது. 56)

**ஆணம்** - 1. குழம்பு (பருப்புஆணம்) 2. நேயம் 3. கொள்கலம் 4. பற்றுக்கோடு 5. அன்பு 6. சிறுமை 7. சாறு 8. காட்டுவேப்பிலை
"ஆணமில் பொருளெமக்கு" (கலித்.1)

**ஆனம்** - 1. கள் 2. தெப்பம் 3. மரக்கலம் 4. மதுவகை.

**ஆணன்** - ஆண்மையுடையவன்
"அரவாட்டியவாணனே "
(சிவதரு. சுவர்க்கரக. 222)

**ஆனன்** - சிவன்.

**ஆணாள்** - ஆண்விண்மீன்.

**ஆனால்** - 1. ஆயின் 2. ஆகையால் 3. ஓர் இடைச்சொல்.
"அருளலாதனுவு மானசந்திடாதானால் "
(அருட்பா அருட்பெருஞ். அடி. 976)

**ஆணி** - 1. நடுகழி 2. அடிக்கும்முளை 3. வலைகளின் முனைகளில் கட்டும்சிறு மூங்கிற்கழி 4. கூர்மையானபொருள் (இரும்பாணி, அச்சாணி, எழுத்தாணி) ஆணிவேர் 5. மூலம் 6. முன்மை
"உழுவார் உலகத்திற்கு ஆணிய·்தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து" (குறள் : 1032)

**ஆனி** - 1. ஒரு மாதப் பெயர் 2. கேடு 3. மூலநாள் 4. எல்லை 5. தீங்கு.
"நின்பிள்ளை மேனிக்கானிவந்திலது"
(கம்பரா. இரணிய. 84)

**ஆணு** - 1. நேயம் 2. இனிமை 3. நன்மை 4. அன்பு 5. இதள்.

"ஆணுப்பைங்கிளி யாண்டுப்பறந்ததே" (சீவக. 1002)

**ஆனு** - 1. இனிமை 2. நன்மை.

**ஆணை** - 1. மெய் 2. நெடுமொழி 3. இலச்சினை 4. கட்டளை (தலைவனின் ஆணை) 5. அடையாளம் 6. சூளுரை (தாய்மேல் ஆணை) 7. ஏவல் 8. ஆன்றோர் மரபு 9. முத்திரை 10. வெற்றி 11. முறைமன்றத்தில் ஏற்கும் உறுதிமொழி. "தொல்லாணை நல்லாசிரியர்" (மதுரைக். 761)

**ஆனை** - 1. யானை 2. அத்திமரம் 3. பெரியது என்னும் பொருளில் ஆளப்படும் பெயரெச்சம். "ஆனையாய்க்கீடமாய்" (திருவாச.8.14)

**ஆதண்** - 1. நோய் 2. வருத்தம்.

**ஆதன்** – 1. ஆன்மா 2. அறிவில்லாதவன் 3. குருடன் 4. பழைய காலத்துமக்கள் 5. இயற்பெயர்வகை 6. அருகன் 7.ஆசிரியன் 8. வாதனை.

**ஆர** - 1. உவமைசொல் 2. மிக (வயிறாரஉண்ணல்) 3. மனதார வாழ்த்தல் "ஆரப்படுக" (திவ். திருவாய். 10 10 5)

**ஆற** - 1. ஒருவினையெச்சம் - தணிய "சினத்தைஆறவிடு" "ஆக்கப் பொறுத்தவர் ஆறப்பொறுக்க வேண்டும்"

**ஆரல்** - 1. ஒருவகைமீன் 2. நெருப்பு 3. கார்த்திகை 4. நாண்மீன் 5. மதில் 6. சுவர் மேல்அமைக்கப்படும் மறைப்பு. "நுண்ணாரல்பருவரால்" (புறநா.18)

**ஆறல்** - 1. தணிதல் 2. ஆறுதல் 3. குளிர்தல்.

| | | |
|---|---|---|
| **ஆரா** | - | 1. பாம்பைப் போன்ற தோற்றமுடைய மீன் 2. ஆராமை 3. நிரம்பாமை "ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும்" (குறள் : 370) |
| **ஆறா** | - | 1. ஆறாமை (புண் ஆறாதிருக்கிறது) 2. ஓர் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் – குறையா (ஆறாத் துன்பம்) |
| **ஆராட்டு** | - | தாலாட்டு |
| **ஆறாட்டு** | - | தீர்த்தவாரித்திருவிழா |
| **ஆருதல்** | – | 1. ஆர்தல் 2. நிறைதல் |
| **ஆறுதல்** | - | 1. ஆறியிருத்தல் 2. இளைப்பாறுதல் 3. ஓய்தல் 4. சூடுதணித்தல் 5. குணமாதல் 6. தணிதல் 7. அடங்குதல் 8. மனஅமைதி |
| **ஆரை** | - | 1. நீராரை 2. ஒருபூடு 3. கோட்டை 4. மதில் 5. புற்பாய் 6. அச்சுமரம் 7. தோல் வெட்டும் உளி 8. ஆரக்கால். |
| **ஆறை** | - | ஆற்றூர் |
| **ஆல்** | - | 1. ஒருவகை மரம் (ஆலமரம்) 2. நஞ்சு 3. வெள்ளம் 4. ஆமெனல் 5. மூன்றாம் வேற்றுமை உருபு (உன்+ஆல்=உன்னால்) 6. நஞ்சு 7. பொன்னாங்கண்ணி 8. கரிசலாங்கண்ணி. |
| **ஆழ்** | - | 1. மூழ்கு (கடலில்ஆழ்ந்தான்) 2. ஆழ்தல் (சிந்தனையில்ஆழ்ந்தான்) |
| **ஆள்** | - | 1. ஆட்சிசெய் (நாட்டைஆள்) 2. ஒருவர் 3. ஆளல் "ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின் " (குறள்:1022) |
| **ஆலம்** | - | 1. மழை 2. பூவின்நீர்த்துளி 3. அகலம் 4. ஆலமரம் 5. மழை 6. நஞ்சு 7. உலகு 8. கருமை 9. ஒருமலர் 10. நீர் 11. கடல் |

12. ஆலவிதை 13. வானம் 14. மாவிலங்கம் 15. புன்கு.
"ஆலஞ்சேர்கழனியழகார்வேணுபுரம்" (தேவா. 717)

**ஆழம்** - 1. நிலப்பரப்பின்கீழ்அளவு 2. நுட்பம் (ஆழமானஅறிவு) 3. நீராழம் 4. மனத்தின்ஆழம் 5. தாழ்வு 6. நீர்நிலை 7. பெருமிதம் 8. மறைந்துள்ள ஆற்ற
"ஆழமன்னோஉடைத்தல்வையர்வார்த்தை" (திருக்கோ.61)

**ஆளம்** - 1. ஆளத்தி 2. விரிவராகம் 3. இசைவிரித்துப் பாடுதல்.
"வண்டினங்கள் ஆளம்வைக்கும்அரங்கமே" (திவ். பெரியாழ். 4 8 6)

**ஆலல்** - 1. ஒலி 2. ஆடல் 3. சேருதல் 4. பொருந்தல் 5. ஆரவாரித்தல் 6. மயிற்குரல்.
"மகிழ் சிறந்தாலும் பீலி மஞ்ஞையி னிகலி" (பெரும்பா. 330)

**ஆழல்** - 1. கறையான் 2. அழுந்துதல்

**ஆளல்** - 1. ஆளுதல் 2. மீன்வகை 3. கறையான்
"கோளையாளலொஞ்சான் பஞ்சான்" ( குருகூர்ப்பள்ளு. பக்.7)

**ஆலாபம்** - உரையாடல்

**ஆளாபம்** - 1. விரிவராகம் 2. இசைவிரித்துப் பாடுகை.

**ஆலாலம்** - 1. ஒருமரம் 2. நீர் 3. நஞ்சு 4. வெளவால் 5. மலர்
"ஆலாலமுண்டான் அவன்சதுர்த்த னென்னேடீ" (திருவாச.11.8)

**ஆளாழம்** - ஓர் ஆள் அளவுள்ள ஆழம்

**ஆலி** - 1. அமுதம் 2. கூட்டம் 3. மழைத்துளி 4. தேனீ 5. தோழி 6. காற்று 7. தேள் 8. ஆலங்கட்டி 9. கள்.

"ஆலிபோல்.... முத்திற்கும்" (சீவக. 2786)

**ஆழி** - 1. வட்டம் 2. மோதிரம் (கணையாழி) 3. சக்கரம் 4. உருளை "அற(ம்)ஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால் பிற ஆழிநீந் தலரிது" (குறள்:08)

**ஆளி** - 1. ஒருமரம் 2. செடிவகை 3. அரிமா 4. ஒழுங்கு 5. பாலம் 6. ஆள்வோன் (நோயாளி. தொழிலாளி, அறிவாளி) "அரங்கமாளிஎன்னாளி" (திவ்.பெரிய 7.3.4)

**ஆலுதல்** - 1. ஒலித்தல் 2. களித்தல் 3. ஆடுதல் 4. தங்குதல் 5. நிறைதல். "அன்னச் சேவல்மாறெழுந்தாலும்" (புறநா. 128.4)

**ஆழுதல்** - 1. மூழ்குதல் 2. தோய்தல் (சிந்தனையில்ஆழ்தல்)

**ஆளுதல்** - 1. அரசுசெய்தல் 2. பயன்கொடுத்தல் 3. அடிமைகொள்ளல்.

**ஆவலி** - ஆவளி

**ஆவளி** - 1. வரிசை 2. மரபு 3. தொடர்ச்சி 4. ஒழுங்கு 5. கொடிவழி 6. வழிவழி 7. வரும் மரபு 8. தலைமுறை 9. கைவரை 10. உறுதியின்மை.

**ஆல்வு** – அகலமானது.

**ஆழ்வு** - 1. ஆழம் 2. ஆழ்தல் 3. பதிவு 4. கிடங்கு "ஆழ்வின்றிப் பதிந்ததாயினும்" (இரகு. திக்கு. 26)

**ஆள்வு** - ஆட்சிசெய்தல் "அவனினி திருந்திவ் வேழுலகாள்விடம்" (கம்பரா. நகர.5)

**இணி** - 1. எல்லை 2. ஏணி 3. கண்ணாறு 4. தளை 5. அணி

| | | |
|---|---|---|
| **இனி** | - | 1. இனிமேல் (இனியொருபிரிவில்லை) 2. பின்னர் 3. இப்பொழுது "இனிமேல்" (திவ். இயற். 4 95) |
| **இணை** | - | 1. இரட்டை (இருவரும் இணையாக நடந்தனர்) 2. துணை (இணையர்) 3. ஒப்புக்கொள் 4. எல்லை 5. சேர்க்கை (இணைந்து சென்றனர்) 6. இசைவு 7. ஒப்பு 8. உதவி 9. தோழன் " இணைகடி சீயமன்னான்" (சீவக. 1721) |
| **இனை** | - | 1. வருத்தம் 2. இன்ன. "இனைத்துணைத் தென்பதொன்றில்லை விருந்தின் துணைத் துணை வேள்விப் பயன்" (குறள் : 87) |
| **இணைதல்** | - | 1. சேர்தல் 2. ஒப்புநோக்குதல் 3. பொருந்துதல் 4. விலங்குகளின் புணர்ச்சி. |
| **இனைதல்** | - | 1. வருந்துதல் 2. இரங்குதல் 3. அஞ்சுதல் "இணைந்திரங்கிப்பள்ளி படுத்தார்களே" (சீவக. 292) |
| **இணையல்** | - | 1. ஒன்றாதல் 2. சேர்தல் |
| **இனையல்** | - | 1. வருந்துதல் 2. வருந்தற்க |
| **இணையர்** | - | 1. இல்லறத்தில் இணைந்த இருவர் 2. இரட்டையர் |
| **இனையர்** | - | 1. இத்தன்மையர் 2. இவர்கள் "இனையர் இவர் எமக்கு இன்னம்யாம் என்று" (குறள் : 790) |
| **இர** | - | 1. இரவு 2. கையேந்திக்கேட்டல் "இரக்கவிரக்கக்கார்க் காணிற் கரப்பின்அவர்பழி தம்பழியன்று" (குறள்: 1051) |
| **இற** | - | 1. இழத்தல் 2. இறால் 3. அளவுகடந்தது "இறந்த வெகுளியிற்றீதே சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு" (குறள் : 531) |

**இரக்கம்** - 1. அருள் 2. மனவுருக்கம் 3. மனவருத்தம் 4. ஒலி
"இரக்கமுடை யிறையவனூர் " (தேவா. 145.9)

**இறக்கம்** - 1. தாழ்வு 2. இறங்குதுறை 3. இறப்பு 4. இறங்குகை 5. சரிவு 6. நிலைத் தவறுகை 7. குறைவு 8. உணவு முதலியன உட்செல்லுகை
"இறக்க முற்றானென வேக்க மெய்தினாள்" (கம்பரா.சடாயுகா. 19)
"சோற்றிறக்கமு மறந்தான்" (குருகூர்ப்.)

**இரக்கை** - 1. பாதுகாத்தல் 2. ஒலி 3. திருநீறு.

**இறக்கை** - 1. சிறகு 2. இரத்தல் 3. கண்ணாற்றின் இருபுறங்களிலுமுள்ள துணைச்சுவர்.

**இரங்கல்** - 1. அழுகை 2. நெய்தல் 3. வரிபொருள் 4. ஒலி 5. யாழ் 6. நரம்போசை 7. வருந்துதல்.

**இறங்கல்** - 1. ஒருவகைநெல் 2. அடைபடுகை 3. இறங்குதுறை.

**இரங்குதல்** - 1. மனமிளகுதல் 2. வருந்துதல் 3. கூறுதல் 4. ஈடுபடுதல் 5. பரிவுகாட்டுதல் 6. அருள்செய்தல் 7. மனமழிதல் 8. அழுதல் 9. ஒலித்தல்.
"சிற்றுயிர்க் கிரங்கிக்காய் சினவால முண்டாய்" (திருவாச 6 50)

**இறங்குதல்** – 1. தாழ்தல் 2. நாணுதல் 3. கீழ்இறங்குதல் 4. இழிதல் 5. கரை சேர்தல் 6. அடியில் தங்குதல் 7. உட்செல்லுதல் 8. தாழ்வடைதல் 9. நஞ்சு நோய் முதலியனதணிதல் 10. விலை குறைதல் 11. தாழ்ந்து வணங்குதல் 12. நிலைகுலைதல்.
"இறங்குகண்ணிமையார்" (சீவக.248)

**இரகு** – ஒரு மன்னனின் பெயர்

**இறகு** - 1. பறவைச்சிறகு 2. தனியிறகு 3. மயிற்பீலி.

**இரத்தல்** - 1. வேண்டுதல் 2. கையேந்துதல்
"இன்பம்ஒருவற்(கு) இரத்தல்இரந்தவை
துன்ப முறாஅ வரின் (குறள்: 1052)

**இறத்தல்** - 1. சாதல் 2. மிகுதல் 3. அளவுகடத்தல்
"துறந்தாரின்தூய்மையுடையர்இறந்தார்வாய்
இன்னாச்சொல்நோற்கிற்பவர். (குறள்: 159)

**இரந்து** - 1. ஒருவினையெச்சம் 2. கெஞ்சி
3. கையேந்தி.
"இரந்தும்உயிர்வாழ்தல்வேண்டின்பரந்து
கெடுகஉலகுஇயற்றியான்" (குறள்: 1062)

**இறந்து** - 1. ஒருவினையெச்சம் 2. அளவுமிகுந்து
"இறந்துஅமைந்த சார்புடையர்ஆயினும்
உய்யார் சிறந்(து) அமைந்தசீரார்செறின்"
(குறள்: 900)

**இரப்பு** - 1. கையேந்தல் 2. இரத்தல் 3. வறுமை
"இரப்புமோர்ஏஎர்உடைத்து" (குறள் . 1053)

**இறப்பு** - 1. சாவு 2. மிகுதி 3. வரம்பு கடத்தல் 4. போக்கு
5. உயர்ந்த பொருள் 6. துறக்கம் 7. வீட்டிறப்பு
8. இறந்தகாலம்.
"இறப்பி னெதிர் வினிகழ்வின்"
(தொல்.சொல். 202)

**இரவி** - 1. கதிரவன் 2. மலை 3. வாணிகத்தொழில்
"கண்ணாரிரவிகதிர்வந்து கார்கரப்ப"
(திருவாச.7.18)

**இறவி** - 1. சாவு 2. இறத்தல்
"இறவியொடுபிறவியற" (திருப்பு.790)

**இரவு** - 1. இரா (இரவுநேரம்) 2. இருள்மரம்
3. கையேந்தல் 4. மஞ்சள்.
"வேலெடு நின்றான்இடுவென்றதுபோலும்
கோலொடுநின்றான்இரவு" (குறள்: 552)
"எல்லையு மிரவுமெண்ணாய்" (புறநா. 7 7)

| | | |
|---|---|---|
| **இறவு** | - | 1. சாவு 2. இறுத்தல் 3. மிகுதி 4. எல்லை 5. இறால்மீன் 6. தேன்கூடு 7. வீட்டிறப்பு 8. மலைச்சாரல் 9. மலை 10. நீக்கம் 11. முடிவு. "இறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" (திருவாச.37.6) |
| **இரவை** | - | 1. நுட்பமானபொருள் 2. அணு 3. கோதுமை 4. குறுநொய் 5. துப்பாக்கியில் இடும் ஈயக் குண்டு |
| **இறவை** | - | 1. ஏணி 2. இறைக்கூடை 3. விரற்புட்டில் |
| **இராவுதல்** | - | அராவுதல். |
| **இறாவுதல்** | – | வதக்கி மயிர்போகச் சீவுதல். |
| **இரு** | - | 1. உட்கார் (இருக்கை) 2. காட்டுமல்லிகை 3. பெரிய (இருங்கோவேள்) 4. தங்கு (இருந்துபோ) 5. இரண்டு 6. இரட்டை 7. காட்டுமல்லிகை. "இருபுனலும் வாய்ந்தமலையும்வருபுனலும் வல்லரணும்நாட்டிற்குறுப்பு" (குறள்:737) |
| **இறு** | - | 1. வடி (நீரைஇறு) 2. முறி 3. ஒடி (குச்சியைஇறு) |
| **இருக்கம்** | - | 1. கரடி 2. விண்மீன் 3. ஓரை |
| **இறுக்கம்** | - | 1. நெருக்கம் 2. நெகிழாத்தன்மை (முட்டையின்கட்டு இறுக்கமாய் இருக்கிறது) 3. புழுக்கம் (இரவிலும் இறுக்கமாய் இருக்கிறது) 4. கடுஞ்செட்டு 5. முட்டுப்பாடு |
| **இருக்கல்** | - | 1. அமர்தல் 2. இருத்தல். |
| **இறுக்கல்** | - | 1. திறைகொடுத்தல் 2. அழுத்தல் "இறுக்கல்வேண்டுந் திரையே" (புறநா 97 - 20) |
| **இருக்கன்** | - | 1. இருக்குமறையைஅறிந்தவன் 2. நான்முகன் |

| | | |
|---|---|---|
| | | "தரைவிசும்பைச் சிட்டித்தவிருக்கன்" (திருப்பு. 419) |
| **இறுக்கன்** | - | 1. ஈயாதவன் 2. கடும்பற்றுள்ளவன். |
| **இருக்கு** | - | 1. ஒருநூல் (இருக்குமறை) வேதமந்திரம். "வேதப்புனித விருக்கைநாவிற்கொண்டு" (திவ். திருவாய் 5 219) |
| **இறுக்கு** | - | 1. அழுத்திக்கட்டு (விறகைஇறுக்கிக்கட்டு) 2. ஒடுக்குகை 3. கண்டிக்கை 4. இறுகல்முடிச்சு. |
| **இருக்குதல்** | - | இருத்தல் |
| **இறுக்குதல்** | - | 1. அழுந்தக்கட்டுதல் 2. இறுகுஉடுத்தல் 3. ஒடுக்குதல் 4. உள்ளழுந்துதல் 5. உறையச்செய்தல். |
| **இருகால்** | – | 1. இரண்டுகால் 2. பெரியகால் 3. அரை 4. இருமுறை |
| **இறுகால்** | - | ஊழிக்காற்று "இறுகால்மேன்மேல்வந்தெழுந்ததுபோல்" (பெரியபு. எறிபத்த.33) |
| **இருத்தல்** | - | 1. உட்காருதல் 2. நிலைபெறுதல் 3. உரிப்பொருள்கள் 4. ஐந்தனுள் முல்லைக்குறியது 5. உயிரோடிருத்தல் 6. வாழ்வு |
| **இறுத்தல்** | - | 1. ஒடித்தல் 2. வடித்தல் 3. சொல்லுதல் (விடைஇறுத்தல்) 4. வெட்டல் 5. தைத்தல். |
| **இருதி** | – | இரண்டெழுத்தாலாகிய அசை |
| **இறுதி** | - | 1. முடிவு 2. சாவு 3. வரையறை |
| **இருப்பு** | - | 1. மீதமிருப்பு (கையிருப்பு) 2. இருக்கை (இருப்புக்கொள்ளாது எழுந்தான்) 3. குடியிருப்பு 4. நிலை 5. இருப்பிடம் 6. பொருண்முதல் "இப்பிணினாகர் " (கந்தபு.சூர.வதை. 425) |

**இறுப்பு** - 1. ஆவணஓலை 2. குடியிருக்கை
3. தங்குகை 4. கடன் செலுத்துகை.
"வைகலாயிரமாறுப்புத்தண்ட" (சீவக. 2570)

**இரும்பல்** - 1. இருமல் 2. ஈளைநோய் 3. ஆட்டுநோய்.

**இறும்பல்** - வியப்பு

**இரும்பு** – 1. கரும்பொன் 2. கருவி 3. பொன்
4. செங்காந்தள் 5. கிம்புரி 6. கடிவாளம்.

**இறும்பு** - 1. குறுங்காடு 2. சிறுதூறு 3. சிறுமலை
4. தாமரைப்பூ 5. காந்தட்பூண்டு 6. வியப்பு.

**இரை** - 1. இரைச்சல் 2. பேச்சு 3. நிலம் 4. நீர்
5. பறவை, விலங்கு முதலியனவற்றின்
உணவு 6. உண்ட உணவு 7. நாக்குப்பூச்சி.
"இரையுந் தொழுதுநீர்வையை" (திருவிளை. பரிநரி.57)

**இறை** – 1. இறைமை 2. உயரம் 3. கடவுள் 4. சிவன்
5. அரசன் 6. தலைமை 7. நடுவு நிலைமை
8. உயர்ந்தோர் 9. தலைவன் 10. தமையன்
11. வீட்டிறப்பு 12. இறகு 13. சிறகு 14. இறத்தல்
15. மாமரம்
"இறைகாக்கும்வையகமெல்லாம்" (குறள்:547)

**இரைதல்** - 1. ஒலித்தல் 2. கூச்சலிடுதல் 3. வீங்குதல்.

**இறைதல்** - 1. வணங்குதல் 2. சிந்துதல் 3. சிதறிப்போதல்
"இணையடி யிறைமின்" (பதினோ.ஆளு. திருக்கலம். 48)

**இரைத்தல்** - 1. மூச்சுவாங்குதல் (மூச்சுஇரைத்தல்)
2. ஒலித்தல் 3. சீறுதல் 4. வீங்குதல்.
"இரைக்கின்றபாம்பினை" (பதினொ.காரைக். திருவீரட்.7)

**இறைத்தல்** - 1. நீர்இறைத்தல் 2. மிகுதியாகச்செலவிடுதல்
(பணத்தை இறைத்தல்) 3. சிதறுதல்
4. நிறைத்தல் 5. நீர்பாய்ச்சுதல்

"இறைப்பவர்க் கூற்றுநீர்போலமிகும்"
(குறள்: 1161)

**இரைப்பு** – 1. மூச்சுவாங்குதல் 2. இரைச்சல்
3. ஈளைநோய் 4. மோகம்
5. கரப்புப்பூச்சி
"புதுப்பிணத்திரைப்புமிக்கு (தக்கயாகப் 129)

**இறைப்பு** – நீர்இறைப்பு

**இல** - 1. இலவு 2. இலவமரம் 3. இல்லை
(பொருளில்)
"இலமலர்ப்பஞ்சிப் பாதத்து" சீவக. 264)

**இழ** - தவறவிடு (பொருளைஇழந்தான்)
"ஈத்துவக்கும்இன்பம் அறியார்கொல்
தாமுடைமை
வைத்து இழக்கும் வன்கண் அவர் "
(குறள் : 228)

**இள** - 1. இளகல் (வெல்லம்இளகியது) 2. சிறிய
(இளநகை) 3. இளைய
"எள்ளல் இளமை" (தொல். மெய். 4)

**இலக்கம்** - 1. எண் 2. நூறாயிரம் 3. அடையாளம்
4. குறிப்பிட்ட இலக்கு
"இலக்கம் உடம்பிடும்பைக்கென்று
கலக்கத்தைக்
கையாறாக்கொள்ளாதாம்மேல்" (குறள் : 627)

**இளக்கம்** - 1. இலகியதன்மை 2. இளக்காரம் 3. தளர்ச்சி
4. நெகிழ்ச்சி 5. விலைக்குறைவு
6. மென்மை
"இளக்கமில் கடற்படை" (கம்பரா.ஊர்தேடு.71)

**இலக்குதல்** - 1. அடையாளமிடுதல் 2. வரைதல்
3. ஒளிர்தல் 4. குத்துதல்
5. வரைதல் 6. தைத்தல்.
"இரேகையிலக்குக" (சைவச. பொது. 274)

**இளக்குதல்** - 1. இளக்கச்செய்தல் 2. நெகிழ்தல்
3. அசைத்தல்.

**இலகம்** - ஊமத்தைப்பூண்டு

**இளகம்** - மருந்துக்குழம்பு

**இலகு** - 1. எளிது 2. நுண்மை 3. அகில்
4. கனமின்மை 5. சிறுமை
6. காலவகை 7. தணிவு 8. குற்றெழுத்து.

**இளகு** - 1. நெகிழ் (இளகியநெஞ்சம்) தளர்
2. இளகுவது

**இலகுதல்** - 1. விளங்குதல் 2. ஒளிசெய்தல்
3. வெளிச்சமாதல் 4. மிகுதல்.

**இளகுதல்** - 1. அசைதல் 2. மென்மையாதல் 3. உருகுதல்
4. தணிதல் 5. நெகிழ்தல் 6. மெல்குதல்
7. கட்டுநெகிழ்தல் 8. களைத்தல்
9. படுதல் 10. தழைத்தல்
"நீர்நின் றிளகிற்றிதுவேண்டா" (சீவக. 718)

**இலம்** - 1. இல்லம் 2. வறுமை
"இலமென்று அசைஇ
இருப்பாரை" (குறள்.1040)

**இளம்** - 1. இளமை (இளம்பெண்) 2. தளிர்
3. இளகுவது

**இலி** - 1. இல்லாதவன் 2. இல்லாதவள்
3. இல்லாதது 4. எலி.

**இழி** - 1. இகழ்வு 2. இறங்கு 3. வழிதல்
"மால்புடைநெடுவரைகோடு தோறும்
இழிதரும்" (புறநானூறு).

**இளி** - 1. சிரிப்பு (பல்இளித்தான்) 2. எளியன்
(இளிந்தவன்) 3. யாழின்
நரம்புகளுள்ஒன்று 4. ஒருவகைச் சுரம்
5. இழிவு.
"ஆவிற்குநீரென்(று) இரப்பினும்நாவிற்கு
இரவின்இளிவந்ததில்" (குறள் : 1066)

**இலை** - 1. பூவிதழ் 2. கதவின் இலை 3. பச்சிலை 4. மரம், செடி, கொடிகளின் இலை 5. வெற்றிலை 6. அணிகளின் இலைத் தொழில் 7. சக்கரத்தின் ஆர்
"இலைவளர்குரம்பை" (சீவக. 1432)

**இழை** - 1. செதுக்கு (பலகையை இழைப்புளியால் இழைத்தான்)
2. நூலிழை 3. பஞ்சுநூல் 4. அணிகலன் 5. நுட்பம்
"பிழைத்துணர்ந்தும்பேதைமைசொல்லார் – இழைத்துணர்ந் தீண்டியகேள்வியவர்"
(குறள் : 417)

**இளை** - 1. மெலி (இளைத்துவிட்டான்) 2. கட்டுவேலி 3. காவல் 4. இளையல் 5.ஆ 6. மேகம் 7. இளமை
"இளைசூழ்மிளை" (சிலப் 14.62)

**இலைத்தல்** - 1. சோர்தல் 2. சுவைகுறைதல் 3. பச்சை நிறமாதல் 4. தன்மை குன்றுதல்.

**இழைத்தல்** - 1. செதுக்குதல் 2. பதித்தல் சூழ்தல் 3. மூச்சிரைத்தல் 4. நுட்பமாக ஆராய்தல் 5. வரைதல் 6. நுண்பொடியாக்குதல் 7. கூறுதல் 8. அமைத்தல் 9. பின்னுதல்
"இழைத்துணர்ந்து" (குறள். 417)

**இளைத்தல்** - 1. மெலிதல் 2. தளர்தல் 3. வளங்குன்றுதல் 4. தோற்றுப்போதல் 5. சோர்தல் 6. மெலிதல் 7. பின்னடைதல் 8. ஏழைமைப்படுதல் 9. வளங்குறைதல்
"எல்லாப்பிறப்பும்பிறந்திளைத்தேன்"
(திருவாச.131)

**இவண்** - 1. இவ்விடம் (இவண்நலம்) 2. இம்மை

**இவன்** - சுட்டுப்பெயர் (இவன்தானாசெய்தான்?)

**இழிதல்** - 1. இழிவுபடுத்தல் 2. தாழ்தல்
3. வெளிப்படுதல் 4. இறங்குதல்
5. விழுதல் 6. நுழைதல்
"மாந்தர்நிலையினிழிந்தக் கடை" (குறள்:964)

**இளிதல்** - 1. இணுக்குதல் 2. இலைகளை
உருவிப்பறித்தல் 3. உரித்தல்
4. இகழப்பட்டுஎளியனாதல்.
“இளிந்த வீயும்” (சீவக.1241)

**இழிவு** - 1. சிறுமை 2. இகழ்ச்சி 3. குற்றம் 4. கேடு
5. குறைவு
"இழிவுஅறிந்து உண்பான்கண்இன்பம்போ
ல்நிற்கும்
கழிபேர்இரையான்கண்நோய்" (குறள்:946)

**இளிவு** - 1. அருவருப்பு 2. இழிவு 3. அவலச்சுவை
4. பழி.
"இளிவரின்வாழாதமானமுடையார்
ஒளிதொழுதேத்துமுலகு" (குறள்:970)

**இழைப்பு** - 1. இழைத்தல் 2. செய்தொழில் 3. காசநோய்.
"உழைக்கலமகளிரு மிழைப்பிரிந்தரற்றவும்"
(பெருங். உஞ்ஞைக். 46 334)

**இளைப்பு** - 1. களைப்பு 2. மெலிவு 3. தொய்வு 4. சோர்வு
"இளைப்பெய்த" (திவ். இயற். பெரியதிருவ.23)

**இளித்தல்** - 1. பல்லைக்காட்டுதல் 2. கேலிசெய்தல்

**இழித்தல்** - 1. இறக்குதல் 2. இகழுதல் 3. நிந்தித்தல்
4. அருவருத்தல் 5. கெஞ்சுதல்.
"இழித்தனனென்னையானே" (திருவாச.
5 66)

**ஈங்கண்** - இவ்விடம்
“ஆங்கனங் கனையிரு ளெல்லை
நீந்தினான்“ (சீவக.1942).

**ஈங்கன்** - இவ்வாறு

| | | |
|---|---|---|
| | | "ஈங்கனங் கனையிரு ளெல்லை நீந்தினான்" (சீவக.1942). |
| **ஈணவள்** | - | ஈன்றவள் |
| **ஈனவள்** | - | இழிந்தவள் |
| | | "பண்பாடு தவறி நடப்பவள் இழிந்தவள் என கருதப்படுவாள்" (உ.வ.) |
| **ஈணை** | - | 1. அகணி 2. பனைநார் |
| | | "பனைநாரில் கயிறு திரித்தல் தொழில் அருகிப் போனது" (உ.வ.) |
| **ஈனை** | - | 1. இலைநரம்பு |
| | | "இலை நரம்பு எல்லா இலைகளிலும் காணப்படும்" |
| | | 2. சித்திரக் குறிப்பு |
| | | "பண்டைய காலக் கல்வெட்டில் சித்திரக் குறிப்புகள் மூலம் செய்தி அறிவிக்கப்பட்டது" |
| **ஈரல்** | - | 1. கல்லீரல் உடல் உறுப்புகளுள் ஒன்று. |
| | | 2. அறுக்காதே |
| | | "தயிரினுடன் ஈரல் புளிதமும் மாத்தாழி தொறும் தம்மின்" (கலிங்.13.17) |
| | | "வாளாற் செவி முதல் ஈரல் என்றாள்" (சீவக.4.201). |
| **ஈறல்** | - | 1. நெருக்கம் 2. துன்பம் 3. பின்னல். |
| **ஈரம்** | - | 1. அருள் 2. அழகு 3. அறிவு 4 அன்பு. |
| **ஈறம்** | - | 1. துயரம் 2. நெருக்கம். |
| | | "என்னெஞ் சீறலை யாருக்குச் சொல்லி ஆற்றுவேன்" (யாழ்ப்.). |
| **உண்** | - | 1. சாப்பிடு 2. அருந்து |
| | | "உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான் எண்ணப் படவேண்டா தார்" (குறள்.922). |
| **உன்** | - | 1. நீ 2. உந்து 3. நினை. |

**உண்கலம்** - உண்ணும் ஏனம்.
**உன்கலம்** - 1. உன்னுடைய தட்டு 2. உன் கப்பல்.
**உண்ணம்** - 1. வெப்பம் 2. நெருப்பு
"உண்ணவண்ணத் தொளி நஞ்ச முண்டு"
(தேவா.510.6).
**உன்னம்** - 1. கருத்து 2. ஊழ்கம் 3. மனம் 4. குறியாகக் கொள்ளும் ஒரு மரம்
"அகத்தியான் பள்ளியை யுன்னஞ் செய்த"
(தேவா.847.2).
**உண்ணல்** - 1. துய்த்தல் 2. விழுங்கல்.
**உன்னல்** - 1. கருதுகை 2. மனம்
"உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே"
(உரை நூற்பா)
"மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும்"
(குறள்.456).
**உண்ணலர்** - உண்ணாதவர்
**உன்னலர்** - பகைவர்
**உண்ணா** - 1. உள்நாக்கு 2. உண்ணாத
**உன்னா** - நினைக்காத
**உண்ணார்** - சாப்பிடாதவர்
**உன்னார்** - நினைக்காதவர்
**உண்ணி** - 1. உண்பவர் 2. உயிர் வகை 3. பாலுண்ணி 4. குழந்தை 5. மாட்டின் கன்று 6. பிஞ்சு 7. சிறியது.
"அப்ப னிரந்துண்ணி" (தனிப்பா.1.35.66)
"புலிமுகத் துண்ணி பறித்துவிடல்" (பழ.109)
**உன்னி** - 1. ஊழ்குதற்குரிய (தியானத்திற்குரிய) பொருள். 2. குதிரை 3. செடிவகை.
"ஞால முன்னியைக் காண்டு
நாங்கூரிலே" (திவ் பெரியதி.10 13)

“உன்னிவாய்ப் பொன் கறித்திட “
(இரகு.நகர.51)

**உண்ணு** - சாப்பிடு (உணவை உண்ணு).

**உன்னு** - 1. நினை (உயர்வை உன்னு)
2. விரைந்தெழும்புகை
3. இழுக்கை.
“அவன் இரண்டு உன்னிலே வந்து
விடுவான் “ (இ.வ.).

**உண்ணுதல்** - 1. சாப்பிடல் 2. துய்த்தல் 3. உட்கொள்ளுதல்
4. பொருந்துதல் 5. ஒத்தல் 6. கவர்தல்
7. இசைவாதல்
“மங்கைய ரிளநலமைந்த ருண்ண “
(கம்பரா.உண்டா.63)
“நதியுண்ட கடல் “ (தாயு.மலைவளர்.1.)
“உறியுண்டா கரகத்தோடு “
(திருவிளை.யானையப்.38)
“சேலுண் கண்ணியர் “ (சீவக.2383)
“அவணனா ருயிரை யுண்ட கூற்றினை “
(திவ்.திருக்குறுந்.63)
“ஓசை யூட்டினு முண்ணாத வாறும் “
(யாப்.வி.பக்.97).

**உன்னுதல்** - 1. கருதுதல் 2. எழும்புதல் 3. முன்னங்கால்
விரலை யூன்றி
நிமிர்தல் 4. இழுத்தல் 5. ஊஞ்சலுந்துதல்.
“குதிரை யுன்னிப் பாய்ந்தது ” (உ.வ)

**உண்முகம்** - மனத்தால் உட்புறம் நோக்கும் நோக்கம்
“கான நீரிற்கண் டுண்முக மடைவார் “
(மகராஜாதுறவு.102).

**உன்முகம்** - 1. முன்னோக்குதல் 2. மேல் நோக்கிய முகம்
3. மேல் நோக்கம் 4. அண்ணாந்து பார்க்கை
5. உதவியாயிருக்கை.

**உண்மை** - 1. உள்ளது 2. உளதாகை 3. உள்ளதன்மை 4. மெய்ம்மை 5. ஊழ் 6. பொருள்களின் இயற்கைக் குணத்தைச் சுட்டிச் சொல்லுதல் 7 ஆதன்.
"உண்மையுமாய் இன்மையுமாய்" (திருவாச.38.8)
"கூற்றுண்மையான்" (நாலடி.20)

**உன்மை** - தசை பிடுங்கும் குறடு.

**உணி** - 1. நுகர்வது 2. நுகர்வார்.

**உனி** - உன்னி.

**உணை** - மெலிவு.

**உனை** - உன்னை.

**உரத்தல்** - 1. இறுக்குதல் 2. வலியுறுத்தல் 3. மிகுதல் 4. எடுப்பாதல்.

**உறத்தல்** - 1. கிள்ளியெடுத்தல் 2. பிளத்தல் 3. அழுத்துதல் 4. செறிதல் 5. உறிஞ்சுதல் 6. ஒட்டக் கறத்தல்
"பொற்கை நகத்தாலுறக்கும்" (காளத்.உலா.460.).

**உரப்பு** - 1. பேரொலி 2. அதட்டு 3. கடினம் 4. முரட்டு 5. வலி 6. மனத்திண்மை 7. ஆற்றல்.
"உரப்பு எத்தைப்பற்ற வெனில்" (ஈடு.1.7.8).

**உறப்பு** - செறிவு
"விறப்பு முறப்பும் வெறிப்புஞ் செறிவே" சொல்.347).

**உரம்** - 1. வலிமை 2. திண்மை 3. குழந்தைகளுக்கு விழும் சுளுக்குவகை 4. எரு 5. மதில் 6. விரைவு 7. மார்பு 8. ஊக்கம்.
"நிலத்துக்கு உரம்போட வேணும்".

**உறம்** - 1. கிட்டுதல் 2. சேர்தல் 3. மிகுதல்.

**உரல்** - 1. நெல் முதலியவை குற்றும் உரல் 2. இடியப்பம் பிழிவதற்குரிய கருவி

"முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின் உலக்கை" (கலித்.40).

**உறல்** - 1. அடைவகை 2. அணைத்தல் 3. உறுதல் 4. கிட்டல் 5. உறவு 6. உறவின் முறை.

**உரவு** - 1. அறிவு 2. வலிமை 3. நெஞ்சுரம் 4. மிகுகை 5. கடல்
"உரவுச்சினந் திருகிய" (புறநா.25.3).

**உறவு** - 1. சொந்தம் 2. உறுகை 3. நட்பு 4. விருப்பம் 5. உலகப் பற்று
"யானையோ டாட லுறவு" (பழ.16).

**உரவோர்** - 1. வலிமையுடையோர் 2. ஊக்கமுடையவர்.

**உறவோர்** - 1. சுற்றத்தார் 2. நண்பர் 3. தக்கார் 4. அடைந்தோர்.

**உரி** - 1. தோல் 2. பட்டை
"உடுப்பன மரவுரி தழைகள்" (தணிகைப்பு.நாட்.47).

**உறி** - 1. தயிர் 2. உறி 3. தூக்கு 4. ஏணை.

**உரிஞ்சுதல்** - 1. உராய்தல் 2. தேய்தல் 3. இழுத்தல் 4. வற்றச் செய்தல்
"நறுங்குறடுரிஞ்சிய....தேய்வை" (திருமுரு.33).

**உறிஞ்சுதல்** - உள்ளிழுத்தல் (நீரை உறிஞ்சுதல்)
"மழைநீரைப்பூமி உறிஞ்சிவிட்டது" (உ.வ).

**உரிதல்** - 1. தோல் முதலியவை கழலுதல் 2. ஆடை களைதல்.

**உறிதல்** - உறிஞ்சுதல்.

**உரு** - 1. உருவம் 2. உடல் 3. சிலை 4. தோணி 5. தாலி
முதலியற்றில் கோக்கும் உரு 6. வடிவழகு
"உருவுடைக் கன்னியரைப் போல" (நாலடி.274).

**உறு** - மிக்க

"உறு...மிகுதி செய்யும் பொருள்"
(தொல்.சொல்.301).

**உருக்குதல்** - 1. மனம் மெலியச் செய்தல் 2. நெகிழ்த்துதல் 3. அழித்தல் 4. வருத்துதல்
"எம்பிரானாமஞ்சொல்லி யுருக்கினன்"
(கம்பரா.உருகாட்.27).

**உறுக்குதல்** - 1. அதட்டுதல் 2. தண்டித்தல் 3. சினத்தல் 4. தாண்டுதல்
"உறுக்கிக் கட்டுவிப்பாரைப் போலே"
(ஈடு.7.11).

**உருப்பு** - 1. வெப்பம் 2. சினம் 3. கொடுமை 4. மிகுதி
"கன்மிசை உருப்பிறக் கணைதுளி சிதறென" (கலித்.16.7).

**உறுப்பு** - 1. சினை 2. கிளை 3. உடல் உறுப்பு 4. மேல்வரிச் சட்டம் 5. பகுதி 6. உடம்பு
"உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை"
(குறள்.761).

**உருபு** - 1. வேற்றுமை உருபு 2. வடிவம் 3. நிறம் 4. நோய்
"உருபுகிளர் வண்ணம் கொண்ட"
(பதிற்றுப்.52.30).

**உறுபு** - 1. மிகுதி 2. பாலை யாழ்த்திறம்.

**உரும்** - 1. இடி 2. அச்சம் 3. சினம் 4. நெருப்பு
"உருமுற்ற பாம்பின்" (சீவக.27).

**உறும்** - உறுதியுடைத்து
"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான்முந்(து) உறும்" (குறள்.380).

**உரும்பு** - 1. கொடுமை 2. கொதிப்பு
"உரும்பில் கூற்றத் தன்னநின்"
(பதிற்றுப்.26.13).

| | | |
|---|---|---|
| **உறும்பு** | - | 1. உலர்ந்த கரம்பை 2. மண்ணின் கூரிய சிறுகட்டி. |
| **உருவல்** | - | ஒருவகைக் காதணி. |
| **உறுவல்** | - | உறுவோன் என்னும் ஒரு தன்மை வினைமுற்று துன்பம் “பெண்பா றன்னுறுவ றீர்ப்பான்“ (கம்பரா.சடாயு.183). |
| **உருவன்** | - | உருவத்தைக் கொண்டவன். |
| **உறுவன்** | - | 1. முனிவன் 2. அருகன் “உறுவனோ டியானுற்ற நற்றிறம்” (சிலப்.9 53) |
| **உருவை** | - | 1. முள்ளிப்பூண்டு 2. சூரைச்செடி. |
| **உறுவை** | - | 1. அவ்வை 2. அடைவாய். |
| **உரை** | - | 1. சொல் 2. விளக்கம் 3. உரைக்கை 4. உரைவளம் 5. புகழ் 6. முழக்கம் “உரையாமோ நூலிற்கு நன்கு“ (நாலடி.319). |
| **உறை** | - | 1. வாள் உறை 2. இருப்பிடம் 3. கிணற்றுறை 4. போர்வை 5. காணிக்கைப் பொருள் 6. பாம்பின் நஞ்சுப்பை “நாணாளுறரையு நறுஞ்சாந்துங் கோதையும்“ (பரிபா.16.52). |
| **உரைத்தல்** | - | 1. தேய்த்தல் 2. சொல்லுதல் 3.பூசுதல் 4. ஒலித்தல். |
| **உறைத்தல்** | - | 1. காரமாயிருத்தல் 2. அதட்டுதல் 3. சொரிதல் 4. மிகுதல் 5. எரிதல் 6. பெய்தல் 7. துளித்தல் 8. உதிர்தல் 9. ஊன்றுதல் “யானை யிருஞ் சினமுறைக்கும்“ (ஐங்குறு.352). |
| **உரையல்** | - | 1. உரைத்தல் 2. சொல்லுதல் “கனவிற் றலையிட் டுரையல்“ (கலித்.92.57). |
| **உறையல்** | - | 1. பிணக்கு 2. மாறுபாடு. |
| **உல்** | – | தேங்காய் உரிக்கும் கருவி. |

**உள்** - 1. உள்ளே 2. உள்ளம் 3. நினை 4. கிணற்றுள் 5. மறை 6. மழை
"உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர்
எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர்" (குறள்.927).

**உல்கு** - 1. ஆயம் 2. சுங்கவரி
"உறுபொருளும் உல்கு பொருளும்தன்
ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன்
பொருள்" குறள்.756).

**உள்கு** - 1. நினை 2. எண்ணு.

**உல்லம்** - 1. கடல் மீன் வகை (உல்ல மீன்) 2. வாசற்கால்.

**உள்ளம்** - 1. மனம் 2. எண்ணம் 3. அகச்சான்று 4. ஊக்கம் 5. அறிவியல்
"உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு" (குறள்.598).
"உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ" (குறள்.798).

**உல்லி** - 1. மெலிந்த ஆள் 2. மெல்லியது 3. வெங்காயப்பூ 4. மதில் 5. ஒல்லி 6. தலை.

**உள்ளி** - 1. வெங்காயம் 2. வெள்ளைப்பூண்டு 3. உள்ளி விழா
"சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார்
உள்ளி நறுமலர் நாணின கண்" (குறள்.1231).

**உல்லு** - 1. உல் 2. கழு.

**உள்ளு** - 1. எண்ணு 2. உள்ளான்
"உள்ளு மூரலும் புள்ளும் புதாவும்
(சிலப்.10.117).

**உலகு** - 1. உலகம் 2. உயர்ந்தோர்
"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்(று) உலகு" (குறள்.23).

**உளகு** - 1. யாழின் தண்டு 2. ஊர் ஒழுங்கு.

**உலம்** - 1. திரட்சி 2. உருண்டு திரண்ட கல் 3. வலிமை 4. பிணம் 5. நீர் 6. காற்று 7. துன்பம்

8. பட்டாடை 9. அச்சக் குறிப்பு
10. வாசல் 11. அகலம்
"உலங்கொள் சங்கத் தார்கலி " (தேவா.112.8).

**உளம்** - 1. உள்ளம் 2. உள்ளிடம் 3. மார்பு 4. கருத்து
5. முயற்சி
"நரிமா வுளங்கிழித்த வம்பினில் " (நாலடி.152).

**உலம்புதல்** - 1. ஒலித்தல் 2. ஆரவாரம் 3. அலுப்புதல்
"ஒல்காதார் வாய்விட் டுலம்புவ "
(நீதிநெறி.72).

**உழம்புதல்** - பல ஒலிகளைக் கலந்தொலித்தல் குழம்புதல்.

**உளம்புதல்** - 1. அலைத்தல் 2. ஓலமிடுதல்
"மைம்மா வுளம்புநர் " (கலித்.23)
"குறுநரியுளம்பும் " (அகநா.94).

**உலர்** – காயவை (உலர்த்தல்).

**உளர்** - 1. வாழ்கின்றார் 2. உடையவர் 3. உடந்தை.

**உலர்தல்** - 1. காய்தல் 2. வாடுதல் 3. அழிதல்
"உலந்து போனே னுடையானேன் "
(திருவாச.32).

**உளர்தல்** - 1. கோதுதல் 2. மயிர்கோதல் 3. அசைத்தல்
4.பூசுதல் 5. சிந்துதல் 6. கலக்குதல்
7. பரப்புதல் 8. தடவுதல் 9. யாழ்
முதலியன இசைத்தல்
"கதுப்புளரதி " (குறுந்.82) "கூந்தலுளர "
(கலித்.105).

**உலரல்** - 1. கடுஞ்சினம் 2. வற்றல் 3. காய்தல்.

**உலறல்** - 1. தடுமாற்றப் பேச்சு 2. பேரொலி
3. குழறுபடியான பேச்சு.

**உலறுதல்** - 1. காய்தல் 2. வற்றுதல் 3. சினத்தல்
4. தடுமாறல்
"அலறிடே னுலறிடே னாவி சோரேன் "
(திருவாச.5.22).

**உழறுதல்** - 1. கலங்குதல் 2. சுழலுதல் 3. உலாவல்

| | | |
|---|---|---|
| | | "என்னக் கண்டுழறா நெகிழ்ந்தாய்" (திவ்.பெருமாள்.6.8). |
| **உளறுதல்** | - | 1. குழறுபடியாகப் பேசுதல் 2. ஆரவாரித்தல். "பந்த மயக்கிருக்கப் பற்றொழிந்தே னென்றுளறுமே" (தாயு.பராபர.336). |
| **உலவு** | - | உலாவி வா. |
| **உளவு** | – | உளவு சொல்லுதல். |
| **உலு** | - | தினை முதலியவற்றின் பதர். |
| **உழு** | - | 1. பிள்ளைப்பூச்சி 2. உழவு செய் 3. மென்மை 4. வழவழப்பு "உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து (குறள்.1032). |
| **உளு** | - | 1. உளுத்து (பலவகை உளுத்தது) 2. அரிக்கும் புழு "விண்ணுளு வுண்டென" (சீவக.1899). |
| **உலுக்குதல்** | - | 1. குலுக்குதல் 2. அசைத்தல் 3. நடுங்குதல். |
| **உளுக்குதல்** | - | 1. நெளிதல் 2. சுளுக்குதல் 3. மெருகிடுதல் "நிலமுது குளுக்கிக் கீழுற" (கம்பரா.கார்முக.10). |
| **உலை** | - | 1. நெருப்பு மூட்டப்பட்ட அடுப்பு (கொல்லன்) 2. உலை சோறு சமைத்தற்காகக் கொதிக்க வைக்கும் நீர் "கொல்ல னுலையூதுந் தீயேபோலி" (நாலடி.298). |
| **உழை** | - | 1. வேலை செய் (உடலை வருத்தி உழை) 2. ஆண் மயிர் 3. சோறு 4. அழுகை ஒலி. |
| **உளை** | – | குதிரை சிங்கம் முதலியவற்றின் பிடரி மயிர் |
| **உலைச்சல்** | - | 1. அலைவு 2. கலக்கம். |
| **உளைச்சல்** | - | 1. உளைவு 2. வருத்தம் 3. குடைவு (கால் உளைச்சல்). |
| **உலைத்தல்** | - | 1. அலைத்தல் 2. அழித்தல் 3. கெடுத்தல் 4. கலைத்தல் |

"பேய் அவனை உலைத்துப் போட்டது".

**உழைத்தல்** - 1. வேலை செய்தல் 2. வருந்துதல் 3. பாடுபடுதல் 4. ஈட்டுதல்
"வலையிற் பட்டுழைக் கின்றேற்கு"
(திவ்.திருமாலை.36).

**உளைத்தல்** - 1. வருந்துதல் 2. வெறுத்தல் 3. ஒலித்தல் 4. ஊளையிடுதல் 5. யாழ் ஒலித்தல் 6. சிந்துதல் 7. தடவுதல்
"மாலையென்னுயி ருளைப்பதும்"
(கல்லா.70 31).

**உலைப்பு** - 1. அலைப்பு 2. முறியடிப்பு 3. அழிவு 4. ஒலிப்பு
"உலைப்புறுவன வதினுவந்து தோய்நர்க்கே"
(தணிகைப்பு.அகத்.29).

**உழைப்பு** - 1. முயற்சி 2. ஈட்டம் 3. பாடுபடுதல் 4. ஊதியம் பெறுதல் 5. சுறுசுறுப்பு.

**உளைப்பு** - 1. அழைப்பு 2. ஒலிப்பு 3. உடல் குடைச்சல் 4. வருத்தம்
"நாக்குளெழு மருப்ப முளைப்புழலை"
(தைலவ.தைல.140).

**உலைவு** - 1. அழிவு 2. கலக்கம் 3. ஊக்கக் குறைவு 4. நடுக்கம் 5. வறுமை 6. தோல்வி 7. அலைவு
"உயங்குபடர் வருத்தமு மலைவு நோக்கி"
(புறநா.150.4).

**உழைவு** – யாழின் உள்ளோசை.

**உளைவு** - 1. உடல் வருத்தம் 2. மன வருத்தம் 3. வலி 4. குடைவு.

**உவண்** - 1. மேலிடம் 2. அந்த நாடு
"சிறுகால் கமுகம் பொழில் சேர்ந்து உவண் உய்த்திட மஞ்சு என நின்று உலவும்"
(சீவக.13.255).

**உவன்** - 1. அவன் 2. ஆண்பால் விளங்க நிற்கும் உயர்திணைப் பெயர் 3. முன் நிற்பவன்

4. உவ்விடத்தான் 5. நடுவில் உள்ளான்
"இற எறி திவலையின் பனிக்கும் பாக்கத்து
உவன்வரின்" (நற்.127-2-3)
"அவன் இவன் உவன் என வரூஉம்
பெயரும்" (தொல்.14-8)
"பூண் ஆரம் நோக்கிப் புணர் முலை
பார்த்தான் உவன்" (பரி.12-55)
"இங்கண் உளர உளர உவன் ஓடிச் சால
வளர வளர்ந்த வகை" (தி.தூ.136)
"அவன் ஆம் இவன் ஆம் உவன் ஆம்"
(சட.அ.36).

**ஊண்** - 1. உணவு 2. உண்ணுதல் 3. சோறு
4. உண்ட, தின்ற
"கை ஊன் இருக்கையின் தோன்றும்
நாடன்" (நற்.22.4)
"ஊண் ஒலி அரவம்தானும் கேட்கும்
(புற.173-4)
"அடிசில் போனகமே....ஊண் .....சோறு ஆம்"
(நிக.சூ.6.22)
"வேட்டச் செந் நாய் கிளைத்தூண் மிச்சில்"
(குறு.56.1).

**ஊன்** - 1. இறைச்சி 2. தசை 3. உடம்பு
"ஊன் நசைஇப் பருந்து இருந்து உவக்கும்"
(குறு.285.7)
"உள் ஊன் வாடிய சுரி மூக்கு நொள்ளை"
(அக.53-8)
"பாம்பு ஊன் தேம்பும் வறம் கூர் கடத்திடை"
(அக.313-12).

**ஊணம்** – ஒரு நாடு
"ஊண நாட்டோரிந்" (ஞானவா.காதிக.7).

**ஊனம்** - 1. ஊனமுற்றவர் 2. குறைவு 3. குற்றம் 4. பழி
5. தீமை 6. அழிவு 7. ஊன் 8. கொழுப்பு

9. பிணம்
"அந்நாளுூறு சிலை தானன முளது"
(கம்பரா.பரசுரா.25).

**ஊணல்** – நாட்டுதல்.

**ஊனல்** - ஊனம் அல்லாத.

**ஊணன்** - மிக உண்போன்
"ஊணன் கருமமிழந்தான்" (வின்.)

**ஊனன்** - 1. உடற்குறைபாடுள்ளவன் 2. முடவன்
3. உனாங் கொடி.

**ஊணி** - 1. நாட்டி 2. உணவுகொள்பவன்
3. பாவாற்றுதற்கு ஊன்றும் கவர்க்கால்
"காளவிட மூண்" (திருப்பு.69).

**ஊனி** - 1. ஊளாமீன் 2. மாந்த உடம்பினன்
"விரவ லாகா வூனிகளாயுள்ளார்" (தேவா. 982-10).

**ஊரல்** - 1. பரவுதல் 2. பறவை வகை 3. கிளிஞ்சில்
4. ஏறற்க
"உரைத்த சந்தின் ஊரல் கிருங் கதுப்பு"
(அக.102.3)
"உள்ளம் ஊரலும் புள்ளும் புதாவும்" (சில. 10-117)
"ஏரலும் எருந்தும் ஊரலும் கிளிஞ்சில்"
(நிக.பி.8-333)
"உரு அழிக்கும் அக்குதிரை ஊரல் நீ"
(கலி.96-37).

**ஊறல்** - 1. சுரத்தல் 2. ஊறிய நீர் 3. ஊறுவது (கள்)
4. நீர் ஊற்று 5. சிவநுகர்ச்சி 6. சாறு
7. பசை 8. உயிர்.
"பரல் அவல் சிறு நீர் மருந்தின்" (நற்.333.3)
"நீடு அமை ஊறல் உண்ட" (அக.399-7)
"தெங்கின் ஊறலும் தேம்பிழித் தேறலும்"
(பெருங்.60-117)

"அறுநீர்ச் சிறு கிணற்று ஊறல் பார்த்து உண்பார்" (நால்.28-5)
"பருகி ஊறலைப் பற்றிப்பதம் அறிந்து" (நாவு.5.31.2) "கள்ளரைக் கடிந்த கருப்பு ஊறலை" (நாவு.5.58.5)

**ஊரி** - 1. சங்கு 2. புல்லுருவி 3. மேகம் 4. இளமை 5. நத்தை வகை 6. ஊர்ந்து செல்லும் உயிர் வகைகள்
"உயர்மர முளைத்த வூரிபோல" (கல்லா.38).

**ஊறி** - ஊறிக் கிடத்தல்.

**ஊரு** - 1. ஊர் 2. தொடை
"ஊரு மன்னும் பலி உண்பதும்" (சம்.3.29.1)
"ஊரு கரத்தினொடும் உந்திய வெந்திறலோய்" (பெரி.1.5.5).

**ஊறு** - 1. துன்பம் 2. சிதைவு 3. இடையூறு 4. புண் 5. தடை 6. ஊறுகை 7. தொடு உணர்வு. 8. பொருந்துதல் 9. தொட்டுப் பறித்தல் 10. உடம்பு 11. அழிவு 12. வல்லூறு 13. தீது
"ஊறும் கோளும் தீது ஆகும்மே" (நிக.தி.8.126) 14. கொலை
"ஊறு கோள் அணங்கு வேட்டம் விரித்திடின் கொலையின் நாற் பேர்" (நிக.சூ.9.35) 15. சுர
"நாறு கோள் பிரசம் ஊறு நாடற்கு" (நற்.268.5)
16. சேர்
"ஒண் கதிர் ஞாயிற்று ஊறு அளவாத் திரிதரும்" (மது.385).
"இரவு நீ வருதலின் ஊறும் அஞ்சுவல்" (குறு.217.2)
"கருங்கால் வேங்கை ஊறு பட" (நற்.217-4)
"ஊறு இல் வழிகளும் பயில வழங்குநர்" (அக.1811)

"ஊறு அறியா மெய் யாக்கையொடு"
(புற.167-6)
"காவற் சாகாடு கைப்போன் மாணின் ஊறு
இன்றாகி ஆறு
இனிது படுமே" (புற.185-2-3)
"நிறம் பெயர் கண்ணிப்பருந்து ஊறு அளப்ப"
(பதி.51-32)
"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்
ஐந்தின் வகை" (குறள்.27)
"வினைத்திட்பம் வேந்தன் கண் ஊறு எய்தி
உள்ளப்படும்" (குறள்.665)
"ஊறுடை வெண்டலை கையில் ஏந்தி"
(சம்.3.10.5)
"அரவு ஊறு சுலாய் மலை தேய்க்கும் ஒலி"
(சட.7.4.2)
"உழைத்த வல் இரு வினைக்கு ஊறு
காண்கிலது" (கிட்.7.31)
"உரற்றின பறவையை ஊறு கொண்டு எழச்
சிரற்றின பார்ப்பின்" (யுத்.16.36)

**ஊருதல்** - 1. ஏறுதல் 2. செல்லுதல்.

**ஊறுதல்** - 1. சாரமேற்றுதல் 2. நனைத்தல் (துணி ஊறுகிறது) 3. கசிதல் 4. நீர் ஊறுதல் 5. தேற்றுதல் 6. ஊறுகாய்ப் பதமாதல் 7. மை முதலியன ஊறுதல் "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி
மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"
(குறள்.396).

**ஊரை** – மலைநெல்.

**ஊறை** – நெய்ப்பரிசி (சவ்வரிசி).

**ஊல்தல்** - 1. பொருந்துதல் 2. நிலைகொள்ளல் 3. முதிர்தல் 4. வேகுதல் 5. கெடுதல் 6. அழிதல்.

**ஊழ்தல்** - 1. முதிர்தல் "பெரும்பாம் பூழ்ந்து தோலுரிப்பன போல்" (சீவக.1560).
**ஊழி** - 1. வாழ்நாள் 2. நெடுநாள் (ஊழிக்காலம்) 3. உலகம்.
**ஊளி** - 1. ஊத்தை 2. உளி 3. நாய், நரி கத்தும் ஒலி 4. தீநாற்றம்.
**எண்** - 1. எண்ணிக்கை 2. எண்ணம் 3. மதிப்பு 4. வலி 5. நினை 6. இலக்கம் 7. எளிமை "ஒன்று முதலெட் டீறா மெண்ணுள்" (நன்.உயிரீற்.36).
**என்** - 1. என்ன 2. யாது?
**எண்ண** - 1. ஒரு வினையெச்சம் 2. நினைக்க (எண்ணச் சொன்னான்) கணக்கிட (எண்ண எண்ணக் கூடுகிறது).
**என்ன** - யாது (என்ன செய்ய வேண்டும்).
**எண்கு** – கரடி "எண்குதன் பிணவோ டிருந்தது போல" (மணி.16.88).
**என்கு** – என்று சொல்வேன்.
**எண்குணம்** - 1. எளிய குணம் 2. எட்டுக் குணம்.
**என்குனம்** - 1. என்னுடைய குணம் 2. என்ன குணம்.
**எண்ணல்** - 1. எண்ணுதல் 2. கணக்கிடுதல் 3. குறித்தல் 4. கவலைப்படல் 5. கருத்தாய்வு 6. எண்ணலளவை "நீயே பேரெண்ணலையே" (புறநா.138 6).
**என்னல்** – என்று சொல்லல்.
**எண்ணை** - எண்ணெய் என்பதன் மரூஉ கடலை எண்ணெய்..
**என்னை** - 1. என் தலைவன் "யாணர் என்னை இன்றியும்" (குறு.24.1-2) 2. தந்தை 3. தமையன் 4. ஐயக்கிளவி 5. யாது என்னும் கேள்வி.
**எண்பது** – எட்டுப்பத்து.

**என்பது** – ஓர் அசைநிலைச்சொல்.
**எண்பித்தல்** - 1. மெய்ப்பித்தல் 2. சான்றுகாட்டி நிறுவுதல்.
**என்பித்தல்** – என்று சொல்லுவித்தல்.
**எண்மர்** - எட்டுப்பேர் “திதியின் சிறாரும் விதியின் மக்களும் மாசில் எண்மரும்“ (பரி.3.6-7).
**என்மர்** - என்று சொல்பவர் “அஞ்சல் என்மரும் இல்லை“ (குறு.395.6).
**எணல்** – நினைத்தல்.
**எனல்** - 1. என்று சொல்லப்படுதல் 2. என்று சொல்லற்க 3. என்று சொல்லுக.
**எரி** - 1. தீ “கண்தரவந்த காம ஒள் எரி“ (குறு.305.1) 2. சூரிய மண்டலம் “எரி சினம் தணிந்த இலையின் அம்சினை“ (நற்.30-5.6) 3. வெம்மை “கதிர் தெற நீள் எரிபரந்த“ (அக.51.1) 4. வால் வெள்ளி (வால் நட்சத்திரம்) “மிக வானுள் எரி தோன்றினும்“ (புற.395.4) 5. விளக்கு “மரூஉத் திரி கொளீஇய குரூஉத் தலை நிமிர் எரி“ (நெடு.103) 6. ஒளி “எரிகொள் செஞ்ஞாயிறு இரண்டுடனே“ (சட.வி.82) 7. நிரயம் (நரகம்) “நிரயம் துருக்கம் பாதாளம்......எரியும் என்று“ (நிக.தி.5.13).
**எறி** - 1. கவர் “பசுங்கழை மீன் எறி தூண்டிலின்“ (குறு.54.3-4) 2. வீசு “எறிவளி கழும்“ (குறு.199.4) 3. வெட்டு “கரும்பின் கால் எறி கடிகை“ (குறு.318.1) 4. தாக்கு “எறி சுறா கலித்த“ (குறு.318.1) 5. வெளிவிடு “சிந்து “வீங்கு இழை நெகிழவிம்மி ஈங்கே எறி

| | | |
|---|---|---|
| | | கண் பேதுறல்" (குறு.358.1-2) 6. அடி "வேந்தர் வென்று எரி முரசின் (குறு.380.1) 7. கொத்து "சிறு திணைத்துளர் எறி முரசின்" (குறு.381.1-7). |
| **எரியல்** | – | ஒளி விடுகை. |
| **எறியல்** | – | கோடரி. |
| **எரித்தல்** | - | 1. தீயில் வேகச் செய்தல் 2. செரிக்கச் செய்தல் 3. விளக்கு 4. பந்தம் முதலியன எரிதல் "வீட்டுக்கெரித்த விளக்கு" (தமிழ்நா.237). |
| **எறித்தல்** | - | 1. தைத்தல் 2. வெயிற்காலம் (வெயில் எறிக்கிறது) 3. உறைத்தல் 4. ஒளி வீசுதல். |
| **எரிதல்** | - | 1. நெருப்பு எரிதல் 2. பொறாமை கொள்ளுதல் 3. சினத்தல் 4. எரிச்சல் 5. தீமூளல் 6. சொலித்தல் "எரியுந் தீயோடு" (திவ்.திருவாய்.3.6-5). |
| **எறிதல்** | - | 1. வீசுதல் 2. முறித்தல் 3. அறுத்தல் "கல்லெறிந் தன்ன" (நாலடி.66). |
| **எரிப்பு** | - | 1. தீயெரிப்பு 2. பொறாமை 3. நெஞ்செரிப்பு 4. எரிக்கை 5. கார்ப்புச் சுவை. |
| **எறிப்பு** | - | 1. ஒளி செய்தல் 2. வெயிலெறிப்பு 3. ஒளிர்வு 4. கடுவெயில் "எறிப்பொழிந்தாங் கருக்கன் சுருக்கி" (திருக்கோ.218). |
| **எல்** | - | 1. ஒளி 2. கதிர் 3. கதிரவன் 4. பகல் 5. இரவு 6. நாள் 7. பெருமை 8. நெருப்பு. 9. வெயில். |
| **எள்** | - | 1. ஒருவகைச்செடி (எட்செடி) 2. இகழ்ச்சி "எள்ளூறிய கருமம் நேர்ந்தா ளிவள்" (கம்பரா.நகர்நீ.109). |
| **எல்ல** | - | 1. எல்லா 2. ஏல 3. ஏடி 4. தோழி 5. அழைப்பு. |
| **எள்ள** | - | 1. ஓர் உவமவுருபு 2. ஒரு வினையெச்சம் |

| | | |
|---|---|---|
| | | (எள்ளக் கூடாது). |
| **எல்லா** | - | தோழியை அழைக்கும் முதனிலைச் சொல் "கடை மணியின் குரல் காண்பென் காண் எல்லா" (சிலப்.20-3). |
| **எள்ளா** | - | 1. எள்ளாத 2. இகழாகை. |
| **எல்லி** | - | 1. பகல் 2. ஞாயிறு 3. இரவு 4. இருள் "எல்லியிது காலையிது" (சீவக.1877) "நீரை யெல்லி யியங்கன் மினே" (இறை.30.உதா.217). |
| **எள்ளி** | - | 1. ஒரு வினையெச்சம் 2. இகழ்ந்து (எள்ளி நகைத்தல்). |
| **எல்லு** | – | ஒளிமழுங்கு. |
| **எள்ளு** | - | 1. ஒரு தவம் (எள்ளில் நெய் எடுக்கலாம்) 2. ஏசு (எள்ளுதல்). |
| **எல்லுதல்** | - | ஒளி மங்குதல் "எல்லு மெல்லின்று ஞமலியு மிளைத்தன" (குறுந்.179). |
| **எள்ளுதல்** | - | 1. இகழுதல் 2. ஏசுதல் 3. இகழ்ந்து நகைத்தல் 4. ஒப்பாதல் "உருவுகண் டெள்ளாமைவேண்டும் உருள்பெருந் தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" (குறள்.667). |
| **எலா** | – | நண்பரை விளிக்கும் பெயர். |
| **எழா** | – | எழமுடியா(த) (எழாத மாடு). |
| **எலு** | - | 1. கரடி 2. பிஞ்சு 3. தோழமை. |
| **எழு** | - | 1. விழித்தெழு 2. எழுச்சிகொள் 3. தூண் 4. கதவை உள்வாயிற்படியிலே தடுக்கும் மரம் 5. படைக்கலவகை 6. எஃகு "ஊடெழுப் போக்கி" (பெருங்.உஞ்சைக்.49.3). |
| **எலியன்** | - | 1. பொடியன் 2. சிறு பையன். |
| **எளியன்** | - | 1. வறியன் 2. வலிமையில்லாதவன் 3. எளிமையானவன் 4. தாழ்ந்த குலத்தான் |

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன்
அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்"
(குறள்.386).

**எவண்** - 1. எவ்வண்ணம் 2. எவ்விடம் (எவன் சென்றான்)
"எவண் படர்ந்தனளென"
(காஞ்சிப்பு.கழுவாய்.91).

**எவன்** - 1. யார் (எவன் வந்தான்) 2. என்ன 3. யாது 4. யாவை 5. எவ்வெண்ணம் 6. ஏன்
"துன்பின் எவன் ஆவர் மன்கொல்
துயர்வரவு நட்பினுள் ஆற்று பவர்"
(குறள்.1165).

**ஏண்** - 1. எல்லை 2. வலிமை 3. பெருமை
4. செருக்குப் பேச்சு
5. உயரம் 6. திண்ணம் 7. வலிமை 8. வளைவு
9. கருநிற மான் "ஏண்பல பகர்ந்தனை"
(கந்தபு.அவைபுகு.153).

**ஏன்** - 1. வினாச்சொல் 2. தன்மை யொருமைப் பெயர்வினைகளில் வரும் ஈறு.
"ஏனொருவ னாயெயிற்றில் தாங்கியதும்"
(திவ்.இயற்.நான்.70).

**ஏணம்** - 1. மான் 2. மான்தோல் 3. நிலைபேறு
4. வலிமை 5. எலும்பு 6. அழகு.

**ஏனம்** - 1. தட்டு (ஏனத்தில் உணவை இடு) 2. காட்டுப் பன்றி 3. அணிகலம் 4. வாய்ப்பு 5. கலம்
6. கருவி 7. அணிகலன் 8. தினையரிசி.

**ஏணல்** - 1. வளைவு 2. கோணல்.

**ஏனல்** - 1. தினை 2. கதிர் 3. நெற்கதிர் 4. கருந்தினை
5. தினைப்புலம்.

**ஏணை** - 1. புடைவை தொங்கும் தொட்டில் 2. நிலை
3. ஆடு
"ஏனை பெற்றிட வெனக்கருள் புரிந்த

| | | |
|---|---|---|
| | | (அருட்பா.6.அபயநி.1). |
| **ஏனை** | - | 1. எத்தன்மையது 2. மற்றது 3. மற்றும் 4. மலங்குமீன் 5. ஓர் இசைவகை. |
| **ஏர** | – | ஓர் உவமவுருபு. |
| **ஏற** | - | 1. மிகுதியாக 2. வினையெச்சம் 3. உயர (மேல் ஏற வேண்டும்) 4. முழுவதும் 5. முற்பட "மானிடத்து ஏறச்செல்லு நிலைமையை விரும்பும்" (சீவக.1932 உரை). |
| **ஏரல்** | – | கிளிஞ்சல். |
| **ஏறல்** | - | 1. உயர்தல் 2. ஏறுதல். |
| **ஏரி** | - | 1. நீர்நிலை 2. பெரியகுளம் 3. பிடர் "ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால்" (திவ்.இயற்.2.16). |
| **ஏறி** | - | 1. இவர்ந்து 2. ஏறியவன் 3. ஒரு வினையெச்சம்-மேலே ஏறி". |
| **ஏலு** | - | சங்கச்செடி. |
| **ஏழு** | - | ஓர் எண் (7). |
| **ஏலை** | - | ஏலம். |
| **ஏழை** | - | 1. வறியவன் (ஏழை எளியவன்) 2. பேதைமை 3. அறியாமை 4. பெண் "ஏழைத்தன்மை யோயவில்லை தோழி" (கலித்.55.232). |
| **ஐவணம்** | - | 1. மருதோன்றி 2. ஐந்துவகை "ஐவணமாம் பகழியுடை அடல் மதன்" (வன்.7.51.2). |
| **ஐவனம்** | - | மலைநெல் "அருவிப்பரப்பின் ஐவனம்வித்தி" (குறு.100.1). |
| **ஒண்** | - | 1. பொருத்து 2. நல்ல 3. சிறந்த. |
| **ஒன்** | - | ஒரு சாரியை. |
| **ஒண்ணுதல்** | - | 1. இயலும் 2. கூடுதல் 3. ஒளியுடைய நெற்றி "உலகருள் காரணனொண்ணுதலோடும்" |

| | | |
|---|---|---|
| | | (கந்தபு.தெய்வயானை.252). |
| **ஒன்னுதல்** | - | 1. பொருந்துதல் 2. பொறுத்தல் "ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான் (பதிற்று. 85-3). |
| **ஒரு** | - | 1. ஒப்பற்ற 2. ஆடு 3. அழிஞ்சில் 4. ஒன்று. |
| **ஒறு** | - | 1. அடக்கு 2. குறை 3. கண்டி 4. தண்டி. |
| **ஒருத்தல்** | – | விலங்கின் ஆணினப் பொது; புல்வாய். புலி உழை, மரை, கவர், கராம், யானை, பன்றி, எருமை (தொல்.பொருள்.590 591 592). |
| **ஒறுத்தல்** | - | தண்டித்தல். |
| **ஒருவாய்** | - | வாய் ஒன்று. |
| **ஒறுவாய்** | - | 1. சிதைவு 2. மூளிவாய் 3. கொறுவாய் 4. வடு 5. ஒடிந்த விளிம்பு "பாதிநாக்கு முதடுகளிற் பாதியுந் தின்றொறுவாயேம்" (கலிங்.204) "ஒறுவாய்த் தலையிற் பலி" (தேவா.1125 6). |
| **ஒருவினை** | - | ஒரு செயல். |
| **ஒறுவினை** | - | 1. தண்டிக்குஞ் செயல் 2. தீரா வருத்தம் 3. நாட்பட்ட நோய். |
| **ஒருவு** | - | 1. ஆடு 2. நீங்குதல் 3. தவிர் 4. நீக்கு. |
| **ஒறுவு** | - | வருத்தம் |
| **ஒல்** | - | 1. ஒலிக்குறிப்பு 2. முடிவிடம் 3. முன்மை 4. முதன்மை 5. தொல்லை 6. துன்பம். |
| **ஒள்** | - | 1. ஒளி 2. அழகு 3. மேன்மை 4. அறிவு 5. உண்மை 6. கூர்மை 7. ஒளிந்து கொள்ளுதல் 8. வெளிச்சம் 9. அழகு 10. வெண்மை 11. கூர்மை 12. செறிவு 13. மிகுதி 14. பெருக்கம். |
| **ஒல்லி** | - | 1. மெலிவு 2. துடைப்பம் 3. மென்மை 4. ஒல்லித் தேங்காய் 5. மேன்மை. |
| **ஒள்ளி** | - | 1. செம்பொன் 2. வெள்ளிக்கோள் (சுக்கிரவன்). |

**ஒல்லியன்** – மெலிந்தவன்.

**ஒள்ளியன்** - 1. அறிவுடையோன் 2. நல்லவன் 3. மேன்மை.

**ஒலி** - 1. அலறு 2. முழங்கு 3. இடி 4. சொல் 5. ஆரவாரம் 6. காற்று 7. ஓசை "நின்னுருவமு மொலியு மாகாயத்துள" (பரிபா.4.31).

**ஒளி** - 1. வெளிச்சம் (விளக்கொளி) 2. ஒழுங்கு 3. கதிரவன் 4. மின்னல் 5. அழகு 6. அறிவு 7. மதிப்பு 8. புகழ் 9. பெருமை 10. மறைகை 11. மறைவிடம் 12. பார்வை விலங்கு 13. யானைக் கூட்டம். "ஒளிகொள் காரண முன்னாதோரே" (ஞானா.29.13).

**ஒலித்தல்** - 1. தழைத்தல் 2. ஓசை உண்டாக்கல் (மணி ஒலித்தது) "ஒலித்தக்கா லென்னாமுவரி" (குறள்.763).

**ஒழித்தல்** - 1. அழித்தல் 2. கொல்லல் 3. தவிர்த்தல் 4. துறத்தல் 5. குறைத்தல் 6. முடித்தல். "எல்லா வேலையையும் ஒழித்துக் கொண்டுவா"

**ஒளித்தல்** - 1. மறைத்தல் (பொருளை ஒளித்தல்) 2. மனத்துள் அடக்கல் "கன்றொளித் தகலவைத்த கறவையின்" (சீவக.371) "மதி.....ஒளிக்குஞ் சடை மன்னவனே" (திருவாச.6.42).

**ஒலிதல்** – தழைத்தல். "ஒலிந்த கூந்தல்" (பதிற்றுப். 31 24)

**ஒளிதல்** - 1. மறைதல் 2. தவிர்த்தல். "ஒளியாவெண்ணெ யுண்டா னென்று" (திவ.பெரியத்.6.7.4) "ஒளியாது செல்வா

| | | |
|---|---|---|
| | | சென்றாய்" (திணைமாலை.86). |
| **ஒலிவு** | – | ஒருவகை மரம். |
| **ஒழிவு** | - | 1. மிச்சம் 2. குறைவு 3. ஒழிகை (ஓய்வு ஒழிவின்றி) 4. முடிவு "ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி" (திவ்.திருவாய்.3 31). |
| **ஒளிவு** | - | 1. ஒளிர்வு 2. மறைவிடம் 3. மறைவு. |
| **ஒலிப்பு** | - | 1. ஒழுகல் 2. ஒழுக்கு 3. ஊற்று 4. சிறிய அருவி 5. பெருஞ்சத்தம் 6. பேரொலி 7. பெருமொழி. "சொன்மறை யொலிப்புடைமுனி" (இரகு.இரகுவுற்.30). |
| **ஒழிப்பு** | - | 1. விலக்கு 2. அழிப்பு (கொசு ஒழிப்பு) 3. தவிர்ப்பு. |
| **ஒளிப்பு** | - | 1. மறைவு 2. பதுக்கி மறைத்தல் (ஒளிப்பாட்டம்) 3. ஒளிக்கை 4. மனத்துள் அடக்குகை. "ஒளிப்பு மறைப்புப் பண்ணாமற் சொல்" (வின்). |
| **ஒலுங்கு** | – | பெருங்கொசு. |
| **ஒழுங்கு** | - | 1. நன்னடை 2. வரிசை 3. முறைமை 4. நேர்மை 5. விதி. "சகடவொழுங்கு" (சிறுபாண்.55.உரை). |
| **ஓணம்** | - | 1. ஆறு 2. திருவோண நாள் 3. முக்கோல் 4. நீராட்டு விழா "கங்கையாதி யோணநீராடல்" (சேதுபு.தோத்திர.48). |
| **ஓனம்** | – | எழுத்தின் சாரியை. |
| **கண்** | - | 1. விழி 2. கண்ணோட்டம் 3. பீலிக்கண் 4. கணு 5. மரக்கணு தொளை 6. மூங்கில் 7. முரசடிக்கும் இடம் 8. அறிவு |

| | | |
|---|---|---|
| | | 9. பற்றுக்கோடு 10. உடம்பு 11. உடலூக்கம் "கண்ணிமைநொடியெனஅவ்வேமாத்திரை" (தொல். எழுத்து.7). "கண்ணின்றுபெயர்ப்பினும்" (தொல் பொருள் கற்பி.9) "ஆயிரங்கண்ணுடையாய்க்கு" (கம்ப. பம்மை. 27) |
| **கன்** | - | 1. கல் 2. சிறுதராசு 3. கன்னார்தொழில் 4. வேலைப்பாடு 5. செம்பு 6. உறுதிப்பாடு. "கன்னார்மதில்சூழ்குடந்தை" (திவ். திருவாய் 5 8 3) |
| **கண்ணல்** | - | 1. கருதல் 2. கன்றல் 3. குறித்தல் 4. பழுக்காமல் காய் நிலையிலேயே கன்றிப்போதல். |
| **கன்னல்** | - | 1. கரகம் 2. கரும்பு 3. சக்கரை 4. நரம்பு 5. நாழிகை 6. நாழிகைவட்டில். "தொகுவாய்க் கன்னற்றண்ணீ ருண்ணார்" (நெடுநல் .65) 2. "கன்னலின் யாமங் கொள்பவர்" (மணிமே. 7 65) |
| **கண்ணன்** | - | 1. கண்ணுடையவன்கிருட்டினன் 2. திருமால் 3.கையாந்தகரை. "கண்ணன்வரக்காணேனடி கவலைமெத்தக்-கொண்டேனடி " (தனிப்பா) |
| **கன்னன்** | - | 1. அங்கராசன் 2. வள்ளல்களுள் ஒருவன் 3. சூரியனுக்கும்குந்திக்கும்பிறந்தவன் கன்னன். |
| **கண்ணா** | - | 1. ஒருமரவகை 2. திப்பிலி "குழந்தைகளைவிளிக்கும் கெழுதகைப் பொதுச்சொல் " |
| **கன்னா** | - | 1. ஒருவாச்சியம் "இசைக்கருவிவகைகளுள்ஒன்று" |

**கண்ணார்** - பகைவர் "கண்ணார்மதிக்கும்கவிராசசிங்கம்" (தமிழ்நா. 240)

**கன்னார்** - 1. கல்நார் 2. ஏனம்வேலைசெய்பவர். "மாழைகளால்ஏனம் செய்பவர்கன்னார்"

**கண்ணி** - 1. பூமாலை 2. பூங்கொத்து 3. கூடும்பூமாலை 4. தலைமாலை 5. போர்ப்பூ 6. புட்படுக்கும் முடிப்புக் கயிறு 7. பூட்டாங்கயிறு 8. ஓர் இசைப்பாட்டு 9. கரிசலாங்கண்ணி. 1. "கண்ணியந்தாரு மெண்ணிராண்டே" (தொல்.பொருள். 634) 2. "புன்னை மெல்லிணர்க்கண்ணிமிலைந்தமைந்தர்" (புறநா. 24:8) 3. "சுரும்பார்கண்ணிப் பெரும்புகன்மறவர்" (மதுரைக்.596)

**கன்னி** - 1. மணமாகாதபெண் 2. இளமை 3. புதுமை 4. பெண் 5. தவப்பெண் 6. துர்க்கை 7. பார்வதி 8. குமரியாறு 9. கன்னிராசி 10. புரட்டாசி 11. காக்கணங்கொடி. "கன்னிதன்னைப்புணர்ந்தாலும் " (சிலப்.7. கானல்வரி ஆற்றுவரி) "கன்னிநீலக்கட்கன்னி" (சீவக. 900) "கன்னிசெங்கோட்டம்" (கல்லா. 58)

**கண்ணிக்கால்** - கிளைவாய்க்கால்

**கன்னிக்கால்** - 1. கலியாணமுகூர்த்தக்கால் புதுவீட்டின்மதிலில்தென் முகமாகமுதலில்நடும்சீலைசுற்றியகம்பம் 2. வாய்க்காலிலிருந்து வெட்டியசிறுகால். "திருமணத்தின்போது வீட்டுவாயிலில் நடப்படுவது கன்னிக்கால் (அ) முழுத்தக்கால்.

**கண்ணிகம்** - மணித்தக்காளிச்செடி

**கன்னிகம்** - மணித்தக்காளி.

**கண்ணிகை** - 1. பூவரும்பு 2. தாமரைக்கொட்டை
**கன்னிகை** - 1. குமரிப்பெண் 2. கொற்றவை
3. பூவின்மொட்டு
4. தாமரைக் கொட்டை.
**கண்ணிமை** - 1. கண்ணிதழ் 2. கண்பீலி
3. ஒருமாத்திரைக்காலஅளவு.
**கன்னிமை** - கன்னித்தன்மை "கன்னிமைகனிந்துமுற்றி" (சீவக. 1260)
**கணகம்** - 27 தேர்யானைகளும் 81 குதிரைகளும் 135 காலாட்களுமுள்ள படைப்பிரிவு.
**கனகம்** - 1. பொன் 2. மீன்கொத்தி
**கணகன்** - 1. கணக்கன் 2. கணியன் 3. இவ்வூர்க் கணகன்பஞ்சநதிகுமணன் (கல்வெட்டு)
**கனகன்** - 1. இரணியன் 2.காசுக்குற்றவகை "நன்றெனக் கனகன் சொன்னான்" (கம்பரா இரணியன்.124)
**கணப்பு** - 1. சூடு 2. குளிர்காயுந்தீ 3. தீச்சட்டி.
**கனப்பு** - 1. கனமாயிருக்கை 2. பருமை 3. சுமை
4. அழுத்தம் 5. கொழுப்பு 6. இறுமாப்பு
7. மிகுதி 8. வீக்கம்.
"புதுமலரின்கனப்பெண்ணிநிரை சுமந்து" (பெரியபு. திருநா.3)
**கணம்** - 1. திரட்சி 2. வட்டம் 3. கூட்டம் 4. பொருள் தொகுதி 5. இனவகுப்பு 6. இன மரபுக்குழு
7. மந்தை 8. பேய்
9. ஒருநோய் 10. ஒருவகைப் புல்.
"வெகுளி கணமேயுங்காத்தலரிது" (குறள். 29)
**கனம்** - 1. சுமை 2. பருமன் 3. பெருமை 4. செறிவு
5. திரட்சி 6. உறுதி 7. மிகுதி 8. முகில்
9. அகலம் 10. கோரைக் கிழங்கு "கனமே சொல்லினேன்" (திவ். திருவாய் 9.3.5)

**கணமூலம்** - 1. மூலநோய் 2. திப்பிலிவேர்

**கனமூலம்** - கனத்தொகையினின்று அதன்மூலமாகியஒருகோணம் அறிதல்.

**கணா** - 1. திப்பிலி 2. சீரகம்.

**கனா** - கனவு "கனாவுறுதிறத்தினும்" (மணிமே 27 28)

**கணி** - 1. நூல்வல்லவன் 2. கணியன் 3. கலை 4. வேங்கைமரம் 5.மிளகரணை 6. கையாந்தகரை 7. கல் 8. அணிகலன் 9. ஓர் இனம்.

**கனி** - 1. கனிவு 2. பழம் 3. இனிமை 4. சாரம் "கனிவளர்கிளவி" (சீவக. 486)

**கணிகை** - 1. தாளங்கதிதருபவள் 2. பொதுமகள் 3. முல்லை "கணிகையொருத்திகைத்தூணல்க" (மணிமே.166.6) "கணிகைதுன்றளப்பில்கோங்கு" (இரகு.இந்தும. 14)

**கனிகை** - கனிதல்

**கணித்தல்** - 1. எண்ணுதல் 2. கணக்கிடுதல் 3. வரையறுத்தல் 4. அளவு குறித்தல் 5. மதித்தல் 6. படைத்தல் 7. உண்டாக்கல் 8. மனத்துக்குள்ளே கணக்கிடல்

**கனித்தல்** - 1. கனிவாதல் 2. இளகச்செய்தல்

**கணிப்பு** - 1. கணக்கிடுகை 2. அளவிடுகை 3. மதிப்பிடுகை. "வெம்படை கணிப்பில்கொண்ட" (கந்தபு. முதனாட்.42) "விளைச்சல்பற்றியஉனதுகணிப்புத்தவறாகி விட்டது" (உ.வ)

**கனிப்பு** - இனிமை

**கணை** - 1. திரட்சி 2. அம்பு 3. வளைதடி 4. காம்பு 5. மூங்கில் 6. சிவிகையின் வளைந்த கொம்பு 7. கரும்பு 8. திப்பிலி 9. ஒலி 10. ஒருநோய்.
"கடுவிசைக் கணைக்கோல்"
(மலைபடு. 380) "கணைகொடிது"
(குறள். 279)

**கனை** - 1. செறிவு 2. நிறைவு 3. மிகுதி 4. ஒலி
"கணையிருமுந்நீர்" (மதுரைக். 235)

**கர** - மறை

**கற** - பீச்சு (பால்கற)

**கரண்** - 1. காய்கறிகளின்முண்டு 2. புண்வடு 3. புல்லுடன்கூடிய மண்ணாங்கட்டி

**கரன்** - 1. நிலையுள்ளவன் 2. ஓர்அரக்கன்
"கரந்தெங்கும்பரந்துளன்
இவையுண்டகரனே" (திவ். திருவாய். 1 110)

**கரப்பு** - 1. வஞ்சனை 2. களவு 3. மத்து 4. மீன்பிடிக்கும் கூடை
மறைக்கை கரப்(பு) இலார்வையத்
துண்மையால்
கண்ணின்று இரப்பவர்மேற்கொள்வது"
(குறள் - 1055)

**கறப்பு** - 1. கறக்கை (பணம்கறத்தல்) 2. கறத்தல் (பால்கறத்தல்)

**கரம்** - 1. ஒளிக்கதிர் 2. கை 3. நஞ்சு 4. துதிக்கை 5. கழுதை 6. செயல் 7. முழம் 8. எழுத்துச் சாரியை (அகரம்)
"அகர(ம்) முதலஎழுத்தெல்லாம்ஆதி
பகவன்முதற்றேஉலகு" (குறள்: 1)
"கரமலர்மொட்டித்து" (திருவாச. 4.84)

**கறம்** - 1. கொடுமை 2. வன்செயல்
"கறம்படுமனத்தின்"

(திருவாலவா. 37 51)

**கரவு** - 1. மறைவு 2. களவு (கரவுமனம்) 3. முதலை
4. வஞ்சகம் 5. பொய்
"அளவறிந்தார்நெஞ்சத்தறம்போலநிற்கும்
களவறிந்தார்நெஞ்சிற்கரவு" (குறள்:318)

**கறவு** - 1. திறை 2. கப்பம் 3. கறவைமாடு
"கறவிடைப்பாலின்" (தேவா. 585 5)

**கரவை** - 1. கம்மாளர்கருவியுள்ஒன்று 2. கூத்து.

**கறவை** - 1. பாற்பசு (கறவைமாடு) 2. கறக்கை
3. பால்சுரப்பு 4. பால்மாடு கறக்கும் அளவு
5. ஆ முதலியன பால்
கறக்கும் காலம். "கறவைகள் பின்சென்று"
( திவ். திருப்பா. 28)

**கரளை** - 1. வளராமை (செடிகரளையாகஇருக்கிறது)
2. பருக்காத காய் 3. கரிசல் மண்வகை.

**கறளை** - 1. ஒருமரம் 2. கருளை 3. குள்ளன்
4. வளர்ச்சியின்மை 5. வளர்ச்சியற்றது
6. பருக்காதகாய் 7. கட்டிவகை
8. ஒருவகை மரம்.

**கரி** - 1. கண்ணிடு மை 2. மரவைரம் 3. கரித்தது
4. அடுப்புக் கரி 5. நிலக்கரி 6. யானை (இவை
யாவும் வண்ணத்தால் பெற்ற பெயர்).
"சான்றுமல்லல் மாஞாலம் கரி" (குறள். 245)

**கறி** - 1. மரக்கறி 2. ஊன்கறி 3. காய்கறி
4. கறிக்காய் 5. மிளகு
"கறிக்கொடிகருந்து ணர். (திருமுருகா. 309)

**கரித்தல்** - 1. உப்புக்கரித்தல் 2. எரிந்துகரியாதல்
3. தாளித்தல் 4. உறைத்தல் 5. ஊறுதல்.

**கறித்தல்** - 1. கடித்துத்தின்னல் 2. உப்புச்சுவைமிகுதல்
(குழம்புகறிக்கிறது)

**கரு** - 1. கருவிகளில்உள்ளபல் 2. குழந்தை
3. கருப்பொருள் 4. சினை (முட்டைக் கரு)

5. கருப்பம் 6. பால் 7. காரணம் 8. கருப்பம் 9. கருமை 10. கருவம் 11. நிறம் 12. அழகு 13. உடம்பு 14. குட்டி 15. அச்சுக்கரு. "மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்" (புறநா.34.2)

**கறு** - 1. சினம் (மனத்துள்கறுவுதல்) 2. மனவைரம் 3. கருமையாக்கு (கருத்து விட்டான்) 4. வெகுண்டு 5. சினங்கொள் 6. கருமை 7. கறை 8. குற்றம் 9. பேய் 10. கருவயிரம். "அரக்கன் ..... கறுவுடையான்" (கம்பரா. கும்பக.357)

**கருக்கல்** - 1. வெப்பத்தால்கருகுதல் 2. இரவு 3. விடியற்காலை (கருக்கலில் எழுவான்) 4. காய்ந்தபயிர் 5. வானத்தில் முகில் படிதல்.

**கறுக்கல்** - கருமையாக்குதல்.

**கருத்து** - 1. நோக்கம் 2. கொள்கை 3. எண்ணம் 4. கவனம் 5. விருப்பம் 6. உட்பொருள் 7. கருத்துப்படிவு "பாடங்கருத்தே" (நன்.21)

**கறுத்து** - ஒருவினையெச்சம் - பகைத்து வெகுண்டு.

**கருப்பு** - 1. கருமை 2. இருள் 3. இன்மை 4. அருமை 5. வறுமை 6. குறு விலைக்காலம் 7. இருண்டுதோன்றும்பேய். "மழையின்றிப்பசையில் கருப்புவர" (சேதுபு. வேதாள - 20) 8. கரும்பு.

**கறுப்பு** - 1. கருநிறம் 2. கறை 3. சினம் 4. இருள் 5. நீளம் 6. கார் 7. கார்மேகம் 8. குற்றம் 9. தழும்பு 10. சீட்டாட்டத்தில் தோற்றவர் பெறுங்குறியீடு. "கைத்தலத்துணைகறுப்புற" (உபதேசகா. சிவபுண்ய. 315)

**கருணை** - 1. அருள் 2. தயவு 3. இரக்கம் 4. ஒருகிழங்கு

5. ஒன்பான் சுவையுள் ஒன்றாகிய அவலச் சுவை.
"வாய்வாழைப்பழம்கை கருணைக்கிழங்கு " (பழ)

**கருணை** - பொரிக்கறி "கருணைச்சோறார்வர்கயவர்" (நாலடி. 200)

**கருவி** - 1. ஆடை 2. யாழ் 3. கைத்தாளம் 4. தொகுதி 5. மேகம் 6. அணிகலன் 7. ஆசை 8. ஓவியம் 9. தொடர்பு 10. படைக்கலவகை.
"அரியவென்றுஆகாத(து)
இல்லைபொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்" (குறள்:537)

**கறுவி** - ஒருவினையெச்சம் - சினந்து (மனத்துள்ளேகறுவினான்)

**கரை** - 1. கடற்கரை 2. நீர்க்கரை 3. எல்லை 4. புடைவைத் தலைப்பு 5. பக்கம் 6. இடம். "நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப" (நாலடி 224) "கல்வி கரையில" (நாலடி 135)

**கறை** - 1. வாழை 2. நுங்கு முதலியவற்றின் சாற்றாலுண்டாகும் சாயம் 3. குற்றம் 4. இருள் 5. நஞ்சு 6. அரத்தம் 7. உரல் "பிறக்கப் பிறக்கக் கரையேறுகை" (திவ். திருப்பா. 21. வியா)

**கரையான்** - 1. சிதல் 2. மீன்வலைஞன்.

**கறையான்** - 1. ஒருவகைப்பூச்சி (தூணைக்கரையான்அரித்து) 2.சிதல் 3. அழல். "கறையானேறி" (பாரத. அருச்சுனன்றவ.41)

**கல்** - 1. படி (இளமையிற்கல்) 2. அவ்வை மூதாட்டிகல்வி 3. தோண்டு(கல்லல்) 4. மலை 5. சிலை 6. கற்கள்

(கருங்கல், செங்கல்) 7. முத்து பாறை 9. அரைகல் 10. ஆட்டுக்கல் முதலானவை சிறுநீரகத்தில் உருவாகும் கல் 11. தோசை முதலியனசுடும் தட்டையானகல் "கல்சேர்புமாமழைதலைஇ" (பதிற்றுப். 84 23)

**கள்** - 1. களி 2. வெறி 3. களவு 4. சாறு 5. குடிவகை 6. தேன் 7. பன்மை விகுதி (கலைகள், மரங்கள், நினைவுகள்) 8. மது. "துஞ்சினார்செத்தாரின்வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார்கள்உண்பவர்" (குறள். 926)

**கல்லம்** - 1. செவிடு 2. மஞ்சள் 3. தீமை 4. விந்தியமலை.

**கள்ளம்** - 1. திருட்டு 2. கபடம் 3. பொய் 4. ஏய்ப்பு 5. களவு 6. குற்றம் 7. மெய்யியல் 8. அறியாமை 9. அவிச்சை 10. புண்ணிலுள்ள அசறு "கள்ளமேபேசி" (தேவா. 1115 6)

**கல்லல்** - 1. கல்லடைப்பைநீக்குதல் 2. படித்தல் 3. தோண்டுதல் 4. அரித்தல் 5. குழப்பம் 6. ஓர்ஊர் 7. துருவல் 8. மூன்று உடல் பொருந்திய மூன்று முகம் உடைய ஒரு தோற்கருவி. "தென்கடிப்புவாசித்தகல்லல்செறிய " (கல். 85 23)

**கள்ளல்** - 1. திருடுகை 2. கள்குடிக்கை 3. கரும்பு.

**கல்லன்** - 1. பொல்லாதவன் 2. கொடியோன் 3. கற்றச்சன் "கழித்தவூன் முதலுண் கல்லன்" (சிவதரு. சுவர்க்கநரக.20)

**கள்ளன்** - 1. திருடன் 2. வஞ்சகன் 3. ஒருவகைச் செய்நஞ்சு.

**கல்லா** - 1. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் – கல்லாமாந்தன் 2. வாணிகப் பணப்பேழை (கல்லாப்பெட்டி)

**கள்ளா** - ஒரு விளிப்புச்சொல்–(திருடா)

**கல்லாமை** - 1. கல்வி கற்காதிருத்தல் 2. ஒருவகை ஆமை.

**கள்ளாமை** - 1. திருட நினைக்காமை 2. திருக்குறள் அதிகாரங்களுள் ஒன்று
"எள்ளாமை வேண்டுவான் என்பான் எனத்
தொன்றும் கள்ளாமை காக்கதன் நெஞ்சு
(குறள். 281)

**கல்லார்** - 1. கல்விகல்லாதவர் 2. கீழ்மக்கள்
"கல்லா தவரும் நனி நல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்"
(குறள். 403)
"கல்லார்கண்பட்டதிரு" (குறள் 408)

**கள்ளார்** - 1. களையார் 2. களவுசெய்யார் 3. திருடாதார்.

**கல்லி** - 1. தேர் 2. எலும்புமூட்டு 3. வேடிக்கை 4. தோண்டி (கல்லி எடுத்தல்) 5. ஆமை 6. ஒருபறவை 7. நகையாட்டு (கேலி) 8. கல் பாவியபாதை 9. கல்பாவியதெரு.

**கள்ளி** - 1. திருடி 2. ஒருமரம் 3. கள்ளிச்செடி (இலைக்கள்ளி) 4. சதுரக்கள்ளி 5. மண்டங்கள்ளி 6. சப்பாத்திக்கள்ளி
"கள்ளியங்கடத்திடைகேழல் பார்க்கும்"
(ஐங்குறு.323)

**கல்வி** - 1. கற்றல் 2. கலை 3. அறிவு 4. நூல் 5. வித்தை 6. கற்கை 7. கல் கற்பலகை
"தூங்காமை கல்வி துணிவுடைமை
இம்மூன்றும்நீங்கா நிலனாள் பவர்க்கு"
(குறள்:383)

| | | |
|---|---|---|
| **கள்வி** | - | 1. கள்ளம்உடையவள் (திருடி) ஏய்ப்பவள் 2. மனமடக்கமுள்ளவள். "வெள்ளநீர்க் கிடந்தாயென்னும் எனக்கள்விதான்பட்ட வஞ்சனையே" (திவ். திருவாய். 2.4.7) |
| **கல** | - | 1. கூட்டு 2. கூடு (கலந்துபேசு) 3. சேர் 4. பரவு 5. புணர். |
| **கள** | - | 1. களாச்செடி 2. களவொழுக்கம். |
| **கலகம்** | - | 1. நிரையம் 2. குழப்பம் 3. போர் 4. ஒருமீன் 5. ஒரு பறவை 6. அமளி 7. சச்சரவு 8. சண்டை 9. ஒருவன் மேற் பிறர்க்குப் பகை உண்டாகும்படி தூண்டிவிடுகை. "கலகக்கற்கொடி" (தக்கயாகப்.457) |
| **கழகம்** | - | 1. இயக்கம் 2. புலவர்கூடியஅவை 3. கல்விக்கூடம் (பல்கலைக்கழகம்) 4. சூதாடுமிடம் "கவறும் கழகமும் கையுந்தருக்கி இவறியார் இல்லாகியார்" (குறள். 935) |
| **களகம்** | - | 1. பெருச்சாளி 2. நெற்கதிர் 3. சுண்ணாம்புச்சாந்து 4. மாட்டுவண்டி அச்சின் இருபுறமும் செங்குத்தாகச் செருகிவைக்கும் முளைக்குச்சி "வண்களகநில வெறிக்கும் " ( திவ். பெரியத். 6 9 10) |
| **கலகல** | - | 1. ஒலிக்குறிப்பு 2. இரட்டையொலி 3. கட்டுக்குலைதல் 4. நன்றாகக் காய்தல் 5. மிகப்பேசுதல். |
| **களகள** | - | 1. களகளெனல் 2. ஒலிக்குறிப்பு 3 . இரட்டையொலி |
| **கலக்கம்** | - | 1. குழப்பம் 2. அச்சம் 3. தெளிவின்மை 4. நீர் முதலியன குழம்பி இருத்தல் 5. கலங்குகை |

| | | |
|---|---|---|
| | | 6. துன்பம் 7. அழுகை 8. அறிவுமாறாட்டம். "நலத்தகு நாடிற் கலக்கமு மதுவே" (தொல்.பொருள்.270) |
| **களக்கம்** | - | 1. குற்றம் "களக்கமில்லாதோன்" (திருவாலவா. 50:8) |
| **கலங்கு** | - | 1. மயங்குதல் 2. நீர்முதலியனகுழம்புதல் 3. மனங் குழம்புதல் 4அஞ்சுதல் 5. துன்பமுறுதல். "கலங்காது ஞாலங் கருதுபவர்" (குறள். 485) |
| **கழங்கு** | - | 1. கழல் 2. ஓர்ஆடல் 3. வெறியாட்டு 4. கழற்காய். |
| **களங்கு** | - | 1. களங்கம் 2. அடையாளம் 3. இதளியம் ( பாதரசம்) முதலிய மாழைகளால் உண்டாக்கிய குளிகை. "திங்கள்….. உடற்கலங்கால்" (பிரபுலிங்.கைலாச .6) |
| **கலணை** | - | குதிரைச் சேணம் |
| **கலனை** | - | 1. குதிரைச்சேணம் 2. கலப்பை 3. ஒன்றற்கமைந்த பல்வகை உறுப்புகள். |
| **கலப்பு** | - | 1. மொத்தம் 2. கூட்டுத்தொகை 3. கலத்தல் (ஒன்றோடொன்று கலந்து) 4. புணர்ச்சி 5. வந்துகூடுகை 6. நட்பாகை 7. கலவை "கலப்புறக்குழுமி" (சேதுபு. 3) |
| **கழப்பு** | - | 1. கள்ளத்தனம் 2. சோம்பல் 3. மூட்டுவலி 4. களைப்பு 5. மன வருத்தம் "கழப்பின்வாராக்கையறவுளவோ " (பதினொ. திருவிடை. மரு. மும்மணிக். 10) |
| **களப்பு** | - | 1. கடலில்ஆழமில்லாதஇடம் 2. கள்ளம் 3. களவு 4. பயிர் இடுவதற்காகப் புல்வெட்டி நிலத்தைச் சீர்ப்படுத்துகை. |
| **கலபம்** | - | மயில்தோகை "மாக்கவின்மிகுங்கலபமஞ்ஞை" (திருவாத. பு. திருபெருந்.13) |

**களபம்** - 1. கலப்பு 2. கலவைச்சாந்து 3. சுண்ணச்சாந்து. "நுண்களபத் தொளிபாய" (திருக்கோவை. 15)

**கலம்** - 1. குழிந்தஉண்கலம் 2. ஏனம் 3. குப்பி 4. மரக்கலம் 5. அணிகலன் 6. படைக்கலம் 7. வெண்கலம் 8. யாழ் 9. ஓலையாவணம் 10. மூன்று தூணி கொண்ட ஒரு முகத்தலளவு 11. நாண்மீன். "பொற்கலத்தூட்டி" (நாலடி 345) " யவனர்நன்கலந்தந்த ...... தேறல்" (புறநா. 56.18)

**களம்** - 1. இடம் 2. கதிரடிக்கும்நிலம் அவை 3. வேள்விச்சாலை 4. போர்க்களம் 5. களர்நிலம் 6. உள்ளம் 7. கடலில் விழும் திட்டு 8. இன்னோசை 9. கழுத்து 10. முகில் 11. கருமை 12. அவை.

**கலர்** - 1. கீழோர் 2. தீமக்கள் "கலராயினர் நினையார் தில்லை" (திருக்கோ. 259)

**களர்** - 1. உவர்நிலம் 2. சேற்றுநிலம் 3. கூட்டம் 4. கறுப்பு 5. கழுத்து. "பயவாக் களரனையர் கல்லாதவர்" (குறள். 406)

**கலவம்** - 1. மயில் 2. மயில்தோகை 3. குழியம்பி 4. கலவம் "கலவம் விரித்த மஞ்ஞை" (பொருந.212)

**களவம்** - 1. களபம் 2. கலவை 3. சுண்ணச்சாந்து 4. மணச்சாந்து. "நுண்களபத் தொளிபாய" (திருக்கோ. 15)

**கலவன்** - கலப்பானது

**களவன்** - 1. நண்டு 2. கள்ளன் 3. சான்று (சாட்சி) கூறுவோன்.

| | | |
|---|---|---|
| **கலவு** | - | 1. உடலின்மூட்டுவாய் 2. துயரம் 3. பகைமை.<br>"கலவுக்கழி கடுமுடை" (அகநா.3) |
| **களவு** | - | 1. திருட்டு 2. மறைப்பு 3. களவொழுக்கம்<br>4. வஞ்சனை<br>"களவுஎன்னும்காரறிவாண்மைஅளவு<br>என்னும் ஆற்றல்புரிந்தார்கண் இல்.<br>(குறள். 287) |
| **கலன்** | - | 1. அணிகலன் 2. மரக்கலம் 3. பூண் 4. யாழ்<br>5. கீழ்மகன் 6. ஓர் அளவு 7. உண் கலன்.<br>"கலனிடைத்தருவதும்"<br>(கந்தபு. திருநாட்டு. 48) |
| **களன்** | - | 1. இடன் 2. கழுத்து 3. மருதநிலம்<br>4. பொய்கை 5. ஒலி 6. களம்<br>"உளரெனினும்இல்லாடொப்பர்களன்<br>அஞ்சிக் கற்றசெலச்சொல்லாதார்"<br>( குறள். 730) |
| **கலா** | - | நூல் |
| **களா** | - | 1. ஒருசெடி 2. முள்முருங்கை 3. கறுப்பு |
| **கலால்** | - | 1. கள் 2. மது. |
| **கழால்** | - | 1. களைதல் 2. கழலுதல் 3. கழுவுதல்<br>4. கழாஅ – (கழுவாத)<br>"கழாஅக்கால்பள்ளியுள்வைத்ததற்றால்<br>சான்றோர் குழாஅத்துப்பேதைபுகல்"<br>(குறள்.840) |
| **கலாவம்** | - | 1. கலாபம் 2. மேகலை 3. மயிற்றோகை<br>4. மயிற்றோகைக் குடை. |
| **களாவம்** | - | 1. இடைவெளி 2. மயில்தோகை<br>3. இடையணி |
| **கலி** | - | 1. ஒலி 2. மகிழ்ச்சி 3. ஒரு பாவகை 4.அம்பு<br>5.வறுமை 6. எழுச்சி 7. கலித்தொகை<br>(ஒரு நூல்)<br>"கல்லாதான் ஒட்பம் கழியநன்றாயினும் |

| | | |
|---|---|---|
| | | கொள்ளார்அறிவுடையார்" (குறள். 404) |
| **கழி** | - | 1. நீக்கு 2. யாழின் இசைக்கருவி 3. உப்பளம். |
| **களி** | - | 1. குழைவு 2. குழம்பு (கேழ்வரகுக்களி கம்பங்களி) 3. யானை 4. களிப்பாக்கு 5. களிமண் 6. வெறி 7. மகிழ் (களிகொள்ளல்) 8. மயக்கம். "களித்தானைக் காரணங்காட்டுதல்நீர்க்கீழ் குளித்தானைத்தீத்துரீஇயற்று" (குறள். 929) |
| **கலிகம்** | - | 1. கலிக்கம் 2. வன்னிமரம் |
| **களிகம்** | - | 1. வாலுளுவைஎன்னும்மருந்து. |
| **கலிகை** | - | 1. பூவரும்பு 2. மல்லிகைச்செடி 3. உசில் 4. சீக்காய்த்தூள் |
| **களிகை** | - | 1. மொட்டு 2. ஒருவகைக்கழுத்தணி 3. நாகமல்லி "நலம்பெருங் களிகையுநன்முத்தாரமும்" (பெருங். இலாவாண. 19 118) |
| **கலித்தல்** | - | 1. ஒலித்தல் 2. செழித்தல் 3. ஆரவாரித்தல் 4. மகிழ்தல் 5.பெருகுதல் 6. எழுதல் |
| **கழித்தல்** | - | 1. குறைத்தல் 2. நீக்குதல் (கழித்தல்கணக்கு பயனற்ற பொருட்களைக்கழித்தல்) 3. ஒதுக்குதல் (கழித்துக் கட்டுதல்) தீர்த்தல்.. |
| **களித்தல்** | - | 1. இன்புறுதல் 2. செருக்கடைதல் 3. மதுஉண்டுமயங்கல் "களித்தறியேன்என்பதுகைவிடுகநெஞ்சத்து ஒளித்ததூஉம் ஆங்கேமிகும்" (குறள். 928) |
| **கலிப்பு** | - | 1. ஒலிக்கை 2. பொலிவு 3. மிகுதி 4. வெடிப்பு 5. உயரம். "கலிப்புடை நறும்புனல்படிந்து" (இரகு.இரகுவு.30) |

**கழிப்பு** - 1. கழித்தல் 2. ஒருசடங்கு (கழிப்புக்கழித்தல்) 3. குற்றம் தள்ளுண்ட பொருள்.

**களிப்பு** - 1. மகிழ்ச்சி (உள்ளக்களிப்பு) இறுமாப்பு (எக்களிப்பு) 2. மண்ணின் பசை 3. களிம்பு 4. மயக்கம் 5. மதுவெறி 6. சிற்றின்பம்.
"காமமும் வெகுளியும் களிப்புங்கைத்து"
(கம்பரா. திருவவ.48)

**கலியர்** - 1. படைவீரர்(கள்) 2. வறியவர்கள்.

**கழியர்** - 1. உப்பளவர் 2. நெய்தல்நிலமக்கள்

**களியர்** - 1. வெறியர் 2. நெய்தல்நிலமக்கள்

**கலியன்** - 1. படைவீரன் 2. வறியவன் 3. காரி

**கழியன்** - 1. நெய்தல்நிலத்தான்

**களியன்** - 1. குடியன் 2. வெறியன்.

**கலை** - 1. இசையின் கால நிலையிலொன்று. 2. அறுபத்துநான்கு கலைகள்
"எண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்"
(சிலப். 14.127) 3. கல்வி (திவா) 4. நீதிநூல் 5. மொழி 6. உடல் 7.புணர்ச்சிக்குரிய நிலைகள் 8. மரவயிரம். (பிங்) 9. காஞ்சிமரம் 10. உமையவள் 11. அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்று.

**களை** - 1. விதையாமல்முளைப்பது 2. துயர்களைதல்
"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள். 788)"
3. சோர்வு 4. நிலவின்கலை 5. அழகு 6. ஒளி 7. களைக்கொட்டால் வெட்டிய வெட்டு

**கலைஞன்** - 1. கலைகளில்வல்லவர் 2. கல்வியறிஞர் 3. கல்விமான்.

**களைஞன்** - 1. களைபறிப்போன்(கொடியவன்)
"களைஞர்தந்த கணைக்கால் நெய்தல்"
(பெரும்பாண்.213)

**கலைத்தல்** - 1. மனத்தைக்கலைத்தல் 2. கூட்டத்தைக் கலைத்தல் 3. பொருள்களைக்கலைத்தல் 4. ஓட்டுதல்.

**களைத்தல்** - 1. சோர்வடைதல் 2. இளைப்புறுதல்.

**கலைதல்** - 1. குலைதல் 2. அழிதல் 3. மயங்கல்.

**களைதல்** - 1. களைக்கட்டுதல் 2. பிடுங்கிஎறிதல் 3. கழுவுதல் (அரிசி களைதல்)

**கலைப்பு** - கலைத்தல் (ஆட்சிக்கலைப்பு)

**களைப்பு** - சோர்வு ( களைப்பாகஇருக்கிறது)

**கவணம்** - 1. காயக்கட்டு 2. கட்டுமருந்து.

**கவனம்** - 1. அக்கறை 2. நினைவோட்டம் 3.கருத்து 4. பரிப்பு 5. காடு.
"குழந்தையைக் கவனமாகப்பார்த்துக்கொள்"
(உ.வ)

**கவணி** - 1. புண்களுக்கிடும்மெல்லியசீலை
2. மெல்லிய சீலை வகை
3. ஆடைகளில்செய்யும்பூ வேலை.

**கவனி** - கந்தகபாடாணம்.

**கழணி** - கழுநீர்

**கழனி** - 1. இடுதிரை 2. வயல் 3. மருதநிலம் 4. சேறு 5. கழுநீர் போரடிக்கும் களமுள்ளவயல
"கழனியுழவர் சூட்டொடு
தொகுக்கும் கொழுமீன்" (புறநா.13.11)

**காண்** - 1. காட்சி 2. அழகு 3. முன்னிலையில் வரும் ஓர் உரையசை.
"காண் பிறந்தமைந்தகாதல்" (கம்பரா. திருவடிதொழு. 70)
"காண்டக......முகனமர்ந்து
(திருமுருகு. 250)

காான் - 1. நீர்வழி 2. வாய்க்கால் 3. மரக்கலத்தின் அறை 4.காடு 5. மணம் 6. பூ 7. இசை "கான்முகம்புதைத்ததெண்ணீர்" (சீவக. 2415) "கான்பாடதங்குமறை யோசை" (சொக்கஉலா - 9)

காணம் - 1. வளைந்தகாயிலுள்ளகொட்பயிறு 2. பழைய நிறுத்தலளவையுள் ஒன்று 3. பொன் 4. பொற்காசு 5. பொருள் 6. பாகம் "ஒன்பதுகாப் பொன்னும் நூறாயிரங் காணமுங் கொடுது" (பதிற்றுப். 60 பதி) "மேற்காண மின்மையால் (நாலடி 372)

கானம் – 1. தேர் 2. காடு 3. நந்தவனம் 4. மணம் 5. தொகுதி 6. பேதை.

காணல் - 1. காண்கை 2. மனத்தால்குறிக்கை 3. வணங்குகை 4. தோற்றம் 5. நேர்காணல். "காணலுறுகின்றேன்" (திவ். இயற்.4 41)

கானல் - 1. மணம் 2. கடற்கரை 3. கடற்கரைச் சோலை 4. கழி 5. உப்பளம் 6. உவா்நிலம் 7. மலைசார்ந்த சோலை. "கானலங் காவும்" (பரிபா.16 17)

காணா – சிறுபாம்பு

கானா – வாச்சியவகை

காரல் – 1. ஒருவகை மீன் 2. தொண்டையில் உண்டாகும் கரகரப்பு.

காறல் – 1. ஒருவகை மருந்துச்செடி 2. காரல் 3. காறும் பொருள்.

காரி - 1. கருமை 2.காரிக்குருவி 3. காக்கை 4. கடையெழு வள்ளல்களுள் ஒருவன். "கட்சியுட் காரி கலும்ம்" (பு. வெ. 1 :3)

காறி – ஒருவினையெச்சம் – காறுதல் (காறி உமிழ்ந்தான்)

காரு – 1. கம்மத் தொழில் 2. வண்ணத்தொழில்.

**காறு** – 1. கால அளவு 2. காறுதல் (தொண்டையைக் காறு) 3. கொழு 4. ஈட்டி போன்ற கருவி (சலாகை)
"அன்னை சொற்காறாம்....ஆண்டு போய் முடிந்த" (கம்பரா. மீட்சி.140)

**காரை** – 1. காட்டுச் செடி 2. காறல்மீன் 3. ஆடை 4. சுண்ணச் சாந்து (காரை பூசினான்)
"முட்காற் காரை" (புறநா. 258)

**காறை** – 1. கழுத்து அணிவகையுள் ஒன்று 2. வண்டிக் குடத்தைச் சுற்றி இடும் இரும்பு வளையம் 3. பூஞ்சாளம் 4. வைக்கோல் முதலியவற்றின் தாள்.
"காறைமுரி போருக்குக் காப்பிட வேணுமிறே" (திவ். திருப்பா. 24. ஆறா.)

**கால்** - 1. நாலில் ஒன்று (1/4) 2. அடிப்பாகம் 3. இடம் 4. மழைநீர் ஒழுக்கு (மழைக்கால்) உடல் உறுப்புகளுள் ஒன்று(காலால் நடத்தல்) 4. உருளை 5. காற்று 6. பொழுது.
"எய்தற் கரிய இயைந்தக்கால் அந்நிலையே செய்தற் கரிய செயல்" (குறள் : 489)

**காழ்** – 1. பொறாமை (காழ்ப்புணர்ச்சி) 2. கதவின் தாழ் 3. காம்பு 4. தூண் 5. விதை 6. முத்து 7. குற்றம் 8. மனவுறுதி 9. வைரம் 10. முற்றல்.

**காலம்** - 1. காலம் 2. பொழுது 3. முடிவு 4. பருவம்.
"காலங் கருதி யிருப்பர் கலங்காது ஞாலங் கருது பவர்" (குறள் : 485)

**காழம்** – 1. ஆடை 2. சிறப்பு 3. உறுதி.

**காளம்** – 1. கழு 2. சிறுசின்னம் 3. நஞ்சு 4. எக்காளம் 5. சூலம் 6. பாம்பு 7. கருமை (காளமேகம்) 8. எட்டிமரம்.
"காளமா கிருளை" (சீவக. 2245)

**காலால்** – காலினால்

| | | |
|---|---|---|
| **காலாழ்** | - | 1. கால் ஆழ் 2. கால்பதியும் சேறு<br>"காலாழ் களரில் நரியடும்<br>கண்ணஞ்சா வேலாள் முகத்த களிறு."<br>(குறள் : 500) |
| **காலாள்** | – | காலாட்படை |
| **காலி** | - | 1. பயனற்றவன் (காலிப்பயல்) 2. வெறுமை<br>3. வெற்றிடம் (காலிமனை) 4. பசுக்கூட்டம்<br>(கன்று காலி) 5. கால்களையுடையது<br>(நாற்காலி) |
| **காழி** | – | சீர்காழி |
| **காளி** | – | 1. கரியவள் (பத்ரகாளி) 2. மலைமகள்<br>3. தக்காளி 4. மணத்தக்காளி 5. நீலி 6. குமரி<br>7. பதுமை<br>"சீற்றக் காளிக டொகையும்" (கந்தபு.<br>அசுரர்யாக. 40) |
| **காலிகை** | – | 1. ஒருவகை மரம் 2. நரி 3. கருமை 4. முகில்<br>5. கள் 6. கருஞ்சந்தனம் 7. காக்கை. |
| **காளிகை** | – | 1. கரியவள் 2. ஒரு தெய்வப் பெண். |
| **காலை** | – | 1. பொழுது 2. முழவு 3. பகல் 4. கதிரவன்<br>5. துடி 6. முறை 7. விடியற்காலம்<br>"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி<br>மாலை மலரும்இந் நோய்" (குறள் : 1227) |
| **காளை** | – | 1. ஆண்மகன் 2. வீரன் 3. எருது 4. ஏறு<br>5. பாலைநிலத் தலைவன் 6. மறவன்<br>7. கட்டிளமையுடையோன்.<br>"உரவுவேற் காளையும்" (புறநா. 334) |
| **கிண்ணகம்** | – | வெள்ளப்பெருக்கு<br>"கிண்ணகத்திலிழிய அஞ்சு"<br>(பெரியதி. 3 :11வியா.) |
| **கின்னகம்** | – | 1. தூக்கணாங்குருவிக் கூடு 2. தூக்கணாங்<br>குருவி<br>"கின்னக விளக்கம்" (இரகு. நாட். 44) |

**கிண்ணம்** – 1. சிறுவட்டில் 2. நாழிகை ”மழக்கை யிலங்குபொற் கிண்ணமென்றலால்” (திருவாச. 5:92)

**கின்னம்** – 1. துன்பம் 2. கீழ்மை “கின்னங் குறித்தடியேன்....செவி சொன்ன” (கந்தரலங்:24)

**கிண்ணி** – 1. கிண்ணம் 2. சிறுவட்டில் 3. நண்டின் கால் 4. நாழிகை வட்டில் 5. கத்தியின் கைப்பிடியுறை 6. நாயின் கிண்ணிக்கால் 7. எருது 8. மான் முதலிய ஒருசார் விலங்குகளின் குளம்பின் மேல் உள்ள திரட்சி.

**கின்னி** – மழைக்கிளி.

**கிணி** – 1. தைத்தாளம் 2.நாயுருவி.

**கினி** – கிரகபீடை

**கிணை** – 1. ஒருவகை மருதப்பறை 2. உடுக்கை 3. தடாரிப்பறை. “நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை" (புறநா. 70)

**கினை** – 1. நீறு ஆக்கும்போது ஆவியாகாமல் காய்தற்குரிய காப்பு உறை 2. விளாம்பழம்.

**கிரி** – 1. பன்றி 2. பிணையாளி 3. மலை 4. நல்லவேளை.

**கிறி** – 1. பொய் 2. தந்திரம் 3. குழந்தைகளின் முன்கையில் அணியும் சிறுபவளவடம். “கிண்கிணிகட்டிக் கிறிகட்டி (திவ்.பெரியாழ்.1:9:2)

**கிரிசு** – குத்துவாள்

**கிறிசு** – 1. குத்துவாள் 2. சுற்றுவாள்.

**கில்** – ஆற்றல் உணர்த்தும் இடைநிலை “வெம்ப வருகிற்பதன்று

| | | |
|---|---|---|
| | | கூற்ற நம்மேல்" (தேவா. 1229 2) |
| **கிள்** | – | கிள்ளியெடு (கீரையைக் கிள்ளு) |
| **கிலம்** | – | 1. சிதைவு நிலை 2. சிறுமை 3. புன்மை |
| **கிளம்** | – | 1. முதுமை 2. கிழத்தன்மை |
| **கிலி** | - | 1. அசசம் 2. பயம் (கிலி பிடித்தது) 3. கவலை. "கிலி கொள் மகயுனுத்தியினால்" (இராமநா. உத். 57) |
| **கிழி** | – | கீறு (துணி கிழிந்தது) |
| **கிளி** | – | 1. கிள்ளை (கிளி பறந்தது) கிளிவகை (வெட்டுக்கிளி, கிளிப்பிள்ளை, கிளிப்பூச்சி) 2. கின்னாரம் 3. தத்தை 4. பறவை வகை 5. கிளிமீன் என்னும் கடல்மீன் வகை "கிளிமர் இயவின்புனத்து" (புறநா. 138 9) |
| **கிலுகிலுத்தல்** | – | 1. ஆரவாரித்தல் 2. கிலுகிலென்று ஒலித்தல். "நகர் கிலுகிலுத்தது" (சூளா. சுயம். 161) |
| **கிளுகிளுத்தல்** | – | மகிழ்ச்சியாலுண்டாகும் ஓரொலிக்குறிப்பு "கெண்டைத் தடங்கண்ணா ஒன்னே கிளுகிளுத்தாள்" (கம்பரா. மாயாசனக. 87). |
| **கிழத்தி** | – | 1. உரியவள் 2. தலைவி 3. மனைவி "செம்புலக் கிழத்திக் காவியன்னது" (பாரத. சிறப்பு.13) |
| **கிளத்தி** | – | 1. நாமகள் 2. ஒரு வினையெச்சம் – சொல்லி (கருத்தைக் கிளத்தினான்) "நன்னயங் கிளத்தி" (கந்தபு. திருநகர. 46) |
| **கிழவி** | – | 1. முதியவள் 2. தலைவி "கிழவிநிலையே வினையிடத் துரையார்" (தொல். பொருள். 186) |
| **கிளவி** | – | 1. சொல் 2. பொருள் 3. பேச்சு 4. மொழி 5. அகப்பொருட்டுறை "அந்தீங் கிளவி" (ஐங்குறு.490) |

| | | |
|---|---|---|
| | | "பதினெண் கிளவி" (கல்லா.38:3) |
| **கீணம்** | – | 1. சிதைவு 2. கேடு. |
| **கீனம்** | – | 1. இழிவு 2. குறைவு. |
| **கீணர்** | – | 1. அற்பர் 2. எளியர் 3. கீழோர். |
| **கீனர்** | – | அற்பர் |
| **கீரி** | – | 1. கீரிப்பிள்ளை 2. மரவகை 3. குட்டி. |
| **கீறி** | – | ஒரு வினையெச்சம் – கிழித்து (தோலைக் கீறினாள்) |
| **கீல்** | – | 1. கதவின்கீல் 2. பிணையல் 3. பிசின் உடற்பொருத்து. |
| **கீழ்** | – | 1. கீழிடம் 2. கிழக்கு 3. கீழ்கை 4. பள்ளம் 5. கீழ்கை (கீழ்மகன்) 6. தோண்டு 7. முற்காலம் 8. இழிந்தவன். "கீழ் தன்மனம் புரிந்த வாறே மிகும்" (நாலடி.341) |
| **கீள்** | - | 1. கீறு 2. அரைத்துண்டம் "கீளிரண் டாகக் குத்தி" (சீவக. 2248) |
| **கீலல்** | – | கீலுதல் |
| **கீளல்** | – | கிழித்தல். |
| **கீலுதல்** | – | கிழித்தல் |
| **கீளுதல்** | – | 1. உடைத்தல் 2. கிழித்தல். |
| **கீலி** | – | தந்திரம் உள்ளவள். |
| **கீளி** | – | கடல் மீன் வகைகள் |
| **குண்டணி** | – | குறளைச் சொல் |
| **குண்டனி** | – | குறளை |
| **குணகுதல்** | – | 1. வளைதல் 2. சோர்தல் 3. மனந்தளர்தல் 4. மனந்தடுமாறுதல் |
| **குனகுதல்** | – | கொஞ்சிப்பேசுதல் "குனகியலருடனிருந்து (திருப்பு.20) |
| **குணட்டு** | – | கதிர் முதலியவற்றின் சிறுகொத்து |
| **குனட்டு** | – | சேட்டை |
| **குணி** | – | 1. பண்பி 2. நற்குமுடையவன் 3. முடமானது 4. சொத்தைக்கையன் |

| | | |
|---|---|---|
| | | "குணத்தின் பெயர் குணிமேல் நின்றது" (குறள் : 53 உரை) "கஞ்சன் குணி கூனன்" (சைவ. ஆசா. 10) |
| **குனி** | – | 1. வளைகை 2. வில். |
| **குணித்தல்** | – | 1. கணித்தல் 2. ஆய்தல் 3. வரையறுத்தல் 4. பெருக்குதல் "கொணரும்வகை யாவதெனக் குணிக்கும் வேலை" (கம்பரா. திருவவ.38) |
| **குனித்தல்** | – | 1. அசைத்தல் 2. ஆடல் 3. விகற்பம் 4. வளைப்பு "குனித்த புருவமும்" (தேவா. 11.4) |
| **குணிப்பு** | – | 1. அளவு 2. ஆராய்ச்சி 3. மதிப்பு "குணிப்பின்றி.... பணித்தபிரான்" (திருநூற்.23) |
| **குனிப்பு** | – | 1. ஆடல் 2. கூத்தின் விகற்பம் 3. வளைப்பு "ஆனந்தத் தேன்சொரியும் குனிப்புகையானுக்கே" (திருவாச. 10 : 3) |
| **குணுக்கம்** | – | வருத்தம் |
| **குனுக்கம்** | – | குணுக்கம். |
| **குரங்கு** | – | 1. மந்தி (குரங்கு குதித்தது) 2. வளைவு 3. கொக்கி 4. கவி தோரணம் 6. கடுவன் "குரங்கமை யுடுத்த மரம்பயிலடுக்கத்து" (சிலப்.10 157) |
| **குறங்கு** | – | 1. தொடை 2. கொக்கு 3. கிளைவாய்க்கால். |
| **குரஞ்சி** | – | ஒரு பண் |
| **குறஞ்சி** | – | 1. செம்முள்ளிச்செடி 2. மருதோன்றி 3. ஈந்து (ஈஞ்சை). |
| **குரத்தி** | – | 1. ஐயை 2. குருவின் மனைவி 3. குருவின் பதவியை ஏற்றிருப்பவள் "குரத்தியை நினைத்த நெஞ்சை" (திருவிளை. அங்கம். 19) |
| **குறத்தி** | – | 1. குறிஞ்சிநிலப்பெண் 2. நிலப்பனை. |
| **குரம்** | – | 1. ஒலி 2. விலங்கின் காலடிக் குளம்பு |

3. குதிரை 4. ஆ(பசு)
5. பாகல் "குரந்தரு விசையினீர் மொண்டு"
(இரகு. இரகுவுற். 56)

**குறம்** – 1. குறத்திப்பாட்டு 2. குறி சொல்லல்
3. குறக்குடி 4. குறத்தி
சொல்லும் குறி 5. குறவர் கூற்றாக வரும்
கலம்பக உறுப்புகளுள் ஒன்று.

**குரல்** – 1. பூங்கொத்து 2. மிடறு (குரலில் பிறக்கும்
ஒலி) 3. குரல்வளை
4. தினை 5. ஒழிசையில் முதலாவது 6. கதிர்
7. ஒரு மரம்.
"வரகி னிருங்குரல்" (மதுரைக். 272).

**குறழ்** – 1. குனி 2. கூன் (குறழ்தல் – குனிதல்)

**குறள்** – 1. குட்டை 2. குள்ளம் 3. இருசீரடி (குறளடி)
குறள்வெண்பா 4. திருக்குறள்
"உலகெலாங் கொள்ள மொழிந்தார் குறள்"
(வள்ளுவமா. 33)

**குரவர்** – 1. ஆசிரியர் 2. அரசர் 3. தந்தை 4. அறவோர்.

**குறவர்** – குறிஞ்சிநிலமக்கள்.

**குரவை** – 1. ஒலி 2. ஒருமீன் 3. கடல் 4. கூத்து
5. குரவைப்பாட்டு
"ஆய்ச்சியர் குரவை குன்றக்குரவை" (சிலப்.)

**குறவை** – வரால்மீன்.

**குரால்** – 1. கோட்டான் 2. பசு (ஆ) 3. கபிலநிறம்
"பலஆண் பொருந்திய
குராலின் குரலும்" (மணிமே. 6 76)

**குறாள்** – 1. கன்னி 2. பெண் ஆட்டுக்குட்டி.

**குரு** – 1. ஆசான் 2. குரவன் 3. கடவுள் 4. சோறு
5. நோய் (வேர்க்குரு) 6. தந்தை 7. தலைவன்
8. புண். 9. கொட்டை 10 ஒளி.
"குருமணித்தாலி" (தொல். சொல். 303)

**குறு** – குறுகிய (குறுந்தாடி. குறுவழி)

**குருக்கு** – 1. இளம்பனை முதலியவை நெருங்கிய தோப்பு 2. பிரமதண்டுச் செடி.

**குறுக்கு** – 1. குறுமை 2. குறுக்களவு 3. சுருக்கம் (குறுக்கே செல்) 4. தடை. 5. கோணல் 6. நெடுமைக்கு மாறான அகலம் 7. மாறு 8. இடுப்பு.
"நீண்ட நெடுமையும் அகலக குறுக்கும் காட்டா" (தாயு. சிதம்பர. 13)

**குரும்பி** – 1. புற்றாஞ்சோறு 2. தென்னம் பூவினின்றும் காய்க்கும் தேங்காயின் ஆரம்பநிலை
"பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்" (பெரும்பாண்.277)

**குறும்பி** – 1. காதினுள் உள்ள அழுக்கு 2. மலம் 3. சிறுநீர் முதலியன.
"குறும்பி யூர்வதோர் கூட்டகத் திட்டு" (தேவா. 370:6)

**குரை** – 1. நாய் குரைத்தல் 2. குலை 3. பெருமை 4. இசைநிறை 5. ஒலி 6. குளம்பு 7. குதிரை.
"நுரைத்தலைக் குரைப்புனல்" (பொருந.240)

**குறை** – 1. குற்றம் 2. மனக்குறை 3. வேண்டுகோள் 4. குறைபாடு 5. நேர்த்திக்கடன் 6. இன்றியமையாப் பொருள் 7. துண்டம் ஆற்றிடைக்குறை.
"வினைக்குறை தீர்ந்தாரின்" (குறள். 612)

**குரைத்தல்** – 1. ஆரவாரித்தல் 2. குலைத்தல் 3. ஓசை
"குவவுக் குரையிருக்கை" (பதிற்றுப்.84:20)

**குறைத்தல்** – 1. சுருக்குதல் 2. வெட்டுதல் 3. தறித்தல் 4. அறுதியிடுதல் 5. அராவுதல் 6. அள்ளுதல் (பொருள் அள்ளியதால் குறைந்தது)

குரைப்பு – 1. நடுக்கு வாதம் 2. குலைத்தல் 3. ஓசை "உங்காரக் குரைப்பினால்" (சேதுபு. தேஷபுர.47)

குறைப்பு – 1. முறைத்தல் 2. தாழ்த்தல் 3. அளவில் குறைத்தல்.

குல்லம் – முறம்.

குள்ளம் – 1. குறுமை (குள்ளமாக இருக்கின்றான்) 2. வஞ்சகம் 3. கொடுமை

குலப்பம் – 1. செப்புமணல் 2. கக்குவான் இருமல்.

குழப்பம் – 1. கலக்கம் 2. கலகம் 3. தாறுமாறு 4. கொந்தளிப்பு 5. மனக் கலக்கம்.

குலம் – 1. பிரிவு 2. மகன் 3. வீடு 4. கோயில் 5. அழகு 6. இனம். 7. குழு 8. மரபுவழி 9. மக்கள் 10. நன்மை 11. குடி 12. மலை 13. மூங்கில். "குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும் நாணின்மை நின்றக் கடை" (குறள் : 1019)

குளம் – 1. நீர்நிலை (தாமரைக்குளம்) 2. ஏரி 3. நெற்றி 4. சருக்கரை 5. தடாகம் "குளக்கீழ் விளைந்த.......வெண்ணெல்" (புறநா. 33 5)

குலவி – ஒரு வினையெச்சம் – கொஞ்சி (குலவிப் பேசினான்)

குழவி – 1. குழந்தை 2. அம்மிக்குழவி 3. இளமை 4. விலங்கின் குட்டி "புரையறு குழவியின்.......அரைக்குநா" (பரிபா.10 83)

குளவி – 1. கொட்டும்வண்டு (குளவி கொட்டியது) 2. காட்டு மல்லிகை 3. மலைமல்லிகை வகை 4. பச்சிலை மரம். "கூதளங்க கவினிய குளவி" (புறநா. 168 12)

குலாம் – அடிமை.

**குழாம்** – 1. கூட்டம் 2. திரள் 3. அவை (அறிஞர் குழாம்) "சான்றோர் குழாஅத்து" (குறள்.840)

**குலி** – 1. உடம்பு 2. மனைவியின் மூத்த தமக்கை 3. கண்டங்கத்தரி

**குழி** – 1. பள்ளம் (குழியில் வீழ்ந்தாள்) தோண்டு (பள்ளம் குழித்தாள்) 2. கிணறு 3. குளம் 4. வயிறு "இன்சொற்குழியின்" (நான்மணி.16)

**குளி** – 1. நீராடு (குளத்தில் குளித்தான்) "எத்தனை குளிக்கு நிற்கும்" (ஈ.டு.4 : 51)

**குலை** – 1. கொத்து (தென்னங்குலை) 2. கட்டவிழ் (கட்டுக்குலைந்தான்) 3. கலைத்துவிடு (கட்டியதைக் குலைத்துவிடு) 4. தடுமாற்றம் (மனங்குலைந்தான்) 5. குதை (அம்பின் குலை) 6. ஈரக்குலை 7. பாலம் "வீரர் குலைகளற்றி" (அரிச்.4 வேட்டஞ். 48)

**குழை** – 1. காடு 2. குழைசேறு 3. குழைத்தல் (சந்தன குழை) 4. சறு 5. நெய்தல் 6. தளிர் 7. காதணி. "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை மாதர்கொல் மாலும்என் நெஞ்சு" (குறள் : 1081)

**குலைத்தல்** – 1. நிலைகெடுத்தல் 2. மனங்குழைதல் 3. நடுங்குதல் 4. அழித்தல்.

**குழைத்தல்** – 1. நெருங்கி உறவாடுதல் (குழைந்து பேசினாள்) 2. அழிதல் (சோறு குழைந்துவிட்டது) 3. வளைதல் 4. தளர்தல் 5. தழையச் செய்தல் 6. திரட்டுதல் 7. இளகுவித்தல் 8. அசைத்தல். "கருணை யாற் குழைக்கும் கைகள்" (சீவக.257)

**குலைப்பு** – 1. குரைப்பு 2. குலைத்தல் 3. நடுக்குவாதம் "முயலகன் குலைப்பொடு" (திருப்பு. 252)

**குழைப்பு** – பிணையல் (சந்தனக் குழைப்பு)

**குலைவு** – அழித்தல் (உருவம் குலைந்தது)

**குழைவு** – 1. அணைத்தல் 2. இரக்கம் 3. உருக்கம் 4. வளைவு 5. வாடல் "கொடி போலுருவாள் குழைவுற்றனளோ" (சிவகர. கணபதிவந். 4)

**குவலை** – 1. கஞ்சா 2. துளசி

**குவளை** – 1. ஒருவகை மலர் (குவளை மலர்) 2. ஒருவகை ஏனம் (கண்ணாடிக் குவளை, வெள்ளிக் குவளை) 3. கண்குழி 4. கண்ணின்மேலிமை 5. கண்ணின் மூக்கடி மூலை 6. செங்கழுநீர். "விளக்கிட்டன்ன கடிகமழ் குவளை" (சீவக. 256)

**குலகம்** – 1. கருந்தும்பை 2. பேய்ப்புடல்.

**குழகம்** – அழகு

**குளகம்** – 1. ஆழாக்கு 2. மரக்கால் 3. ஒருவகைச் செய்யுள்.

**குழகன்** – 1. அழகன் 2. பிறர்க்கு இணங்குபவன் 3. முருகன் 4. சிவன் "இணையோன் குறவை கோத்த குழகனை" (திவ். திருவாய்.3 6 3)

**குளகன்** – 1. குமரன் 2. இளைஞன். "குளகன் வந்துழி" (கந்தபு.குமார.1)

**குழகு** – 1. அழகு. 2. இளமைச் செவ்வி 3. குழந்தை "குழகென வெடுத்துகந்தவுமை" (திருப்பு. 106)

**குளகு** – 1. இலைக்கறி 2. தழை 3. இலையுண்ணும் விலங்கு "வாரணமுன்குளகருந்தி" (கலித்.42)

| | | |
|---|---|---|
| **குழம்பு** | – | 1. குழம்பான பொருள் (காய்கறிக் குழம்பு) 2. குழைசேறு 3. சந்தனக் குழம்பு. |
| **குளம்பு** | – | ஒருசார் விலங்குகளின் காலடி (குதிரைக் குளம்பு) "வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகள்" (புறநா.15) |
| **குழித்தல்** | – | 1. குழி தோண்டுதல் 2. செதுக்குதல். |
| **குளித்தல்** | – | 1. நீராகுதல் 2. அழுந்துதல். |
| **குழிப்பு** | – | 1. தாழ்பு 2. குழி செய்கை 3. செய்யுட் சந்தவகை. |
| **குளிப்பு** | – | நீராடல் |
| **குழியம்** | – | 1. திரள்வடிவு 2. திரண்டவட்டம் 3. வலையம். |
| **குளியம்** | – | 1. மருந்தின் பொதுப்பெயர் 2. உருண்டை 3. வேங்கைப்புலி. |
| **குழுவன்** | – | 1. சொற்கேளாதவன் 2. பட்டி. |
| **குளுவன்** | – | குறவனுடைய தோழன் "குளுவச்சிங்கன் வந்தான்" (குற்றா. குற. 792.9) |
| **கூர** | – | குளிர்ச்சிமிக. |
| **கூற** | – | ஒரு வினையெச்சம் – (சொல்லக் கூற வேண்டும்) |
| **கூரல்** | – | 1. கூந்தல் 2. இறகு 3. ஒருபெருமீன் வகை. |
| **கூறல்** | – | சொல்லல் "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (குறள் : 100) |
| **கூரியது** | – | கூர்மையானது (அம்பு கூரியது) |
| **கூறியது** | – | சொல்லியது (இலக்கணத்தில் கூறியது கூறல் குற்றம்) |
| **கூரை** | – | 1. வீட்டுக்கூரை 2. சிறுகுடில் "குறுங்கூரைக் குடிநாப்பண்" (பட்டினப்.81) |

| | | |
|---|---|---|
| **கூறை** | – | 1. சீலை 2. புத்தாடை (கூறைப்புடைவை)<br>"அத்திட்ட கூறையரை சுற்றி" (நாலடி 281) |
| **கூல்** | – | 1. கூர்மை 2. நீட்சி. |
| **கூழ்** | – | 1. மாவினாற் சமைத்த உணவு<br>2. பொன்பொருள்.<br>"கூழும் குடியும் ஒருங்கிழக்கும்<br>கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு"<br>(குறள் – 554) |
| **கூள்** | – | திரள். |
| **கூலம்** | – | 1. நெல் முதலிய பதினெண்வகைப்பண்டம் (கூலவாணிகம்) 2. மந்தி. |
| **கூழம்** | – | 1. எள்ளு 2. குறைவு (கூழக்கை) |
| **கூளம்** | – | 1. குப்பை (குப்பை கூளம்) 2. திப்பிலி 3. சண்டு. |
| **கூழன்** | – | 1. தெளிந்த அறிவிலான் 2. பலாவகை. |
| **கூளன்** | – | பயனற்றவன் "ஊனடி பேணாக் கூளன்"<br>(திருப்பு.109) |
| **கூலி** | – | 1. வாடகை (குடிக்கூலி) 2. கூலியாள்<br>3. ஊதியம்.<br>"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்<br>மெய்வருத்தக் கூலி தரும்." (குறள் : 619) |
| **கூளி** | – | 1. குள்ளம் 2. காளை 3. உறவு. 4. சுற்றம்.<br>5. படைத்தலைவன் குற்றம். 7. கூட்டம்<br>8. பேய் 9. பெருங்கழுகு.<br>"கணங்கொள் கூளியொரு" (பட்டினப். 259) |
| **கெலி** | – | 1. அச்சம் 2. அவா 3. பெருவயிறு 4. வெல் (கெலித்தான்) |
| **கெழி** | - | நட்பு<br>"ஒருவன் கெழியின்மைக் கேட்டா லறிக"<br>(நான்மணி.63) |
| **கெலித்தல்** | – | 1. வெல்லுதல் 2. அவாவுறுதல் 3. அஞ்சுதல் |
| **கெளித்தல்** | – | நெளிந்து போதல் |
| **கேணம்** | – | செழிப்பு |

**கேனம்** – 1. மனநோய் 2. பத்து உபநிடந்தங்களுள் ஒன்று.

**கேழ்** – 1. ஒப்பு "கேழ் இல் பரஞ்சோதி" (வாச : 162) 2. ஒளி 3. கட்டழகு 4. பொருந்து 5. நிறம் "மணிக் கேழ் அன்ன மா நீர்ச் சேர்ப்ப" (குறு:49:1)

**கேள்** – 1. உறவினர் "கேள் கேடு ஊன்றவும்" (அக:93:1) 2. காதலன் (கணவன்) 3. நட்பு 4. கேள் எனும் ஏவல் "புனையிழை கேள்" (நற்:109:4)

**கேழ்வி** – நலம் "கேழ்வி உடை நல்லறமே கேள்" (ஜீவ:347)

**கேள்வி** – 1. செவிச் செல்வம் "ஆன்ற கேள்வி" (புற:26:12) 2. யாழ் (இசை) "சில் செவித்தாகிய கேள்வி நொந்து" (புற:68:3) 3. கேட்ட செவி "கேள்விக்கு இனியை கட்டு இன்னயே" (புற:167:4) 4. மறை (சுருதி) "கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்" (புற:361:4) 5. நூற்பொருள் முதலியன கேட்கை "கேட்பினும் கேளாத் தகையவே..... (குறள்:42:8)
6. கற்றற்குரிய நற்பொருளைத் தக்கார் வாய்க் கேட்டல்.
"மாசு அறு கேள்வி (மணி:2:60) 7. நூல் "ஆழி மால் கடல் அகன் பெரும் கேள்விகள் துறை போய்" (சீவக:72:9)
8. இசைச் சுருதி "கிளை ஆய்ந்து பண்ணிய கேள்வி யாழ்ப் பாணும்" (பு.வெ.பா:144)

9. கல்வி 10. செவி (காது)

**கேழல்** – 1. நிறம் 2. குளநெல் 3. பன்றி "நீர்விளை கேழலும்" (சீவக.1422)

**கேளல்** – 1. கேட்டுக்கொள்ளல் 2. கேட்காமை.

**கேலி** – 1. விளையாட்டுப் பேச்சு 2. பகடி 3. ஏளனம் 4. விகடம்.

**கேளி** – 1. மகளிர் விளையாட்டு 2. செம்மஞ்சள் நிறத் தென்னை வகை 3. அறிவிப்பு 4. பறையறைந்து தெரிவித்தல் 5. புகழ்.

**கைக்கோல்** – 1. ஊன்றுகோல் "தன்கைக் கோலம் மனைக் கோலாகிய ஞான்று" (நாலடி:14) 2. செங்கோல்

**கைக்கோள்** – கைப்பற்றிக்கொள்ளுதல்

**கைவலி** – கைநோவு.

**கைவழி** – 1. கையின் மூலம் (கைவழி அனுப்பியபொருள்) 2. யாழ் 3. ஒற்றையடிப்பாதை.

**கைவளி** – சிறுகாற்று

**கைவலை** – 1. கையால் வீசி மீன்பிடிக்கும் வலை.

**கைவளை** – 1. கைவளையல் 2. கடகம் 3. சிறுவளை கைத்தொடி 4. தோள்வளை 5. சூடகம் 6. மருதோன்றி 7. வளையல். "கைவளைதிருத்துபு கடைக்கண் நோக்கினான்" (கம்ப. இராம.)

**கொடுங்கோல்** – 1. வளைந்த கோல் "கொடுங்கோற் கோவலர்" (நற்:69:8) 2. தாற்றுக்கோல் "கொடுங்கோல் உமணர் பகடு தெழி தெள்விளி" (அக:17:13) 3. முறையற்ற ஆட்சி "கொடுங் கோல்

வேந்தன்குடிகள் போல" (சிலப்:13:15)

**கொடுங்கோள்** – 1. வெட்டிய கோள் 2. வஞ்சனை "கொடுங்கோளால் நிலம் கொண்ட கிறி அம்மான்" (சட:4:8:6)

**கொல்** – 1. வெட்டு "மரங் கொல் கானவன்" (குறு:214:1) 2. வருத்துதல் "பசை கொல் மெல் விரல்" (அக:34:11) 3. அழித்தல் "கொல் புனக் குருந்தொடு" (அக:133:15) 4. உயிரைப் போக்குதல் "ஆள் கொல் யானை" (அக:325:19) 5.அசைநிலை இடைச்சொல் "அது கொல் தோழி காம நோயே..... (குறு:5:1-5) 6. வினாப் பொருள் இடைச்சொல் 7. ஐயப் பொருளது "ஈங்குத் துறந்தோர் தமியர் ஆக இனியர் கொல்லோ" (குறு:172:4) 8. ஐயம் "என் முகம் நோக்கினள் எவன் கொல் தோழி (நற்:206:8)

**கொள்** – 1. ஒரு வகை தவசம் "கொள் உழு வியன் புலம்" (புற:105:5) 2. குடை வேல்.

**கொல்லல்** – கொலை செய்தல்

**கொள்ளல்** – ஏற்றுக்கொள்ளல்.

**கொல்லி** – 1. வல்வில் ஓரியின் ஆட்சிக்கு உட்பட்ட மலை "வல்வில் ஓரி கொல்லிக் குட வரை" (குறு:100:5)

**கொள்ளி** – 1. எரி கொள்ளி என்னும் விண்மீன் "விசும்பு வீழ் கொள்ளியின் பைம் பயிர் துமிப்ப" (குறு:189:4) 2. நெருப்பு 3. ஈமத் தீ (ஈமவிறகு)

**கொல்லுதல்** – 1. சாகடித்தல் 2. வதைத்தல்.

**கொள்ளுதல்** – 1. ஏற்றுக் கொள்ளுதல் 2. கையில் எடுத்துக் கொள்ளுதல் 3. பெறுதல் (விலைக்கு வாங்குதல்) 4. உரிமையாகக் கொள்ளுதல் 5. கற்றுக் கொள்ளுதல் 6. நன்கு மதித்தல் 7. மேற்கொள்ளுதல் 8. பொருந்துதல்
"கொள்ளாத கொள்ளா துலகு" (குறள். 470)

**கொல்லை** – 1. தினைப் புனம். 2. தரிசான புனம்
"மலை இடம் படுத்துக் கோட்டிய கொல்லை" (நற்:209:1) 3. காடு
"கொல்லைக் கோவலர் குறும் புனம் சேர்ந்த (நற் :266-1) 4. புன் செய் நிலம் 5. முல்லை நிலம் 6. வரம்பு அழிந்தவள்.

**கொள்ளை** – 1. விலை
"வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி" (நற்:4:8)
2. மிகுதி
"கோள் நாய் கொண்ட கொள்ளை" (நற்:82:10)
3. கொள்ளப்பட்டது 4. சூறையிடுதல்
"கொள்ளை மாந்தரின் ஆறாது கவரும்" (அக:3:10) 5. பிறர் பொருளைக் கவர்தல்

**கொலல்** – 1. கொலை செய்தல் 2. கொல்லுதல்.

**கொளல்** – தெரிந்து கொள்ளுதல்
"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" (குறள்:134)

**கொலு** – 1. அரச அவை (கொலு மண்டபம்) 2. மகிழ்ச்சி வீற்றிருப்பு (கொலுவீற்றிருப்பு) 3. பொம்மைக்கொலு. "இருந்திடுங் கொலுவில்" (மச்சபு. நைமிசா.5)

**கொழு** – 1. கொழுப்பு (கொழுகொழுவென்றிருத்தல்) 2. கலப்பையிற் பதிக்கும் இரும்பு 3. திரண்டது 4. துளையிடும் பெரிய ஊசி 5. வழவழப்பு "குடருங் கொழுவும்" (நாலடி.46)

**கொளு** – 1. உருவத்திரையை மாட்டும் கருவி. 2. பழுவெலும்பு 3. செய்யுள் முதலியவற்றின் கருத்தை விளக்கும் சொற்றொடர் "கொளுமிடை வீணாத்தண்டு" (ஞானா.7:14)

**கொலை** – 1. உயிர்வதை 2. உடம்பினின்று உயிரைப் பறித்தல்
"கொலைவினைய ராகிய மாக்கள்
புலைவினையர் புன்மை தெரிவா ரகத்து"
(குறள் :329)

**கொளை** – 1. பிடிப்பு 2. கோட்பாடு 3. பயன் 4. இசை 5. பாட்டு 6. கை முதலியவற்றால் தாளமிட்டு ஒற்றறுக்கை. "கொளை தளராதவா" (கலித். 34:17)

**கோசணை** – பேரொலி

**கோசனை** – 1. கோரோசனை 2. பேரொலி.

**கோண்** – 1. வளைவு 2. மாறுபாடு 3. கொடுங்கோன்மை 4. கோணம் 5. நுண்ணிய பகுதி 6. ஏனத்தின் மூக்கு "கோணார் பிறை" (திருவாசக. 16:5)

**கோன்** – 1. அரசன் 2. தலைவன் 3. இடையர் 4. பட்டப்பெயர் 5. ஞாயிறு. 6. திங்கள் 7. வியாழன்
"உண்மையுமா யின்மையுமாய்க் கோனாகி"
(திருவாச.5:15)

**கோணை** – 1. வளைவு 2. கோணல் 3. கொடுமை 4. தொல்லை 5. வலிமை 6. அழிவின்மை
"கோணை யிருங்குண்டை"
(அட்டப்.திருவேங்.மா.58)

**கோனை** – ஒலி

**கோபணை** – கோபமுள்ளவன்
**கோபனை** – கவண்
**கோரம்பு** – தீம்பு "அதுவுமுன் கோரம்புக் கேற்கு மன்றே" (திவ். பொருமாள்.6:4)
**கோறம்பு** – நெற்றியில் அணியும் ஒருவகை அணி "நெற்றி மேற்றிருத்திய கோறம்புந் திருக்குழலும்" (திவ். பெரியாழ்.3:4:6)
**கோரி** – 1. கூம்புக்கல்லறை 2. மலைமகள் "கோரியென் னுள்ளங் குலாவிநின் றாளே" (திருமந். :1110)
**கோறி** – 1. கொன்றான் 2. கொல்லுதல் 3. ஒரு வினையெச்சம் – கேட்டல் (பொருளைக் கோறினான்).
**கோரை** – 1. மயிர் 2. ஒரு வகைப்புல் (கோரைப்புல்) 3. துளை 4. பழுது 5. எருவை 6. ஒரு கிழங்கு 7. ஒருவகைக் கடற்புல் 8. காளை 9. அழகில்லாதது 10. வளைவு.
**கோறை** – 1. மணிபதிக்குங் குவளை 2. பழுது 3. துளை 4. சிராய்த்த காயம்.
**கோல்** – 1. மரக்கொம்பு 2. அளவுகோல் 3. எழுதுகோல் 4. அழகு (கோல்முகம்) 5. ஊன்றுகோல் 6. துலாக்கோல். "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க் கணி" (குறள்.118)
**கோழ்** – வழுவழுப்பான செழித்த
**கோள்** – 1. புறங்கூறல் (கோள்சொல்லல்) 2. விண்மீன் (கோள்கள்) 3. நாள் 4. கொள்ளுதல் "கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" (குறள்.09)
**கோலம்** – 1. அழகு (கோலங்காட்டுதல்) 2. வேடம் (தவக்கோலம்) 3. உருவம் 4. மரம் 5. பன்றி

| | | |
|---|---|---|
| | | 6. தெப்பம் 7. முயற்சி.<br>"கோலத் தனிக்கொம்பா" (திருக்கோ.45) |
| **கோழம்** | – | 1. சங்குசெய் நஞ்சு 2. ஒரு கனிமம். |
| **கோளம்** | – | 1. வட்டம் 2. உருண்டை(விண்வெளிக் கோளம்) (செவ்வாய்க் கோளம்)<br>3. விலங்குகளின் உடலில் நீரூறுந் தசைப்பகுதி. |
| **கோலி** | – | 1. இலந்தைமரம் 2. திப்பிலி 3. புன்குவகை 4. கோலிக்குண்டு 5. மயிர் 6. கூந்தல். |
| **கோழி** | – | 1. ஒருவகைப் பறவையினம் (தாய்க்கோழி) 2. ஓர் ஊர் 3. குருகு எனும் பறவை<br>"குப்பை கிளைப் போவாக் கோழிபோல்" (நாலடி.341) |
| **கோளி** | – | 1. பூவாது காய்க்கும் மரம். 2. ஆலமரம். 3. அரசமரம் 4. கொள்வோன் 5. நான்காம் வேற்றுமை 6. கொழுஞ்சி<br>"கொழுமென் சினைய கோளியுள்ளும்" (பெரும்பாண்.407) |
| **கோலை** | – | மிளகு |
| **கோழை** | – | 1. அச்சம் (கோழைத்தனம்) 2. சளி 3. கபம். 4. மனத்திட்பமின்மை. 5. இரக்கம் 6. சிறுபிள்ளை 7. உமிழ்நீர்<br>"கோழை மிடறாக" (தேவா.263:1) |
| **கோளை** | – | 1. குவளை 2. எலி. 3. கோழை 4. தோழி 5. கோதாவரி 6. மீன்வகை. "கோளை யாளல்" (குருகூர்ப்.7) |
| **சண்ணம்** | – | ஆண்குறி<br>"சிறுச்சண்ணந் துள்ளஞ்சோர" (திவ்.பெரியாழ்.1 7 10) |
| **சன்னம்** | – | 1. நுண்மை 2. குழல் இழைவு (சன்னமாகப் பாடினாள்) 3. நேர்மை 4. பொடி மணிக்கல் |

5. நுண்ணிய பொடி 6. சிறிய 7. வெடிக் குண்டு 8. மெல்லியதாய் அரைக்கப்பட்ட காரை 9. மறை பொருள்
“சன்னமாகி வெண்சாம்பரி னாயின”
(உபதேசகா.சிவவிரத.174)

**சருகு** – 1. உலர்ந்து வற்றிய இலை. 2. வெற்றிலை 3. சிறியது.
“ஓலியா லசையச் சருகெழ”
(வெநகைக்கோ.173)

**சறுகு** – நழுவுதல் (சறுகினான்)
“காரியஞ் சறுகிப் போயிற்று” (இ.வ)

**சரை** – 1. நரைமயிர் 2. கிழத்தன்மை 3. வைரக்குற்றம் 4. வாழைச் சருகு முதலியவற்றால் அமைக்கும் மூடிவகை.

**சறை** – 1. தாழ்வு 2. சறைமணி.

**சலம்** – 1. அசைவு 2. சீழ்நீர் 3. மூத்திரம் 4. நடுக்கம் 5. சினம் 6. பொய்ம்மை 7. வஞ்சனை 8. நீர் 9. அசையும் அம்புக்குறி 10. சுழற்சி 11. இயங்கு திணை 12. தணியாச்சினம் 13. தீயசெயல் 14. மாறுபாடு 15. போட்டி 16. விடாப்பிடி 17. ஒரு பக்கஞ் சாய்கை 18. சொல்லுவோனுடைய கருத்துக்கு வேறான பொருளைக் கற்பித்துக் கொண்டு பழித்துரைக்கையாகிய அழிப்பு
“சலப்படையா னிரவிற் றாக்கிய தெல்லாம்”
(பரிபா. 6 57)

**சளம்** – 1. பொய் 2. மக்கம் 3. வஞ்சனை 4. துன்பம் 5. சீற்றம் 6. கொடுவெறி
“மறலி கொடுபோருஞ் சளமது தவிர”
திருப்பு.584)

**சலி** – வடிகட்டு (மாவைச் சலி) "நிலையினிற் சலியா நிலைமையானும்" (கல்லா.11)

**சளி** – 1. கபம் 2. கோழை 3. குளிர்ச்சி 4. நீர்க்கோவை 5. மூக்குச்சளி 6. பிசின் "சளி கொள் சந்தின்" (சீவக.1693)

**சலித்தல்** – 1. சோர்தல் (மனஞ்சலித்தல்) 2. அசைதல் (சல்லடையால் மாவு சலித்தல்) 3. ஒலித்தல் 4. வெறுத்தல் 5. மனக்கலக்கமடைதல் 6. அருவருப்புக் காட்டுதல். 7. சினங் கொள்ளுதல் 8. சல்லடையாற்சலித்தல் "சலிக்கு மன்னையம்" (திருவிளை. விருத்த.9)

**சளித்தல்** – 1. கொடுத்தல் 2. பதனழித்தல் 3. சளிநோய் கொள்ளுதல் 4. புளித்தல் "மூக்குக்குட் சளியிழையோடும்" (திருப்பு. 90)

**சாணம்** – 1. விலங்குகளின் கழிவு (மாட்டுச் சாணி) 2. சந்தனக்கல் 3. சாணைக்கல் 4. தழும்பு 5. நாராலாகிய பொருள் 6. சாதிலிங்கம் 7. சணற்கயிறு. "சாணந்தின்ற சமந்தாங்கு தடக்கை" (மதுரைக்.593)

**சானம்** – 1. பெருங்காயம் 2. அம்மி 3. ஊழ்கம் 4. சிந்தனை 5. உரைகல்.

**சாணி** – சாணம் (மாட்டுச் சாணி) "சாணியின் குவியலில்" (மணிமே.30:253)

**சானி** – மனைவி.

**சாரல்** – 1. தூவானம். 2. மழைச்சாரல் 3. மலை. 4. பக்கம் 5. பக்கமலை 6. யாழிசை 7. சாரல் காற்று 8. கிட்டுகை 9. மலை 10. மலையில் மேகங் கட்டிப் பெய்யுந் தூறல் 11. மருதயாழ்த் திறமாகிய காந்தாரப்பண் 12. நிறம் சற்றுக் குறைகை 13. சாய்வாகவும் துளித்

துளியாகவும் விழும் மழை அல்லது காற்றால் அடித்துவரப்படும் மழை. "வழையமை நறுஞ்சாரல்" (கலித்.53)

**சாறல்** – 1. குளிர்காற்று 2. சாறுதல்.

**சாரு** – 1. அழகு 2. கிளி 3. கிள்ளை 4. தத்தை.

**சாறு** – 1. இலை 2. பட்டை 3. பழம் முதலியவற்றின் சாறு 4. திருமணம் 5. திருவிழா 6. பிழிவு 7. நழுவுதல் 8. வழுக்குதல் 9. சரிதல் 10. வடிதல் 11. களத்தில் குவிந்திருக்கும் தவசம் (தானியம்) 12. பெருக்குதல் 13. நிலத்தைக் கொத்துதல் 14. கள் 15. மணப் பொருள்கள் ஊறின நீர் 16. மிளகுச்சாறு 17. இழவு வீட்டில் இறந்தவருடைய உறவினர் இடும் உணவு 18. பூசை 19. மீன்பிடிக்க இடும் சிற்றணை 20. மரத்தின் குலை. "சாறுஞ் சேறு தெய்யு மலரும்" (பரி.6 41)

**சாலம்** – 1. கூட்டம் 2. பலகணி 3. அரண் 4. மதில் 5. தாழ்வாரம் 6. அகலம் 7. நடிப்பு 8. சுவை 9. அரும்பு 10. குறளை 11. கல்வி 12. மருத்துவ நூல் 13. ஆச்சா மரம் 14. மாமரம் "திரிந்தன சாலமீன் சாலம்" (கம்பரா.வருணனை 25)

**சாளம்** – 1. குங்கிலியம் 2. மணல் "மலயத் தனிக்கால் வரசாளத் தைவந் தூலவ" (சொக்கநா.உலா.42)

**சாலை** – 1. வழி (சாலையின் ஓரம் நட) 2. இடம் (பாடசாலை) 3. பண்டசாலை 4. கூட்டம் 5. நீர்க் ழாய்கள் செய்யப் பயன்படும் மரம் 6. உணவு அளிக்கும் அறச்சாலை 7. வேள்விச் சாலை 8. பள்ளிக்கூடம் 9. குதிரை யானை முதலியவற்றின் கூடம்

| | | |
|---|---|---|
| | | 10. ஆவின் (பசுக்) கொட்டில் 11. பெரிய பொது மண்டபம் 12. அரண்மனை 13. வீடு 14. இருபக்கமும் மரஞ்செறிந்த பாதை 15. அகன்ற பாதை 16. கையாந்தகரை. "திருத்திய சாலை புக்கனன்" (கம்பரா.திருவவ.84) |
| **சாழை** | – | 1. குச்சு 2. குடிசை 3. மகளிர் விளையாட்டு 4. கைகொட்டி ஆடும் விளையாட்டு. |
| **சாளை** | – | 1. கடல்மீன் 2. வாய்நீர் (சாளை வழிகிறது) 3. குடிசை 4. எட்டு விரலளவு நீளமுள்ள கடல் மீன் வகை 5. இரண்டடிச் சுவரும் அதன் மீது கூரைச்சாய்ப்பும் கொண்ட வீடு 6. வட்டமான குடிசை 7. வழிந்து விழும் வாய்நீர். "சாளை போட்டான்" (சங்.அக) |
| **சாலிகை** | – | 1. கவசம் 2. ஒருவகை மரம் 3. வரி இறை "சாலிகை யுடம்பினர் தறுக்கணாளரே" (சீவக.2227) |
| **சாளிகை** | - | 1. பணப்பை 2. சாடி 3. வண்டு "மாளிகையும் பணச்சாளிகையும்" (கந்தரலங்.78) |
| **சிண்** | – | 1. கூட்டாளி 2. கையாள் 3. சூதாட்டுத்தாயம் 4. சூதாட்டத்திற் கூட்டாளி 5. விளையாட்டிற் பின்னும் ஒருமுறை ஆடுகை. |
| **சின்** | – | 1. ஓர் அசைச்சொல் 2. சினம் "காப்பும் பூண்டின்சின்" (தொல்.சொல்.277) |
| **சிரத்தல்** | – | 1. அழித்தல் 2. ஒலித்தல் 3. எழுத்தில்லா ஓசை 4. தேய்த்தல். |
| **சிறத்தல்** | – | 1. மேன்மையாதல் 2. திறன்பெறுதல் (கல்வியில் சிறத்தல்) 3. மேன்மை யுடையதாதல் 4. மேற்படுதல் 5. அளவிற் கதிமாகக் கனத்தல் 6. மிகுதல் |

7. இன்றியமையாதிருத்தல் 8. மங்கலமாதல்
9. அன்பாதல் 10. மகிழ்தல் 11. அழகாதல்
12. நனிநாகரிகமாகுதல்
13. பிறங்கொளி வாய்ந்ததாதல்.
"சிறந்த நான்மறை முனிவர்" (புறநா.6:19)

**சிரு** – 1. தோள் பொருத்து 2. போதல்

**சிறு** – 1. மெலி (சிறுத்துப் போனது) 2. முட்டுக் கட்டையிடுதல் 3. தடுத்தல் 4. குறைந்த 5. சிறிய 6. இளைய 7. அகவையில் குறைந்த
"சிறுபடையான் செல்லிடம் சேரின்
உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும்"
(குறள்.498).

**சிரை** – 1. நரம்பு 2. குரங்கு.

**சிறை** – 1. காவல் (சிறைச்சாலை) 2. தடைசெய்தல் 3. அடிமை 4. இடம் 5. பக்கம் 6. வரம்பு 7. மதில் 8. கோட்டை 9. அரண் 10. காப்பு 11. காவலில் அடைக்கை 12. சிறைப்படுத்துகை 13. அடிமைத் தனம் 14. அடிமையாள் 15. பெண்டாகச் சிறைப் பிடிக்கப்பட்ட இளம் பெண் 16. சிறைகொள்ளத்தக்கவள் 17. அணை 18. நீர்நிலை 19. கரை 20. கோட்டைமதில் 21. மதிற்சுற்று 22. இறகு 23. ஒலியெழாமல் தடைப்படுத்தி வைக்கும் யாழ்நரம்புக் குற்றம் 24. பாத்தி
"வீங்குசிறை வியலருப்பம்" (புறநா.17:28)

**சிரைத்தல்** – 1. கழித்தல் (மயிர் சிரைத்தல்) 2. செதுக்கல்
"புற்சிரைத்தல்
செய்ய மாட்டீர்களோ" (ஈடு.3 9 6)

**சிறைத்தல்** – 1. சிறை செய்தல் 2. நீரைத் தடுத்தல் 3. சுழல விழித்தல் 4. நிறங்கெடுதல்.
"பொருமுரண் சீறச் சிறைந்து" (கலித்.91)

| | | |
|---|---|---|
| **சிலைத்தல்** | – | 1. ஒலித்தல் 2. சினங்கொள்ளுதல் 3. பின்னிடல் 4. முழங்குதல் 5. யாழொலித்தல் 6. கொட்டுதல் 7. முழக்கம் 8. பாடும்போது கலகலவென்றிலங்கும் ஒலி 9. வில் 10. சிலையோரை 11. சிலை 12. பத்தொன்பதாவது விண்மீனான குருகு. 13. வானவில் 14. ஒளி 15. வால் 16. கல் 17. மலை 18. அம்மி 19. கலுவம் 20. சிலைவாகை 21. மனோசிலை என்னும் செய் நஞ்சு 22. கருநிறம் 23. உஞ்சை மர வகையுளொன்று 24. நினைவுகூர்தற்கு ஒருவரைப் போல் செய்து வைத்த உருவம் 25. சினம் 26. புண்புரை 27. புண்ணின் உட்டுளை. "வலி துரந்து சிலைக்கும்....துடி" (புறநா.170) |
| **சிளைத்தல்** | – | சோர்தல் "அவனைப் போலே பிரிவுக்குச் சிளையாதபடி" (ஈடு.9 5:3) |
| **சீணம்** | – | 1. கடு 2. சோர்வு |
| **சீனம்** | – | 1. படிக்காரம் 2. நூல் 3. ஒரு நாடு. |
| **சீரி** | – | 1. சீரை 2. முக்காடு 3. சிறப்புறுதல் "சீரித்த வேலவன் யாரையென்று" (தணிகைப்பு.களவு.494) |
| **சீறி** | – | 1. ஒரு வினையெச்சம் 2. வெகுண்டு (சீறிப் பாய்ந்தது) |
| **சுண்ணம்** | – | 1. சுண்ணாம்பு 2. சுட்டசாந்து 3. சுண்ணப்பொடி 4. புழுதி 5. மலர் 6. பொடி 7. பூந்தாதுத்தூள் 8. மகரந்தத் தூள் 9. ஈரடி எண்சீரைப் பொருள் முறையின்றித் துணித்துச் செய்யுளியற்றும் முறை 10. சொல்வகை 11. பட்டு வகை 12. ஒன்பான் மணிகளும் |

பொன்னும் சந்தனமும் கருப்பூரம் முதலியனவும் புனுகிலும் பனிநீரிலும் நனைய வைத்திடித்தல்.
"பலதொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்" (மதுரைக்.399)

**சுன்னம்** – 1. சுழி 2. சுழியம் 3. சுண்ணாம்பு 4. மாழைகளைப் புடமிட்ட தமிழ் மருந்து 5. பாழ் 6. வெண்மையான மருந்துச் சரக்கு.

**சுணை** – 1. தினவு (அரிப்பு) 2. சுரணை 3. சுனை 4. அறிவு 5. இலைகாய் (இவற்றின் மேலுள்ள சுனை) 6. கூர்மை 7. மூங்கில் சுனை 8. தினவெடுத்தல் 9. அரிப்பெடுத்தல் 10. நமைச்சல் 11. அரித்தல் 12. அம்மை நோய் கண்ட காலத்தில் உடம்பில் உள்ளிடமாகத் தங்கி முட்குத்துப் போன்ற உணர்ச்சியுள்ள அம்மைக் கொப்புளம்.
"துகிலு மிழந்து சுணையு மழிந்து" (பட்டினத்.உடற்.கூற்று.249)

**சுனை** – 1. மலையூற்று நீர்நிலை 2. சுரசுரப்பு 3. நீரூற்று 4. கரு 5. குளம் 6. பசும்புல்தரை 7. நீரடுத்த இடம் 8. குழைதல் 9. வாடுதல் 10. தினவெடுத்தல். (நாலடி.313)
"சுனைத் தெழுதல் காமுறுவர்" (நாலடி.313).

**சுர** – 1. நீர் சுரப்பு 2. வெளியாக்கு 3. ஊறுதல் 4. உடலில் நீர் முதலியன பெருகி வீங்குதல் 5. நிறைதல் 6. பெருகுதல் 7. பால் முதலியன சுரத்தல் 8. இடைவிடாது சொரிதல் 9. மிக அதிகமாகக் கொடுத்தல்.
"நெடுந்தேர்களிறொடு சுரக்கம்..... முசுண்டை" (அகநா.249)

**சுற** – சுறாமீன் "சுறவழங்கு மிரும்பௌவத்து" (பொருந.203)

**சுரா** – கள்

**சுறா** – 1. சுறாமீன் 2. கடல்மீன்களில் பெருங்கேடு தரும் பேரின மீன் வகையான சுறாமீன் 3. சுறவவோரை 4. கோலாமீன் 5. நாய்மீன் 6. கொட்டை வாளை 7. உடம்பின் அழுக்கு 8. உடம்பிற் பூக்கும் உப்பு. "சுறாப் பிடித்திருக்கிறது" (உ.வ)

**சுருக்கு** – 1. சுருங்குதல் (சுருக்குப் போட்டுக் கொண்டான்) 2. ஆடை முதலியவற்றின் மடிப்பு 3. கண்ணி 4. கட்டு 5. குறைவு 6. குறைத்தல் 7. உள்ளிழுத்தல் 8. வலை 9. பை முதலியன சுருக்குதல் 10. குடை முதலியவற்றை யொடுக்குதல் 11. திரண்ட கருத்து வரைதல் 12. ஓலை முதலியன அணிதல் 13 முலாம் பூசுதல் 14. சுருங்கச் செய்தல் 15. வற்றச் செய்தல் 16. உருகிய மாழைக்கு மூலிகைச் சாற்றைவிடுதல் 17. சுருங்குகை 18. குழைச்சு 19. கட்டுதல் 20. சுருக்கம் 21. கஞ்சத்தன்மை 22. ஒன்றன் பிழிவு 23. விரைவு 24. அக்கறை 25. சுரணை 26. ஒட்டணி 27. அடி 28. சவுக்கடி 29. பூமாலை வகை 30. வில்வம் 31. வேள்வியில் உதவும் நெய்த்துடுப்பு 32.கயிற்றின் ஒரு முனையை மடக்கிக் கயிற்றிலேயே நகரும் வகையில் போடப்படும் முடிச்சு 33. ஒன்றைப் பிணைப்பதற்காகக் கயிற்றில் போடப்படும் முடிச்சு. "கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்" (கலித்.106)

| | | |
|---|---|---|
| **சுறுக்கு** | – | 1. காரம் 2. கூர்மை 3. சினம் (சுறுக்கெனச் சினம் வெளிப்பட்டது) 4. விரைவு 5. சுறுசுறுப்பு 6. கடுமை விலையேற்றம் 8. சந்தை விலை. "புதுநெல் இப்போது சுறுக்காயிருக்கிறது" (உ.வ) |
| **சுருதி** | – | 1. இசை 2. ஒலி 3. காது 4. எழுதாமறை. |
| **சுறுதி** | – | 1. சுறுசுறுப்பு 2. தீவிரம் 3. மிகுவிரைவு. "சுறுதியா யோடு" (வின்) |
| **சுல்லம்** | – | 1. கயிறு 2. தாமரை 3. பொன் 4. செம்பு "சுல்வத்தா லமைத்த நெடுங்களத்தின்" (சேதுபு தனும்கோ.1) |
| **சுள்ளம்** | – | சினம் "சுள்ளென்று சினம் வந்தது." |
| **சுல்லி** | – | 1. அடுப்பு 2. மடைப்பள்ளி "சுல்லி யுரனுலக்கை" (சைவச.பொது.266) |
| **சுள்ளி** | – | 1. சிறுவிறகு (சுள்ளி ஒடித்தான்) 2. மாமரம் 3. சிறுமை 4. எலும்பு 5. அனிச்சப்பூடு 6. ஆச்சாமரம் 7. ஞாழல் 8. கதம்பம் 9. மல்லிகை 10. மயிற் கொன்றை 11. மாந்துளிர் 12. நாகதாளி 13. குங்குமம் 14. நாகமல்லி 15. கருப்பூர வகை 16. மரக்கிளை 17. உலர்ந்த சிறுகொம்பு. "எரிபுரை யுறழுஞ் சுள்ளி" (குறிஞ்சிப்.66) |
| **சுல்லு** | – | வெள்ளி. |
| **சுள்ளு** | – | 1. கருவாடு 2. கள் 3. வெப்பம் 4. உறைப்பு. |
| **சுழி** | – | 1. இலக்கணச்சுழி 2. நெளி (முகத்தைச் சுழித்தான் எழுத்தைச் சுழிதத்தான்) 3. கடல் 4. மயிர்ச்சுழி (தலையில் சுழியுள்ளவன்) 5. நீர்ச்சுழி 6. சுழிபோல் வளைவாதல் 7. கவடமாதல் 8. மனங்கலங்குதல் 9. இறத்தல் 10. சுழற்காற்றுப் போல் சுழலுதல் 11. நீர்ச் சுழியுண்டாதல் 12. உடற்சுழியுண்டாதல் 13. கண்குழிதல் |

14. வேறிடத்தின்றி யொருங்கே திரண்டு நிற்றல் 15. அடிபடாமல் ஒதுங்குதல் 16. தவறிப் போதல் 17. சுழி உண்டாக்குதல் 18. அலையச் செய்தல் 19. தேர்வில் தேறாதபடி செய்தல் 20. செலவினங்களைக் குறைத்தல் 21. மறைத்தல் 22. சினத்தல் 23. எழுத்துச்சுழி 24. சுழியம் 25. மயிர்ச்சுழி ஆகூழ் அல்லது போகூழைக் குறிப்பதாகக் கருதப்படும் உடற்சுழி 26. ஊழ்வினை 27. உச்சி 28. உச்சிப்பூ 29. சூழ்ச்சியறிவு 30. கடல் மழையின் ஒரு விரல அளவு.

**சுளி** – 1. புளியாரைக்கீரை. 2. சினத்தல் 3. காலால் துகைத்தல் 4. வெறுத்தல் 5. வருந்துதல். “கழை காண்டலுஞ் சுளியுங் களியானை” (திருக்கோ.111)

**சுழிகை** – 1. கள் 2. சுருள் 3. சுழித்தல் (கோடு சுழித்தல்)

**சுளிகை** – 1. முருங்கை 2. பாலை 3. அணிவகை. “சுளிகையும் சட்டிகையும்” (ஆதியுலா.68)

**சுழிதல்** – 1. சுழிபோல் வளைதல் 2. மனங்கலங்குதல் 3. சுழிபோல் வளைவாதல் 4. வெறுப்பு முதலியவற்றின் குறியாக முகஞ் சுருங்குதல் 5. கவடமாதல் 6. இறத்தல் 7. சுழற்காற்றுப் போல் சுழலுதல் 8. நீர்ச் சுழியுண்டாதல் 9. உடற்சுழியுண்டாதல் 10. கண்குழிதல் 11. வேறிடத்தின்றி யொருங்கே திரண்டுநிற்றல் 12. அடிபடாமல் ஒதுங்குதல் 13. தவறிப் போதல் 14. சுழி உண்டாகுதல் 15. அலையச் செய்தல் 16. தேர்வில் தேறாதபடி செய்தல் 17. செலவினங்களைக் குறைத்தல் 18. மறைத்தல் 19. சினத்தல்

"தழலுமிழ்ந்தும் மதம் பொழித்தும் முகஞ்சுழிய" (தேவா.1148 7)

**சுளிதல்** – சினத்தல் "கொலை வேழம்... நிழலையுந்தான் சுளிக்கும்" (பு.வெ.12 வென்றிப்.8)

**சுழித்தல்** – 1. முகஞ்சுருங்குதல் 2. நீர்சுழலுதல் 3. எழுத்துச் சுழித்தல் 4. ஒதுங்குதல் 5. சுருக்குதல். "சுழித்து நீர் வருதுறை யாற்றை" (கம்பரா.குகப்.63)

**சுளித்தல்** – 1. சினத்தல் 2. முறித்தல் "சுளிமுகக் களிறனான்" (சீவக.298)

**சூரல்** – 1. சுழித்தல் 2. பிரம்பு 3. சுழித்தடிக்கை 4. செடிவகை 5. நரியிலந்தை "சூரலங் கடுவளி யெடுப்ப" (அகநா.1)

**சூறல்** – தோண்டுதல்.

**சூரன்** – 1. வீரன் 2. கதிரவன் 3. நெருப்பு 4. நாய் 5. அரிமா. 6. மறவன் 7. சூரபதுமன் 8. ஞாயிறு 9. ஒருவகைச் செய்ந்நஞ்சு 10. மீன் 11. மூஞ்சூறு 12. எரியுப்பு 13. சேவல் 14. மாமரம். 15. கரடி. "துறப்பில ரறமெனல் சூரராவதே" (கம்பரா.தைலமாட்டு.30)

**சூறன்** – ஒருவகை வீட்டெலி.

**சூரை** – 1. ஒரு செடி 2. ஒரு பயிர் 3. கள் 4. ஒருவகை மீன் 5. தூதுவளை 6. இலந்தை 7. கருஞ்சூரை 8. மணி பிடியாப்பயிர் 9. பயிரில் விழும் நோய்வகை. "கான்றையுஞ் சூரையுங் கள்ளியும் அடா'ந்து" (மணிமே.6:81)

**சூறை** – 1. கொள்ளை (சூறையடித்தனர் சூறைக்காற்று) 2. பயிர் நோய் 3. நெற்றி 4. தூதுவளை 5. கழுத்தின் பின்குழி 6. சுழல் காற்று 7. பனிச்சை என்ற மயிர்முடிவகை 8. சல்லடம் 9. இரண்டடி நீளமும் கருநீல நிறமுள்ள கடல் மீன் 10. சூறைக்குருவி. “வட்டச் சூறையர்” (சீவக.632).

**சூல்** – 1. கருப்பம் (சூல் கொண்டுள்ளார்) 2. மும்முளை கருவி (சூலாயுதம்) 3. மேகத்தில் நீர்நிரப்பி இருத்தல் (சூல் கொண்ட மேகம்) 4. முட்டை 5. சூலம் 6. யானை, குதிரை முதலியவற்றிற்கு இடும் அழகணிப் போர்வை. “இளம்பிடி ஒரு சூல் பத்தீ னம்மோ” (புறநா.130:2)

**சூழ்** – 1. சுற்று (சூழ்ந்து கொண்டனர்) 2. கலந்துகொள் 3. ஆராய்ச்சி 4. கலந்தாய்வு 5. தலைக்கணி மாலை 6. கடலை. “சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது” (குறள். 671)

**சூள்** – 1. உறுதி 2. ஆணை (சூள் உரைத்தான்) 3. தீவட்டி 4. பூட்கை (சபதம்) 5. சாவிப்பு (சாபம்) 6. தீப்பந்தம். “சூள் பேணான் பொய்த்தான் மலை” (கலித்.41)

**சூலல்** – 1. தோண்டுதல் 2. குடைதல் 3. கருக்கொள்ளுதல்.

**சூழல்** – 1. ஆராய்தல் 2. சூழ்ச்சி 3. கருத்து 4. எண்ணம் 5. சூழ்ந்து கொள்ளுதல் 6. சூழ்கை

7. மணற்குன்று 8. கூட்டம்
9. கலந்தாய்வு 10. தோற்றரவு 11. தந்திரம்.
"அருள்வெஃகி யாற்றின்கண் நின்றான்
பொருள்வெஃகிப் பொல்லாத சூழக் கெடும்"
(குறள். 176)

**சூலி** – 1. கருவுற்றவள் 2. காளி 3. சூலமேந்திய சிவன் 4. சூலப்படை கொண்ட காளி
"சூலி நீலி மாலவற் கிளங்கிளை" (சிலப்.12:68)

**சூழி** – 1. உச்சி 2. கடல் 3. யானைமுகப்படாம் 4. உச்சி கொண்டை 5. சுனை 6. சேணம் 7. நீர்நிலை 8. மேலிடம். "அலங்கு கதிர் சுமந்த கலங்கற் சூழி" (புறநா.375)

**சூளி** – 1. உச்சிக்கொண்டை 2. உச்சிக் கொண்டையில் அணியும் அணிகலன்.

**சூலிகை** – இடிதாங்கி "மாட நெடுமுகட்டின் சூலிகை" (திவ்.பெரியதி.8. :3)

**சூழிகை** – கள்.

**சூளிகை** – 1. நீர்க்கரை 2. நிலாமுற்றம் 3. தலையணிவகை 4. செய்குன்று 5. யானைச் செவியடி 6. மொட்டை மாடி
"மாடமலி சூள்கையிலேறி மடவார்கள்
பாடலொலி செய்ய" (தேவா.324.2)

**சூலுதல்** – 1. தோண்டுதல் 2. கருவுறுதல் 3. அறுத்தல்.

**சூழுதல்** – 1. கூடுதல் 2. சுற்றிக்கொள்ளுதல் 3. கலந்து ஆய்தல்.

**சூளுதல்** – குடைகை

**சூலை** – 1. வயிற்றுவலி 2. மாதவிடாய் நோய் (சூலை நோய்) 3. காலந்தவறி நிகழும் மாதவிடாயால் ஏற்படும் மூட்டுவலி நோய் 4. முடக்குவலி நோய்
"அன்னவனை யினிச்சூலை

| | | |
|---|---|---|
| | | மடுத்தாள்வன்" (பெரியபு.பு.திருதாவுக்.48) |
| **தூளை** | – | 1. சுடு தூளை 2. இரும்பு ஆயுதங்களை உருவாக்கப் பயன்படுத்தும் அடுப்பு 3. ஈமவிறகு 4. கணிகை. "அகலிரு விசும்பி னூன்றுஞ் தூளை" (புறநா.228:3) |
| **தூல்தல்** | – | 1. கருக்கொள்ளுதல் 2. தோண்டுதல் 3. அறுத்தல். |
| **தூழ்தல்** | – | 1. சுற்றியிருத்தல் 2. ஆராய்தல் 3. கருதுதல் 4. சுற்றிவருதல். 5. சுற்றுதல் 6. சுற்றி மொய்த்தல் 7. தீயசூழ்ச்சிக்குத் திட்டமிடல் 8. தேர்ந்தெடுத்தல் 9. அறிதல் 10. பண்ணுதல் 11. எழுதுதல் 12. தாக்குதல் "அறைகடல் தூழ்வையம்" (நாலடி.230) |
| **தூள்தல்** | – | 1. ஆணையிடுதல் 2. வஞ்சினங் கூறுதல். "ஐய தூரி னடிதொடு குன்றொடு" (பரிபா.8:70) |
| **செண்ணம்** | – | 1. நுண்தொழில் 2. அழகிய வடிவு. "செண்ண வஞ்சிலம் பேறுதுக ளவித்து" (சீவக.1333) |
| **சென்னம்** | – | 1. நீர்ப்பறவை வகை 2. வடிவு 3. பொன். "சென்னங் காகங் குணாலஞ் சிலம்புமே" (கம்பரா.ஊர்தே.151) |
| **செரி** | – | செரிப்பு (உணவு செரித்தது). |
| **செறி** | – | 1. நெருக்கம் 2. திண்ணிதாதல் 3. இறுகலாய் இருத்தல் 4. அடங்குதல் 5. எல்லை கடவாதிருத்தல் 6. மறைதல் 7. மிகுதல் 8. கலத்தல் 9. திரளுதல் 10. பொருந்துதல் 11. புணர்தல். "செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர் தீர்க்கும் மருந்தொன்று உடைத்து" (குறள். 1275) |

**செரித்தல்** – 1. அழித்தல் (உண்டது செரித்தது) 2. ஏற்றுக் கொள்ளல் 3. நிலையாகப் பெறுதல் 4. குடலினால் உறிஞ்சப்படுவதற்கு ஏந்தாக உணவில் உள்ள சத்துகள் வயிற்றுத் தசைகளினால் அரைக்கப்பட்டுக் கூழாதல் (சீரணமாதல்) "புவனஞ் செரிக்கு மென்றே" (அஷ்டப் திருவரங்.மா.98)

**செறித்தல்** – 1. நெருக்குதல் 2. திணித்தல் 3. சேர்த்தல் 4. இறுக்குதல் 5. அடைத்தல் 6. அடக்குதல் 7. அடைவித்தல் 8. திரட்டுதல் 9. நெரித்தல் 10. கொல்லுதல் 11. மூழ்குதல் 12. மூடுதல். "தாழ்செறி கடுங்காப்பில்" (கலித்.48)

**செரிப்பு** – சீரணிப்பு.

**செறிப்பு** – 1. நெருக்கம் 2. உப்பங்கழி 3. உழுநிலம். 4. செறிவு 5. அடக்கம் 6. இற்செறிவு. "செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்" (குறள்.123)

**செரு** – 1. சண்டை 2. போர் (செருக்களம்) 3. ஊடல் 4. அழித்தல். "மதந்தபக் கடந்து செருமேம் பட்ட" (பரிபா.1:27)

**செறு** – 1. சிறுவயல் 2. குளம். 3. பாத்தி 4. சினம் 5. பகை 6. வயல். "செதுமொழி சீத்த செவி செறுவாக" (கலித்.68)

**செருக்குதல்** – 1. திமிர்காட்டுதல் 2. களித்தல் 3. இறுமாப்புக் (அகந்தை) கொள்ளுதல் 4. பெருமித முறுதல். 5. மதர்த்தல் 6. மயங்குதல் 7. மிகுத்தல் 8. நன்கு நுகர்தல் 9. பிறரை மதிக்காத போக்கு 10. மகிழ்ச்சி 11. ஆண்மை 12. மயக்கம் 13. செல்வம் 14. பாக்கு

முதலியன தொண்டையில் அடைத்துக் கொள்ளுதல்.
"செங்குட்டுவன் சினஞ் செருக்கி" (சிலப்.29 வரை).

**செறுக்குதல்** – 1. சினத்தல் 2. செறுத்தல் 3. நெருக்குதல்.

**செருத்தல்** – 1. எருமை, பசு (ஆ) இவற்றின் மடி 2. அழித்தல்.
"செருத்தது....தக்களை வேள்வி" (தேவா.139.4)

**செறுத்தல்** – 1. அடக்குதல் 2. சினத்தல் 3. தடுத்தல் 4. தூர்த்தல் 5. வெறுத்தல் 6. வருத்துதல் 7. வெல்லுதல் 8. அழித்தல் 9. வேறுபடுதல் 10. செறிதல் 11. உள்ளடங்கச் செய்தல் 12. கொல்லுதல் 13. நெருக்குதல்
"பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்" (பரிபா.9:73)

**செருப்பு** – 1. மிதியடி 2. ஒரு மலையின் பெயர் 3. காலில் பொருத்தி நிற்கும்படி சிறுபட்டை வைத்துக் தைத்த அடிப்பகுதியுடைய காலணி 4. பூழிநாட்டிலுள்ளதோர் மலை.
"மணியழுத்திச் செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயாம்" (நாலடி.347)

**செறுப்பு** – 1. கொலை 2. கட்டுப்பாடு 3. செற்றல் 4. நெருக்கம்.
"அச்செறுப்புத்தீர... போந்த இடமிறே இது" (ஈடு 5.8:2)

**சேணம்** – 1. கல்லணை 2. மெத்தை 3. துறக்கம் 4. குதிரை போன்ற விலங்குகளின் முதுகில் அமர்ந்து செல்வதற்குப் போடப்படுகிற தோல் அல்லது துணியினால் ஆன இருக்கை.
"சேணத் தருவது நீறு" (தேவா.857 4)

**சேனம்** – பருந்து.
**சேணை** – 1. அறிவு 2. சேணவி 3. தூளி 4. ஏணை 5. பிறந்த குழந்தையின் வாயில் தாய்மாமன் தன் விரலால் கொடுக்கும் ஒருவகை மருந்துப் பொருள் மற்றும் இனிப்பு கலந்த நீர்மப்பொருள்.
**சேனை** – 1. படை (காவற்படை) 2. கூட்டம் 3. நண்பர் 4. உறவினர் 5. யானை, தேர், பரி, காலாள் என்ற நாற்படை 6. படைக்கலம் உற்றார் உறவினர் 7. தெரு 8. கடைத்தெரு 9. சந்தை 10. பன்மை 11. சேணம் 12. கரணை வகை 13. சேனைப்பால்.
"குரிசிலை விடாத சேனையே"
(கம்பரா.தைலமா.8)
**சேரல்** – 1. இணைத்தல் 2. சேர்தல் 3. ஒன்றுகூடல்.
"குடக்கோச் சேரல் இளங்கோ வடிகட்கு"
(சிலப்.2)
**சேறல்** – 1. செல்லுதல் 2. நடத்தல்.
"தென்றிசை சேறலாற்றா"
(கம்பரா.சம்புமாலி.19)
**சேரி** – 1. மக்கள் சேர்ந்து வாழும் ஊர் 2. தெரு 3. முல்லை நிலத்தூர் 4. பழந் தமிழர் வாழும் பகுதி.
**சேறி** – செல்கிறாய்.
"உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு" (குறள்.1249)
சேரு –சேர் என்பதன் திரிபு (விரைவில் சேருவான்)
**சேறு** – 1. சகதி (சேற்றில் நடவு நட்டனர்) 2. கள் 3. தேன் 4. இனிப்பு 5. அளவு 6. திருவிழா 7. நீருடன் கலந்து குழைத்த மண்

8. குழம்பு 9. பனம் பழம் தேங்காய் முதலியவற்றின் செறிந்த உள்ளீடு 10. விளாம்பழம் 11. சீழ் 12. சாரம் 13. இனிமை 14. பாகு 15. அரத்தின நீரோட்டம்.
"கதிர்மூக் காரல் கீழ்ச்சேற் றொளிப்ப" (புறநா.249)

**சொரி** – 1. பொழி 2. உதிர் (மலர் சொரிதல்) 3. கொட்டு "பரியினும் ஆகாவாம் பாலல்ல வுய்த்துச் சொரியினும் போகா தம" (குறள்.376)

**சொறி** – 1. ஒரு நோய் (சொறி சிரங்கு) 2. தினவு 3. முட் போன்ற சிரங்கு புண் மர முதலியவற்றிற் காணும் சுரசுரப்பு 4. காஞ்சொறி 5. மீன் வகை 6. அரிப்புடன் கூடிய தோல் நோய் 7. உயிரிகளின் கரடுமுரடான புறத்தோல். "சொறி கொண்டெழுந் தினவு மாற" (சேதுபு.முத்தீர்.5)

**சொரிதல்** - 1. பொழிதல் (மழைசொரிந்தது.பூச்சொரிதல்) 2. மிகுதல் 3. உதிர்தல் 4. மழை முதலியன தொகுதியாகவிழுதல் 5. கொட்டுதல் 6. மிகக்கொடுத்தல் 7. சுழலுதல். "அலர்மழைசொரிந்த" (கம்பரா.வேள்வி.56)

**சொறிதல்** – 1. அரித்தல் 2. பிறாண்டுதல் (அரிப்பெடுக்கச் சொறிந்தான்) 3. தினவு நீங்க நகத்தால் வறண்டுதல் 4. கெஞ்சிக் கேட்டல் 5. தினவுண்டாதல். "ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும்" (சிறுபாண்..80)

**சொல்லல்** – 1. சொல்லுதல் 2. பேசுதல் "சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது" (குறள்.647)

**சொள்ளல்** – 1. குறைவு 2. வித்தை 3. சொத்தை

4. பயனற்றவன் 5. குற்றம் 6. கறை
7. இழுக்கு.

**சோணம்** – 1. சிவப்பு 2. கடல் 3. தீ 4. பொன் 5. செங்கரும்பு.
"சிலம்பு குழுங்காற் சோணமாந் தெரிவையை" (கம்பரா.அகலிகை.1)

**சோனம்** – முகில். "சோனந்தரு குழலார்" (பதினொ.ஆளு.மும்.12)

**சோணி** – 1. குருதி 2. பலகறை.

**சோனி** – 1. வளார்ச்சியற்றது 2. மெலிந்தவன்-ள்.
"ஏன் இப்படிச் சோனியாக இருக்கிறாய்" (உ.வ)

**சோணை** – 1. மண்வெட்டியில் காம்பு சொருகும் அடிப்பகுதி 2. மதில் 3. காதினடித்தண்டு 4. புகையிலை முதலியவற்றின் காம்பினடி 5. சிவப்பு 6. பாடலிபுத்திரத்துக் கருகில் கஙகையொடு கலக்கும் ஒரு ஆறு.
7. முக்கோல் எனப்படும் இருபத்திரண்டாவது நாண்மீன் (திருவோணம்) 8. அணிகலன் அணிவதற்காகக் காது மற்றும் மூக்கில் இட்ட துளை தூர்ந்து போகாமலிருக்க இடப்படும் குச்சி.
"சோணையழகியார்" (திவ். பெரியதி.10.8:1)

**சோனை** – 1. சொரிதல் 2. விடாமழை 3. கைப்பிடிச்சுவர் 4. கார்முகில் 5. வானினின்று நீரூற்றுச் சொரிவது போன்ற விடாப் பெரும் பெயல் 6. மலையடிவார விடா மழைச்சாரல் 7. முக்கோல் (திருவோணம்) விண்மீன் 8. கைப்பிடிச் சுவர்
"சோனை வார் குழலினார்" (கம்பரா.நீர்விளை.14)

| | | |
|---|---|---|
| **சோழம்** | – | சோழநாடு "ஈரிருபதாஞ் சோழம்" (அட்டப்.நூண்முகம் 6) |
| **சோளம்** | – | 1. ஒருவகைக் கூலம் (சோளக்கதிர்) 2. உருண்டையான தனித்தனி மணிகளைக் கொண்ட ஒருவகைத் தவசம். |
| **சோலி** | – | 1. செயல் (உன் சோலியைப்பார்) 2. தொந்தரவு 3. தோணியில் ஒதுக்கிடம் அல்லது கழிப்பறை. "தெரியுமோ ராட்சத சோலி" (இராமநா.ஆரணி.8) |
| **சோழி** | – | 1. பலகறை 2. பாம்புப்பிடாரன். |
| **சோளி** | – | 1. ஒருவகைக் கூடை 2. இரப்போர் பை 3. கிளிஞ்சல் வகை. |
| **ஞாண்** | – | 1. வில்லின் நாண் 2. கயிறு (அரைஞாண் கொடி) "சாப நோன் ஞாண்" (புறநா.14:9) |
| **ஞான்** | – | நான் (ஞானில்லை) |
| **ஞால்** | – | 1. தொங்கு 2. உலகம் 3. பொழுது சாய்தல் "பட்ட மாரி ஞான்ற ஞாயிற்று" (புறநா.82:2) |
| **ஞாழ்** | – | 1. யாழ் 2. இசை "தன் ஞாழ் நவிற்றிய தாமரை யங்கை" (பெருங்.மகத.6:17) |
| **ஞாலம்** | – | 1. நிலம் 2. உயர்ந்தோர் 3. ஊமத்தை 4. உலகம். "ஞாலம் கருதினும் கைகூடும் காலங் கருதி இடத்தாற் செயின்" (குறள்.484) |
| **ஞாளம்** | – | 1. படர்க்கொடி 2. தண்டு 3. பொன்னாக்கத்தில் மாழை உருக்குவதற்கான குகை. "அம்புய ஞாளநூலாலே" (ஞானவா.உற்ப.30) |
| **ஞாழி** | – | 1. வள்ளைக்கொடி 2. வங்காரக்கொடி. |
| **ஞாளி** | – | 1. கள் 2. நாய் 3. கோழி. "வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்" |

(அகநா.122)

**ஞெலிதல்** – 1. கடைதல் 2. குடைதல் 3. தீக்கடைதல். 4. உரசுதல் 5. கடையப்பட்ட மூங்கில். “ஞெலித் விளக்கத்து “ (புறநா.247.2).

**ஞெளிதல்** – 1. நெளிதல் 2. பிணங்குதல்.

**தக்கணை** – பெரியோர்க்குக் கொடுக்கும் பொருள்.

**தக்கனை** – 1. தக்கபடி 2. நடுவுநிலையாக.

**தகண்** - 1. தடை 2. தழும்பு 3. பழக்கம் 4. கிழங்கு விழுந்த பனங்கொட்டையின் உள்ளீடு.

**தகன்** - 1. வேர்விட்ட பனங்கொட்டை 2. நெருப்பு 3. கீரைவகை 4. தக்கன் “அத் தகன் அருள் செய்கலன் “ (நீல.2.68).

**தண்** - 1. குளிர்ச்சி 2. அருள். “தண்ணம் துறைவன் கொடுமை “ (குறு.35.4).

**தன்** - தான் எனும் சொல் வேற்றுமை உருபை ஏற்குமிடத்துப் பெறும் திரிபு. “ஊரான் மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே ” (குறு.8.2-6).

**தண்ணம்** - 1. ஒரு கட்பறை 2. மழுவாயுதம் 3. குளிர்ச்சி 4. காடு. “தண்ணம் துறைவன் “ (குறு.9.9-7).

**தன்னம்** - 1. பசுவின் கன்று 2. மான்கன்று 3. மரக்கன்று 4. சிறுமை “நன்னகர் தன்மை தன்னம் செப்புவாம் “ (சீவக.1.112).

**தண்ணவன்** - குளிர்ந்த சந்திரன். “தண்ணவன் கலையோன் மதியே களங்கள் குபேரன் சந்திரன் திங்கள் சோமன்தன் பெயரே “ (நிக.வி.2.133)

**தன்னவன்** - தன்னைச் சேர்ந்தவன். “தன்னவாய் உலகெலாம் தானே

ஆகி" (நாவு.6.44.8).

**தண்மை** - 1. குளிச்சி 2. இன்பம் 3. மென்மை 4. தாழ்வு 5. அறிவின்மை.
"தண்மை வெம்மை" (தொல்.11.17).

**தன்மை** - 1. குணம் 2. இயல்பு 3. நிலைமை 4. முறை 5. பெருமை 6. ஆற்றல் 7. நன்மை 8. மெய்ம்மை தன்னைக் குறிக்கும் இடம்.
"அவன் தன்மை ஏழைத் தன்மையோ இல்லை தோழி" (கலி.5521-2).

**தணி** - 1. மலை 2. குளிர்ச்சி 3. அடக்கு.
"தணி புனலாகுந் தரைமிகு போர்க்கண்" (பரிபா.6.29).

**தனி** - 1. ஒற்றை 2. தனிமை 3. ஒப்பின்மை 4. உரிமை.
"தனிக்கலக் கம்பளச்செட்டி" (மணிமே.29.6).

**தணிக்கை** - அறத்திற்கு எதிரான பகுதியைத் திரைப்படம் போன்றவற்றிலிருந்து நீக்குதல்.
"இந்தத் திரைப்படத்துக்குத் தணிக்கைச் சான்றிதழ் இதுவரை கிடைக்கவில்லை"

**தனிக்கை** - கணக்குத் தணிக்கை.

**தணிகை** - திருத்தணிகை.
"திருத்தணிகையென்னும் முருகன் திருக்கோவிலுள்ள இடம்"

**தனிகை** - இளம்பெண் கற்புடையவள்.

**தணித்தல்** - 1. ஆற்றுவித்தல் 2. குறைத்தல் 3. வற்றுதல் 4. அவிதல்.
"நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென" (மலைபடு.303).

**தனித்தல்** - 1. ஒன்றியாகுதல் 2. நிகரற்றிருத்தல் 3. உதவியற்றிருத்தல்.

| | | |
|---|---|---|
| **தணிப்பு** | - | 1. ஆற்றி 2. குறைப்பு "தணிப்பு அருங் கடுந்திறள்" (புற.198.13). |
| **தனிப்பு** | - | தனிமை. "எம் தனிமை காண்டலின்" (அக.228.13). |
| **தரி** | - | அணி (ஏவல் வினை) |
| **தறி** | - | 1. வெட்டுகை 2. நடுத்தறி "தறிசெறி களிறு மஞ்சேன்" (திருவாச.35.8) 3. தூண் "கனகனெற்றுந் தறியிடை" (கந்தபு.வள்ளி.15) 4. முலைக்கோல் "கொடுந்தறிச் சிலம்பி வானூல் வலந்தன தூங்க" (நெடுநல்.58) 5. நெய்தற்குரிய தறி 6. பறையடிக்கும் குறுந்தடி "கொட்டுப்பறை கொட்டுத்தறி" (சீவகர.கணபதிவந்.20) 7. கோடரிவகை. |
| **தரித்தல்** | - | அணிதல். |
| **தறித்தல்** | - | 1. வெட்டுதல் 2. துணித்தல் "கையைத் தறித்தான்" (திருவாச.14.7). |
| **தரை** | - | நிலத்தை "தரையில் பணிந்தனர்" (கோயிற்பு.பதஞ்ச.43). |
| **தறை** | - | ஆணியின் தலை. |
| **தருதல்** | - | 1. கொடுத்தல் 2. அழைத்தல் 3. கூறுதல் "வளமை காமம் தருதலும் இன்" (நற்.126.9-10). |
| **தறுதல்** | - | 1. இறுக்க உடுத்தல் 2. இறுக்கமாகக் கட்டுதல். "பேதித் தறுதற் கச்சை புனைந்து" (தி.தி.30.9). |
| **தருவாய்** | - | கொடுப்பாய். |
| **தறுவாய்** | - | 1. உற்ற சமயம் (தக்க சமயம்) 2. பருவம் "அத் தருவாயில் ஆருயிர் வழங்கிய" (பெருங்.114.55). |
| **தல்லி** | - | தாய். |

| | | |
|---|---|---|
| **தள்ளி** | - | 1. ஒரு வினையெச்சம் 2. நெருங்கி (தள்ளி வா) 3. விட்டுவிடு (தள்ளி விடு) 4. விலகித் தள்ளி நின்றான். |
| **தல்லு** | - | புணர்ச்சி. |
| **தள்ளு** | - | 1. விலகு 2. இடங்கொடு 3. விட்டுத் தள்ளு 4. உந்தித்தள்ளு 5. கணக்கிற்கழிவு 6. நீக்குகை. |
| **தல்லுதல்** | - | இடித்து நசுக்குதல் "இஞ்சியைத் தல்லிப் பிழிந்து சாறெடுத் தான்" (நாஞ்). |
| **தள்ளுதல்** | - | 1. கழித்தல் (தேவையற்றதைத் தள்ளுதல் வேண்டும்) 2. வழக்கைத் தள்ளுபடி செய்தல் 3. வரி முதலியன தள்ளுபடி செய்தல் 4. காலங்கழித்தல். |
| **தல்லை** | - | 1. இளம்பெண் 2. தெய்வம் 3. தெப்பம். |
| **தள்ளை** | - | தாய். |
| **தலம்** | - | 1. வணங்கும் தூய இடம் 2. இடம் (தரை) "பின்னரே தலத்தின் வீறும்" (பிரமோத்.பஞ்சா.42). |
| **தளம்** | - | 1. இடம் (மாடி) 2. மேடை. |
| **தலை** | - | 1. முதன்மை உறுப்பு "தலையே தவமுயன்று வாழ்தல்" (நாலடி.365). |
| **தழை** | - | 1. தளழகை 2. தளிர் 3. இலை 4. இலைக்கொத்து |
| **தளை** | - | 1. கட்டு 2. கயிறு "அற்புத்தளையு மவிழ்ந்தன" (நாலடி.12) |
| **தலைதல்** | - | 1. மேன்மையாதல் 2. கூடுதல் 3. மழைபெய்தல் 4. மிகக் கொடுத்தல் 5. பரத்தல். |

**தளைதல்** - 1. தளை 2. கட்டுதல் 3. பிணித்தல் 4. தடுத்தல் "மோகமெனும் பாசத்தான் மிகத்தளைந்து" (குற்றா.தல.தருமசாமி.74).

**தாணி** - 1. தான்றிமரம் (பதார்த்த.978) 2.பூண்டுவகை (பார்த்த.279).

**தானி** - 1. தானத்திலுள்ளது 2. இடத்திலிருப்பது 3. இருப்பிடம் 4. மூன்று சக்கரங்களை உடைய பயணிகள் ஊர்தி.

**தாணு** - 1. சிவன் 2. குற்றி 3. தூண் 4. நிலைபேறு 5. மலை 6.பற்றுக்கோடு 7. யாழ்த்திறவை 8. குறுந்தறி "தாணுவோ டூர்வவெல்லாம்" (கம்பரா.மதி.117).

**தானு** - 1. காற்று 2. கொடையாளன் 3. வெற்றியாளன்.

**தாணையம்** - 1. கோட்டைக்குள்ளிருக்கும் படை 2. பாளையம் 3. மந்தை.

**தானையம்** - 1. கால்நடைகளின் மந்தை (ஆட்டுத் தானையம்).

**தாரு** - 1. மரம் 2. மரக்கொம்பு "செத்த தாருச் செய்தது போலும்" (பெருங்.92.228).

**தாறு** - 1. வாழைக்குலை 2. பூங்கொத்து "தாறு படு வீரம் ஊதி" (நற்.277.7).

**தால்** - 1. நாக்கு 2. தாலாட்டு "செங்கீரைத்தால் சப்பாணி" (இலக்.வி.806).

**தாழ்** - 1. தாழக்கோல் 2. மதகுப் பலகை 3. விரல் அணிவகை.

**தாள்** - 1. கால் 2. மர முதலியவற்றின் அடிப்பகுதி 3. ஒற்றைத்தாள்.

**தாலம்** - 1. தாம்பளம் 2. உலகம் 3. உள்ளங்கை 4. நா "தாலம் பதினாலும்" (அரிச்.4.நாட்.9).

**தாழம்** - 1. ஓசை முதலியவற்றின் தாழ்வு 2. அமைதி 3. காலத் தாழ்வு.

**தாளம்** - 1. பனை (பாட்டுத்தாளம்) 2. கைத்தாளக் கருவி
"அடிகளார் தங்கையிற் றாள மிகுந்தவாறு" (திருவாச.17.8).

**தாலி** - 1. மங்கலநாண் "தாலி....நல்லார் கழுத்தணிந்து" (சீவக.2697).
தாழி – 1. வாயகன்ற சட்டி 2. கடல் 3. சாடி 4. இறந்தோரை அடக்கஞ் செய்யும் பாண்டம்.

**தாளி** - 1. பனைமரம் 2. மருந்துச் செடிவகை.

**தாலு** - 1. நா 2. அண்ணம்.

**தாளு** - பொறு (ஏவல் வினை).

**திண்** - 1. திண்மை 2. வலிமை (திண்ணிய உள்ளம்).

**தின்** - 1. சாப்பிடு 2. உண்.

**திண்மை** - 1. வலிமை 2. உறுதி 3. கலங்கா நிலைமை 4. பருமன் 5. உண்மை "கற்பு என்னும் திண்மை உண்டாகப்பெறின்" (குறள்.54).

**தின்மை** - 1. தீமை 2. சாவு 3. தீயசெயல்.
"தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே" (கம்பரா.தனியன்).

**திணம்** - 1. வலிமை
"திணமணி மாடத் திருவிடைக் கழியில்" (திவிசை.சே.திருவிடை.5).

**தினம்** - 1. உடு (நட்சத்திரம்) 2. நாள் 3. பகல்.

**திணை** - 1. பகுதி 2. பிரிவு 3. ஒழுக்கம்.

**தினை** - 1. சிறுதானிய வகை 2. சிறுமை 3. ஒரு புல்வகை.
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரி வார். (குறள்.104).

**திரம்** - 1. உரம் 2. உறுதி.

"அத்திரத்தே அணியா நஞ்சு உண்டார் போலும்" (நாவு.6.28.8).

**திறம்** - 1. ஆற்றல் 2. மிகுதி 3. உடம்பு.
"உயிர்த்திறம் பெயர்ப்பான்போல்" (கலித்.100).

**திரல்** – காட்டாமணக்கு.

**திறல்** - 1. துணிவு 2. வெற்றி 3. வன்மை.
"வெந்திறல் கடுவளி" (குறு.39.1).

**திரை** - 1. துணித்திரை 2. அலை 3. குலை.
"தெண்கடலழுவத்துத் திரை நீக்கா வெழுதரூஉம்" (கலித்.121).

**திறை** - 1. வரி 2. கப்பம்.
"திறை சுமந்து நிற்குந் தெவ்வர் போல"(சிலப்.25.50).

**துண்** - துண்ணென்னும் அச்சக் குறிப்பு.

**துன்** - 1. நெருக்கம் 2. வளை 3. சேர்தல்.

**துணி** - 1. துண்டம் "வெளிப்புற்றுப் பனந் துணியின்" (புறநா.35) 2. ஆடை
"துணிச்சிதர்" (மணி.11.11.109) 3. ஒளி 4. மரவுரி
5. உறுதி 6. தொங்கல் 7. தேரில் கட்டிய துணி.

**துனி** – 1. வெறுப்பு
"இனியறிந்தேனது துனியாகுதலே" (கலித்.14)
2. புலவி நீட்டம்.
"துனியும் புலவியு மில்லாயினர்" (குறள்.1306)
3. துன்பம் "துனியுறு கிளவியும்" (தொல்.பொருள்.303).

**துணித்தல்** - 1. வெட்டுதல்
"இலங்கைக் கோன் சிரமுங் கரமுங் துணித்து" (திவ்.பெரியதி.8.6.5).

**துனித்தல்** - 1. வெறுத்தல் 2. சினத்தல் 3. வெறுப்புச்சொல்
4. நெடிது புலத்தல்.

**துணை** - 1. அளவு 2. இணை 3. ஒப்பு 4. ஆதரவு

5. உதவி 6. உதவுவோன் 7. காப்பு. 8. கூட்டு
9. இரண்டு 10. இரட்டை 11. கணவன்
12. மனைவி 13. உடன் பிறப்பு.

**துனை** - விரையென்னும் ஏவல்.

**துரத்தல்** - 1. விரட்டிச் செல்லுதல் 2. போக்குதல்
3. எரித்தல்.
"அங்கியு மவனெதிர் துரந்தான்"
(கந்தபு.மார்க்கண்.135).

**துறத்தல்** - 1. நீக்குதல் 2. கைவிடுதல் 3. துறவுபூணுதல்
"நல்லறிவாளர் குழவியரிடத்தே துறந்தார்"
(கந்தபு.மார்க்கண்.135).

**துரப்பு** - 1. துரத்தல் 2. விரட்டுதல் 3. முடக்குதல்
"துரப்பமை யாணி" (பொருந.10).

**துறப்பு** - 1. துறவு 2. விடுதல் 3. திறப்பு 4. திறவுகோல்
5. பிரிவு
"துறப்பஞ்சிக் கலுழ்பவள்" (கலித்.10).

**துரவு** - 1. கிணறு 2. நீர்நிலை 3. பெருங்கிணறு
(தோட்டந்துரவு)
"துரவு கிணறு இழித்தப் பெறுவதாகவம்"
(தெ.இ.கல்.தொ.1.2509).

**துறவு** - விடுதல் (இல்லத் துறவு) மந்தனம்
"உறவு கொண்டவரவர்
துறவு கண்டேன்" (சீதக்.41).

**துரு** - 1. களிம்பு 2. செம்மறியாடு 3. குற்றம்.
"ஆடுதலைத் துருவின்" (நற்.169).

**துறு** - நெருக்கம்.

**துருவல்** - 1. ஆராய்தல் 2. கடைதல் 3. தேடுதல்
4. துளைத்தல் 5. தேங்காய்த் துருவல்
"நாளி கோப்படிச் செழுந்துருவல்"
(திருவாத.4.திருப்பெருந்.51).

**துறுவல்** - 1. நெருங்குதல் 2. நுகர்ச்சி 3. உண்ணல்
"துறுவற்கெலலை யாதெனில்" (ஞானா.34.6).

**துரை** - 1. தலைவன் 2. விரைவு.
"பிறவித் துரைதுடைத்து" (சடகோபரந்.47).

**துறை** - 1. பிரிவு 2. பகுதி 3. கடல்
"துறைமுற்றிய துலங்கிருக்கை"
(மதுரைக்.85).

**துல்லம்** - பேரொலி.

**துள்ளம்** - 1. குதிப்பு 2. துளி 3. துள்ளுகை 4. கூத்து
"பேயும் பேயுந்துள்ள லுறுமென" (கலி.94).

**துலக்கம்** - 1. விளக்கம் 2. ஒளி 3. பளபளப்பு 4. தெளிவு
5. மெருகு.
"துலக்க மெய்தினன் றோமில் களிப்பினே"
(கம்பரா.இராவணன் களங்.1).

**துளக்கம்** - 1. அசைவு 2. மனக்கலக்கம் 3. அச்சம்
4. குறைகை 5. ஒளி.

**துலக்கு** - மினுக்கு

**துளக்கு** - 1. அசைவு 2. வருத்தம்.
"துளக்கிலா விளக்கை" (தேவா.13.6).
"மாமயிலடி நாடகற் றுளக்குறுத் தனவே"
(சீவக.1560).

**துலக்குதல்** – 1.மெருகிடுதல் 2. ஒளிரச் செய்தல் 3. தூய்மை
செய்தல் 4. வெளிப்படையாக்குதல்
5. தீட்டுதல்.

**துளக்குதல்** – 1. அசைத்தல் 2. விளங்குதல் 3. விளக்குதல்.

**துலங்குதல்** - 1. விளங்குதல் 2. தெளிவாதல் 3. கலங்குதல்
4. தொங்கியசைதல்.
"துலங்குமான் மேலூர்தி" (கலித்.13).

**துளங்குதல்** - 1. அசைதல் 2. தளர்தல் 3. ஒளிசெய்தல்
4. நிலை கலங்குதல்.
"துளங்கிமில் நல்லேற்றினம்" (கலித்.106).

**துலம்** - 1. கனம் 2. நிறுவை 3. நீர்முள்ளிச்செடி
4. பருத்தி.

**துளம்** - 1. மாதுளை 2. மயில் இறகின் அடி.

"துளம்படு முறுவல் தோழியர்க் கருளாள்"
(திவ்.பெரியதி.2.7.2).

**துலி** - பெண்ணாமை.

**துளி** - 1. சிதர் (நீர்த்துளி) 2. ஆலி 3. உறை 4. மழை.
"துளியனுழந்த தோய்வருஞ் சிமைதொறும்"
(பரிபா.7.13).

**துலை** - நிறைகோல்.
"ஞான மாத்துலை" (ஞானா.31.11).

**துளை** - 1. துவாரம் 2. புழை 3. வாயில்.
"ஆடமைக் குயின்ற வவிர்துளை"
(அகநா.82).

**துலைதல்** - தொலைதல்.

**துளைதல்** - 1. நீர் விளையாடுதல் 2. துய்த்தல் 3. கலத்தல்.
"ஆனந்த வெள்ளத் துறையிலே படிந்து
மூழ்கித் துளைந்து"
(தாயு.வர்பனேன்).

**தூணம்** - 1. தூண் 2. பற்றுக்கோடு 3. பகை
4. அம்புக்கோடு 5. தீயநாள்வகை 6. பாத்திரம்
தூக்க இடும் கயிற்றுச் சுருக்கு.
"பசும்பொற் றூணத்து" (மணிமே.1.48).

**தூனம்** - 1. வருத்தம் 2. அசைவு.

**தூரல்** - 1. துன்பம் 2. நிறைகை.

**தூறல்** - 1. சிறுமழை 2. மழைத்துளி.

**தூரு** - அடைப்பு.

**தூறு** - 1. சிறுசெடி 2. புதர் குவியல் 3. குறுங்காடு
4. சுடுகாடு.
"எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்"
(குறள்.435).

**தூருதல்** - மலங்கழித்தல்.

**தூறுதல்** - 1. சிதறுதல் (மழைத்தூறல்) 2. கிளைத்தல்
3. பற்றல்.

**தூலம்** - 1. வானம் 2. இலவமரம் 3. நெற்போரடிக்கும் கோல் 4. பஞ்சு 5. கோரை.

**தூளம்** - தூள்.

**தூலி** - 1. எழுதுகோல் 2. மெத்தை 3. மருத்துவர் 4. விளக்குத்திரி.

**தூளி** - 1. புழுதி 2. பூந்தாது.
"ஏத்துவார்களுழக்கிய பாததூளி படுதாலிவ் வுலகம் காக்கியஞ்" (திவ் பெரியாழ்.4.4.6).

**தூலிதம்** - 1. பொடிக்கப்பட்டது 2. திருநீறு.

**தூளிதம்** - 1. தூள் 2. திருநீறு.

**தெண்** - தெளிவு.

**தென்** - 1. தெற்கு 2. அழகு
"மதனன்றன் தென்னீருருவமழிய"
(தேவா.1155.4) 3. கற்பு 4. இசை
5. இசைப்பாட்டு 6. தென்னை
7. வலப்பக்கம்
"இடக்கால் தென்றொடைமே லொன்றச் செறி" (சைவச.பொது.273).

**தெண்ணர்** - அறிவில்லாதவர்.

**தென்னர்** - 1. தெற்கு
"அதற்குத் தென்னர்....மன்னு மம்பல மொன்றுண்டு" (கோயிற்பு.பதஞ்.71).
2. தென்னாட்டவர் "தென்னர்பிரான் கழறிற் றறிவான்" (பதினொ.திருத்தொண்.44).

**தெரி** - 1. தெரிந்துகொள் 2. தெரிந்தெடுத்தல்
"புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே"
(கலித்.7).

**தெறி** - 1. சிதறு (பொறி தெரிந்தது) 2. குறும்புப் பேச்சு
"எப்போதும் அவன் தெறி பேசுகிறான்"
(நாஞ்.).

**தெரித்தல்** - 1. வெளிப்படுத்தல் 2. சொல்லுதல்

| | | |
|---|---|---|
| | | "தெய்வ மாகவி மாட்சி தெரிக்கவே" (கம்பரா.சிறப்.6.). |
| **தெறித்தல்** | - | சிதறுதல் "கண்பனி நெகிழ்நூன் முத்தின் முகிழ்முலைத் தெறிப்ப" (அகநா.289). |
| **தெரிப்பு** | - | 1. ஆராய்கை 2. சீட்டு 3. அறிவிப்பு 4. பிரிப்பு. |
| **தெறிப்பு** | - | 1. முறிவு 2. கடைப்பூட்டு 3. தெறித்துப்போதல் 4. அதிர்வெடி. |
| **தெரு** | - | 1. வீதி 2. வழி "வாரல் வாழிய ரையவெந் தெருவே" (குறுந்.139). |
| **தெறு** | - | துன்பம் "தெறுவர வீங்கினம் வருபவோ" (குறுந்.336). |
| **தெருவு** | - | வீதி "தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை" (திருவாச.5.31). |
| **தெறுவு** | – | சுடுகை. |
| **தெல்** | - | நெடும்பாத்தி. |
| **தெள்** | - | 1. தெளிவு 2. தெள்ளுப்பூச்சி. |
| **தேர** | - | ஆராய. |
| **தேற** | - | வெற்றி பெற. |
| **தேரல்** | - | 1. தேறுகை 2. ஆராய்தல். |
| **தேறல்** | - | 1. கள் 2. தேன் 3. தெளிவு 4. சாறு "தேக்கட் டேறல்" (புறநா.115). "மலர்த்தேற லூறலின்" (தேவா.94.3). |
| **தேரார்** | - | 1. கல்லார் 2. அறிவிலி. |
| **தேறார்** | - | 1. பகைவர் 2. அறியாதார். |
| **தேரி** | - | 1. மணற்குன்று 2. மணற்றரை. |
| **தேறி** | - | தெளிவுபெற்று. |
| **தேரு** | - | தேர். |
| **தேறு** | - | 1. வெற்றிபெறு 2. தெளிவு பெறு 3. உறுதி. "மடிந்த தேறு பொடிந்தவேல்" (கலிங்.65). |

| | | |
|---|---|---|
| **தேருதல்** | - | ஆராய்தல். |
| **தேறுதல்** | - | 1. துணிதல் 2. நம்புதல் 3. கூடுதல்.<br>“தேறுவ தரிது” (கம்ப ரா.மாயாசீதை.89).<br>“தேறினும் தேறாவிடினும் அழிவின்<br>கட்டேறான் பகாஅன் விடல்” (குறள்.876). |
| **தொல்லை** | - | 1. துன்பம் 2. தொந்தரவு 3. பழைமை.<br>“தொல்லைக்க ணின்றார் தொடர்பு”<br>(குறள்.806). |
| **தொள்ளை** | - | 1. துளை (தொள்ளைக்காது) 2. குற்றம்<br>3. மரக்கலம்.<br>“தொள்ளைப் புலாற்பை“ (திருப்பு.289).<br>“தொள்ளை யுணர்வின் னவர்கள்<br>சொல்லின்” (சீவக.496). |
| **தொலி** | - | 1. உமி 2. தோல். |
| **தொளி** | - | சேறு “உழா நுண்டொளி” (சிலப்.10.120). |
| **தொலை** | - | 1. தொலைவு 2. எல்லை 3. அழிவு. |
| **தொளை** | - | 1. உள்துளை 2. மூங்கில் 3. ஓட்டை 4. கண்<br>5. பெண்<br>“தொளை கொடாழ் தடக்கை”<br>(கம்பரா.சித்திர.29). |
| **தொல்** | - | 1. பழைமை 2. இயற்கை<br>“தொல்லெழில்” (கலித்.17.5.) |
| **தொள்** | - | குறைவு. |
| **தோல்** | - | 1. மேல்தோல் (ஆட்டுத்தோல், பழத்தோல்,<br>விதைத்தோல்) 2. அழகு 3. புகழ் 4. உடம்பு<br>5. மூங்கில் “தோற்பையு ணின்று”<br>(நாலடி.26). |
| **தோள்** | - | 1. தோள்பட்டை 2. கை<br>“தோளுற்றோர் தெய்வந்<br>துணையாய்” (சீவக.10). |
| **தோலி** | - | 1. ஒரு பிசின் 2. மீன்வகை 3. படித்தோல். |
| **தோழி** | - | 1. பாங்கி 2. செவிலித்தாயின் மகள் |

| | | |
|---|---|---|
| | | 3. மனைவி 4. பணிப்பெண் 5. அரக்கு 6. கற்பூரவல்லி. |
| **தோளி** | - | 1. அரக்கு 2. நன்னீர் மீன்வகை 3. நீலச்செடி. |
| **நசணை** | – | தொல்லை பிடித்தவன். |
| **நசனை** | – | 1. மாணிக்கத்துள் உண்டாகும் வெண்மைநீர். 2. மாணிக்கக் குற்றத்துள் ஒன்று. |
| **நடுவண்** | – | இடையில் "நடுவ ணைந்திணை நடுவண தொழிய" (தொல்.பொருள்.948) |
| **நடுவன்** | – | 1. நீதியரசர் 2. நடுவர் 3. நமன் 4. நடுநிலையர். 5. கூற்றுவன் (இயமன்) "நடுவன் மேல்வர" (பெருங்.உஞ்சைக்.53 70) |
| **நண்ணி** | – | 1. நன்றி 2. கடப்பாடு. |
| **நன்னி** | – | 1. சிறியது 2. மிகச் சிறியது. "நன்னிக் குரங்கும் கொசுகும் பகையோ நமக்கென்றானே" (இராமநா.உயுத்.1) |
| **நண்ணுதல்** | – | 1. கிட்டுதல் 2. பொருந்துதல் 3. செய்தல் 4. இருத்தல் "நம்பனையுந் தேவனென்று நண்ணுமது" (திருவாச.12:17) "நண்ணுமின்க ணல்லறமே" (சிலப்.16 ஈற்று வெண்பா) |
| **நன்னுதல்** | – | 1. நறுக்குதல் 2. பல்லால் கடித்தல் 3. அழகிய நெற்றியை உடைய பெண். "நன்னுதல் கணவ" (பதிற்றுப்.42 7) |
| **நண்பகல்** | - | 1.நடுப்பகல் 2. உருமம் "நண்பகல் வேனிலொடு" (தொல்.பொருள்9) |
| **நன்பகல்** | - | 1.உச்சிக்காலம் 2. அடியொத்தகாலம் 3. நன்றாகிய பகல். |
| **நண்பு** | - | 1. அன்பு 2. உறவு 3. நட்பு 4. நல்லுறவு "எம்மானே நண்பே யருளாய்" (திருவாச.44 :3) |

**நன்பு** - 1. நன்மை 2. செவ்வையாய் 3. சிறப்பு
4. மேன்மை 5. மேம்பாடு
"நன்புளோர் வியந்தாரில்லை"
(திருவாலவா 16 12)
"நன்புருகி ஞானச் சுடர்விளக்
கேற்றினேன்" (திவ்.இயற்.2 :1)

**நண்மை** - அண்மை
"நட்பெதிர்ந் தோர்க்கே யங்கே நண்மையன்"
(புறநா.380 11)

**நன்மை** - 1. நலம் 2. பயன் 3. உதவி 4. சிறப்பு
5. நன்னெறி 6. நற்குணம் 7. ஆக்கம்
8. நற்செயல் 9. நல்வினை 10. வாழ்த்துமொழி
11. மிகுதி. 12. மேம்பாடு 13. புதுமை 14. அழகு
15. நல்லருள் 16. நன்மையாதல்
17. நலமளித்தல் 18. நன்மை பயத்தல்
"நன்மையுந் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்" (குறள் :511)

**நணந்தம்** - சணல்

**நனந்தம்** - புன்கு (மலை)

**நணி** - அணிமையான இடம்
"திரைபொரு முந்நீர்க் கரைநணிச்
செலினம்" (புறநா.154)

**நனி** - 1. மிகுதியாய் 2. அதிகமாய் 3. பெருமை
"வந்துநனி வருந்தினை
வாழியென் நெஞ்சே" (அகநா.19)

**நரலை** - 1. கடல் 2. ஒலி 3. மதில் உறுப்புகளுள் ஒன்று
"நரலையுட் பனிபுக் காடார் மடந்தைய
ரென்ப" (திருவாலவா. 9.4)
"நரலைப்பெரு வேலையெல்லாம்"
(கம்பரா.வரைக்காட்சி.71)

**நறளை** - 1. ஒருவகைப் பூண்டு 2. மரவகை

**நரா** - கன்றுகை

| | | |
|---|---|---|
| | | "பழம் நராப்பிடித்துப் போயிற்று" |
| **நறா** | - | 1. கள் 2. தேறல் 3. தேன் 4. மணம்<br>"அடுநறாக் காமம் கண்டார்" (குறள் 1090) |
| **நருக்கு** | - | 1. நொருக்கு 2. குட்டுகை 3. நொருக்கல்<br>4. துண்டாக்குதல்<br>"நகத்தினாலுயர் நகங்களை நருக்குமா<br>போல" (பாரத.நிலை.17)<br>"ஈயத்தை நருக்கி வெள்ளியதாக<br>வுருக்குவோம்" (அட்டப். திருவரங்கக்.42) |
| **நறுக்கு** | - | 1. வெட்டு (காயை நறுக்கு) 2. ஊதுகுழல்<br>3. நாக்கு 4. துண்டு 5. ஓலைச்சீட்டு<br>"கைக்கத்திரிகையிட்டு நறுக்கின<br>தலையாட்டத்தினை யுடைய பரிகள்"<br>(பு.வெ.3 10 உரை) |
| **நரை** | - | 1. வெண்மை 2. வெண்மயிர்<br>3. நாரைப்பறவை 4. எருது<br>5. வெள்ளைக்குதிரை 6. மூப்பு<br>"நரைவரு மென்றெண்ணி<br>நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார்"<br>(நாலடி 11.) |
| **நறை** | - | 1. கள் 2. குற்றம் 3. தேன் 4. நறும்புகை<br>5. மணம் 6. பச்சிலைக் கொடி<br>"வெண்ணிற நறை" (கம்பரா. உண்டாட்டு.1)<br>"நறையொடு துகளெழ" (கலித்.101) |
| **நல்** | - | 1. நல்ல 2. நன்மை 3. வறுமை 4. நல்குரவு<br>"நல்குரவு என்னும் இடும்பையுள் பலகுறைத்<br>துன்பங்கள் சென்று படும்" (குறள் :1045) |
| **நள்** | - | 1. நடு (நள்ளிரவு, நண்பகல்) 2. மிகுதி 3. இரவு<br>"நள்ளிராவும் நண்பகலும்"<br>(திவ்.திருவாய்.4:7:2) |
| **நல்லார்** | - | 1. அறிஞர் 2. பெண் 3. நல்லவர்<br>"பல்லார் பகைகொளலிற் |

| | | |
|---|---|---|
| | | பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல்" (குறள்:450) |
| **நள்ளார்** | – | பகைவர் "நள்ளார் பெரும்படை" (கம்பரா. அதிகாயன்.219) |
| **நல்லிரவு** | – | நல்ல இரவு |
| **நள்ளிரவு** | – | 1. நடுநிசி 2. நடுஇரவு 3. 15 நாழிகை. |
| **நலம்** | - | 1. நன்மை 2. உயர்வு 3. அழகு 4. அன்பு 5. விருப்பம் 6. நல்வாழ்வு 7. ஒழுக்கம் 8. உதவி 9. இன்பம் 10. புகழ். "நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு" (குறள்:960) "நன்னல மவற்கேவைத்த நங்கையே" (சீவக.1336) |
| **நளம்** | - | 1. அகலம் 2. ஒருநூல் 3. தாமரை. |
| **நலி** | - | 1. தேய்தல் 2. நலிவடைதல். |
| **நளி** | - | 1. தமிழ் 11-ஆம் திங்கள் 2. செறிவு 3. பெருமை 4. அகலம் 5. கூட்டம் 6. செருக்கு 7. தன்மை 8. உறைகுளிர்ச்சி "நளியென் கிளவி செறிவுமாகும்" (தொல்.சொல்.323) "நளியும் பெருமை" (தொல்.சொல்.320) |
| **நலிதல்** | - | 1. மெலிதல் 2. வருந்துதல் 3. சரிதல் 4. அழிதல் 5. நல்ல நிலைமை வீழ்ச்சி அடைந்து தாழ்வடைதல். "நண்ணா வசுரர் நலியவே" (திவ்.திருவாய்.10:7:4) |
| **நளிதல்** | - | 1. செறிதல் 2. பரத்தல் 3. ஒத்தல் "நளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்" (மலைபடு.197) |

"நளிந்த கடலுட் டிமிறிரை போல்"
(களவழி.18)

**நலிவு** - 1. மெலிவு 2. கேடு 3. வருத்தம் 4. அழிவு
"நோற்று நலிவிலா வுலகமெய்தல்"
(சீவக 2727)

**நளிவு** - செறிவு
"வளியா வறியாவுயிர் காவல் கொண்டு
நளிவாய்" (கலித்.103)

**நாண்** - 1. வில்லின் நாண் 2. வெட்கம் 3. கயிறு
4. அரைஞாண் 5. கூச்சம் 6. தாலி
(திருமாங்கல்யம்) கோத்த சரடு
"வஞ்சிலை வல்விற் புரிநாண் புடையின்"
(கலித்.15 21)
"சூழ்கழி மருங்கின் நாண் இசை கொள்"
(ஐந்.111)

**நான்** - 1. தன்மை ஒருமை 2. யான்
"ஊனில் ஆவி உயிர்க்கும்
பொழுதெல்லாம் நான் நிலாவியிருப்பன்
என் நாதனை" (அப்பர்.தேவாரம்)

**நாணம்** - 1. வெட்கம் 2. அறிவு 3. பயபக்தி 4. மானம்
5. தணிகை 6. கூச்சம் 7. மகளிரின் குணம்
நான்கனுள் ஒன்று
"நனிநாண மீதூரா" (சீவக.736)

**நானம்** - 1. மணப்பண்டம் 2. கத்தூரி 3. கத்தூரி
விலங்கு (மான்) 4. புனுகு 5. பூசுவன
6. மணப்பொடி 7. கவரிமான் 8. ஞானம்
9. சுத்தி செய்ய நீரில் மூழ்குதல்
"தேமார்ந்த நானந் தோய்த்து" (சீவக.1652)

**நாரா** - 1. அன்பிலா 2. இரக்கமிலா.

**நாறா** - மணமிலா.

**நாரி** - 1. வில்லின் நாண் 2. பன்னாடை 3. யாழ்நரம்பு
4. தேன் 5. பெண் 6. பார்வதி 7. சேனை

8. மணம்
"நாரியின் பேரொலி"
(கந்தபு.தாரக.142:)

**நாறி** - 1. கற்றாழைச் செடி 2. நன்னாரிக் கொடி.

**நால்** - 1. நான்கு 2. நாலடியார் (நூல்).
"நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்"
(தொல்.பொருள்.75)
"பழகுதமிழ்ச்சொல்லருமை
நாலிரண்டில்" (பெருந்தொ.)

**நாள்** - 1. தினம் 2. காலம் 3. விண்மீன் 4. வாணாள்
5. நல்லநாள் 6. காலை 7. புதுமை 8. நிலவு
நிலை 9. அன்றலர்ந்த பூ
"பண்டை நாள்" (கம்பரா.நட்பு 43)

**நாலம்** - 1. தாமரைப்பூ முதலியவற்றின் காம்பு
2. தொங்கும் கோளம் அல்லது உலகம்.

**நாழம்** - 1. ஏச்சு 2. திட்டு 3. இழிவுரை.

**நாளம்** - 1. உட்டுளை (குருதி நாளம்) 2. நாள்
3. பூந்தண்டு 4. வட்டம் 5. நரம்பு.
"கழுநீர் நாளத்தாளினா லொருத்தி
யுண்டாள்" (இராமநா. உண்டாட்.19)

**நாலி** – 1. கந்தைத்துணி 2. கிழங்கு 3. முத்து 4. தகரை.

**நாழி** - 1. ஓர் அளவு (உண்பது நாழி) 2. காற்படி நேரம்
(நாழிகையானது).
"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்"
(நல்வழி. 28) 3. அளக்கும் ஒருபடி 4. நாழிகை
5. நூல்நாழி 6. உட்டுளைப்பொருள்
7. அம்பறாத்துணி.
"நாழி நவைதீ ருலகெல்லாம்"
(கம்பரா. சரபங்க.29)

**நாளி** - 1. கள் 2. நாய் 3. கால அளவு 4. மூங்கில்
5. பனை முதலியவற்றிலுள்ள வெளிவயிரம்
6. கற்றாழை 7. புளிச்சைக் கீரை.

**நாலிகை** - 1. தொளை 2. அடுப்புச்சந்து 3. மூங்கில்.
**நாழிகை** - 1. நேரம் (நாழிகை யாகிவிட்டது) 2. அறுபது வினாடி கொண்ட கால அளவு 3. தெய்வப்படிமை இருக்கும் சிற்றறை அல்லது திருவுண்ணாழிகை.
"உண்ணாழிகையா ருமையாளோடு" (தேவா.5:3)
**நாளிகை** - 1. நாளம் 2. பிற்கொழுங்கல் (உத்திரட்டாதி)
**நாலிதழ்** - நான்கு இதழ்கள் கொண்ட மலர்.
**நாளிதழ்** - செய்தித்தாள்.
**நிரத்தல்** - 1. கலத்தல் 2. நிறைதல் 3. வரிசையாய் நிற்றல்.
**நிறத்தல்** - 1. வண்ணம்பெறுதல் 2. அழகுபெறுதல் 3. பயனழிதல்(காயின் தன்மை மாறி கனியாதல் நிறம்மாறல்).
**நிரப்பு** - 1. வறுமை 2. நிறைவு 3. சமதளம் 4. குறைவு 5. சோம்பு 6. நிறைகுடத் தினடியில் இடப்படும் நெல் 7. நிறை நாழி.
"நெருநலுங் கொன்றது போலும் நிரப்பு" (குறள் 1048)
**நிறப்பு** - 1. முழுமையாக்கு 2. குறைவிலாமல் முழுமையாக்கு 3. நிறைவு செய்.
**நிருத்தம்** - 1. நடனம் 2. பற்றின்மை.
**நிறுத்தம்** - 1. நிறுத்துகை 2. செங்குத்தாய் நிறுத்துதல்.
**நிருவுதல்** - 1. உருவாக்குதல் 2. ஏற்படுத்துதல்.
**நிறுவுதல்** - 1. ஏற்படுத்துதல் 2. நிலை நிறுத்தல் (கட்டடம் வரவேற்பு வளைவு முதலியவற்றை ஓரிடத்தில் உருவாக்குதல்) 3. எழுப்புதல் (எந்திரம், பொறி, சிலை முதலியவற்றைக் கொண்டுவந்து ஓரிடத்தில் பொருத்துதல்) 4. அமைத்தல்.
**நிரை** - 1. வரிசை 2. ஒழுங்கு 3. கொடிப்படை

4. படைவகுப்பு 5. பசு 6. ஒரு விளையாட்டு வகை 7. நிரையசை 8. எடை 9. வலிமை 10. கோபுரம். "உயர்ந்தோங்கிய நிரைப் புதவின்" (மதுரைக்.65)

**நிறை** - 1. எடை 2. கற்புவழிநிற்றல் 3. வரையறை 4. வலிமை 5. அறிவு 6. திண்மை 7. மனவடக்கம் 8. கற்பு.
"நிறையெனு மங்கும்" (கம்பரா.மதிலை.40)
"நிறையிற் காத்துப் பிறர்பிறர் காணாது" (மணிமே.18:100)

**நீண்மை** - பழைமை.
"நீண்மைக்க ணின்று வந்த நீதியெலாந் தருவல்" (சீவக.1119)

**நீன்மை** - நீலநிறம்.

**நீரு** - தண்ணீர்.

**நீறு** - 1. சாம்பல் 2. திருநீறு 3. புழுதி 4. நீற்றின சுண்ணாம்பு.
"மந்திரமாவது நீறு" (தேவா.857)
"அருவி துகளவிப்ப நீறடங்கு தெருவின்" (சிறுபாண்.201)

**நீல்** - 1. நீலம் 2. கறுப்பு 3. கருங்குவளை.
"நீலிதழுண் கண்ணாய்" (கலித்.33:28)

**நீள்** - 1. நீளம் 2. ஆழம் 3. ஒளி 4. ஒழுங்கு 5. நீண்டு செல்லல் 6. உயரம் 7. நெடுங்காலம் 8. தொடர்.
"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின் நீள்வினையால் நீளுங் குடி" (குறள் : 1022)

**நீலம்** - 1. நஞ்சு 2. கண்ணிலிடும் மை 3. வண்ணம் 4. நிறம் 5. மாணிக்க வகை 6. ஒன்பது மணியுளொன்று 7. கறுப்பு 8. இருள்

9. கருங்கு வளை 10. நீல ஆடை.
"பதுமமு நீலமும்" (சிலப்.14:186)

**நீளம்** - 1. அளவு 2. நீட்டல் 3. அளவு 4. நெடுமை 5. தொலைவு 6. தாழ்ச்சி 7. பறவைக் கூடு. "நீளம் பெறுங் கண்களே" (திருக்கோ.109) "கையானீளமாப் புடைப்ப" (சீவக.2248)

**நீலி** - 1. கருநிறம் 2. கொடியவள் 3. ஒருபெண்பேய் 4. கருநொச்சிச் செடி 5. சிவை. "மாறுகொடு பழையனூர் நீலிசெய்த வஞ்சனையால்" (சேக்கிழார்.4.15)

**நீழி** - மரமஞ்சள்

**நீளி** - 1. நெடியன் 2. நெடியது. "நிணம்பசைகொண்ட நீளி நெடும்பல்" (பெருங்.இலாவண.8.108)

**நீழல்** - 1. நிழல் 2. ஒலி 3. நோய் 4. காற்று 5. குளிர்தடம் 6. ஒளி ஒதுக்கம் 7. சாயல். "ஈசன் எந்தை இணையடி நீழலே" (திருஞான.தேவாரம்)

**நீளல்** - 1. நீண்டுசெல்லல் 2. மிகுதல் (கைநீளுதல்).

**நீழை** - 1. ஒளி 2. காற்று. "நீழை யாண்மலர்" (அரிசமய.குலசே.5)

**நீளை** - காற்று.

**நுண்** - 1. அணு 2. நுட்பமான 3. நுணுக்கமான 4. பருப்பொருளல்லாத. "நுண்பொருள் கொடுத்து நண்ணியராவர்" (பழ)

**நுன்** - 1. உனது 2. நினது 3. நீ என்பது வேற்றுமை உருபு ஏற்கும் போது பெறும் வடிவம்.

**நுண்பொருள்** - 1. நுண்ணிய பொருள் 2. நுட்பமான கருத்து. "நுண்பொருள் காண்பது அறிவு" (குறள்.424)

**நுன்பொருள்** - அணுகிய (அ) மீச்சிறிய பொருள்.

**நுணி** - 1. நுணுகி ஆராய்தல் 2. கூர்மையாக்குதல்.

**நுனி** - 1. நுண்மை 2. நுனை 3. நாக்கு 4. கத்தி முதலியவற்றின் முன்பகுதி 5. மேசை முதலியவற்றின் இருபக்கங்களும் இணையும் இடம் 6. முனை 7. உச்சி.
"நுனிக்கொம்ப ரேறினார்
அஃதிறந் தூக்கின் உயிர்க் கிறுதியாகி விடும்"
(குறள்.476)

**நுணித்தல்** - 1. கூர்மையாக்கல் 2. நுணிகி ஆராய்தல் 3. பொடியாக்குதல்
"தெய்வ நுணித்தறங் குணித்த மேலோர்"
(கம்பரா.மந்திரப்.8)

**நுனித்தல்** - 1. கூராக்குதல் 2. கூர்ந்து நோக்கல் 3. கருதுதல் 4. ஆராய்ந்து கூறுதல். "நாடகக் காப்பிய நன்னூ னுனிப் போர்" (மணி.19:80)

**நுணை** - கோட்சொல்.

**நுனை** - 1. முனை 2. நுனி 3. முடிவு.
"தானையுங் கடலென முழங்குங்
கூர்நுனை மேலும்" (புறநா.42)

**நுழை** - 1. புகுதல் 2. பலகணி 3. குகை 4. துளை 5. நுண்மை 6. செல்.
"கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான்
செவ்வி அறம்பார்க்கும்
ஆற்றின் நுழைந்து" (குறள்:130)
"பிணங்கரி னுழைதொறும்"
(மலைபடு.379.)

**நுளை** - 1. ஈனம் 2. குருடு (நொண்டி நுளை) 3. வலைகொண்டு மீன் பிடிக்கும் மீனவர்.
"நுளைமக ளரித்த பழம்படு தேறல்"
(சிறுபாண்.158)

**நெரி** - 1. நோய்வகை 2. நெரிவு 3. சேலையின் கொய்சகம் 4. கவுட்டியில் உண்டாகும் புடைப்பு 5. விரலிடுக்கில் தோன்றும் கட்டி போன்ற புடைப்பு.
"நெரிபுறத்தடற்று வாளும்" (சீவக.2517)

**நெறி** - 1. வழி 2. நூல் முறை 3. சமயம் 4. நல்லொழுக்கம் 5. குலம் 6. கோயில் 7. வீடுபேறு 8. மனநிலை 9. ஆணை 10. ஆளுகை 11. வரிசை 12. அறம் 13. முறைமை.
"நெறியைந்து மோங்க" (திருவாலவா.28:34)

**நெரித்தல்** - 1. நசுக்குதல் 2. கையால் கூலம் (தவச) முதலியவற்றை நிமிண்டுதல் 3. திறமையாய் நடத்துதல் 4. நெருங்குதல் 5. குவித்தல் 6. நொறுக்குதல் 7. தாக்குதல் 8. நிமிட்டல்.
"எரிப்பூம் பழன நெரித்து" (புறநா.249)

**நெறித்தல்** - 1. புருவம் நெறித்தல் 2. புறவிதழ் ஒடித்தல் 3. நிமிர்த்துதல் 4. கையாற் பிடித்து விடுதல்.
"மலர் வாங்கி நெறித்து" (கலித்.76)

**நெரிதல்** - 1. நெருங்குதல் 2. வளைதல் 3. நெருங்கியுரசி நொறுங்குதல் 4. நிலை கெடுதல்.
"நெரிமுகைக் காந்தள்" (பரிபா.14:13)

**நெறிதல்** - மயிர் சுழற்சியாதல்.
"நெறிந்தகருங் குழல்மடவாய்" (திவ்.பெரியாழ்.3.10:1)

**நொரு** - 1. பயிரினடியில் முளைப்பது 2. காய்ப்பு மாறினபின் அரும்பும் பிஞ்சு.

**நொறு** - தின்பண்டம்.

**நொருக்குதல்** - 1. பொடியாக்கல் 2. தூளாக்குதல்.

**நொறுக்குதல்** - 1. மிகுதியாய் உண்ணுதல் 2. நையப்புடைத்தல் 3. சிதறடித்தல் 4. காயம் பண்ணுதல் (அடித்து).

| | | |
|---|---|---|
| | | "வீரரை நொறுக்கி" (திருப்பு.574) |
| **நோலை** | - | 1. எள்ளுருண்டை 2. எட்கசிவு. "புழுக்கலு நோலையும்" (சிலப். 5:68 அரும்) "அணங்குடை நோலை" (பு.வெ.3:40) |
| **நோளை** | - | நோயுற்ற நிலை / பிணியுண்டநிலை. |
| **பக்கரை** | - | 1. அங்கவடி 2. சேணம் 3. துணிப்பை. "கலணை விசித்துப் பக்கரையிட்டுப் புரவி செலுத்தி" (திருப்பு.405) |
| **பக்கறை** | - | 1. துணியுறை 2. குழப்பம் 3. பல்லில் கறுப்புக்கறை ஏற்றுகை 4. பை. |
| **பண்** | - | 1. இசை 2. இசைப்பாட்டு 3. ஏழுசுரமுள்ள இசை 4. யாழ் முதலிய நரம்புக் கருவிகள் 5. பருவம் 6. குதிரைக்கலணை 7. அலங்காரம் 8. கூத்துவகை 9. ஓசை 10. தகுதி 11. அமைவு 12. மரக்கலத்தின் இடப்புறம் 13. வயல் 14. தொண்டு 15. நீர்நிலை 16. தோணியின் இடப்பக்கப் பாய்மரக் கயிறு 17. தேருக்குச் செய்யும் அணியழகு. "பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல்" (குறள்.573) |
| **பன்** | - | 1. நாணல் வகை 2. பருத்தி 3. அரிவாட்பல். |
| **பண்ணல்** | - | 1. யாழ் நரம்புகளைப் பண்ணுக்கேற்ப அமைத்தல். |
| **பன்னல்** | - | 1. பஞ்சு கொட்டுகை 2. சொல் 3. பருத்தி 4. சொல்லுகை 5. நெருக்கம் 6. ஆராய்கை. "பன்னல் சான்ற வாயிலொடு" (தொல்.பொ.146) |
| **பண்ணி** | - | ஒரு வினையெச்சம் – செய்து சமைத்து (சமையல் பண்ணினான் – தொழில் பண்ணினான்). |
| **பன்னி** | - | 1. இல்லாள் 2. சணல் 3. பனிநீர். |

| | | |
|---|---|---|
| | | "பன்னி யகலிகை" (கம்பரா. அகலி.72) |
| **பண்ணிசை** | - | 1. இன்னிசை 2. பாட்டின் இசை. |
| **பன்னிசை** | - | பல்இசைக்கூட்டு. |
| **பண்ணுதல்** | - | 1. செய்தல் 2. அணியமாதல் 3. அணியம் செய்தல் 4. இசைக் கருவியில் வாசித்தல் 5. சுருதியமைத்தல் 6. அலங்கரித்தல் 7. சமைத்தல். "மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்" (மலைபடு.534) |
| **பன்னுதல்** | - | 1. பஞ்சு நூற்றல் 2. ஆராய்ந்து செய்தல் 3. புகழ்தல் 4. பேசுதல் 5. படித்தல் 6. விட்டு விட்டுப் பேசுதல் (அ) படித்தல் 7. பாடுதல் 8. நரம்புக்கருவி வாசித்தல் 9. பின்னுதல் 10. நெருங்குதல். "நீயனைய பொன்னே பன்னுக்கோலம்" (திருக்கோ.122) |
| **பண்ணை** | - | 1. மருதநிலம் 2. வயல் 3. தோட்டம் 4. நீர்நிலை 5. ஓடை 6. சொந்த வேளாண்மை 7. வாரக்குடி 8. பனந்தோப்புக்குடிசை 9. மக்கள் கூட்டம் 10. மகளிர் கூட்டம் 11. தொகுதி 12. விளையாட்டு 13. விலங்கு துயிலிடம் 14. ஒரு கீரைவகை 15. தடவை 16. இசை. "வளநீர்ப் பண்ணையும் வாரியும்" (சிலப்.11 13) |
| **பன்னை** | - | 1. தறி 2. ஒருசெடிவகை 3. கடல்மீன்வகை. |
| **பணம்** | - | 1. பருமை 2. ஒரு நாணயம் 3. பொற்காசு 4. வணிகச்சரக்கு 5. பொருள் 6. விலை 7. யானை நடத்தும் ஆயுதம் 8. பந்தயம் 9. பாம்பின் படம் 10. பாம்பு 11. இடங்கை வலங்கைப் பிரிவினர் 12. வேலை 13. வீடு 14. பணயப் பொருள் |

| | | |
|---|---|---|
| | | "கரும்பணக் கச்சைக் கடவுள்" (திருவாச.3.96) |
| **பனம்** | - | பருமை. |
| **பணர்** | - | 1. மரக்கிளை 2. அடர்ந்தகொம்பு. |
| **பனர்** | - | கிளை. |
| **பணவம்** | - | தம்பட்டம். "பணவந்தூரி" (கம்பரா.பிரமாத்திர.5) |
| **பனவம்** | – | சிறு தம்பட்டம். |
| **பணவன்** | - | வேலைக்காரன் |
| **பனவன்** | - | பார்ப்பனன். "திருப்பெருந்துறை யுறையும் பனவன்" (திருவாச.343) |
| **பணி** | - | 1. செயல் 2. தொழில் 3. தொண்டு 4. பணிகை 5. பயன்தரும் வேலை 6. நுகர்பொருள் 7. அணிகலன் 8. மலர்களால் அலங்கரிக்கை 9. பட்டாடை 10. தோற்கருவி 11. வேலைப்பாடு 12. வகுப்பு 13. சொல் 14. கட்டளை 15. விதி 16. வில்வித்தை முதலியவற்றைக் கற்பிக்கும் தொழில் 17. ஈகை 18. நாகம். "என்கடன் பணி செய்து கிடப்பதே" (தேவா.2219) |
| **பனி** | - | 1. குளிர்ந்து விழும் துளி 2. ஆலங்கட்டி 3. உறைந்த நீர் 4. குளிர் 5. குளிர்ச்சி நீர் 6. கண்ணீர் 7. மழை 8. மஞ்சு 9. இனிமையானது 10. அச்சம் 11. நடுக்கம் 12. நோய்வகை 13. காய்ச்சல் 14. துன்பம். |
| **பணித்தல்** | - | 1. கட்டளையிடுதல் 2. குறைத்தல் 3. தாழ்த்தல் 4. சொல்லுதல். |
| **பனித்தல்** | - | 1. இடைவிடாது மழை பெய்தல் 2. குளிர்நடுக்கம் உண்டாதல். |
| **பணிமொழி** | - | 1. தாழ்ந்து பேசல் 2. வணங்கிப் பேசல் 3. மென்மொழி. |

| | | |
|---|---|---|
| | | "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி வாலெயி(று) ஊறிய நீர்" (குறள்:1121) |
| **பனிமொழி** | - | 1. குளிர்ந்தமொழி 2. இனிய மொழியுடைய பெண். |
| **பணை** | - | 1. அரசமரம் 2. முரசு 3. பிழை 4. மூங்கில் 5. விலங்கின் படுக்கை 6. இசைக்கருவி 7. பெருமை. "பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித் தொல்கவின் வாடிய தோள்" (குறள்:1234) |
| **பனை** | - | 1. ஒரு வகை மரம் (பனை மரம்) 2. பனையோலை 3. பனம்பழம் 4. பனங்காய். "தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்கொள்வர் பயன்தெரி வார்" (குறள்:104) |
| **பரண்டை** | - | 1. கணைக்கால் 2. பறவை வகை. "பறண்டை வலத்திற் பாடி வலத்திலிருந்து இடத்திற் போந்து" (சார்வா.சிற்.16:) |
| **பறண்டை** | - | 1. ஒரு வாத்தியவகை 2. கை முட்டியின் முனி. |
| **பரத்தல்** | - | 1. பரவுதல் 2. தட்டையாதல் 3. அலமருதல். |
| **பறத்தல்** | - | 1. பறவை 2. பஞ்சு முதலியன வானத்தில் பறத்தல் 3. வேகமாக ஓடுதல் 4. விரைவுபடுத்தல் 5. அமைதியற்று வருந்துதல் 6. சிதறியொழிதல். |
| **பரதி** | - | 1. நாடகி 2. கூத்தாடுபவள். |
| **பறதி** | - | 1. பறத்தல் 2. பதற்றம். |
| **பரப்பு** | - | 1. இடவிரிவு 2. உலகம் 3. மிகுதி 4. தொகுதி 5. அளவு 6. ஒரு நிலவளவு கடல் முகடு 7. படையலமுதுப் பொருள் |

| | | |
|---|---|---|
| | | 8. கதவு நிலையின் மேலுள்ள மண்தாங்கிப் பலகை 9. படுக்கை வரிக்கணக்கு. "நன்பெரும்பரப்பின் விசும்பு" (பதிற்றுப்.17 12) |
| **பறப்பு** | - | 1. பறக்கை 2. விரைவு 3. கவலை. |
| **பரம்பு** | - | 1. உழுத கழனியைச் சமப்படுத்தும் பலகை 2. பரவிய நிலம் 3. மூங்கிற் பாய் 4. வரப்பு 5. இடவிரிவு 6. வரிக் கணக்கு. "எங்ஙணும் பரம்படிப்பவர் பற்பல கோடியே" (அரிச்.நாட்டு.33) |
| **பறம்பு** | - | 1. மலை 2. பாரியின் மலை 3. பாரியின் நாடு |
| **பரம்புதல்** | - | 1. பரவுதல் 2. தட்டையாக விரிதல் 3. நிறைதல். |
| **பறம்புதல்** | - | அடித்தல். |
| **பரல்** | - | 1. பருக்கைக்கல் 2. விதை. |
| **பறல்** | - | பறவை. "விரிசிறைப் பற்லின் கடுமையாலெய்தி" (பாரத.இந்திரப்பிரத்த) "அளிதோதானே பாரியது பறம்பு" (புறநா.109). |
| **பரவை** | - | 1. பரப்பு 2. கடல் 3. உப்பு 4. ஆடல் 5. பரவல் 6. மதில் 7. பரவிநிற்கும் நீர் 8. திடல் 9. சுந்தரர் மனைவி. "அமிதப் பரவையது" (தக்கயாகப்ப.154). |
| **பறவை** | - | 1. புள் 2. இறகு 3. பறக்கை 4. வண்டு 5. அவிட்டநாள் 6. அம்மை வகை. "பல்விருகமாகிப் பறவையாய்" (திருவாச.11.27). |
| **பரி** | - | 1. செலவு 2. வேகம் 3. குதிரை நடை 4. குதிரை 5. அசுவினி நாள் 6. குதிரை மரம் 7. உயர்ச்சி 8. பெருமை 9. கறுப்பு 10. மாயம் 11. பருத்திச்செடி 12. பாதுகாக்கை 13. சுமை 14. துலை 15. ஊற்றுணர்வு 16. அன்பு 17. வருத்தம் மிகுதிப் பொருள் |

குறிக்கும் ஓரிடைச் சொல்.
"காலே பரிதப்பின" (குறுந்.44)

**பறி** - 1. பிடுங்குகை 2. கொள்ளை 3. இறக்கின பாரம் 4. மீன்பிடிக்குங் கருவி 5. பனையோலைப் பாய் 6. உடம்பு 7. பொன்.
"பறியுடை முன்றில்" (பெரும்பாண்.265)

**பரித்தல்** - 1. அறுத்தல் 2. சூழ்தல் 3. ஓடுதல் 4. சுமத்தல் 5. ஆளுதல் 6. பொறுக்கியெடுத்தல் 7. பாதுகாத்தல் 8. தரித்தல்.

**பறித்தல்** - 1. செடியிலிருந்து இலை முதலியவற்றை வலிய நீக்குதல் 2. பிடுங்குதல் 3. வலிய கவர்தல் 4. தோண்டுதல் 5. பாரம் இறக்குதல் 6. அழித்தல் 7. நீக்குதல்.
"அடகு பறித்துக் கொண்டாட்டு" (நாலடி.289).

**பரிதல்** - 1. பற்றுவைத்தல் 2. காதல் கொள்ளுதல் 3. இரங்குதல் 4. சார்பாகப் பேசுதல் 5. வருந்துதல் 6. பிரிதல் 7. ஆறுதல் 8. முறிதல் 9. அழிதல் 10. ஓடுதல் 11. வெளிப்படுதல் 12 அஞ்சுதல் 13. வருத்திக் காத்தல் 14. பகுத்தறிதல் 15. அறிதல் 16. அறுத்தல் 17. அழித்தல் 18. நீங்குதல் 19. கடத்தல் 20. உதிர்தல் 21. வாங்கிக் கொள்ளுதல்.

**பறிதல்** - 1. ஓடிப்போதல் 2. நிலைபெயர்தல் 3. வெளிப்படுதல் 4. எய்யப்படுதல் 5. ஒலியுடன் வெளிப்படுதல் 6. கட்டவிழ்தல் 7. இல்லாமற்போதல் 8. சேய்மை நிலையாதல் 9. ஒட்டிப்போதல் 10. திரட்டப்படுதல் 11. அறுதல் 12. உண்டாதல் 13. தணிதல் 14. தப்பிப்போதல்
"பண்டை வினைகள் பறிய நின்ற"
(தேவா.395.3)

| | | |
|---|---|---|
| **பரிவு** | - | 1. அன்பு 2. பக்தி 3. இன்பம் 4. இரக்கம் 5. பக்குவம் 6. வருத்தம் 7. குற்றம். "பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்". (புறநா.184.) |
| **பறிவு** | - | 1. கழிவு 2. அதிர்கை 3. நிலை பெயர்கை 4. ஒட்டிப்போகை. |
| **பருகு** | - | குடிக்கை. "பருகுவன்ன வேட்கையில்வழி" (புறநா.207) |
| **பறுகு** | - | 1. சிறுதூறு 2. குள்ளம். |
| **பரை** | - | 1. பார்வதி 2. சிவசக்தி 3. ஐந்து மரக்கால் கொண்ட அளவு. |
| **பறை** | - | 1. தோற்கருவி 2. தப்பு 3. வட்டம் 4. சொல் 5. விரும்பிய பொருள் 6. ஒரு முகத்தலளவை 7. மரக்கால் 8. நூல்வகை 9. வரிக்கூத்து வகை 10. குகை 11. பறவை 12. இறகு "அறை பறையன்னர் கயவர்" (குறள்.1076) |
| **பல்** | - | 1. எயிறு (முத்துப்பல்) 2. கருவி கருக்கு (ஈர்வால் பல்) 3. சீப்புப்பல் 4. கொம்பு 5. சக்கரம் 6. நங்கூரநாக்கு 7. பல் "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு" (குறள்:735) |
| **பள்** | - | 1. பள்ளம் 2. பள்ளுப்பாட்டு 3. நாடக நூல்வகை. |
| **பல்லம்** | - | 1. அம்பு 2. கரடி 3. ஓரெண் 4. சேரான் மரம் 5. கோரிக்கை 6. கருவி வகை 7. படைக்கல வகை. "ஆயிர கோடி பல்லம்" (கம்பரா.நாகபாச.107.) |
| **பள்ளம்** | - | 1. குழி 2. தாழ்ந்த நிலம் 3. ஆழம் (பள்ளத்தில் புதைந்தது). "பள்ளமீனிரை தேர்ந்துழலும்" (தேவா.93.5) |

| | | |
|---|---|---|
| **பல்லி** | - | 1. பல்லையுடையவள் 2. சுவரில் ஊர்ந்து செல்லும் சிற்றுயிரி 3. பூடுவகை. “சிறுவெண் பல்லிபோல” (புறநா.256) |
| **பள்ளி** | - | 1. கல்வி கற்குமிடம் 2. படுக்கை (பள்ளி கொண்டான்) 3. உறக்கம் 4. பள்ளிவாசல் 5. முனிவர் இருப்பிடம் 6. சமண பௌத்த கோவில் 7. பணிக்களம் 8. மக்கள் படுக்கை 9. வேலைக் களம் 10. சிற்றூர். “கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்” (குறள்.840) |
| **பல்லு** | - | பல். |
| **பள்ளு** | - | உழத்திப்பாட்டு. |
| **பலகம்** | - | 1. அடுக்கு 2. நாற்காலி 3. பின்சந்து 4. கேடகம். |
| **பளகம்** | - | 1. பவழம் 2. மலை. “பளகமன்ன...தேர்” (பாரத.இரண்டாம்போ.5) |
| **பலம்** | - | 1. படைக்கருவி நுனி 2. ஊதியம் 3. இலை 4. காய் 5. கிழங்கு 6. வலிமை (பலமுள்ளவன்) |
| **பழம்** | - | 1. முதுமை (பழங்கிழம்) 2. கனி (பலாப்பழம்) 3. முக்கால் 4. பழைமை. “வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பிற் றலைபிரிதல் இன்று” (குறள்:955) |
| **பலி** | - | 1. காவு (உயிர் பலியிடல்) 2. சாம்பல் 3. இரந்துண்ணல் 4. காக்கை. |
| **பழி** | - | 1. குற்றம் (பழிக்குப் பழியெனல் தீமை) 2. தீமை. “பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழிநல் குரவே தலை” (குறள்:657) |
| **பலித்தல்** | - | 1. வாய்த்தல் 2. நேர்தல் (சொல் பலித்தது). |
| **பழித்தல்** | - | 1. இழித்துரைத்தல் 2. புறங்கூறுதல் 3. பகடி செய்தல். |

| | | |
|---|---|---|
| **பலு** | - | பலகறை. |
| **பழு** | - | 1. பொன்னிறம் 2. விலா எலும்பு 3. சட்டம் 4. ஏணிப்படிச் சட்டம். |
| **பளு** | - | 1. கனம் 2. சுமை (மூட்டை பளுவாக இருக்கிறது). |
| **பலை** | - | 1. பழம் 2. சிற்றாமுட்டிச் செடி. |
| **பழை** | - | கள். |
| **பளை** | - | விலங்கு முதலியவை பிடிக்கும் வலை. |
| **பலக்கு** | – | பலக்குராசம் |
| **பழக்கு** | - | 1. பழகச் செய்தல் 2. பழக்கம் ஏற்படும்படி செய்தல். |
| **பளக்கு** | - | கொப்புளம். "பளக்கு மூக்குடையான்" (சிவதரு.சுவர்க்கநரக.30) |
| **பழகு** | - | 1. பழகிடு (அன்பாய்ப் பழகு) 2. பயிலுதல் 3. உறவு கொள்ளுதல் 4. பதப்படுதல் 5. இணக்கமாதல் 6. நாட்படுதல். "பழகு நான் மறையின் பொருளாய்" (திவ்.நாய்ச்.4 10) |
| **பளகு** | - | குற்றம். "பளகறுத் துடையான் கழல் பணிந்திலை பரகதி புகுவானே" (திருவா.8.5 35.) |
| **பாண்மை** | - | 1. தாழ்ச்சி 2. பாணனின் தன்மை. |
| **பான்மை** | - | 1. குணம் 2. தன்மை (அவன் மனப்பான்மை) 3. இயல்பு 4. பகுதி 5. முறைமை. "தேவர் பான்மை யிற்றென்று" (சீவக.553) |
| **பாணம்** | - | 1. அம்பு (பாணம் தொடுத்தான்) 2. நாடகவகை 3. பட்டாடை 4. செடிவகை 5. பூம்பட்டு 6. கை 7. வெடியுப்பு. |
| **பானம்** | - | 1. பருகுவன (குளிர்பானம்) 2. கள். |
| **பாணி** | - | 1. நடத்தை 2. பாங்கு (அவன் பாணி) 3. கை 4. நீர் 5. ஓசை 6. தாளம் 7. பாட்டு. "மாயோன்" "பாணியும்" (சிலப்.கடலாடு.45) |

பானி - 1. பருகுவோன் 2. படை.
பாரு - மருந்து.
பாறு - 1. கேடு 2. கழுகு 3. மரக்கலம்.
"பாறுபடப் பறைந்த பன்மாறு
மருங்கின்" (புறநா.359)
பால் - 1. அருந்தும் பால் 2. ஊழ் 3. பிரிவு (முப்பால். ஐம்பால்) 4. வெண்மை 5. குணம் 6. இடம்.
"சென்ற விடத்தாற் செலவிடா
தீதொரீஇ நன்றின்பால் உய்ப்ப(து) அறிவு"
(குறள்:422)
பாழ் - 1. வீண் (பாழானது) 2. இழப்பு 3. அழிவு 4. வெறுமை.
பாலி - 1. ஆலமரம் 2. பானை 3. பாலாறு 4. கள் 5. ஒருமொழி.
"பங்கயத்தட நிறைப்பவந் திழிவது பாலி"
(பெரியபு. திருக்குறிப்புத்.212.)
பாழி - 1. ஊர் 2. அகலம் 3. கடல். 4. பெருமை 5. குகை 6. கோவில் 7. இடம் 8. நகரம்
"வானவர் கோன்பாழி" (திவ்.இய்ற.2.13)
பாளி - 1. அடையாளம் 2. பணித்தூசு 3. மேற்கட்டிச்சீலை 4. பாசறை.
பாலம் - 1. நீரின் அணைச்சுவர் 2. நெற்றி 3. வெட்டிவேர் 4. ஆற்றின் மேலாக இருகரைகளையும் இணைக்கும் கட்டுமானம்.
"நெருப்பாறும் மயிர்ப்பாலமுமா நடக்க
வேணும்" (இராமநா.கிட்.12)
பாளம் - 1. கட்டி (பாளம் பாளமாகத் தங்கக்கட்டிகள்) 2. வெடிப்பு வடிவம் (பாளம் பாளமாக வெடித்துள்ளது).
பாலை - 1. முல்லையும் குறிஞ்சியும் வெம்மையால் திரிந்த நிலம் (பாலைநிலம்) 2. இருள்மரம்

| | | |
|---|---|---|
| | | 3. முள் முகிழ் 4. மரவகை. "பாலை நின்ற பாலைநெடுவழி" (சிறுபாண்.11) |
| **பாழை** | – | ஏழை-பாழை. |
| **பாளை** | - | 1. கமுகு, தெங்கு, பனை முதலியவற்றின் பாளை (பாளை வெடித்துள்ளது) 2. பதர் 3. சிறுபருவம். "பாளையுடைக் கமுகோங்கி" (தேவா.91) |
| **பிணை** | - | 1. கட்டு (கால்களைப் பிணைத்தான்) 2. தெப்பம் 3. இணை (அன்பால் பிணைந்தனர்) 4. பெண்மான். "பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்(கு) அணிஎவனோ ஏதில தந்து" (குறள்:1089) |
| **பினை** | - | பிசை (மாவு பிசைந்தான்). |
| **பிணைதல்** | - | 1. இணைதல் 2. கட்டுதல் 3. தொடுத்தல். |
| **பினைதல்** | - | 1. பிசைதல் 2. தொல்லைப்படுதல். |
| **பிர** | - | தோற்றம் மிகுதி மேன்மை விரைவு இவற்றைக் காட்டும் உப சருக்கம். |
| **பிற** | – | 1. அசைச் சொல் 2. அசைநிலை. |
| **பிரந்தை** | - | சமூகம். |
| **பிறந்தை** | - | 1. பிறப்பு 2. உடன் பிறந்தவர் 3. இயல்பு 4. மறுபிறப்பு 5. பாவம் 6. துன்பம் 7. பிறந்தகம் 8. இயல்பு. "பிறந்தை யினத்தின் மாண்டோ ரீடெ" (ஞானா 39 9) |
| **பிரப்பு** | - | 1. ஒரு கலத்திற் பல்லுணாப் பரப்புவது 2. பேருண்டி 3. குருணி வீதம் 4. கொள்கலங்களில் பரப்பி வைக்கும் படையற்பொருள். "பல் பிரப்பிரீஇ" (திருமுருகு.234). |

| | | |
|---|---|---|
| **பிறப்பு** | - | 1. தோற்றம் 2. உற்பத்தி 3. குலத் (சாதி) தொடக்கம் 4. உடன் பிறந்தவர் 5. மகளிர் அணியும் தாலிவகை 6. ஒரு வாய்பாடு 7. அச்சம் 8. நெருக்கம் 9. மயக்கம். "விழிப்பது போலும் பிறப்பு" (குறள்.339). |
| **பிரி** | - | 1. பிரியென்னேவல் 2. பிரிவு 3. வெருகு. "பிரிப்பப் பிரியா" (தொல்.சொல்.410) |
| **பிறி** | - | பங்கிடு என்னும் ஏவல். |
| **பிரித்தல்** | - | 1. குலைத்தல் 2. கூறு செய்தல் 3. நீக்கல் "பிரித்தலும் பேணிக் கொளலும்......வல்லது அமைச்சு" (குறள்:633) |
| **பிறித்தல்** | - | 1. பங்குபடுத்தல் 2. வேறுபடுத்தல். |
| **பிரிதி** | - | பிரீதி. |
| **பிறிதி** | - | 1. அற்பம் 2. எதிர் 3. எழுதிச் சேர்த்தல் 4. தடை 5. பகுதி 6. பதில் 7. மூலம். "பெருங் கல் நாட பிரிதி ஆயின்" (அக:238:10) |
| **பிரை** | - | 1. அரைப்பங்கு 2. அரை. |
| **பிறை** | - | 1. சந்திரபிறை 2. இளஞ்சந்திரன் 3. மகளிர் தலையணிவகை. "தொழுது காண் பிறையின் தோன்றி யாம் நுமக்கு அரியம் ஆகியகாலை" (குறு:178:5-6) |
| **பீடணம்** | - | அச்சம். |
| **பீடனம்** | - | 1. வருத்தம் 2. துன்புறுத்தல். |
| **பீரு** | - | 1. புருவம் 2. அச்சமுள்ளோன். |
| **பீறு** | - | 1. கிழிவு 2. மலவாய். "பீருவும் சிதனும் பீதனும் கரிதனும் காதரனும் அச்சம் உடையோன் கட்டுரை" (நிக.பி:5:152) |
| **பீல்** | – | முலைப்பாலின் பீச்சு. |
| **பீழ்** | - | பிடுங்கு. |
| **பீள்** | - | 1. கருப்பம் 2. கதிர் 3. இளமை. |
| **பீழை** | - | துன்பம். |

"கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு
அவைதாம் முடிந்தாலும் பீழை தரும்"
(குறள்:658)

**பீளை** - கண் அழுக்கு (கண்ணில் பீளை இருக்கிறது).

**புண்** - 1. காயம் 2. வடு 3. தசை 4. ஊறு 5. உடல் ஊறு.
"கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண் என்று உணரப் படும்" (குறள்.575)

**புன்** - 1. சிறுமை (புன்சிரிப்பு) 2. சிறு.
"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்
ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்" (குறள்:71)

**புண்ணீர்** - குருதி.
"புண்ணீர் மாந்தி" (பிரமோத்.217)

**புன்னீர்** - 1. கழிவு நீர் 2. குருதி.
"புன்னீர் விட்டுப் பாய்ச்சிக் கொள்வதாகவும்"
(க.வெ.தொ:3:46)

**புணரி** - 1. கடல் 2. அலை 3. கரை 4. தனிமை.
"வரைமருள் புணரிவான் பிசிருடைய"
(பதிற்றுப்.11)

**புனரி** - ஒரு பூடு வகை.

**புணை** - 1. மரக்கலம் 2. மூங்கில் 3. கட்டு 4. உதவி 5. விலங்கு 6. தெப்பம்.
"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனமென்னும் ஏமப் புணையைச் சுடும்"
(குறள்:306)

**புனை** - 1. அழகுபடுத்திக் கொள்ளல் 2. புதுமை 3. நீர் 4. ஓவியம் புனைதல் 5. பொலிவு 6. கால் விலங்கு 7. ஒப்பனை 8. அணிகலன்.

**புணைதல்** - கட்டல்.

**புனைதல்** - 1. அணிதல் 2. தரித்தல் 3. அலங்கரித்தல் 4. ஓவியம் வரைதல் 5. கட்டுதல்.

**புணையல்** - பிணைப்பு.
**புனையல்** - மாலை.
"உருத்திர மாமணிப் புனையல்"
(உபதேசகா.சிவநாம.173)
**புரணி** - 1. ஊன் 2. தோல் 3. சாரமற்றது.
"குணபாசி....நடித்து
நின்றயின்றன புரணி" (அரிசமய.பரகா.37)
**புறணி** - 1. புறங்கூறல் 2. மரப்பட்டை 3. மட்டை
முதலியவற்றின் புறத்துள்ள நார். 4. தோல்
5. ஊன் 6. புறம்பானது 7. குறிஞ்சி
நிலம் 8. முல்லை நிலம் 9. மண்கட்டி.
"காணாவிடந் தனிலே
புறணி பலபேசி" (குமரே.சத.28)
**புரம்** - 1. ஊர் 2. நகரம் 3. தலைநகரம் 4. முப்புரம்
கோவில் 5. மேன்மாடம் 6. வீடு 7. உடல்
8. தோள் 9. முன். "மதுரை
யந்தன் புரத்தின் கண்" (திருவாலவா.391)
**புறம்** - 1. வெளியிடம் 2. புறத்திணை 3. புறக்கொடை
4. புறநானூறு 5. வீரம் 6. பக்கம் 7. முதுகு
8. பின்புறம் 9. புறங்கூற்று 10. அலர்மொழி
11. ஒருசார்பு 12. இடம் 13. இறையிலி நிலம்
14. ஏழுனுருபுள் ஒன்று 15. திசை 16. உடம்பு
17. மருத நிலத்தூர் 18. மதில். "புறங்குன்றி
கண்டனையரேனும்" (குறள்.277)
**புரவாயில்** - கோபுரவாயில்.
**புறவாயில்** - வெளிவாயில்.
**புரவு** - 1. பாதுகாப்பு 2. அரசு 3. கொடை
4. ஆட்சியிடம் 5. அரசிறை 6. இறையிலி
நிலம் 7. ஆற்றுநீர் பாயும் வயல் 8. செழுமை.
"பெயன்மழை புரவின்றாகி" (பதிற்றுப்.26.6)
**புறவு** - 1. புறா 2. காடு 3. சிறுகாடு 4. முல்லைநிலம்
5. குறிஞ்சி நிலம் 6. பயிரிடும் நிலம்

| | | |
|---|---|---|
| | | 7. முல்லைக்கொடி.<br>"உதிர்த்த மலர்வீழ் புறவின்"<br>(பெரும்பாண்.496) |
| **புல்** | - | 1. புல்வகை (அறுகம்புல்) 2. சிறுமை<br>3. தென்னை 4. கல்வி 5. சேர்.<br>"புல்லா திராஅப் புலத்தை அவருறும்<br>அல்லல்நோய் காண்கம் சிறிது" (குறள்:1301) |
| **புள்** | - | 1. வண்டு 2. மது 3. பறவையினப்<br>பொதுப்பெயர்.<br>"குடம்பை தனித்து ஒழியப் புள்பறந்தற்றே<br>உடம்போடு" (குறள்.338) |
| **புல்லி** | - | 1. மலரிதழ் 2. ஒரு வினையெச்சம் – (தழுவி)<br>"புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன்<br>அவவளவில் அள்ளிக்கொள் வற்றே பசப்பு"<br>(குறள்.1187) |
| **புள்ளி** | - | 1. பொட்டுக்குறி 2. அடையாளம் (முக்கால்<br>புள்ளி, முற்றுப் புள்ளி) 3. மதிப்பெண் (ஒரு<br>புள்ளியினால் தோற்றான்) 4. மெய்யெழுத்து<br>(புள்ளியெழுத்து). |
| **புல்லினம்** | - | ஆட்டினம். |
| **புள்ளினம்** | - | பறவையினம். |
| **புலம்** | - | 1. நிலம் 2. வயல் (நிலபுலம்) 3. அறிவு 4. துப்பு<br>5. நூல் 6. ஐம்புலன்.<br>"இலமென்று வெஃகுதல் செய்யார்<br>புலம்வென்ற புன்மையில் காட்சி யவர்"<br>(குறள்:174) |
| **புளம்** | - | 1. அண்ணம் 2. குதிரை நடையில் ஒன்று. |
| **புலி** | - | 1. உண்ணாக்கு 2. வேங்கைமரம் 3. ஒரு<br>விலங்குவகை.<br>"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை<br>வெரூஉம் புலிதாக் குறின்" (குறள்:599) |

**புளி** - 1. புளிப்புச்சுவைக்காய் (புளியங்காய்) 2. புளிய மரம்.
**புலை** - 1. ஊன் 2. இறைச்சி 3. புலால் 4. தீநாற்றம் 5. இழிவு.
**புழை** - 1. துளை 2. குழாய் 3. மூங்கில் 4. சிறுவாயில் 5. அளறு.
**புழைத்தல்** - துளையிடுதல்.
**புளைத்தல்** - ஒப்பனைசெய்தல்.
**பூசணம்** - 1. மரம் முதலியவற்றின் மேல் ஈர நைப்பினால் உண்டாகும் பாசி 2. ஒட்டடை 3. அழுக்கு 4. நேர்த்திக் கடனாக முடித்து வைக்கும் காசு முதலியன 5. அணிகலன்.
"ஒரு பணமெடுத்து பூசணமுடிந்துவை" (நாஞ்.)
**பூசனம்** - 1. வழிபாடு 2. பூசை (ஆராதனை).
**பூசணி** - கொடிவகை.
**பூசனி** - 1. அடைக்கலாங்குருவி 2. மரப்பாசி.
**பூணை** - முல்லை நிலம்.
**பூனை** - ஒரு விலங்கு வகை.
"இந்தப் பூனையும் பால் குடிக்குமா?" (பழ)
**பூநீரு** - 1. பனிநீர் 2. அரக்குநீர் 3. உலர் மண்ணில் எடுக்கும் நீர்.
"பூநீர் துடையாள்" (பரிபா.16 21)
**பூநீறு** - 1. ஒரு வெள்ளை உவர் மண் வகை 2. ஒரு மருந்துப் பொடிவகை.
**பூலை** – 1. அணிற்பிள்ளை 2. கிச்சிலிக் கிழங்கு.
**பூழை** - 1. கோபுரவாயில் (துவாரம்) 2. சிறுவாயில்.
**பூளை** - 1. இலவம்பஞ்சு 2. வெற்றிப்பூ 3. ஒரு செடி.
**பெண்ணை** - 1. பனை 2. பெண்ணையாறு 3. அனுடநாள்

| | | |
|---|---|---|
| | | 4. நீரில் வளரும் முள்ளுள்ள பூண்டு 5. பெண் மரம். |
| | | "மன்றப் பெண்ணைவாங்குமடற் குடம்பை" (நற்.303) |
| **பென்னை** | - | யானை. |
| **பெருக்கல்** | - | 1. துடைப்பத்தால் குப்பை கூட்டுதல் 2. எண்களைப் பெருக்குதல் 3. விருத்தி செய்தல். |
| **பெறுக்கல்** | – | அரிசி |
| | | "முறியாப் பெறுக்கன் முப்பழம்" (பதினொ.திருவிடைவை.16) |
| **பெருக்குதல்** | - | 1. ஓர் எண்ணை மற்றொரு எண்ணால் பெருக்குதல் 2. குப்பை முதலியன கூட்டுதல் 3. நீர்நிரப்புதல் 4. விரியச் செய்தல். |
| | | "வாரி பெருக்கி" (குறள்.512) |
| **பெறுக்குதல்** | - | பொறுக்குதல். |
| | | "பெறுக்கினர் சிலைகளைப் பெருஞ்சினத்தராய்" (பிரபுலிங்.சித்தரா.21) |
| **பெருக்கு** | - | 1. கடல் நீரேற்றம் 2. பெருக்கல் கணக்கு 3. மிகுதி 4. வெள்ளம். |
| **பெறுக்கு** | - | பொறுக்கென்னேவல். |
| | | "ஆற்றுப்பெருக்கற்று" (நல்வழி.9) |
| **பெருத்தல்** | - | 1. அதிகப்படல் 2. பருமையாதல் 3. மிகுதி. |
| **பெறுத்தல்** | - | பெறுவித்தல். |
| **பெரும்** | - | 1. பெரிய (பெருஞ்செயல்) 2. சிறந்த (பெரும்புகழ்). |
| **பெறும்** | - | 1. பெற்றுக்கொள்ளும் (பிள்ளைபெறும் காலம்) 2. பெறுமானம் (இந்த வீடு எவ்வளவு பெறும்). |
| **பேண்** | - | 1. விருப்பம் 2. பாதுகாப்பு 3. துலாத்தாங்கும் மரம். |
| **பேன்** | - | 1. தலையில் உண்டாகும் சிறு பூச்சி. |

"ஈரும் பேனுமிருந்திறை கூடி" (பொருந.79)

**பேணம்** - 1. பேணுதல் 2. மதிப்பு 3. பதனம்.

**பேனம்** - 1. நீர்க்குமிழ்த் தொகுதி 2. குமிழி 3. வெண்ணெய் 4. வெள்ளை வயிரக் குற்றவகை. "பேன வெண்குடைய வாய்" (கம்பரா. பிரமாத்.145)

**பேரு** - 1. கடல் 2. கதிரவன் 3. பொன்மலை.

**பேறு** - 1. பெறுகை 2. அடையத்தக்கது 3. ஊதியம் 4. நன்கொடை 5. பயன் 6. தகுதி 7. பதினாறு வகைப்பட்ட செல்வம் 8. நல்லூழ் 9. நிலத்தின் அனுபோகவகை 10. இரை 11. படைப்பு 12. முடிவு. "மக்கட் பேறு" (குறள்.61)

**பொரி** - 1. நெல் முதலியவற்றின் பொரி பொரிக்கப்பட்டது 2. பொரிக்கறி 3. கரிந்தகாடு 4. எருமைக் கன்று 5. நன்றாகச் சமைக்காத சோறு. "நேர்நிறை பொரியுங் குய்யும் வறைகளும்" (சீவக.2971)

**பொறி** - 1. வரி 2. கோடு 3. புள்ளி 4. தழும்பு 5. அடையாளம் 6. எழுத்து 7. விருது 8. இலாஞ்சனை 9. வண்டு 10. பீலி 11. தேமல் 12. பதுமை 13. விதி 14. கன்னப்பொருத்து 15. மூட்டுவாய் 16. மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறி 17. மனம் 18. அறிவு 19. அனற்றுகள் 20. ஒளி 21. எந்திரம் 22. மதிலுறுப்பு 23. மரக்கலம் 24. விரகு 25. நெற்றிப்பட்டம் 26. திருமகள் 27. செல்வம் 28. பொலிவு 29. முன்வினைப் பயன் 30. திரட்சி 31. ஊழ்.

**பொரித்தல்** - 1. பொரியச் செய்தல் 2. வறுத்தல் 3. கிழங்கு சுடுதல் 4. அடைகாத்துக் குஞ்சுண்டாக்குதல்

5. போக்குதல் 6. தீய்த்தல் 7. புளியில்லாமல் சமைத்தல் 8. குறைந்த விலைக்கு விற்றல். "நெய்யுறப் பொரித்த" (புறநா.397)

**பொறித்தல்** - 1. முத்திரையிடல் 2. எழுதுதல் 3. ஓவியம் வரைதல் 4. தெறித்தல் 5. பறிதல் 6. கலைத்தல் 7. தீச்சுடர் சிதறுதல் 8. அழுந்துதல். "கெண்டையொடு பொறித்த குடுமியவாக" (புறநா.58)

**பொரிதல்** - 1. பொரியாதல் 2. வறுபடுதல் 3. தீய்தல் 4. விரைவாகப் பேசுதல் 5. அலப்புதல் 6. உப்பு முதலியன தரையில் படிதல் 7. பூத்தல் 8. மெல்ல ஒலித்தல் 9. வாணப்பொறி மிகுந்து சொரிதல் 10. பொருக்கு வெடித்தல். "செந்தீயினிடைப் பொரிந்து தெறித்த பொரிபோல" (பிரபுதே.54)

**பொறிதல்** - 1. பறிதல் 2. தீச்சுடர் 3. சிதறுதல் 4. அழுந்துதல் 5. சறுக்குதல் 6. சரிதல் 7. விழப்புகுதல் 8. கலைதல். "பொறிந்தெழு கண்ணினன்" (கம்பரா.கும்ப.254)

**பொரிவு** - 1. மாணிக்கக் குற்றவகை 2. பைம்மணிக் குற்றம் எட்டனுள் ஒன்று. "இறுகுதல் கருகுதல் பொரிவே" (திருவாலவா.2514)

**பொறிவு** - 1. பறிகை 2. சறுக்கல்.

**பொருக்கு** - 1. பருக்கை 2. காய்ந்த சோற்றேடு 3. மரப்பட்டை 4. பொருக்குமண். "காக்கைக்குச் சோற்றிலோர் பொருக்குங் கொடுக்க நேர்ந்திடா" (அருட்பா.6 ஆற்றாமை.31)

**பொறுக்கு** - 1. பொறுக்கி 2. பொறுக்கென்னேவல்.
**பொருத்தல்** - பொருந்துதல்.
**பொறுத்தல்** - 1. தங்குதல் 2. சகித்தல் 3. சுமத்தல் 4. அணிதல் 5. இளக்காரம் கொடுத்தல் 6. மன்னித்தல் 7. உத்திரவாதமாதல் 8. தாமதித்தல் 9. உவமையாகப்பெறுதல் 10. சாந்தமாயிருத்தல்.
**பொரு** - 1. ஒப்பு 2. உவமை 3. எதிர்த்தடை. “பொருவாகப் புக்கிருப்பார்” (தேவா.780 11)
**பொறு** - 1. இரு 2. இங்கேயே இரு 3. பொறு வென்னேவல்.
**பொருப்பு** - பக்கமலை. “சாரற் பொருப்பிடத்தே” (திருக்கோ.293)
**பொறுப்பு** - 1. பதவி 2. கடமை 3. சுமை 4. முட்டு 5. உத்திரவாதம் 6. முகாமை 7. தகுதி 8. பொறுமை 9. வரி.
**பொல்** - 1. பதர் 2. ஊன்றுகோல் 3. பொல்லு.
**பொள்** - 1. துளை 2. விரைவுக் குறிப்பு.
**பொலி** - 1. நெற்குவியல் 2. தூற்றிய நெல் 3. புணர்ச்சி 4. பொலிகடா 5. விளைவின் அளவு.
**பொழி** - 1. வயல்வரப்பு 2. கணு 3. எல்லை.
**பொளி** - 1. உள்துளை 2. மண்வெட்டியின் வெட்டு (பொளி போட்டான்) 3. பொளிமண்.
**பொலிவு** - 1. அழகு (தோற்றப்பொலிவு) 2. முகமலர்ச்சி (பொலிவான முகம்) 3. பொன் 4. புணர்ச்சி 5. பொலிதல் 6. மிகுதி 7. செழிப்பு. “கோலம் பொலிவு காட்டிய கொள்கையு” (திருவாச.2 30)
**பொழிவு** - 1. சொரிதல் (மழை பொழிகிறது) 2. சொற்பொழிவு 3. வருமானம் 4. மேன்மை 5. நிறை 6. பெருகுதல்.

"பொழிவொழியாப் பூஞ்சோலை"
(பெரியபு.திஞானைப்.3)

**பொலிதல்** - 1. செழித்தல் 2. பெருக்குதல் 3. மிகுதல் 4. விளங்குதல் 5. நீடுவாழ்தல் 6. நிகழ்தல் 7. புணர்தல் 8. சிறத்தல்.

**பொழிதல்** - 1. பெய்தல் 2. நிறைந்து வழிதல் 3. தட்டுத்தடங்கலின்றிப் பேசுதல் (சொற்பொழிவு) 4. நிறைதல்.
"தளிமழை பொழியுந் தன்பரங் குன்றில்"
(மதுரை.263)

**பொளிதல்** - 1. உளியால் செதுக்குதல் 2. பிளத்தல் 3. துளை செய்தல் 4. இடித்தல்.
"கல்பொளிந்தன்ன" (மதுரைக்.482)

**போணம்** - சோறு.

**போனம்** - 1. உணவு 2. அன்னம் 3. நிலக்கடம்புப் பூண்டு.

**போல்** - 1. பதர் 2. போய் 3. மூங்கில் 4. ஓர் அசைச் சொல் 5. ஓர் உவம உருபு.
"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்
ஆற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து"
(குறள்:126)

**போழ்** - 1. பிளவு 2. தகடு 3. துண்டம் 4. பனங்குருத்து 5. தோலால் அமைந்த வார்ப்பட்டை.
"வெள்ளிப் போழ் விலங்கவைத் தனைய"
(சீவக.70)

**போலி** - 1. ஒன்றுபோல் ஒன்று இருத்தல் 2. ஒப்பு 3. பொய்ம்மை 4. சாயல் 5. ஒட்டகம் 6. கேலி 7. வஞ்சகம்.

**போளி** - 1. ஒருவகை அப்பம் 2. மூடன்.

**போழும்** - மாறுபடும் சொல்.
"போழும் பலபேசி" (தேவா.1080 11)

**போளம்** - 1. மணப்பொருள்வகை 2. நிலக்கடம்பு.

**மக்கல்** - 1.கெட்டுப்போனபொருள் 2. கூளம்

**மக்கள்** - 1. மானுட இனம் 2. ஐம்பொறி உணர்வோடு மனவறிவுடைய உயிர்கள் 3. பிள்ளைகள்.

**மகண்மை** - அகத்தன்மை "தமரலாரும்மகண்மைகொள்ளக் கருதுங்குறியினாள்" (வெங்கையு.154)

**மகன்மை** - ஆண்தன்மை "மகன்மைகொண்டார்" (பெரியபு.தடுத்தாட்.5)

**மகிலம்** - மயிலம்

**மகிழம்** - மகிழமரம்

**மகிளம்** - பூவிதழ்

**மங்கலம்** - 1.திருமணம் 2.ஆக்கம் 3.பொலிவு 4.நற்செயல் 5.நன்மை 6.தாலி 7. தருமம் 8. சிறப்பு 9. வாழ்த்து 10. மங்கல வழக்கு 11. சேகரிப்பு.

**மங்களம்** - 1. சுபகாரியம் 2.வாழ்த்து 3. இறுதி (முடிவு)

**மங்கலை** - 1. சுமங்கலி 2.கணவனோடுவாழ்பவள் 3.திருமகள் 4.பார்வதி 5. காளி.

**மங்களை** - 1. பார்வதி 2. மக்களின் பருவ நிலைகளுள் ஒன்று

**மங்குலம்** - 1. மழுக்கம் 2. கலக்கம் 3. முகவாட்டம்.

**மங்குளம்** - 1. பார்வைமந்தம் 2. ஐயம் 3. நிறக்குறைவு

**மஞ்சணம்** – பற்பொடி

**மஞ்சனம்** - 1. நீராட்டம் 2. முழுக்குநீர்

**மஞ்சுலம்** - நீர்ப்பாய்ச்சல்

**மஞ்சுளம்** - அழகு

**மண்** - 1. நிலவுலகம் 2. நீராடுங்கால் பூசிக்கொள்ளும் பத்துவகை மண் பூமி புழுதி நாமக்கட்டி தரை அணு சுண்ணச்சாந்து மத்தளம் முதலியவற்றில் பூசும் மார்ச்சனை மனை வயல் "புனலொடுமண்ணும்விண்ணும்" (திருவாச.5 8)

| | | |
|---|---|---|
| **மன்** | - | 1. ஓர்அசைநிலை 2. எதிர்காலங்காட்டும் இடைநிலை 3. ஒழியிசைக் குறிப்பு 4. பிறிதொன்றாகைக் குறிப்பு 5. மிகுதிக்குறிப்பு 6. நிலைபேற்று குறிப்பு 7. உத்திரட்டாதி நாள்குறிப்பு 8. ஒருபெயர்விகுதி 9. அரசன் 10. வீரன் 11. தலைவன் 12. கணவன் 13. இழிவு 14. மந்திரம் "மன்னே ...நிலைபேறாகும்" (நன். 432) |
| **மண்ணல்** | - | மண்ணுதல் |
| **மன்னல்** | - | 1. நிலைபேறு 2. வலிமை 3. பெருமை " மன்னல்சிறிதாய்மயக்கம்பெரிதுஆகி" - (வளையா. 37 2) |
| **மண்ணவர்** | - | மக்கள் "மண்ணவர்விண்ணவர்வணங்க" (தேவா. 52 6) |
| **மன்னவர்** | - | அரசர் |
| **மண்ணன்** | - | 1. மந்தன் 2. சின்னம்மைநோய்வகை |
| **மன்னன்** | - | 1. அரசன் 2. தலைவன் 3. ஆடவன் 4. கணவன் "மன்னனுயிர்த்தேமலர்தலையுலகம்" (புறநா. 186) |
| **மண்ணா** | - | ஒருமீன். |
| **மன்னா** | - | உணவாகஉதவும்இனியபிசின்வகை |
| **மண்ணி** | - | 1. மந்தன் 2. ஒருமீன்வகை 3. சோழநாட்டில்ஒருநதி "மண்ணித்தென்கரைமேல்...நாங்கை" (திவ். பெரியதி. 4 1 5 ) |
| **மன்னி** | - | அண்ணன்மனைவி. |
| **மண்ணுதல்** | – | 1. நீராடுதல் 2. மூழ்குதல் 3. கழுவுதல் 4. பூசுதல் 5. செய்தல் 6. அலங்கரித்தல் 7. செப்பனிடுதல் "மண்ணுமங்கலமும்" (தொல்.பொருள். 68) |

**மன்னுதல்** - 1. நிலைபெறுதல் 2. தங்குதல் 3. பொருந்துதல் 4. விடாது முயலுதல் 5. உறுதியாய்நிற்றல் 6. மிகுதல் 7. ஆடையைத் தூக்கிப்பிடித்துக் கொள்ளுதல் "மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை" (குறள். 556)

**மண்ணை** - 1.பேய் 2. இளமை 3. கூர்மழுக்கம் 4. காலின்கெண்டைச் சதை 5. கொடிவகை. "மண்ணை வெண்கோட்டுச் சிறுகண்யானை" (அகநா. 24)

**மன்னை** – 1. தொண்டை 2. சினம். "துவர்ப்புச்சுவைமன்னையைப் பிடிக்கிறது" (பே.வ.)

**மணங்கு** - 1.ஆட்டுக்குட்டி 2. இருவாட்சி 3. ஒருநிறை

**மனங்கு** - தோள்பட்டை

**மணப்பொருத்தம்** – 1.திருமணப்பொருத்தம் 2. திருமண உடன்படிக்கை

**மனப்பொருத்தம்** - 1.மனவொன்றிப்பு 2. தன் மனத்துக்குஏற்றதாகை

**மணம்** - 1. கூடுகை 2. நறுநாற்றம் 3. நறுமணப்பொருள் 4. மதிப்பு 5. நன்னிலை 6. எண்வகைமணம்."மணங்கமழ்நாற்றம்" (மதுரைக். 447)

**மனம்** - 1. நெஞ்சம் 2. எண்ணம் 3. விருப்பம் 4. இந்துப்பு. "மனத்தொடுவாய்மைமொழியின்தவத் தொடுதானம் செய்வாரின் தலை" (குறள். 295)

**மணவினை** - திருமணநடப்பு (சடங்கு)

**மனவினை** - 1. மன உள்ளுரம் 2. குள்ளம்

| | | |
|---|---|---|
| **மணை** | - | 1. அமர்வுப்பலகை 2.மணமேடை 3.தேங்காய்த்துருவலகு 4.பருத்தியினின்றுபஞ்சுபிரிக்கும்கருவி 5.யானைமேல் தவிசுபலகை 6. வெட்டுக்கருவியின்அடிக்கட்டை 7. பாதம் வைக்கும்படி "நூலேகரகமுக்கோல் மணையே" (தொல்.பொருள்.626) |
| **மனை** | - | 1. வீடு 2. வீடுகட்டுதற்குரிய நிலம் 3. நிலஅளவைவகை 4. குடும்பம் 5. மனைவி இல்வாழ்க்கை 6. சூதாடு பலகையின் அறை 7. நற்றாய் "சீர்கெழு வளமனை திளைத்து" (சீவக. 828). |
| **மதலை** | - | 1.மகன் 2.குழந்தை 3. மழலைமொழி 4.பாவை 5.பற்றுக் கோடு 6.தூண் 7.வேள்வித்தூண் 8.வீட்டின்கொடுங்கை 9.பற்று 10.மரக்கலம் 11.கொன்றைமரம் |
| **மதளை** | - | சரக்கொன்றை |
| **மந்தணம்** | - | 1.சூழ்வினை 2. கமுக்கம் "மந்தண மிகுந்துபுரிமா மடிதன் வேள்வி" (தேவா. 324 7) |
| **மந்தனம்** | - | 1. யானையின்முகபடாம் 2. சூழ்வினை |
| **மரக்கரி** | - | அடுப்புக்குப் பயன்படும் கரி |
| **மரக்கறி** | - | 1.காய்கறி 2.சமைத்தகாய்கறிஉணவு 3. புல்லுணா |
| **மரத்தல்** | - | மரத்துப்போதல் |
| **மறத்தல்** | - | 1. அயர்தல் 2. அசட்டைப்பண்ணல் 3. ஒழித்தல் 4. நினைவின்றிப்போதல் 5. பொச்சாப்பு. |
| **மரம்** | – | 1. உள்வயிரமுள்ளதாவரம் 2. அறுக்கப்பட்டமரம் 3. மூலிகை |

4. மரக்கலம் 5. இயமரம்
6. உழுதவயலைச்சமப்படுத்தும்பலகை
"வற்றன்மரந்தளிர்த்தற்று" (குறள். 78)

**மறம்** – 1. வீரம் 2. சினம் 3. பகை 4. வலிமை
5. வெற்றி 6. போர்
7. கொலைத்தொழில் 8. கெடுதி 9. கரிசு
(பாவம்) 10. கலம்பகத்தின் ஓர் உறுப்பு
11. மயக்கம்.
"மறந்திருந்தார்" (கலித். 38)

**மரல்** – 1. கடல் 2. அரலை 3. கற்றாழை
4. பெருங்குரும்பை
மரையா மரல் கவர" (கலித். 6)

**மறல்** – 1. பகை 2. பிணக்கு 3. போர் 4. கூற்றுவன்
5. சாவு 6. எழுச்சி 7. ஒருகூத்துவகை
8. மறதி 9. மயக்கம் 10. மறுத்தல் 11. வறுமை
12. குற்றம்
"மறலிணைமாற்று" (பரிபா. 20, 84)

**மரவை** - மரத்தாலானஏனம்

**மறவை** - வன்கண்மையுடைத்து
"மறவையா யென்னுயிர்மேல் வந்த
விம்மருள் மாலை" (சிலப்.7 42)

**மரி** - புளியமரம்.

**மறி** – 1. ஆடு, குதிரை, மான் இவற்றின்குட்டி
2. மேழஓரை 3. அழுங்கு
4. அழுங்கின்குட்டி
"மறியுடையாயர்மாதர்" (கம்பரா. ஆற்று.15)

**மரித்தல்** – 1. சாதல் 2. நினைத்தல்.
"அரயன்உடையான்மரித்தமையில் "
(தெ.இ.கல்.தொ.2 311)

**மறித்தல்** – 1. தடுத்தல் 2. திருப்புதல் 3. மேல்கீழாக்குதல்
4. அழித்தல் 5. தடுத்தற்குறியாகக்
கையசைத்தல் 6. திரும்பச்செய்தல்

"மறுபிறப்போடமறித்திடுமே" (திருவாச.36 2)

**மரிதல்** - சாதல்.

**மறிதல்** – 1. கீழ்மேலாதல் 2. மீளுதல் 3. முதுகிடுதல் 4. விழுதல் 5. சாய்தல் 6. கிளர்தல் 7. முறுக்குண்ணுதல் 8. பலகாலுந் திரிதல் 9. தடைப்படுதல் 10. நிலைகுலைதல் 11. அறுபடுதல் 12. துள்ளுதல் "மறிதிரை" (கலித். 121)

**மரிப்பு** – சாவு "மரிப்பொடுதிப்பு" (பிரபுலிங்.முத்தாயி. 23)

**மறிப்பு** - மறியல்

**மரு** – 1. மணம் 2. மருக்கொழுந்து 3. நறுமணச்செடி 4. மணமகனுக்குப்பெண்வீட்டார் இடும் முதல் விருந்து 5. இடம்நீரும் 6. நிழலுமற்ற இடம் 7. மலை "மருவாகொன்றை" (தேவா. 530 1).

**மறு** – 1. குற்றம் 2. களங்கம் 3. தீமை 4. அடையாளம் 5. மச்சம் 6. பாலுண்ணி "மதிமறுச்செய்யோள்" (பரிபா. 2 30)

**மருக்கம்** - 1. காற்று 2. குரங்கு 3. உடல் 4. மிளகு 5. மருக்கொழுந்து

**மறுக்கம்** – 1.சுழற்சி 2. துன்பம் 3. மனக்கலக்கம்."மன்பதை மறுக்கத் துன்பங்களைவோன்" (பரிபா. 15 52)

**மருகு** – 1. ஒருமணச்செடிவகை 2. பூண்டுவகை 3. காட்டுமல்லிகை 4. மகரவாழை

**மறுகு** – 1. தெரு 2. குறுந்தெரு 3. அறுத்ததாளினின்று உண்டாகும் இரண்டாம் விளைச்சல் "என்காம மறுகின் மறுகு மருண்டு" (குறள். 1139)

**மருகை** - பஞ்சுமூட்டை

**மறுகை** – 1. தெரு 2. மாட்டின் பொதிச்சுமையிற் பாதியளவு 3. நுங்கு "மாடநிரைத்த மறுகை" (பெருங். உஞ்சைக்.50: 43)

**மருத்து** – 1. காற்று 2. ஊதைநோய் "விரைத்தமருத்து" (தணிகைப்பு. அகத்திய. 20)

**மறுத்து** – 1. மீள 2. மறுபடியும் 3. மேலும் "கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்து இன்னா செய்யாமை மாசுஅற்றார் கோள் " (குறள். 312)

**மருப்பு** – 1. விலங்கின் கொம்பு 2. யானைக் கொம்பு 3. யாழினுறுப்பு வகை 4. மரக்கொம்பு 5. பிறைநிலவின் இருகோடு 6. இஞ்சி "கொல்லேற்றின்மருப்புப்போன்றன " (புறநா. 4.)

**மறுப்பு** – 1. மறுக்கை 2. எதிர்க்கை 3. கண்டனம் 4. மறுவுழவு 5. முன்னுழுத சாலுக்குக் குறுக்காக உழுகை

**மரை** – 1. மான்வகை 2. கவயம் 3. தவளை 4. இரத்தினக்குற்றம் 5. திருகு வகை 6. விளக்கின்திரியைஏற்றவும்இறக்கவும் உதவும் திருகுள்ள காய் 7. தாமரை "எருமையுமரையும்" (தொல்.பொருள்.571)

**மறை** – 1. மறைக்கை 2. மந்தணம் 3. மந்திரம் 4. மறைநூல் 5. ஆகமம் 6. உபதேசப் பொருள் 7. சிவப்புப் புள்ளிகளை உடைய மாடு முதலியன 8. களவுப்புணர்ச்சி 9. பெண்குறி 10. உருக்கரந்த புனைவு 11. புகலிடம் 12.சிறைக்கூடம் 13. மறைவிடம் "வெயின்மறைக்கொண்ட " (புறநா. 60)

**மரையான்** - காட்டுப்பசு."மலைத்தலைவந்தமரையான்" (மலைபடு. 331)

**மறையான்** – அயன் "செய்யமறையானி னுந்தியான்" (திவ். இயற்.1 28)

**மல்லம்** - 1.மற்போர் 2.மல்லகதி 3.வலிமை 4.கிண்ணம் 5. தட்டம் 6. கதுப்பு 7. வேள்வியில் எஞ்சியது 8. பள்ளியறை

**மள்ளம்** - வலிமை.

**மல்லர்** - 1. மற்போர்செய்பவர் 2.வலியர் 3.திருக்குறள் உரையாசிரியர்களுள் ஒருவர்

**மள்ளர்** - 1.உழவர் 2.குறவர் 3.குறிஞ்சிநிலமக்கள் 4.திண்ணியர் 5.படைவீரர் "களம்புகுமள்ளர்" (கலித். 106)

**மல்லன்** - 1.மற்போர்செய்வோன் 2.பெருமையிற்சிறந்தோன்

**மள்ளன்** - 1. உழவன் 2. திண்ணியோன் 3.வலிமையுடையவன் 4. படைத்தலைவன் 5.படைவீரன் 6. இளைஞன் 7. மருத நிலத்தோன் 8. குறிஞ்சி நிலத்தில் வாழ்வோன். "பொருவிறல்மள்ள" (திருமுரு. 262)

**மல்லு** - 1.ஒருகூத்து 2. ஒருபோர்.

**மள்ளு** - கைம்மரம்

**மலம்** - 1. அழுக்கு 2. பவ்வீ (பீ) 3. வண்டல் 4. துரு 5. மும்மலம் 6. பாவம் 7. கற்பூரம்.

**மழம்** - இளமை

**மலை** - 1. ஈட்டம் 2. மிகுதி 3. போர்த்தொழில் 4. குன்று.

**மழை** – 1. மேகத்தினின்றுபொழியும்நீர் 2. நீருண்டமேகம் 3. பெய்யும் நிலையில் கருநிறத்தோடு மேகத்தில் இருந்து இறங்கும் நீர்க்கால்

| | | |
|---|---|---|
| | | 4. நீர் 5. கருமை 6. குளிர்ச்சி 7. மிகுதி "மழைதிளைக்கு மாடமாய்" (நாலடி. 361) |
| **மளை** | - | கற்றாழை. |
| **மலைத்தல்** | – | 1. மாறுபடுதல் 2. பொருதல் 3. மயங்குதல் 4. வருந்துதல் 5. திகைத்தல் 6. வியத்தல் 7. தடுமாறுதல் |
| **மழைத்தல்** | – | 1. மழைநிறைந்திருத்தல் 2. கருநிறமாதல் 3. குளிர்தல் 4. மழைபெய்தல் |
| **மலைதாங்கி** | – | 1. அரிவாள்முனைப்பூண்டு 2. செடிவகை 3. வட்டத்திருப்பி |
| **மளைதாங்கி** | - | 1. கொங்காணி 2. குடை |
| **மலமலத்தல்** | - | ஓர்ஒலிக்குறிப்பு. |
| **மழமழத்தல்** | - | வழவழப்பாதல். |
| **மளமளத்தல்** | - | மரக்கொம்புமுதலியனமுறியும்போது ஒலிஎழும்புதல். |
| **மலமலப்பு** | - | ஒலிக்குறிப்பு |
| **மழமழப்பு** | – | 1. மெதுத்தன்மை 2. உறுதியின்மை |
| **மளமளப்பு** | - | முறிதற்குறிப்புள்ளஒலி. |
| **மலமலெனல்** | – | 1. ஓர்ஒலிக்குறிப்பு 2. கண்ணீர்பெருகுதற்குறிப்பு. |
| **மழமழெனல்** | - | மெத்தெனக்குறிப்பு |
| **மளமளெனல்** | – | 1. ஓர்ஒலிக்குறிப்பு 2. விரைவுக்குறிப்பு "மளமளெனநொறுக்கி" (இராமநா.சுந்.20) |
| **மாக்கல்** | - | 1.பலப்பம்முதலியவைசெய்தற்குரிய கல் 2.சவர்க்காரக் கல் |
| **மாக்கள்** | - | 1.மனிதர்கள் 2. பகுத்தறிவிலார் 3. குழந்தைகள் 4.விலங்குகள். "தவத்துறைமாக்கள்" (மணிமே. 6 97) |
| **மாண்** | - | 1. மாட்சிமை 2. மடங்கு 3. மாணவன் 4. குள்ளமானவர் "மாண்டார்வினைத்திட்பம்" (குறள். 665) |
| **மான்** | - | 1. ஒருவகைவிலங்கு 2. விலங்கின்பொது |

3. குதிரை 4. அரிமா 5. மகரமீன்
6. மகரவோரை 7. பெயர்விகுதி
8. படியாக என்னும் பொருளில் வரும் இடைச்சொல்.
"விலங்குமான்குரல்கேட்பின்வெருவுவை" (கலித்.13)

**மாண்ணுதல்** - 1. நன்றாதல் 2. நிறைதல் 3. மிகுதல் 4. மாட்சிமைப்படுதல்
"மாண்டற்கரிதாம்பயன்"(குறள் 177)

**மான்னுதல்** - ஒத்தல் "மன்னர்சேனையைமானுமன்றே" (கம்பரா. ஆற்று. 14)

**மாணம்** - மாட்சிமை

**மானம்** - 1. மதிப்பு 2. கற்பு 3. பெருமை 4. புலவி 5. வலிமை 6. வஞ்சினம் 7. கணிப்பு 8. அளவுக்கருவி 9. ஒப்புமை 10. அளவை 11. அன்பு 12. பற்று 13. இகழ்ச்சி 14. வெட்கம் 15. குற்றம் 16. வானூர்தி 17. மண்டபம் 18. ஒரு தொழிற்பெயர் விகுதி
"நன்றேகாண்மானமுடையார்" (நாலடி 294).

**மாணல்** - 1. மாட்சிமை 2. வளைவு
"கோணல்மாணல் என்பதுவழக்கு" (மு.தா. 225)

**மானல்** - 1. ஒப்பு 2. ஐயுறுதல் 3. மயக்கம்

**மாணவன்** - 1. கல்வி நிறுவனத்தில் பயிலும் சிறுவன் அல்லது இளைஞன் 2. மாணாக்கன்
"மஞ்சனைக் குறுகி யொருமாணவப் படிவ மொடு (உத்திரரா.அனுமப்.6).

**மானவன்** - 1. மாந்தன் 2. பெருமையுடையவன் 3. அரசன் 4. படைத் தலைவன் 5. வீரன்"மானவன்மந்திரி" (கலிங். 365)

**மாணார்** – மாட்சியமையற்ற பகைவர்

மானார் - 1. பெண்டிர் 2. பகைவர்
''மட்டுப்படாக் கொங்கை மானார் கலவி மயக்கத்திலே" (தனிப்பா.149. 59)

மாணி - 1. மணமாகாதவன் 2. குறள் வடிவன் 3. அழகு 4. ஆண்குறி.
"கருமாணியாயிரந்தகள்வனே" (திவ். இயற்.2 61)

மானி - 1. மதிப்புள்ளவர் 2. செருக்குடையவர் 3. மங்கையர்க்கரசியார் 4. மாமன் 5. அளவைக்கருவி.

மாதரி – 1. காளி 2. சிலப்பதிகாரத்தில் மதுரையில் கண்ணகிக்கு அடைக்கலம் கொடுத்த ஆயர் முதுமகள்

மாதறி - விட்டம்

மாரன் – காமன் "மாரனை வென்று வீரனாகி" (மணிமே.30 11)

மாறன் – 1 பாண்டியன் 2. சடகோபர் என்னும் நம்மாழ்வார் 3. பகைவன்
"பூந்தார்மாற" (புறநா.55)

மாராட்டம் - 1. ஊர் 2. துன்பம்

மாறாட்டம் – 1. மாற்றுகை 2. புரட்டு 3. தடுமாற்றம் 4. பித்து

மாராப்பு – 1. பெண்கள்தம்மார்பின்மேலிடுஞ் சீலைப்பகுதி 2. முதுகுடன் இணைத்துமூட்டை கட்டுங்கச்சை.

மாறாப்பு – முந்தானையைத்தோள்களில்மாறியிடுகை

மாரி – 1. மழை 2. நீர் 3. மேகம் 4. மழைக்காலம் 5. பூராடநாள் 6. புள்வகை 7. சாவு 8. அம்மைநோய் 9. துர்க்கை

மாறி – 1. இரண்டகஞ்செய்வோன் 2. பண்டம்மாற்றுவோன் 3. பொன்மாற்று.

மால் – 1. திருமால் 2. மயக்கம் 3. அருகன்

4. இந்திரன் 5. பெருமை 6. மேகம்

**மாள்** – 1. இறத்தல் 2. சாதல்.

**மாலம்** - 1.குங்குமமரம் 2.பேய்

**மாளம்** – கத்தூரி (மான்மணத்தி)

**மாலயம்** – சந்தனமரம்

**மாளயம்** - 1.புரட்டாசி மாதத்தில் இறந்தவரை நினைத்து அன்னார்க்குச் செய்யும் சிரார்த்தம்
2. சாந்திரமான மாதத்துத் தேய்பிறை

**மாலிகை** – 1. மாலை 2. சீமைச்சணல் 3. வரிசை

**மாளிகை** – 1. அரண்மனை 2. கோவில்
3. மாடமுள்ளபெருவீடு 4. வீடு.

**மாலுதல்** – 1. மயங்குதல் 2. மாட்சிமைப்படுதல்
3. எழுதகம்அமைத்தல்.

**மாளுதல்** – 1. சாதல் 2. அழிதல் 3. கழிதல் 4. இயலுதல்.

**மாலை** – 1. அந்திப்பொழுது 2. இரவு 3. இருள்
4. சமயம் 5. குற்றம் 6. மரகதக்குற்றவகை
7. இயல்பு 8. குணம் 9. தொடுக்கப்பட்டது
10. தொடுத்தபூந்தொடை 11. நூல்வகை
12. வரிசை 13. விறலி 14. பெண்.
“காரும் மாலையும் முல்லை”
(தொல்.பொருள்.61)

**மாழை** – 1. உலோகம் 2. கனிமம் 3. பொன் 4. இளமை
5. அழகு.

**மாளை** - புளியம்பட்டை.

**மிணுமிணுத்தல்** - 1. வாய்க்குள் பேசுதல் 2. கமுக்கம் பேசுதல்
3. மந்திரம் சொல்லுதல்.

**மினுமினுத்தல்** - 1. ஒளிவீசல் 2. ஒளிகுன்றுதல்
“பட்டுச் சட்டை மினுமினுக்க நடந்துவந்தான்”. (பே.வ.)

**மிணுமிணுப்பு** - ஒலிக்குறிப்பு

**மினுமினுப்பு** - ஒளிமிளிர்வு

**மிருது** – 1. மென்மை 2. சாந்தம் 3. மந்தம் 4. மழுங்கல் 5. நொய்ம்மை 6. சமுத்திரப்பாலை

**மிறுது** – சமுத்திரப்பச்சை

**மீக்கூர்தல்** - 1. மிகுதல் 2. பெருகுதல்

**மீக்கூறுதல்** - உயர்த்திக்கூறுதல்
"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன்
அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்"
(குறள்.386)

**முக்கால்** - 1. மூன்றாம் முறை 2. மூன்றுமுறை 3. நான்கில் மூன்று பங்குடைய பின்னவெண் 4. ஒருசந்தவகை 5. இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் மூன்று காலங்கள் 6. காலை, உச்சி, மாலை என்னும் ஒரு நாளின் மூன்று வேளை.

**முக்காழ்** - மூன்றுகோவையாலானமுத்துவடம்

**முக்காலி** - மூன்றுகால்கொண்டஇருக்கை

**முக்காழி** - மூன்று கொட்டை உள்ள பனம்பழம் முதலியன

**முகில்** – 1. மேகம் 2. திரள் "முகிலுரிஞ்சுஞ்சூழி" (பு.வெ. 6:22)

**முகிழ்** – 1. அரும்பு 2. தேங்காய்முதலியவற்றின்மடல் 3. தயிர் முதலியவற்றின் கட்டி.

**முகிள்** – 1. அரும்பு 2. குமிழ்.

**முகுலம்** – 1. உடம்பு 2. ஆதன் (ஆன்மா)

**முகுளம்** – 1. அரும்பு 2. தாமரைத்தண்டு 3. ஐந்து விரலும் தம்மில் தலைகுவிந்து நிற்கும் இணையா வினைக் கைவகை 4. ஓகம் வகை 5. ஆசனவகை 6. மூளையின்பின்பகுதி.

**முணங்கு** - 1. அடக்கம் 2. சோம்பல்முறிப்பு 3. சோம்பு

| | | |
|---|---|---|
| | | "முணங்கு நிமிர் வயமான்" (புறநா. 52) |
| **முனங்கு** | - | ஓரம் |
| **முணங்குதல்** | - | 1. உள்ளடங்குதல் 2. அடங்குதல் 3. குரலை அடக்கிப் பேசுதல் 4. முனைமிகுதி 5. வெறுப்பு "காய்ச்சலால் இரவு முழுவதும் முணங்கிக்கொண்டே இருந்தான்"(பே.வ) |
| **முனங்குதல்** | – | 1. குரலையடக்கிப்பேசுதல் 2. புலம்பல் |
| **முணை** | – | 1. மிகுதி 2. வெறுப்பு. "முணையினாற்கடலகமுழக்கமொத்தவே" (சீவக. 2222) |
| **முனை** | - | **1.** முன் 2. பகை 3. போர் 4. போர்க்களம் 5. பகைப்புலம் 6. வெறுப்பு 7. தவம் 8. துணிவு 9. திரள் 10. முகம் 11. தலைமை 12. கடலுள் செல்லும் நீண்ட கூரிய தரைப்பகுதி. "முனையான் பெருநிரை போல" (குறுந்.80:6) |
| **முணைதல்** | - | வெறுத்தல் "களிறுநிலைமுணைஇய "(பதிற்றுப். 64:7) |
| **முனைதல்** | - | 1. பொருதல் 2. ஊக்கங்கொள்ளுதல் 3. மூண்டுநிற்றல் 4. நிறை அதிகமாதல் "வில்லேர் உழவர்வெம்முனைச்சீறூர்" (நற்.3. 5) |
| **முதல்** | – | **1.** இடம்முதலியவற்றில்முதலாயிருப்பது 2. காரணம் 3. மூலக்காரணனான கடவுள் 4. முதலானவன்ஏற்றம் 5. மூலதனம் 6. வேர் 7. கிழங்கு 8. அடிப்பாகம் 9. மரம் முதலியவற்றின் அடி 10. இடம் 11. அகப்பொருட்குரியநிலம் 12. சேமிக்கும் பொருள் 13. இசைப்பாட்டுள்ஒன்று 14. சொத்தின் கொள்முதல் விலை 15. தொடக்கமாகவுடைய 16. ஐந்தாம் |

| | | |
|---|---|---|
| | | வேற்றுமையுருபு 17. ஆவணம் (பத்திரம்) "மூவா முதலாய் நின்ற முதல்வா" (திருவாச.27:10). |
| **முதள்** | - | மொக்கு. |
| **முதலை** | – | 1. செங்கிடை 2. நீர்வாழ்உயிரி 3. இறகின்அடிக்குருந்து. "நெடும் புனலுள் வெல்லு முதலை" (குறள். 495). |
| **முதளை** | - | 1. ஒருநீர்ப்பூண்டு 2. ஆற்றலரி |
| **முப்பால்** | – | 1. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுதிகளை விரித்துக் கூறும் திருக்குறள் 2. ஆண்பால், பெண்பால் என்பன 4. காய்ச்சு பால், திரட்டுப்பால், குழம்புப்பால் என்னும் மூவகைப்பால் 5. தாய்ப்பால், ஆவின்பால், ஆட்டுப்பால் என்னும் மூவகைப்பால். "அத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே" (தொல்.சொல்.212). |
| **முப்பாழ்** | – | 1. நிலத்திற்குஉண்டாகும்வெயில்பாழ், வெள்ளப்பாழ், குடிப்பாழ் என்னும் மூவகைக்கேடுகள் 2. உடம்புக்குள் வெறுமையான மூன்று இடம் |
| **முரம்** | - | கருங்கல்பொடி |
| **முறம்** | - | 1. தானியம் முதலியவற்றைப் புடைக்கும் கருவி 2. விசாகநாள். |
| **முரி** | – | 1. துண்டு 2. நொய்யரிசி 3. முழுதிற் குறைவானது 4. சிதைவு 5. வளைவு 6. இசைப்பாவின் இறுதிப்பகுதி 7. நாடகத் தமிழின் இறுதியில் வரும் சுரிதகம். |
| **முறி** | – | 1. துண்டு 2. பாதி 3. பத்திரம் 4. ஓலையில்எழுதியபற்றுச்சீட்டு 5. துணி 6. முரட்டுத்துணி 7. தளிர் 8. கொழுந்திலை 9. இலை |

| | | |
|---|---|---|
| | | "கவைமுறியிழந்த செந்நிலை" (அகநா. 33:3) |
| **முரித்தல்** | - | 1. ஒடித்தல் 2. அழித்தல் 3. தோல்வியுறச்செய்துநடத்துதல் |
| **முறித்தல்** | - | 1. ஒடித்தல் 2. கீறுதல் 3. நிறுத்திவிடுதல் 3. தன்மை மாற்றுதல் 4. நெசவுதறியின் உருண்டைமறித்தல். |
| **முரிதல்** | - | 1. ஒடிதல் 2. சாடுதல் 3. சிதறுதல் 4. தவறுதல் 5. தோல்வியுறுதல் 6. நீங்குதல் 7. நிலைகெடுதல் 8. குணங்கெடுதல் 9. வளைதல் 10. தளர்தல் "மூத்துவினை போகிய முரிவாய் அம்மி" (நற்.315:3) |
| **முறிதல்** | – | 1. ஒடிதல் 2. தோல்வியுறுதல் 3. குலைதல் 4. நிலைகெடுதல் 5. அழிதல் 6. தன்மை மாறுதல் |
| **முரிப்பு** | – | 1. எருதுத்திமில் 2. முரிக்கை |
| **முறிப்பு** | – | 1. கடுமை 2. மாற்றுமருந்து 3. செருக்கு 4. நட்பு மாறுகை. "முறிப்பான் பேசி மலையெடுத்தான்" (தேவா. 684: 10) |
| **முரியல்** | - | 1. துண்டு 2. எளிதில் முறிவது. |
| **முறியல்** | – | 1. மக்கள் குடிக்கும் மருந்து வகைகளுள் ஒன்று 2. நஞ்சுக்கு மாற்று மருந்து |
| **முரிவு** | – | 1. நடிகை 2. சுருங்குகை 3. நீங்குகை 4. வருத்தம் 5. ஊழ் 6. பெருமை 7. மடிப்பு 8. சோம்பு |
| **முறிவு** | – | 1. முறிகை 2. பிளப்பு 3. பிணக்கம் 4. மாற்றுமருந்து |
| **முருக்கு** | - | 1. எலுமிச்சைமரம் 2. முள்முருங்கைமரம் 3. குருகு 4. கொலை. |
| **முறுக்கு** | - | 1. திரிக்கை 2. திருகாணியின்சுற்று 3. மாறுபாடு 4. செருக்கு |

| | | |
|---|---|---|
| | | 5. மிடுக்கு 6. அரும்புத்தன்மை 6. மாவினாற் செய்த பலகார வகை 7. வலிப்பு 8. கடுமை 9. நெறிப்பு 10. நூல்உருண்டை "முறுக்குடைந்தலர்ந்தமலர்களும்" (காஞ்சிப்பு. திருக்கண். 180) |
| **முருக்குதல்** | - | 1. அழித்தல் 2. கொல்லுதல் 3. முறித்தல் 4. உருக்குதல் 5. கரைத்தல் "காப்புடையவெழுமுருக்கி" (புறநா.14) |
| **முறுக்குதல்** | – | 1. கயிறுமுதலியனதிரித்தல் 2. வெற்றிலைஉண்ணுதல் 3. சுழற்றுதல் 4. மாறுபடுதல் 5. செருக்குதல் 6. சினத்தல் 7. கைகால்களைப் பிசைந்து தேய்த்தல் "முறுக்கிவிட்ட குயமகன் திகிரிபோல" (சீவக.786). |
| **முருகுதல்** | - | காய்ச்சுதலில்பக்குவம்அதிகமாதல் |
| **முறுகுதல்** | - | 1. செருக்குதல் 2. திருகுதல் 3. மிகுதல் 4. மீறுதல் 5. முதிர்தல் 6. விரைதல் "வரையெடுக்கலுற்றுமுறுகினான்" (தேவா.289 10) |
| **முரை** | - | 1. ஒன்பதாம்நந்தன்மனைவி 2. இவள் சந்திரகுப்தனின்தாய் 3. இவள் சூத்திரகுலத்தினள் |
| **முறை** | - | 1. நீதி 2. அடைவு 3. நியமம் 4. ஆள்மாறிமாறி வேலைசெய்யும் நியமம் 5. தடவை 6. பிறப்பு 7. ஒழுக்கம் 8. உறவு 9. உறவுமுறைப் பெயர் 10. அரசநீதி 11. பழைமை 12. ஊழ் 13. கூட்டு 14. நூல் 15. தன்மை 16. கற்பு 17. முறையீடு. |
| **முழவு** | – | 1. மத்தளம் 2. முரசு 3. குடமுழா 4. பால் கறத்தற்குரியபாண்டம் 5. பாண்டம் வார்ப்பதற்குரிய கருவி. "முழவின் முழக்கீண்டிய" (சீவக.2399) |
| **முளவு** | – | 1. முள்ளம்பன்றி 2. முட்கோல். |

| | | |
|---|---|---|
| **முழி** | – | 1. விழி 2. எலும்புப்பூட்டு 3. கரும்பு, மூங்கில் முதலியவற்றின் கணு. |
| **முளி** | – | 1. உலர்ச்சி 2. வாட்டம் 3. வற்றியபொருள் 4. உடல்மூட்டு 5. மரக்கணு 6. கணுக்கால் 7. மரவகை "முளிவெள்ளெலும்பும்" (தேவா. 326 6) |
| **முழித்தல்** | - | 1 விழித்தல் 2 கண்திறத்தல் |
| **முளித்தல்** | - | 1. உலர்தல் 2. வறளுதல் 3. காய்தல் |
| **முழிதல்** | - | உமிழ்தல் |
| **முளிதல்** | - | 1. வேதல் 2. உலர்தல் 3. கெடுதல் 4. முற்றுதல் 5. தோய்தல் "முளிமுதல் மூழ்கியவெம்மை" (கலித்.16). |
| **முழைத்தல்** | - | 1. துளைத்தல் 2. எழுத்தில்லாவோசை 3. எழுத்தில்லாமொழி |
| **முளைத்தல்** | - | 1. முளைமுதலியனதோன்றுதல் 2. கதிரவன் உதித்தல் |
| **முலை** | – | 1. கொங்கை 2. பாலூட்டு இனங்களின் உடலில் பாலுண்டாகும் இடம் |
| **முழை** | – | 1. மலைக்குகை 2. துடுப்பு |
| **முளை** | – | 1. வித்தினின்றுவெளிவருவது 2. இளமை 3. தண்டாயுதம் 4. மூலமுளை 5. குறுந்தறி 6. மரத்துண்டு 7. கதவு முதலியவற்றின் குடுமி 8. புண்முளை 9. திரிகையின் கைப்பிடி 10. பிளப்பில் அடிக்கவுதவும் கூருடைய சிறுகுடுமி 11. முனை "முசுண்டியு முளையும்" (கம்பரா. பிரமாத். 108) |
| **மூழ்தல்** | - | பற்றிக்கொள்ளுதல் |
| **மூள்தல்** | – | 1. நெருப்பு முதலியன பற்றுதல் 2. சினங் கிளம்புதல் 3. ஊக்கத்துடன் முயலுதல் "முதலறமுடிக்கமூண்டான்" (கம்பரா.மாயாசீ.96) |

மூலி – 1. மருந்தாக உதவும் புல், பூண்டு, செடி, கொடி 2. மருந்துவேர்
மூழி – 1. அகப்பை 2. மத்து 3. நீர்நிலை 4. சோறு
மூளி – 1. உறுப்புக்குறை 2. அழகற்றவள் "சூர்ப்பணகையைமூளியாக்க" (இராமநா.உயத்.26)
மூலை – 1. இருபக்கங்களோ கோடுகளோ சந்திக்கும் கோணம் 2. கோணத்திசை 3. முனை 4. வீடு 5. அறை மூலை
மூழை – 1. குழிந்த இடம் 2. அகப்பை 3.மத்து 4. சோறு.
மூளை – 1. மண்டையின்உள்ளீடுஉறுப்பு 2. அறிவு சிந்தனைத்திறன் "மூளையார்சிரத்து" (திவ்.பெரியதி.4)
மெய்யுரை - 1. உண்மைமொழி 2. நூற்குப் பொருத்தமான உரை
மெய்யுறை - உடலிலிடும்காப்புச்சட்டை
மெல்ல - 1. மெதுவாக 2. மென்மையாக 3. சிற்றளவாக "தானோக்கிமெல்லநகும்" (குறள்.1094)
மெள்ள – 1. அமைதியாக அடக்கமாக 2. தாழ்வான குரலாக
மெலுக்கு – 1. வெளிஅலங்காரம் 2. மென்மை 3. விழிப்பு
மெழுக்கு - 1. சாணம் 2. மெழுகுதல்
மேலகம் - மாடி
மேழகம் - 1. காப்பு 2. செம்மறியாட்டுக்கடா 3. ஆடு "வெம்பரிமேழகமேற்றி" (சீவக.521)
மேளகம் - கஞ்சி.
மேலை – 1. மேலிடமான 2. வருங்காலம் 3. மேற்கு 4. முந்தின 5. அடுத்த 6. முன்பு 7. அஞ்சனக்கல் 8. மை "மேலைச்சேரி" (நன்.402 உரை)
மேழை - 1. கஞ்சி 2. காடி

**மேற்புரம்** - வானுலகு "புகழுறச்சேர்வார்மேற்புரம்" (சைவச.பொது.568)
**மேற்புறம்** – 1. வெளிப்புறம் 2. கப்பலிற் காற்றுத் தாக்கும்பக்கம் 3. மேலண்டைப் பக்கம்
**மொரமொரப்பு** - 1. முறுக்காயொலிக்கை 2. தூய்மை 3. முறுமுறுப்பு
**மொறமொறப்பு** – 1. தூய்மை 2. சருக்கரை 3. உலர்ச்சி
**மொருமொருத்தல்** – 1. முணுமுணுத்தல் 2. முறுக்கா யொலிக்கை 3. தூய்மை 4. முறுமுறுப்பு
**மொறுமொறுத்தல்** - வெறுப்புக்குறிப்புக் காட்டுதல் "சுரர்மொறு மொறுப்பப் போகந்துய்த்தனன்" (திருவானைக்கவுத.102)
**மோரை** – 1.முகம் 2. முகவாய்க்கட்டை.
**மோறை** – 1. மோவாய் 2. முகம் 3. முரட்டுத்தனம். "மோறைவேடுவர் கூடிவாழ்" (தேவா.919 4)
**மோலி** - சடைமுடி
**மோழி** - குழம்புவகை
**வங்கணம்** - 1. உற்றநேசம் 2. ஒரு தேயம் 3. நட்பு.
**வங்கனம்** - சேம்பு.
**வண்கை** - கொடைக்கை.
**வன்கை** - 1. உள்ளூரம் 2. வலியகை 3. தோற்கருவி வகை. "வன்கை வினைநர்" (பதிற்றுப்.62 16)
**வண்ணம்** - 1. நிறம் 2. சித்திரம் 3. ஒப்பனை 4. சந்தப்பாட்டு 5. அழகு. "பலகை வண்ணநுண் டுகிலிகை" (சீவக.1107)
**வன்னம்** - 1. எழுத்து 2. தங்கம் 3. வண்ணம். "மொழிகளும் வன்னமும்" (திருக்காளத்.பு.28 9)
**வண்ணி** - வருண் என்பதன் திரிபு.

**வன்னி** - 1. கிளி 2. குதிரை 3. நெருப்பு 4. மரவகை 5. தீ 6. கொடுவேலி.
"வன்னி மரமு மடைப்பளியுஞ் சான்றாக" (சிலப்.215)

**வண்ணிகை** - 1. மருந்துச்சரக்கு வகை.
"வண்ணிகை வங்கப் பாவையோடு" (பெருங்.மகத.17.150)

**வன்னிகை** - 1. எழுதுகோல் 2. பொடுதலை.
"புத்தகமு ஞானத்து முத்திரையும்....வன்னிகையும்" (பாரத.வெண்.துதி)

**வண்ணித்தல்** - 1. புனைந்துரைத்தல் 2. புகழ்தல் 3. விரித்தல் 4. மிகைப்படக் கூறல்.
"வண்ணித்தலா வதில்லா" (சீவக.2458)

**வன்னித்தல்** - 1. வண்ணம் வைத்தல் 2. வருணித்தல்.

**வண்மை** - 1. வளப்பம் 2. ஈகை 3. வாய்மை 4. வலிமை 5. அழகு.
"வண்மையு மன்ன தகைத்து" (நாலடி.269)

**வன்மை** - 1. கடினம் 2. வன்சொல் 3. ஆற்றல் 4. சொல் அழுத்தம் 5. வல்லெழுத்து.
"உரம்பெறும் வன்மை" (நன்.75)

**வணம்** - ஓசை.

**வனம்** - காடு.

**வணிகர்** - வியாபாரி (வணிகன்).

**வனிகர்** - பாலை நிலத்தோர்.

**வணிதம்** - 1. நடுப்பகுதி 2. செப்பம்.
"சோழங்க நல்லூர் வணிதத்திலே யிருக்கும்படி" (கோயிலொ.54)

**வனிதம்** - 1. சிறப்பு 2. மேன்மை.

**வணை** - 1. மாட்டுக்கு வயிற்றில் உண்டாகும் நோய்.

**வனை** - அலங்கரி என்னும் ஏவல்.
"வனையலாம் படித்தலா

வடிவிற்கு" (சீவக.709)

**வணைதல்** - வளைதல்.

**வனைதல்** - 1. உருவம் அமையச்செய்தல் 2. அலங்கரித்தல் 3. ஓவியம் எழுதுதல்.
"வனைகலத் திகிரியும்" (சீவக.1839)

**வயணம்** - 1. விதம் 2. நிலைமை 3. நல்லமைப்பு 4. நேர்த்தி 5. ஏற்றது 6. வழி வகை பான்மை 7. உணவு முதலியவற்றின்வளம் 8. தெளிவான விளக்கம்.

**வயனம்** - 1. உரை 2. பழமொழி 3. இனிய உணவு 4. விவரம் 5. பேச்சு சொல் 6. மறைநூல்.
"வயனங்கள் மாயா வடுச்
செய்தான்" (திருவாச.12 4)

**வரப்பு** - 1. எல்லை 2. வரம்பு.
"வரப்பு உயர நீர் உயரும் குடி உயரக்
கோன் உயரும்" (அவ்வையார்)

**வறப்பு** - 1. குறைவு 2. வற்றுதல்.

**வரம்** - 1. வேண்டுகோள் (வரங்கேட்டான்) 2. அருள் 3. சூழல் 4. மேன்மை 5. எறும்பு 6. மஞ்சள் 7. விருப்பம் 8. தெய்வம் முதலியவற்றாற் பெறும் பேறு 9. வாழ்த்து 10. ஒரு வகைக் குருவி.
"வருபுனல் அணிகென வரங்கொள்
வோரும்" (பரிபா.8:105)

**வறம்** - 1. வற்றுகை 2. வறுமை 3. வெம்மை 4. வறட்சி (வறள் நிலம்) 5. நீரில்லாமை 6. கோடைக்காலம்.
"வறந்தெற மாற்றிய வானம்" (கலித்.146)

**வரல்** - 1. வருகை 2. வருதல்.
"தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார்

| | | |
|---|---|---|
| | | நாணார்கொல் எந்நெஞ்சத் தோவா வரல்" (குறள்:1205) |
| **வறல்** | - | 1. வற்றுதல் 2. உலர்கை 3. நீரில்லாமை 4. வறுக்கை 5. சுள்ளி. "வறற்குழற் சூட்டின்" (சிறுபாண்.163) |
| **வரவு** | - | 1. வருகை (நல்வரவு கூறினான்) 2. வருவாய் 3. வரலாறு 4. விளைவு 5. வழி 6. தோற்றம் 7. வணங்குகை. "குன்றத்தாற் கூடல் வரவு" (பரிபா.8 28) |
| **வறவு** | - | கஞ்சி. |
| **வருங்காலம்** | - | எதிர்காலம். |
| **வறுங்காலம்** | - | வறுமைக்காலம். |
| **வரி** | - | 1. கோடு, எழுத்து, பத்தி 2. குடிமக்கள் செலுத்தும் திறை. "வரிநவில் கொள்கை" (சிலப்.13:38) |
| **வறி** | - | 1. ஏழைமை 2. துன்பநிலை. "வறிஞராய்ச் சென்றிரப்பர்" (நாலடி.1) |
| **வருதல்** | - | வருகை தருதல். |
| **வறுதல்** | - | தீயால் உலர்தல். |
| **வருத்தல்** | - | வருத்தப்படுத்துதல். |
| **வறுத்தல்** | - | வறுத்து எடுத்தல். |
| **வருமம்** | – | தீராப் பகை. |
| **வறுமம்** | - | வெறுமைத் தன்மை. |
| **வருமொழி** | - | வந்து சேரும் சொல். |
| **வறுமொழி** | - | பயனிற் சொல். "வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு" (சிலப்.16 63) |
| **வருமை** | - | 1. வருகை 2. மீண்டும் வருதல். |
| **வறுமை** | - | 1. வெறுமை 2. இல்லாமை 3. துன்பம். "நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே கல்லார்கண் பட்ட திரு" (குறள்:408) |
| **வரை** | - | 1. கோடு 2. மூங்கில் 3. மலைமுகடு |

4. கல் 5. சிறுவரம்பு 6. நீர்க்கரை 7. அளவு 8. காலம் 9. எல்லை 10. மலை 11. இடம் 12. ஏற்றத்தாழ்வு.
"மால்வரை நிவந்த வெற்பின்" (திருமுரு.12)

**வறை** - பொரிக் கறி.
"நெய் கனிந்து வறையார்ப்பு" (மதுரைக்.756)

**வல்** - விரைவு.
"வழிபடு வோரை வல்லறி தீயே" (புறநா.10:1)

**வள்** - 1. கூர்மை 2. வாள் 3. வாளுறை 4. கடிவாளம் 5. காது 6. படுக்கை.
"வள்ளே துணியே யிவற் றொடு" (ஏலாதி.50)

**வல்லடி** - 1. கொடுஞ்செயல் 2. வலிமை 3. கொடுமை 4. வலுக்கட்டாயப்படுத்தம் (வல்லடி செய்யாதே).

**வள்ளடி** - 1. காதினடி 2. செவிமூலம்.

**வல்லம்** - 1. வாழை 2. ஆற்றல்.
"நெடுங்கதிர் நெல்லின் வல்லம் கிழவோன்" (அகநா.356:13)

**வள்ளம்** - 1. மரக்கால் 2. தோணி.
"வள்ளத் தவனேந்த....மது மகிழ்ந்தார்" (சீவக.2700)

**வல்லி** - 1. படர்கொடி வகை 2. மருந்துச் செடி 3. இளம்பெண் 4. முருகக் கடவுளின் தேவியாகிய வள்ளியம்மை 5. கால் விலங்கு 6. பதாகை 7. கொடி 8. திருமணம் 9. புன்முருக்க மரம்.
"வல்லியனையாள்" (பு.வெ.12 பெண்பாற். 13 உரை.)

**வள்ளி** - 1. அணிகலன் 2. கொடிவகை 3. கொடி 4. தண்டு 5. கைவளை 6. காப்புவளை 7. தொய்யிற் கொடி 8. குறிஞ்சி நிலப்பெண்

9. முருகக் கடவுளின் துணைவி 10. குறிஞ்சி மகளிர் கூத்துவகை.
"வள்ளி மருங்குல்" (திருக்கோ.128)

**வல்லியம்** - 1. புலி 2. கொடி 3. செவ்வள்ளி 4. இடைச்சேரி 5. கொல்லி மலை.
"பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய" (அகநா.362)

**வள்ளியம்** - 1. ஊதுகுழல் 2. மரக்கலன் 3. மிளகு 4. மெழுகு 5. உதவுந் தன்மை.
"உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு" (குறள்:598)

**வல்லை** - 1. வலிமை 2. பெருங்காடு 3. மேடு 4. கோட்டை 5. வயிற்றுக் கட்டி.
"அருள வல்லை யாகுமதி யருளியர்" (புறநா.27:17)

**வள்ளை** - 1. உலக்கைப் பாட்டு 2. கொடிவகை 3. மகளிர் நெற்குத்தும்போது ஒரு தலைவனைப் புகழ்ந்து பாடும் பாட்டு.
"வள்ளைத் தாள்போல் வடிகாதிவைகாண்" (மணிமே.20-53)

**வலம்** - 1. சேனை 2. படை 3. வலி 4. வலிமை 5. வெற்றி 6. ஆணை 7. மேலிடம் 8. சுமை 9. நேர்த்தி 10. கனம் 11. இடம் 12. இடவலமாக வருகை 13. வலப்பக்கம்.
"வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த" (புறநா.24)

**வளம்** - 1. மிகுதி 2. வலிமை 3. செழுமை 4. வளமை 5. அளவிற்கு அதிகமாக உற்பத்தி செய்கை 6. பயன் 7. செல்வம் 8. நன்மை 9. தகுதி 10. மாட்சிமை 11. அழகு 12. பதவி 13. புனல் 14. உணவு 15. வெற்றி 16. வாணிகப் பண்டம் 17. வழி 18. பக்கம்

| | | |
|---|---|---|
| | | "வளந்தரும் வேலோய்" (பு.வெ.9.9) |
| **வலவன்** | - | 1. வெற்றியாளன் 2. திறமையாளன் 3. தேர்ப்பாகன் 4. வலப்பக்கத்தான். "விசும்பின் வலவ னேவா வானவூர்தி" (புறநா.27) |
| **வளவன்** | - | 1. சோழன் 2. வேளாளன். |
| **வலன்** | - | 1. வெற்றி 2. ஆணை 3. வலப்பக்கத்தான் 4. வல்லவன் 5. படை 6. மேலிடம். "வலனாக வினையென்று" (கலித்.35) |
| **வளன்** | - | 1. வளப்பம் 2. செழுமை 3. பயன். |
| **வலி** | - | 1. துன்பம் 2. மகப்பேற்று வலி. |
| **வழி** | - | 1. பாதை 2. சாலை 3. முறைமை. 4. வழித்தோன்றல் 5. கொடிவழி 6. குடும்பவழி 7. பரம்பரை "வழி வந்த கார்விடம்" (கம்ப.சூர்.72) |
| **வளி** | - | காற்று |
| **வலித்தல்** | - | 1. நோதல் (வயிறு வலித்தல்) 2. இழுத்தல் 3. வற்றுதல் 4. அழகுகாட்டுதல் 5. சொல்லுதல் 6. துடுப்பால் படகு தள்ளுதல் 7. அழுத்தி ஒலித்தல் 8. வற்றச் செய்தல். "புலித்தோல் வலித்து வீக்கி" (தேவா.910 3) |
| **வழித்தல்** | - | 1. வடித்தல் 2. துடைத்தெடுத்தல் (சந்தனத்தை வழித்தெடு) 3. வழிக்குதல் 4. மயிர் மழித்தெடுத்தல் (தலையை வழித்துக் கொண்டான்) 5. பூசுதல். "மூக்கை வழித்து" (தனிப்பா.11 383) |
| **வலு** | - | 1. வலிமை 2. ஆற்றல் 3. திறமை 4. கனம் 5. பற்று 6. எடைக்கு மேற்பட்டுள்ள காசு 7. எட்டு 8. ஒருவகைப் பசை மருந்து. |
| **வளு** | - | இளமை. |

**வழும்பு** - 1. குற்றம் 2. வழுவழுப்பான நீர்ப்பண்டம் 3. அழுக்கு 4. தவறு 5. பிழைபாடு 6. தீங்கு.
"வழும்பில் சீர்நூல்" (நாலடி 352)

**வளும்பு** - 1. புண் 2. நிணம் 3. வழும்பு.

**வலை** - 1. உயிரிகளை அகப்படுக்குங் கருவி 2. சூழ்ச்சி 3. வேள்வித் தலைவியர் நெற்றியிலணிந்து கொள்ளும் அணிவகை 4. மீன்பிடி வலை.
"புலிகொண்மார் நிறுத்த வலையுள்"
(கலித்.65)

**வளை** - 1. எலி வளை 2. வளையம் 3. சுற்றிடம் 4. சங்கு 5. கைவளை 6. ஆழி 7. எறி வளையம் 8. துளை 9. சிறிய உத்திரம் 10. நீண்ட மரத்துண்டு.
"முன்கை யிறையிறவா நின்ற வளை"
(குறள்.1157)

**வாணக்கல்** - வீடு முதலியவற்றின் அடிப்படைக் கல்.

**வானக்கல்** – 1. காகச் சிலை 2. அடிமனைக்கல்.

**வாணகம்** - 1. அம்பு 2. தீ 3. மத்தாப்பு 4. அடிப்படைக் குழி.

**வானகம்** - 1. விண்ணுலகம் 2. வானுலகம் 3. மஞ்சாடி.

**வாணம்** - 1. அம்பு 2. தீ.
"பாயும் புகைவாணங் கொடுபாணம்"
(இரகு.நகர.24)

**வானம்** - வான்வெளி.

**வாணி** - 1. கலைமகள் 2. நாதம் தோன்றுமிடம் 3. சரசுவதி நதி 4. ஒரு கூத்து வகை 5. சொல் 6. கல்வி.
"நன்கல்ல வாணி கிளத்தலடக்கி"
(பிரமோத்.22 19)

**வானி** - 1. மேற்கட்டி 2. கூடாரம் 3. காற்றாடிப் பட்டம்.

**வாணிதம்** - கள்.

**வானிதம்** - மணல் போன்று நுண்ணியதாயிருக்கும் சருக்கரை.
**வாணிதி** - 1. நாடகக் கணிகை 2. நாணம் அற்றவள்.
**வானிதி** - மனோசிலை.
**வாணியம்** - 1. ஊதியம் 2. வியாபாரம் (வாணிகம்)
**வானியம்** - மரம்.
**வால்** - 1. நீண்டு தொங்கும் உறுப்பு (குரங்கின் வால்) 2. இளமை 3. மிகுதி 4. நன்மை 5. வெண்மை 6. உண்மை 7. தூய்மை.
"கற்றதனால் ஆய பயனென்கொல்
வால்அறிவன் நற்றாள் தொழாஅர் எனின்"
(குறள்:02)
**வாழ்** - 1. வாழ்வாயாக (நீ வாழ்) 2. முறைமை 3. ஒழுங்கு.
**வாள்** - 1. ஒளி (வாள் நுதல்) 2. கயிறு 3. ஈர்வாள் (அரிவாள், போர்வாள்) 4. நீர்.
"வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு
நூலொடென் நுண்ணவை அஞ்சு பவர்க்கு"
(குறள்:726)
**வாலம்** - 1. வால் 2. துண்டு 3. இளமை 4. எறிபடைவகை 5. கந்தைத்துணி.
"கட்செவி வாலமும் பணமு மிருங்கையிற்
பற்றி" (காஞ்சிப்பு.மணிகண்.14)
"வாலமுத லாயுதம்" (கம்பரா.ஊர்தே.69)
**வாளம்** - 1. வளைவு 2. வாள் 3. வட்டம் 4. ஒருவகைப் பறவை.
"மங்கைமார் தடமுலையெனப் பொலிவன
வாளம்" (கம்பரா.பம்பை.21)
**வாலா** - 1. வால் திரிபு 2. வினாச் சொல் (நாய் வாலா?).
**வாழா** - 1. ஓர் ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் – பிழைக்கா.

| | | |
|---|---|---|
| | | "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்<br>உயிர்நீப்பர் மானம் வரின்" (குறள்:969) |
| **வாளா** | - | 1. வீண் 2. வெற்று 3. அமைதி 4. பயனின்றி (வாளாவிருந்தான்).<br>"வயப்பட்டான் வாளா விருப்பானேல்" (நாலடி 325) |
| **வாலாமை** | - | 1. அழுக்கு 2. தூய்மையின்மை 3. மகளிர் தீட்டு.<br>"வாலாமைந்நா ணீங்கிய பின்னர்" (சிலப்.15 24) |
| **வாழாமை** | - | வாழமாட்டாமை. |
| **வாளாமை** | - | 1. கேளாமை 2. பயனின்மை 3. அமைதி 4. பேசாதிருத்தல் 5. புறக்கணிப்பு 6. உள்ளீடின்மை.<br>"வாய்வாளாமை......புகல்வான்" (மணிமே.30 245) |
| **வாலி** | - | 1. கரிக்குருவி 2. மழைத்தூறல் 3. வாலுடையது 4. காருவாநாள் 5. ஒருவகைப் புன்செய்ப் பயிர். |
| **வாழி** | - | 1. ஓர் அசைச்சொல் 2. வாழ்க.<br>"மாதர் முகம்போல் ஒளிவிட<br>வல்லையேல் காதலை வாழி மதி" (குறள்:1118) |
| **வாளி** | - | 1. அம்பு 2. வாள்வீரன் 3. நீர்ச்சால் வகை (வாளியில் நீர் கொண்டுவா).<br>"மார்புற வாங்குவார் வாளி" (பரிபா.9 54) |
| **விசாணம்** | - | விலங்கின் கொம்பு. |
| **விசானம்** | - | சுடுகாடு. |
| **விடாணி** | - | 1. கொம்புள்ளது 2. யானை. |
| **விடானி** | - | சதுரக்கள்ளி. |
| **விண்ணா** | - | கடுகுரோகிணி. |
| **வின்னா** | - | தெரிப்பு. |

**விரகு** - 1. உத்தி 2. நுண்ணறிவு 3. உணர்ச்சிக் கனிவு 4. பண்ணியாரம் 5. வழிவகை 6. திறமை 7. சூழ்ச்சி.

**விறகு** - 1. எரிக்கும்கட்டை 2. வேள்வித் தீக்குரிய சுள்ளிகள்.
"நாறு நறும்புகை விறகின்" (சீவக.131)

**விரல்** - கைகால்களின் இறுதியிலுள்ள ஐந்தாகப் பிரியும் உறுப்பு.
"விரலுளர் நரம்பின்" (பொருந.17)

**விறல்** - 1. வெற்றி 2. பெருமை 3. வலிமை 4. வீரம் 5. சிறப்பு.
"விறலீனும் வேண்டாமை யென்னுஞ் செருக்கு" (குறள்.180)

**விரலி** - 1. மஞ்சள் 2. வெள்ளரி.

**விறலி** - 1. பாணர் குலப்பெண் 2. பதினாறு வயதுப்பெண்.

**விராய்** - 1. விறகு 2. பூச்செடிவகை.
"வல்லிராய் மாய வெரிதழல்"
(நீதிநெறி.64)

**விறாய்** - செருக்கு.

**விருவிருத்தல்** - 1. கடுத்தல் 2. சினத்தாற் பரபரபத்தல்.

**விறுவிறுத்தல்** - 1. காரம் உறைத்தல் 2. சினம் பொங்குதல் 3. புண் குத்தெடுத்தல்.
"சேறு உலர்ந்து விறுவிறுத்த உடல்"
(அகநா.17 உரை)

**விருவிருப்பு** - 1. நஞ்சு முதலியன ஏறுங்குறிப்பு 2. உறைப்பு 3. கடுப்பு 4. விரைவு 5. சினத்தால் உண்டாகும் பரபரப்பு.

**விறுவிறுப்பு** - 1. மேற்பூச்சு உலர்ந்ததனால் விறுவிறுப்பென இழுத்தல் 2. மிகுசினம் 3. புண் முதலியவற்றில் விறுவிறுவென்னும் நோவு

| | | |
|---|---|---|
| | | 4. சுறுசுறுப்பு (விறுவிறுப்பாகக் கடமையாற்றுவான்). |
| **விரை** | - | 1. நறும்புகை 2. பூந்தேன் 3. மலர் 4. விதை 5. நறுமணம். "விரைததும்பு பூம்பிண்டி" (சீவக.1467) |
| **விறை** | - | நடுக்கல் குறிப்பு. |
| **விரைத்தல்** | - | 1. விதைத்தல் 2. மணங்கமழ்தல் 3. பரவச் செய்தல். "விரைக்குந் தீம்பகை" (காஞ்சிப்பு.இருபத்.182) |
| **விறைத்தல்** | - | 1. மரத்துப் போதல் 2. நடுக்கம் 3. வியத்தல் 4. செருக்குக் காட்டுதல். |
| **விரைப்பு** | - | விதைப்பு (கீரைவிதை விதைப்பு). |
| **விறைப்பு** | - | 1. விறைத்துப் போதல் 2. செருக்குக் காட்டுதல் (விறைப்புக் காட்டினான்). |
| **வில்** | - | 1. அம்பு எய்தற்குரிய கருவி 2. வில்லின் நாண் 3. ஒளி 4. விலை (விற்பனை). "வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க சொலலேர் உழவர் பகை" (குறள்:872) |
| **விள்** | - | 1. பேசு (விள்ளுதல்) 2. மலர்தல் 3. வெடித்தல் 4. பிளத்தல். |
| **விலக்கம்** | - | 1. விலகியிருக்கை 2. ஊரைவிட்டு நீங்குகை 3. மாற்றம் 4. தள்ளியிருத்தல் (என்னை விட்டு விலகு). |
| **விளக்கம்** | - | 1. தெளிவு (விளக்கம் அளித்தார்) 2. விளக்கு (கலங்கரை விளக்கம்). "குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும் மாசூர மாய்ந்து கெடும்" (குறள்:601) |
| **விலக்கு** | - | 1. விலகச் செய் (தீமையை விலக்கு) 2. ஒதுக்கு 3. சிறப்பு விதி (விதிவிலக்கு அளித்தல்) 4. தடுத்தல் (வரும்பழியை |

விலக்கினான்) 5. மாதவிலக்கு 6. வழு.

**விளக்கு** - 1. ஒளிதருங்கருவி (ஒளிவிளக்கு)
2. தெளிவாக்கு (கருத்தை விளக்கினான்)
3. தூய்மைப்படுத்து (வீட்டை விளக்கமுறச் செய்).
"எல்லா விள க்கும் விளக்கல்ல" (குறள்:299)

**விலக்குதல்** - 1. நீக்குதல் 2. தடுத்தல் 3. மாற்றுதல்.

**விளக்குதல்** - 1. தெளிவாக்குதல் 2. தூய்மைப்படுத்தல்
3. பெருக்குதல் (வீட்டை விளக்குதல்)
4. பரிமாறுதல் 5. பொடியிட்டுப் பற்றவைத்தல்.
"தம்மை விளக்குமால்" (நாலடி.132)

**விலங்கு** - 1. உயிரினம் (மிருகம்) 2. புலி போன்ற கொடிய விலங்கு 3. மாவும் புள்ளும் (விலங்குகளும் பறவைகளும்) 4. கைகளில் மாட்டப்படும் தளை (கை விலங்கு) 5. தமிழ் எழுத்துகளில் மேலும் கீழும் உள்ள வளைவு 6. தடை 7. வேறுபாடு.

**விளங்கு** - 1. சிறப்புறு (கல்வியில் சிறந்து விளங்கு)
2. தெளிவாய் இரு (எதிலும் விளக்கமுற்றிரு).

**விலம்** - 1. அகில் 2. குகை 3. பள்ளம் 4. துளை 5. பொந்து.

**விளம்** - 1. விளாமரம் 2. அடம் 3. ஒருசீர் (விளச்சீர்).

**விழம்பு** - சோறு.

**விளம்பு** - சொல் (உண்மை விளம்பு).

**விலர்** - மரவகை.
"விலர்ங்கோடு" (தொல்.எழுத்.363 உரை)

**விளர்** - 1. வெண்மை 2. முற்றாதது 3. நேர்மை
4. வெறுப்பு 5. கொழுப்பு 6. பெருஞ்சினம்
7. இளங்கொம்பு.

"கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக்"
(புறநா.120)

**விலவு** - விலா எலும்பு.

**விழவு** - 1. விழா 2. விளையாட்டு 3. அவா.
"ஊரனொடப்பு விழவமரும்
பணிமொழி யரிவை" (பு.வெ.12.பெண்பாற்.10)

**விளவு** - 1. விளாமரம் 2. நிலப்பிளவு 3. இளமை
4. அகில்.

**விலா** - 1. மார்புப் பக்கம் (விலா எலும்பு) 2. பழு.
"கழுகும் பாறும் விலாவிற்றுக்
கிடந்தவன்றே" (சீவக.804)

**விழா** - 1. விளையாட்டு 2. அவா.
"ஆலமர் செல்வன்....மகன்
விழாக் கால்கோளென்று" (கலித்.83)

**விளா** - 1. விளாமரம் 2. நிலப்பிளவு 3. இளமை
4. அகில் 5. மரவகை.

**விழி** - கண் "விழியிலா நகுதலை" (தேவா.345 5)

**விளி** - 1. சொல்லுதல்
"தீவிளிவிளிவன்" (திவ்.திருமாலை.30)
2. அழைத்தல்
"கூற்றத்தைக்கையால் விளித்தற்றால்"
(குறள்.894)

**விழித்தல்** - 1. உறக்கம் தெளிதல் 2. விழிப்பாக இருத்தல்
3. பார்த்தல் 4. உருட்டிப் பார்த்தல்
5. கண்திறத்தல் 6. ஒளிர்தல்
7. தெளிவாதல் 8. உயிர் வாழ்தல்.
"உறங்கி விழிப்பது போலும்
பிறப்பு" (குறள் 339)

**விளித்தல்** - 1. அழைத்தல் 2. சொல்லுதல் 3. பாடுதல்
4. அழித்தல் 5. கொல்லுதல் 6. சினத்தல்.
"கூற்றத்தைக் கையால்
விளித்தற்றால்" (குறள்.894)

**விழிப்பு** - 1. துயில் எழுதல் 2. எச்சரிக்கை (செயலாற்றும் போது விழிப்பாக இரு) 3. தெளிவு 4. சிறந்து விளங்குகை 5. செய்வது தெரியாமல் திகைக்கை.

**விளிப்பு** - 1. அழைப்பு 2. ஓசை 3. இரைச்சலிடுகை. "விளிப்பறை போகாது" (மணிமே.3. 63)

**விழைதல்** - 1. விரும்புதல் (விழைதல் கூடாது) 2. நன்குமதித்தல் 3. ஒத்தல் 4. நெருங்கிப் பழகுதல்.

**விளைதல்** - உண்டாதல் (பயிர் விளைதல்).

**விழைவு** - 1. விரும்பல் 2. கலத்தல் 3. அவாப் பெருக்கு 4. விருப்பம். "விழைவோ விழுமதே" (பு.வெ.9 41)

**விளைவு** - 1. பயன் 2. ஆக்கம் 3. வயல் 4. கைகூடுதல் 5. மேகம் 6. விளைச்சல் 7. முதுமை 8. பழம் 9. விளையுமிடம். "விளைவமை தயிரொடு மிசைகுவர்" (சீவக.122)

**வீராப்பு** - செருக்கு.

**வீறாப்பு** - இறுமாப்பு.

**வெங்கண்** - 1. கொடுமை 2. பொறாமை 3. பகைமை 4. கண்ணூறு. "வெங்கண் வேந்தர்" (பெருங்.வத்தவ.6 32)

**வெங்கன்** - வறுமையாளன்.

**வெண்ணீர்** - வெண்மை நிறத்து நீர். "வெண்ணீர் வாயுவினான் மாதர் செந்நீரோடு கூடி...கருவாகும்" (சூத.ஞான.10 9)

**வெந்நீர்** - 1. சுடுநீர் 2. வெந்தநீர். "வெந்நீர்......இல்லஞ் சுடுகலாவாறு" (பழ.51)

**வென்னீர்** – வெல்லுந்தன்மை (வெல் + நீர்)

| | | |
|---|---|---|
| **வெரு** | - | எச்சம்.<br>“வெருவரு நோன்றாள்.....கரிகால் வளவன்”<br>(பொருந.147) |
| **வெறு** | - | 1. வெறுமை 2. வெறுவென்னேவல். |
| **வெல்** | - | 1. வெற்றி கொள் (அவனை வெல்வேன்)<br>2. வெல்க. |
| **வெள்** | - | 1. வெண்மையான 2. கலப்பில்லாத<br>3. உள்ளீடற்ற 4. கூர்மை. |
| **வெல்லம்** | - | 1. கருப்பஞ்சாற்றுக் கட்டி (வெல்லம் இனிக்கும்) 2. கரும்பு வெல்லம்<br>3. பனைவெல்லம்.<br>“வெல்லச்சொ னாவலர்க்கு”<br>(தனிப்பா.13051) |
| **வெள்ளம்** | - | 1. நீர்ப்பெருக்கு (புது வெள்ளம்) 2. கடல்<br>3. ஈரம் 4. பெருக்கம் 5. மிகுதி 6. உண்மை.<br>“மகர வெள்ளத் திறத்தால்”<br>(கம்பரா.கடல்காண்.2) |
| **வெல்லி** | - | 1. வல்லவர் 2. சிற்றேலம். |
| **வெள்ளி** | - | 1. வெண்மை 2. ஒருவகை மாழை (வெள்ளித் தட்டு) 3. விண்மீன் 4. வெள்ளிக்கிழமை<br>5. அறிவுக்குறைவு 6. வெள்ளிக்கோல்.<br>“விண்ணரு வெள்ளி வெற்பின்” (சீவக.1646) |
| **வெல்விழி** | - | ஒரு வினைத்தொகை – வென்ற விழி, வெல்லுகிற விழி, வெல்லும் விழி. |
| **வெள்விழி** | – | வெள்ளை விழி. |
| **வெல்லை** | – | வெள்ளை நிறம்.<br>“வெல்லை யறுவை நீக்கி”<br>(சிவதரு.சிவஞானதான.36) |
| **வெள்ளை** | - | 1. வெண்மை 2. சுண்ணாம்பு 3. வெண்பா<br>4. வெள்ளி நாணயம் 5. கபடற்றது 6. வயிரம்<br>7. மலைப்பூண்டு 8. நோய்வகை<br>9. கடினத் தன்மை 10. வெள்ளைத்துணி |

11. வெள்ளாடு.
“வெள்ளை வெள்யாட்டுச் செச்சை”
(புறநா.286)

**வெல்லுதல்** – வெற்றி கொள்ளுதல்.

**வெள்ளுதல்** - 1. வெள்ளையாக்கல் 2. தூய்மையாக்கல்.

**வெலி** - நீக்கல்.

**வெளி** - 1. வானம் 2. புறம் 3. மறைப்பிலா வெளிப்பகுதி (வீட்டைவிட்டு வெளியே போனார்) 4. விண்வெளி 5. இடைவெளி 6. விளம்பரம் 7. வழிவகை.
“அன்னவை தீரும் வெளி பெற்றோம்”
(கம்பரா.மகேந்.3)

**வேண்** - 1. விருப்பம் 2. ஆசைப் பெருக்கம்.
“ஒன்பாண்டி குட்டங் குடங்கற்கா
வேண்பூழி” (நன்.272 மயிலை)

**வேன்** - மிகுதி.

**வேணன்** - அம்பட்டத்தியிடத்திற்குப் பார்ப்பானுக்குப் பிறந்து புகழ்ந்து பாடுவோன்.

**வேனன்** - சுவாம்புவ மனுவின் வமிசத்திவ் அங்கண் மகன்.

**வேர்** - மரஞ்செடி கொடிகளை மண்ணின் மேல் நிலை நிற்கச் செய்வதும் அவை உணவேற்க உதவுவதுமான அடிப்பகுதி.
“அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக் கலவ
மஞ்ஞை” (மலைபடு.234)

**வேறு** - 1. பிறிது 2. பிரிந்தது 3. புதிது.
“இருவே றுலகத்தியற்கை” (குறள். 374)

**வேரல்** - 1. சிறுமூங்கில் 2. வேர்க்கை 3. மூங்கிலரிசி.
“நுண் கோல் வேரல்” (மலைபடு.224)

**வேறல்** - 1. வெல்லுதல் 2. வெற்றி கொள்ளுதல்.

**வேராதல்** - உயிர்நாடியாக இருத்தல்.

**வேறாதல்** - 1. பிரிதல் 2. மாறுபடுதல் 3. மனம் மாறுபடுதல் 4. குலைதல்.
"வளம் பெறினும் வேறாமோ சால்பு" (பு.வெ.8 31)

**வேலாண்மை** - வில்லை ஆளுந்திறமை (வேல் எறிதல்).

**வேளாண்மை** - 1. முயற்சி 2. பயிர்த்தொழில் 3. உதவி.
"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள்:81)

**வேல்** - 1. ஆயுதப்பொது 2. வெல்லுதல் 3. பகை 4. மரவகை 5. முள்ளுடைச்செடி 6. மூங்கில் 7. கைவேல்.
"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்" (குறள்.774)

**வேள்** - 1. திருமணம் 2. குமரன் 3. விருப்பம் 4. உதவி 5. மண் 6. சிறந்த ஆண்மகன் (தமிழவேள்).
"வேள் பட விழி செய்து" (தேவா.1172 8)

**வேலம்** - 1. வேலமரம் 2. தோட்டம்.

**வேழம்** - 1. கரும்பு 2. நாணல் 3. இசை 4. பணிநாள் 5. ஒருபூச்சி வகை 6. யானை.

**வேளம்** - வாழிடம். "மீனவர் கானகம்புக....வேளம்புகுமடவீர்" (கலிங்.41)

**வேலை** - 1. தொழில் (வேலைக்குப் போ) 2. அலை 3. கடல் 4. வேல் 5. கானல். "வேலை யாத்திரை செல்யாறு" (பரிபா.19. 18)

**வேளை** - 1. பூண்டுவகை 2. காலம் (நல்ல வேளை என்பது நமது சிந்தனையே) 3. வினைப்பயன் 4. நாய்க்கடுகுச்செடி 5. செடிவகை.
"வேளை வெண்பூ" (புறநா.23)

*